காஞ்சி
ஆசிரியர்: C.N. அண்ணாதுரை
ஆண்டுமலர் 1966
விலை ரூ. 1/-

ALL RIGHTS CONTROLLED BY SARADA ENTERPRISES 9, NORTH BOAG ROAD : MADRAS-17

இப்பொழுது நடைபெறுகிறது!

சித்ரா புரொடக்ஷன்ஸ்

சின்னஞ்சிறு உலகம்

செப்டம்பர்

2உ முதல்

சென்னையில்

காசினோ

ஸ்ரீ கிருஷ்ணா

ஸ்ரீநிவாசா

மகாலட்சுமி

மற்றும்

தென்னாடெங்கும்!

திரைக்கதை-வசனம்-டைரக்ஷன்:

K.S.கோபாலகிருஷ்ணன்

G.H.RAO

கோட்டாகுடி பெரியநாயக்கர்
வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு



காஞ்சியில்

பல வண்ணப் பட்டாடைகளுக்கும்
பாவாடை, சோளி ரகங்களுக்கும்

மிகச் சிறந்த கூட்டுறவு நிறுவனம்

காஞ்சிபுரம்

திருவள்ளுவர்

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்., நெ. 2054

★

தங்கள் தேவைகளுக்கு

207-B, காந்திரோடு தேரடி அருகில் உள்ள

எங்கள் சங்கத்திற்குத் தங்கள் வருகை தருமாறு
வேண்டிக்கொள்கிறோம்.

★

தேவைக்கேற்ற ஆடைகளைக் குறித்த காலத்தில்
தயார் செய்தும் அளிக்கிறோம்.

போன் நெ. 222

தம்பி

மலர் மணம்

சிரித்திடும் முல்லையைப் பறித்திடும்போது அதனைத் தன் உள்ளம் வென்ற எழிலுடையாள் ஏற்றுக்கொள்வாள்; மணம் கண்டு மகிழ்வாள்; எழில் எழிலுடன் சேர்ந்திடும் என்ற எண்ணம்கொள்ளாத காதலன் உண்டா!

வாளினை வடித்தெடுத்துக் கொடுத்திட உலைக்கூடத்தினில் பணிபுரிவோன், இந்த வாள் வீரன் கரம்சேர்ந்து, அக்ரமத்தை வெட்டி வீழ்த்தப் பயன்படும், உரிமை காத்திடத் துணை நிற்கும் என்ற நம்பிக்கைப் பெற்றிடும்போதுதானே, அவன் வேலைத்திறன் நேர்த்திமிக்கதாகும்?

சொல்லழகும் பொருளழகும் இழைந்துள்ள நற்கவிதை இயற்றிடுவோன் அக்கவிதையினைச் சுவைத்திட, பயன்பெற்றிட இசைந்து வந்திடுவோர் உளர் என்ற உணர்வினைப் பெற்றாலொழிய உள்ளத்திலிருந்து கவிதா சக்தி சுரந்திடுமா?

எடுத்துக்கொள்ளும் எந்தச் செயலினையும் பாராட்டி வரவேற்றிடவும், ஏற்றுப் பயன்படுத்திக்கொள்ளவும் தக்கார் உளர், என்ற எண்ணம், மேற்கொள்ளும் செயலினைச் செம்மையானதாக்கிடுமல்லவா?

தாயின் அன்பினைப் பெற்றிட வாய்ப்பற்ற குழந்தை எத்தனை அழகுடன் விளங்கியும், பயன் என்ன!

இதழ் நடாத்தப்படுகிறது, மலர் வெளியிடப்படுகிறது, ஆயினும் அவற்றினைப் பெற்றிடுவதில் மகிழ்ச்சியும், பயன்பெறுவதில சுவையும் தேடிடுவோரின் தொகை மிகுதியாகவும், வளர்ந்தவண்ணமும் இருந்தாலொழிய, எண்ணங்களை வடித்தெடுத்து இதழிலும் மலரிலும் தந்து வருவது எற்றுக்கு என்ற ஏக்கமல்லவா மனதினைக் குடைந்திடும் என்பதுபற்றிய எண்ணம், இவைபற்றிய நினைவினைக் கொண்டு வந்து சேர்த்தது.

ஆனால் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அத்தகைய கவலை குடைந்திடும் நிலையினை மூட்டிவிடவில்லை; **'காஞ்சி'** இதழினுக்குத் தொடர்ந்து நல்லாதரவு அளித்து வருகின்றனர். மகிழ்ச்சி நன்றி.

'காஞ்சி' இதழும், கழகக் கருத்துக்களைப் பரப்பிவரும் மற்றைய இதழ்களும், முழுக்க முழுக்கத் தம்மைக் கழகத்திடம் ஒப்படைத்துவிட்டவர்களால் நடத்தப்பட்டு வருவதாகும்.

ஏழெட்டுத்துணையாசிரியர்கள், மூன்றுநான்கு ஓவியர்கள், சுறுசுறுப்புமிக்கவிளம்பரத்துறைக் குழுவினர், ஆகியோர் புடைசூழ ஆசிரியர் அமர்ந்தபடி, கண்களை மூடியபடி இந்த இதழில் என்ன வண்ணம் காட்டிடலாம், எந்தச்சுவையைக் கூட்டிடலாம் என்று சிந்தித்துப் பார்த்து, எழில் ஏடுகள் பலவற்றினை ஒப்பிட்டுப் பார்த்து, வனப்புமிக்க விதமான இதழினைத் தந்திடும் வகை காண்பது என்பதெல்லாம், வேறு இதழ்களில்; கழக இதழ் நடாத்துவோர் மாலையில் மன்னார்குடி, காலையில் காட்பாடி, மறுநாள் போடி,

பயன்தரத்தக்கப் படைக்கலன் தம்பி!

மற்றோர் நாள் சேலம், பிறிதோர் நாள் ஈரோடு என்ற முறையில் சுற்றிச்சுழல்பவர்கள். உடலிலே அலுப்பு ஏற்படும் என்பதனை எடுத்துக்காட்ட இதனைக் கூறிடவில்லை; ஓய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு நிம்மதியாகச் சிந்தித்து இதழினுக்குச் சுவை கூட்டிடும் நிலையில் உள்ளவர்கள் அலலர் என்பதனை எடுத்துக் காட்டத்தான்.

பிற இதழ் நடாத்துவோர் போல, இதனையே தமது முழுநேர வேலையாகவோ, முதல்வேலையாகவோ கொண்டவர்கள் அல்லர்.

கழக இதழ் நடாத்துவோர் மேற்கொண்டுள்ள பணி, ஒரு புத்தரசு காண்பது; அதற்குத் தக்கவிதமான பாசறையாகக் கழகத்தை வலிவுள்ளதாக்குவது.

அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக அவர்கள் தேடிக்கொள்ளும் படைக்கலன்களில் ஒன்று, இதழ்!

அந்த படைக்கலன் வண்ணம் மிக்கதாக விளங்கிடச் செய்திட வேண்டுமே என்பதிலே மட்டுமே தம்மை ஈடுபடுத்திக்கொள்ள இயலாத நிலையினர்.

ஆனால் அதேபோது அந்தப் படைக்கலன், பயன் தரத்தக்கதாக இருந்திட வேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக உள்ளவர்கள்.

இந்தநிலை காரணமாகவே இதழில் எழிலினை மிகுதியாக்கிட, கண்களைக் கவரத்தக்க வடிவம் கொடுத்திட முடிவதில்லை.

இதழ் நடத்துவது ஒன்றைமட்டுமே மேற்கொண்டிடின், எழில் ஏடு என்று எவரும் வியந்து பாராட்டிடத தக்க முறையினில், நமது கழகத்தோழர் எவரும் இதழ் நடாத்திடலாம். இயலாத ஒன்று அல்ல! ஆனால் நாம் மேற்கொண்டுள்ள பணியின அளவும் தன்மையும் நம்மை ஏட்டுக்கு எழிலூட்டும் வேலையிலே மட்டுமே நாம் பிணைந்துவிட இடம் தருவதில்லை.

இந்த நிலையிலும், கூடுமான வரையில், இதழிலே பொலிவு விளங்கிடச் செய்வதில், **இளங்கோவன்** ஈடுபட்டு, **'காஞ்சி'** இதழினுக்கு ஒரு கவர்ச்சி கிடைத்திடச் செய்துவருவதனைப் பலர் பாராட்டிடக் கேட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

'காஞ்சி' இதழின் இந்த இரண்டாம் ஆண்டுமலர், எழில்மிகு வடிவம் பெற்றிட முனைந்து பணியாற்று அனைவருக்கும் அகமகிழ்ச்சி அளித்திடுவதல் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருக்கும் நிலையினைக் காண்கின்றீர்கள்.

மலரில், இடம்பெற என்னிடமிருந்து கட்டுரைகளைப் பெறுவதென்பதே ஒரு தனிக்கலை! சற்றுக் கடினமான கலையுங்கூட!

கட்டுரைகளை—அதிலும் மலருக்கு என்று தனித்தன்மை வாய்ந்த கட்டுரைகளை — எழுதிட எனக்குக் கிடைக்கும் நேரமே, நள்ளிரவுக்கும் விடிவதற்கும் உள்ள நேரம்—அதலேயும் கழகத் தோழர்கள் தங்கள் பிரச்சினைகளுடன் வாராதிருந்திடின்.

ஆனால் இந்த நிலையிலும் இதழ்மூலம் என் உடன் பிறந்தாருடன் தொடர்புகொளவதிலே எனக்குள்ள பேரார்வம், என்னை எப்படியோ பணிபுரியச் செய்கிறது.

ஒவ்வொன்றையும் கூறிவிடவேண்டும், கூறிடும் ஒவ்வொன்றும் முழு அளவினதாக இருக்கவேண்டும் என்ற துடிப்பு எனக்கு.

கூறித் தீரவேண்டியவைகளோ மிக அதிகம் அளவில்; அந்த அளவு வளர்ந்துகொண்டும் வருகிறது.

உலக நடவடிக்கைகளைப்பற்றி, உள்ளத்து எழும் உணர்ச்சிகளைப்பற்றி, ஊராளவோர் போக்குபற்றி, அதனை மாற்றியாகவேண்டிய முறைபற்றி, கூறிட ஆயிரம் உள.

பிரச்சினைகள் கூவிக்கூவி அழைக்கின்றன.

எந்தக் கருத்துக்கும் இனிமை சேர்த்திட, நான் உளேன் காண்க! என்று தமிழ் இலக்கியம் அழைக்கிறது.

ஆதிக்கத்தை எதிர்த்திடும் ஆற்றலை மக்களிடம் எழச்செய்திட வேறு எதுவும் செய்திட வேண்டாம், நான் உள்ளடக்கி வைத்துக்கொண்டுள்ள கருத்தோவியங்களைப் பார், அவைகளைப் பக்குவப்படுத்தித் தந்திடு, அதுபோதும் என்று வரலாற்றுச் சுவடி கூறுகிறது.

கூறவேண்டியதற்கு வண்ணம் தேவையா, நல் வடிவம் தேவையா, நாடக வடிவினில் கொடுத்திடு, படிப்போர் உள்ளத்தைத் தொடும் என்று கூறுகிறது ஒருகுரல்!

கதை வடிவம் கொடு, எந்தக் கருத்தும் எளிதாகிடும், இனிப்பளித்திடும், இதயம் சென்று தாக்கிடும் என்று கூறுகிறது ஒருகுரல்!

ஒன்றல்ல இரண்டல்ல, பலப்பல உள, எனக்கு ஆவலூட்டுபவை.

ஆனால் நானே, கூறவேண்டியவைகளைக் கூற வேண்டிய முறையில கூறியிருக்கிறோம் என்ற பெருமிதம் கொண்டிட முடியவில்லை; முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்என றுமட்டுமே கூறிடமுடிகிறது. ஆனால் அந்த நிலையே ஓர் தனித்தன்மை வாய்ந்த மகிழச்சியினைத் தருகிறது. காரணம், வடிவம் வண்ணம் எந்தத் தரத்தில் உளது என்பதுபற்றி அதிகம் பொருட்படுத்தாமல், நமக்குத் தேவைப்படுவனவற்றினை, நம்முடைய தோழமையிலே மகிழ்ச்சி தந்திடும் அண்ணன் தருகின்றான் என்ற பற்றுடன், இதழினை வரவேற்றிடும் ஆயிரமாயிரம் தோழர்கள் உளர் என்பதுதான்.

'காஞ்சி' இரண்டாம் ஆண்டு மலரும் அதேவிதமான வரவேற்பினைப் பெற்றிடும் என்பதனை உணருகின்றேன்; மகிழ்ச்சிகொள்கின்றேன்.

இந்த மலரில் நெடுங்கதைகள் என்று சொல்லத் தக்க அமைப்புடன், இரண்டு கருத்தோவியங்களைத் தந்துள்ளேன்; **இரும்பு முள்வேலி; வண்டிக்காரன் மகன்.**

சிக்கலறுத்துச் சிந்திக்கச் செய்திடும்!!

கழகத்தோழர்களின் நன்மதிப்பினைப்பெற்றுள்ள பலர் தந்துள்ள கவிதைகள், கதைகள், கட்டுரைகள் மலரில் இடம்பெற்றுள்ளன.

இவைகளிலே ஒன்றுகூட, படித்துப் பொழுது ஓட்ட அல்ல! ஒவ்வொன்றும் ஒரு பிரச்சினையை விளக்கிட! இந்த தனித்தன்மை இதழ்களை மட்டும் நடத்திடுவோர் கொண்டிடவோ, தந்திடவோ முடியாது; அவர்கட்கு அந்தமுறை, தேவையுமில்லை.

எடுத்துக்காட்டுக்காக—எரிச்சல் மூட்டவேண்டும் என்பதற்காக அல்ல—ஒன்று கூறுகிறேன்; இன்று காங்கிரசாட்சியின் போக்கையும், ஒவ்வொரு நடவடிக்கையையும், கண்டிப்பதில், கேலி செய்வதில, இதழ்கள் பலவும் ஈடுபட்டுள்ளன; ஆர்வத்துடன்.

ஐந்தாண்டுத்திட்டத்திலிருந்து அன்றாட நிர்வாகத்திலே நெளியும் ஊழல்கள் வரையில், ஆளுங்கட்சிக்குள் நெளியும் அலங்கோலங்கள் உட்பட, கண்டிக்கப்படுகின்றன, இதழ்கள் பலவற்றாலும்.

ஆனால், தாம் வலியுறுத்தும் பிரச்சினைகள், அளித்திடும் விளக்கங்கள், தந்திடும் அறிவுரைகள், விடுத்தடும் எச்சரிக்கைகள், துளியேனும், ஆட்சியின் போக்கை மாற்றிடுவதில் வெற்றி தந்துள்ளனவா என்ற கணக்குப் பார்க்கின்றனரா, இதழ் நடாத்துவோர் என்றால் இல்லை; வேறு கணக்குதான் பார்த்துக் கொள்கின்றனர்.

கண்டனத்தைக் கொட்டுகின்றனர், காரணங்களை அடுக்கிக் காட்டுகின்றனர், வாதங்களைத் திறமையாகச் செய்கின்றனர். ஆனால் வழக்கிலே வெற்றி கிட்டிற்று என்பதுபற்றி மட்டும் பார்த்திட முனைவதில்லை. ஏன்? அவர்கள் இதழ் நடாத்துகிறார்கள்; ஆட்சியின் அக்ரமத்தை ஒழித்திடும் இயக்கம் நடத்தவில்லை. அவர்களிலே சிலர் தமது திறமையை விளக்குகிறார்கள், தீமையை ஒழித்திடும் செயலில் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ளாமலேயே! அவர்கள் பிரச்சனைகளைப்பற்றி நிம்மதியாகச் சிந்திக்கவும், நேர்த்தியாக விளக்கிடவும் தகுதி பெற்றவர்கள்; நிலைமையை மாற்றிட வேண்டும் என்ற மனத்திண்மை கொள்பவர்கள் அல்லர்.

கழக ஏடுகள் அவ்விதமானவை அல்ல.

அந்த ஏடுகள், கழகம் பெற்றுள்ள படைக்கலன்கள்.

கழகமோ, ஆட்சியின் அக்ரமத்தை ஒழித்திட அறப் போர் மேற்கொண்டுள்ள பாசறை.

ஆகவேதான் கழக ஏடுகளில் பிரச்சினைகளை விளக்கப்படுவது மட்டுமல்ல சிக்கல்கள் போக்கிட வழி கூறப்படுகிறது; அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன; குறிக்கோள் எடுத்துக் காட்டப்படுகிறது.

ஆக, நல்லாட்சி காணவேண்டும் என்பதற்கான ஆர்வம் கொண்டோர் எவரும், அதற்கான இயக்கம் அளித்திடும் இதழ்களை, ஏந்தித் தீரவேண்டிய படைக்கலன் என்று கொண்டிட வேண்டும். கழக இதழ்கள் மூலம் பெற்றிடும் பலன், இதனால் தனித்தன்மை வாய்ந்ததாகிறது.

எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், அதுகுறித்து சர்க்கார் மேற்கொண்ட போக்கினைக் கண்டிக்கும் அதே இதழ்கள், சூடு தணிந்ததும், வேறு திசையிலே மக்களின் கவனத்தைத் திருப்பி விட்டு விடுவதிலே முனைவதனைக் காணலாம்.

அதனைவிடத்துணிவாகச்சிலஇதழ்கள், கண்டனம் வெளியிட்டுவிட்டு, சின்னாட்களுக்குப் பிறகு 'கனம்'கள் தந்திடும் கருத்துக்களை அவை முன்னம் தாம் வெளியிட்ட கண்டனத்துக்கு முற்றிலும் ஒத்து வராது என்று தெரிந்திருந்தும்—வெளியிட்டு பிரச்சினையை மடியச் செய்து விடுகின்றன.

இந்த இதழ்கள் மட்டும், அறப்போர் மனப்போக்குடன், நல்லாட்சி கண்டாகவேண்டும் என்ற துடிப்புடன் பணிபுரிந்திடின், ஜனநாயகம் எவ்வளவோ அளவு செம்மைப்பட்டிருந்திருக்கும். ஆனால் அந்த முறையில் அவைகள் வேலை செய்யவில்லை.

அதனால் கழக இதழ்கள், வசதியும் வாய்ப்பும், வல்லமையும் அனுபவமும் கொண்ட மற்ற இதழ்கள் செய்திருக்கக்கூடிய — ஆனால் செய்யாது விட்டுவிட்டுள்ள—வேலைகளையும் சேர்த்துச் செய்திட வேண்டி இருக்கிறது. சுமை அதிகம்! ஆகவே பாடு அதிகமாகிறது.

நீண்ட பழங்காலந் தொட்டே—பணம்—பதவி—எனும் எதன் காரணமாக ஏற்படுவதாயினும்—செல்வாக்குக்கொண்டவர்களின் சீற்றத்துக்கு அஞ்சுவதும், புன்னகைக்கு விரும்புவதும், நம் நாட்டிலே இயல்பு ஆக்கப்பட்டு விட்டிருக்கிறது.

மந்தம், நிதானம் ஆக்கப்பட்டுப் பாராட்டப்படுவதும், கஞ்சத்தனத்தை சிக்கனம் என்று புகழ்வதும், துடுக்குத்தனத்தை அஞ்சாமை என்று கூறிப் பாராட்டுவதும், களியாட்டத்தில் ஈடுபாடு இருந்திடின் அதனைக் கலை ஆர்வம் என்றும், எவரையும் மதித்துக் கலந்து பேசிடாத போக்கை, சுயசிந்தனை என்றும், அகம்பாவத்தைக் கெம்பீரம் என்றும் கூறிப் பாராட்டுவோர் இருப்பதனைக் காண்கின்றாய்.

இந்தி ஆதிக்கப் பிரச்சினைபற்றித் தமிழக ஏடுகள் காட்டிய ஆர்வமும், தொடுத்த கண்டனமும் கொஞ்சம் அல்ல.

இன்றுவரையில் இந்த இதழ்கள் கேட்டுக் கொண்ட அளவிலேகூட ஆட்சிமொழிச் சட்டம் திருத்தப்படவில்லை.

என்ன செய்கின்றன இந்த இதழ்கள்?

அதனையும் எழுதுகின்றன!

எழுதிவிட்டு?

எழுதுகின்றன!

அவ்வளவுதான்!!

ஜனநாயகம் வலிவு பெறவேண்டுமானால் என்ன செய்திருக்க வேண்டும்? தட்டாமல் தயங்காமல் இந்த இதழ்கள், மக்களிடம் கூறவேண்டும், இந்தத் தேர்தலில், காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்! இந்தி ஆதிக்க நோக்கத்துட

ளேயே இந்த ஆட்சி இருந்து வருகிறது. எமது வேண்டுகோட்களுக்கு எள்ளளவு மதிப்பும் தர வில்லே. இது அரசியல் அகம்பாவம். இந்த அகம்பாவம், சர்வாதிகாரத்திற்குத் தான் நாட்டை இழுத்துச் செல்லும். ஆகவே நாட்டினரே! இந்த காங்கிரசுக்கு ஓட்டுப்போடாதீர்கள் என்று எழுதவேண்டும்.

எழுதுகின்றனவா?

இல்லே! ஏன்?

அவை, அக்ரமத்தை ஒழித்தாக வேண்டும் என்பதற்காக அமைந்துள்ள படைக்கலன்கள் அல்ல! வண்ணம், வடிவம் பாரீர்! என்று கூறிடும், ஏடுகள்!!

எனவேதான் தம்பி! நான் மிக அதிகமாகவே வலியுறுத்திக்கொண்டு வருகிறேன்: நல்லாட்சி காணவேண்டும் என்பதிலே நாட்டம் உள்ளோர், அந்த நோக்கத்துக்காகவே ஆக்கப்பட்டுள்ள படைக்கலன் போன்ற கழக ஏடுகளேப் பெரிய அளவில் ஆதரிக்க வேண்டும் என்பதனே.

வானவில்லின் வண்ணத்தைக் கண்டு வியந்திடலாம்; ஆனல் ஓவியம் தீட்டிட வண்ணக் கலவை நாம் தயாரித்துக் கொண்டாக வேண்டும். வானவில்லில் காணப்படும் வண்ணத்தை வழித்தெடுத்துக் கொள்ள முடியாது.

கழக ஏடுகளின் தனித்தன்மை எவ்வளவுக் கெவ்வளவு அதிக அளவில் உணரப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு வேகம் நமது பயணத்திற்குக் கிடைக்கும்.

இந்தப்பணி சிறப்படைய வேண்டுமெனில், பறித்தெடுத்த சிரித்திடும் முல்லேயைப் பெற்றுச் சூடிக்கொள்ள ஏழில் மங்கை இருநதிடவேண்டும் என்பதுபோல, வடித்தெடுத்த வாளினே கரம் கொண்டு களம் சென்றிடத் தகுது மிகு வீரன் கிடைத்திடவேண்டும் என்பதுபோல, கழக ஏடுகளேத் தக்க ஆதரவு கொடுத்து வளர்ந்திடச் செய்வதுடன், பயன்படுத்திக் கொள்ளும் பக்குவம் உணர்ந்த பல்லோர் தேவைப்படுகின்றனர்.

அந்தப்பல்லோர், **'காஞ்சி'** இதழினுக்கு ஊக்கமளித்து வருகின்றனர், தொடர்ந்து; தோழமையுடன். அவர்கட்கு நன்றி கூறிக் கொள்வதிலே மகிழ்ச்சி பெறுகின்றேன்.

'காஞ்சி' இதழுடன் தம்பி! உனக்கு ஏற்பட்டுள்ள அன்புத் தொடர்பு தெம்பு ஊட்டுவது மட்டுமல்ல, இதழின் எதிர்காலத்திற்கான ஒளியும் தந்திடுகின்றது.

போர்டில்லன் எனும் ஆங்கிலக்கவிஞன் கூறியதனே நினேவிற்கொள்ளுகிறேன்:

இரவுக்கு ஆயிரம் கண்கள்,
ஆனல் பகலுக்கு ஒன்றே!
ஆயினும சூரியன் மறைந்தால்
உலகத்தில் ஒளி இல்லேயே!

அறிவுக்கு ஆயிரம் கண்கள்
ஆனல் நெஞ்சுக்கு ஒன்றே!
ஆயினும் அன்பு மறைந்தால்
வாழ்வில் ஒளி இல்லேயே!



அதுதான் எளிது!

இரண்டு இளேஞர்கள் கடற்கரையில் அமர்ந்து அளவளாவிக்கொண்டிருந்தனர், ஒருவன் மற்றவனேப் பார்த்து "ஒரு பெண்ணுல், ஆணேப்போல் அவ்வளவு சுலபத்தில் ஒரு பந்தினேப் பிடிக்க முடிவதில்லேயே! ஏன்" என்று கேட்டான்.

"பந்தைப் பிடிப்பதைக் காட்டிலும். பெரிதாகவும், எளிதாகவும் ஆணேப் பிடிக்க முடிவதால்!" என்ருன் மற்றவன்!

முத்தமிழும் முத்தும் முழங்கிடும் திருநாடு நம்நாடு. கத்தும் கடல் அடக்கிக் களம் செலுத்தி **கடாரம்** சென்ருேர் நம் இனத்தார். நாமணக்கப் பா பாடி நற்றமிழை நல்லவையைப் பாமணக்கச் செய்ய வந்த பாவலர்கள் தேனெத்த தீந்தமிழைத் தந்திடும் திருநாடு, நம்நாடு. எனினும்......?

ஓர் ஏக்கம் — ஓர் பெருமூச்சு — ஓர் குமுறல் அன்ருே, அந்த 'எனினும்' என்பதுடன் பிறந்திடக் காண்கிருேம். அந்த ஏக்கம் போக்கிட, பெரு மூச்சு நின்று ஓர் புன்னகை மலர்ந்திட குமுறல் அகன்று மனதிலே ஓர் நிம்மதி எழுந்திட, எடுத்துக்கொள்ளப்படும் இணேயற்ற முயற்சியில், தனது பங்கினேச் செலுத்துவதில் மகிழ்ச்சி கொள்கிறது **'காஞ்சி.'**

தம்பியாம் நீ திரட்டித் தந்திடும் பேராதரவே, **'காஞ்சி'** இதழின் பணி செம்மையுடையதாகிடச் செய்திடும்.

'காஞ்சி' நடாத்திடும் இளங்கோவனும், உடனிருந்து பணியாற்றும் முத்துராமனும், சுந்தரேசனும் அவ்வப்போது கதை, கவிதை, கட்டுரை வழங்கிடும் நண்பர்களும், ஓவியம் தீட்டித் தந்திடுவோரும், இதழின் எழிலும் பயனும் மிகுந்திடவேண்டுமென விழைகின்றனர்.

எந்த எழிலும் தம்பி! உன் கரம் தந்திடும் எழிலுக்கு நிகராகாதன்ருே! இதோ என்னிடம்! என்னிடமுந்தான்!!—என்று கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் **'காஞ்சி'**யைக் கரத்தில் கொண்டு கூறிடுவதைக் காட்டிலும் இனிய இசை வேறு எது இருக்க முடியும்—என் செவிக்கு!

அந்த மகிழ்ச்சியினே அளித்துவரும் மாண்புக்கு நன்றி கூறி, **'மலர்'** கண்டிடுவாய், மணம் நுகர்ந்திடுவாய் என்று அழைத்துத்தருகின்றேன் நாட்டுக்கு எழிலும் ஆட்சிக்கு ஏற்றமும் தேடித்தந்திடும் முயற்சியினே மேற்கொண்டுள்ள **'காஞ்சி'** இதழின், இரண்டாம் ஆண்டு மலரினே.

அண்ணன்;

அண்ணாதுரை

வண்டிக்காரன் மகன்



ஆப்பக் கடை அன்னம்மாளிடம் அச்சம் கொள்ளாதவர்கள் அவலூரில் யாரும் இருக்கமுடியாது. அவ்வளவு துணிச்சல். யாரையும் ஒரு பொருட்டாக மதிக்காத சுபாவம்.

அப்படிப்பட்ட அன்னம்மாள் சோகமுற்று இருப்பது என்றால் ஏதோ பெரிய விபரீதம் நேரிட்டுவிட்டது என்றுதானே பொருள்.

விபரீதம்தான் நேரிட்டுவிட்டது. தன் மகள் காவேரியின் ஜாதகத்தைக் கேட்க அருணகிரி வருவான் வருவான் என்று எத்தனை நாட்களாகக் காத்துக்கிடப்பது. வரவேயில்லை.

அத்தே! என்று குளிர்ச்சியாகக் கூப்பிடுவான் சொக்கலிங்கம் என்று காத்திருந்தாள்; நடக்கவில்லை. கோபம் தலைக்கேறிவிட்டிருந்தது.

அந்த இருவரையும் ஒரு பிடி பிடிக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்தாள். ஆனால் காவேரி? கண்ணீர் வடிக்கிறாள்! கிணறு குட்டை அகப்படாமலா போகும் என்கிறாள். நீ வீண் சண்டை போட்டுப் போட்டு நல்லவர்களையும் விரோதிகளாக்கி விடுகிறாய் என்று குற்றம் சாட்டியே பேசுகிறாள்.

பக்குவமாகப் பேசி காரியத்தை முடிப்பதற்குத் துப்பு இல்லாமல், கடும் கோபத்தைக் கக்கிக் கிடப்பது எதற்கு என்று கேட்கிறாள். நான் கன்னியாகவே காலந் தள்ளுவேன் என்கிறாள்.

“நான் பெத்த பெண்ணே என்னைத் துப்புக் கெட்டவள், பக்குவம் தெரியாதவள் என்று பேசுவ

முகப்போவியக் கதை.

தையும் கேட்டுக்கொள்ளும் காலம் வந்துவிட்டதே'' என்று நினைத்து அன்னம்மாள் சோகமாக இருந்தாள்.

பக்குவமாகத்தான் பேசிப் பார்ப்போமே என்ற முடிவுக்கு வந்த அன்னம், சொக்கலிங்கத்தை எதிர்பார்த்துக் கொண்டு புளியங்குட்டை அருகே நின்றுகொண்டிருந்தாள்.

சொக்கலிங்கம் வழக்கமாக அந்த வழியாக, டேவிட்வீட்டுக்கு சைகிளில் போவது அன்னம்மாளுக்குத் தெரியும்.

சைகிள் மணிச்சத்தம் கேட்டது. சோகத்தை மறைத்துக்கொண்டு, புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டாள். அன்னம்மாளைக் கண்டதும் சொக்கலிங்கம் சைகிளை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். பக்குவமாகப் பேசத் தொடங்கினாள்.

"தொரெ உம்பேர்லே இம்மா ஆசையா இருக்கரே, அவரோட சொல்லி ஏதாச்சும் ஒரு நல்ல வேலையைத் தேடிக்கக் கூடாதாடா தம்பி! இன்னும்எவ்வளவுன்னு தான் படிப்பே..."

"என்னோட மாமா கூட அதுபோலத்தான் சொல்றரு......ஆனா எனக்குப் படிக்கறதுக்குக் குந்தகமில்லாத வேலையா கிடைக்கணும்னு ஆசை..."

“ஏனும்! நீயும் இந்த தொரைமாதிரி எழுதிக்கிட்டே காலத்தை ஓட்டிடப் போறயா...இவருக்குப் பெண் ஜாதி இல்லே......புள்ளே குட்டி இல்லே...ஒண்டிக்கட்டை...நீ அப்படி இருக்க முடியுமா... இன்னும் எவ்வளவு காலம் காத்துக்கிட்டு இருப்பா உனக்காக...”

“எனக்காகக் காத்துக்கிட்டு இருக்கருளா... அது எந்தப் பைத்யக்காரப் புள்ளே...”

“ஏண்டா தம்பி! என் கிட்டவே ஒண்ணும் தெரியாதது போல நடிக்கறயா...என்னை சொக்குப் பொடி போட்டயோ தெரியல்லே, என் மவளோட கண்ணு உன்னைத் தானே சுத்திச் சுத்தி வளையம் போடுது...காலா காலத்திலே முடியணுமே...”

“இது என்ன விபரீதம். நான் ஒருவிதமான கெட்ட எண்ணமும் இல்லாமத்தான் பழகறேன்...காவேரியும் அது போலத்தான்...”

“அடப் பாவி! என்னை இப்படி ஒரு இடியைத் தூக்கிப் போடறே.......அந்தப் பொண்ணு உன்னைப் பார்க்கற பார்வையும் பேசற பேச்சும் சிரிக்கிற சிரிப்பும் ஊரே தெரிஞ்சிக்கிட்டிருக்குது தொரெக்கேகூடத் தெரியும்... அப்படித்தான் நான் எண்ணிக்கிட்டு இருக்கறேன்...”

‘ரொம்பதப்பு...நான் அந்த விதமான பேசசேபேசினது கிடையாது...சத்யமா...”

“பேசணுமா....ஏண்டா! ஒரு வயசுப் பொண்ணை எதிரே உட்கார வைச்சிகிட்டு இளிச்சிக்கிட்டு இருக்கறயே, என்னமோ சித்திரம் தீட்டறேன்னு... அது எதுக்காம்...”

“காவேரியோட அழகு அக்கா! என்னைப் படம் பொடச் சொல்லுது...”

“சொல்லுண்டா சொல்லும்......உன் கண் அழகு யாருக்கு உண்டு...உன் கன்னம் மாம்பழம், உடம்பு தங்கம்னு இன்னும் என்னென்ன இழவோ பேசி அந்தப் பெண்ணேட மனசை மயக்கிவிட்டு, இப்ப இப்படிச் சொல்றயே ...நியாயமா...-சொக்கலிங்கம்!





நான இப்பத்தான் கேட்கறேன். வெட்கத்தை விட்டே கேட்கறேன், என் மகளைக் கட்டிக்கொள்ள கசக்குதா...ஆப்பக்காரி பொண்ணுன்னு சொல்லுவாங்களேன்னு தோணுதா நாலு எழுத்துப் படிச்சதாலேயே என்னைப் பாத்தா கேவலமாத் தோணுதா...''

"அப்படிப்பட்ட எண்ணமெல்லாம் எனக்குக் கிடையாது. நான் மட்டும் என்ன பெரிய மிராசுதாரன் பிள்ளையா......வண்டிக்காரன் மகன்தான்.........நான் காவேரியைக் கட்டிக்கொள்ள முடியாதுன்னு சொல்றதுக்குக் காரணம், நீ நினைக்கிறமாதிரியெல்லாம் இல்லே...எனக்குக் கல்யாணம் கார்த்தியெல்லாம் இப்போது கிடையாது. எங்க அப்பா படுகிற கஷ்டத்தைப் போக்கியாகணும், முதலிலே. காலம் முழுவதுமா வண்டிக்காரராக இருப்பது...நான் ஒரு பிள்ளை பொறந்துதான் என்ன பயன்.''

"எனக்கு இந்தச் சமாதானமெல்லாம் தேவையில்லே. நானும் காவேரியும் கோலார் பட்டணம் போறோம், அவளோட பெரியம்மா வீட்டுக்கு. மூணு மாதத்திலே வந்து சேருவோம். அதுக்குள்ளே ஒரு முடிவுக்கு வந்தாகணும்; இல்லையானா நான் தொரெகிட்டயவ சொல்லிவிடுவேன்...''

அப்போது ஒரு ஆள் ஓடிவந்து "சொக்கலிங்கம்! ஓடியா, ஓடியா...உன் மாமனுக்கு மாரடிச்சுட்டுது.... கீழே விழுந்துட்டாரு''—என்று கூவினான்.

ஓடோடிச் சென்ற சொக்கலிங்கம், தன் மாமன் மார்வலியால் துடிப்பதையும், பக்கத்திலிருந்து கொண்டு டேவிட்துரை ஏதோ மருந்து கொடுததுக் கொண்டிருப்பதையும் பார்த்துப் பதறிப்போனான்.

டேவிட்துரை, கீழ் நாடுகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஒரு பேரறிவாளர்; தங்கமான மனமுடையவர்; அவரும் அருணகிரியைப்போலவே மணமாகாதவர்.

அருணகிரி அவரிடம் வேலைக்கு அமர்ந்து முப்பது ஆண்டுகளாகிவிட்டன. ஒரு நாளாகிலும் முகம் சுளித்துக்கொண்டதில்லை. ஒரு பேதமும் காட்டாமல், தமது பங்களாவின் பின்புற விடுதியிலேயே அருணகிரியை இருந்துவரச் செய்தார்.

டேவிட் துரையுடைய வீட்டு விவகாரம் முழுவதையும் கவனித்துக்கொண்டு வந்தான் அருணகிரி. ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு ஆள் இருந்தனர் — தோட்ட வேலைக்கு—சமயலுக்கு — கணக்கு எழுத— ஆனால் எல்லாவற்றையும மேற்பார்வை பார்த்துக் கொள்ள அருணகிரிதான். எதையும் அருணகிரியிடம் சொல்லித்தான் செய்துகொள்ளவேண்டும்; அவ்வளவு நாணயமாக நடந்துவந்தான்.

அருணகிரி துடிப்பது கண்டு, கதறிய சொக்கலிங்கத்தை டேவிட் சமாதானப்படுத்திக்கொண்டே, தன் கண்களையும் துடைத்துக்கொண்டார்.

இனி இவனை அவனுடைய அப்பனிடம் சேர்த்து விட வேண்டியதுதான்...என் காலம் முடிந்துவிட்டது ...சார்! இவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைக்க உங்களோட உதவிதான்..........வேறேயார்.....—எனக்குத் தெய்வம்போல நீங்கதான்'' ...என்று மிகுந்த கஷ்டத்துடன் பேசிய அருணகிரியை டேவிட் சமாதானப் படுத்தியபடி இருந்தார்.

சொக்கலிங்கத்தின் தகப்பனுருக்குக் கடிதம் போடப்பட்டது; அவரும் வந்து சேர்ந்தார்.

"சடையப்பா! நாம் எவ்வளவு முயன்றாலும் இனி அருணகிரியைக் காப்பாற்ற முடியாது. டாக்டர் சொல்லிவிட்டார். மனதைத் திடப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான்.''

"என் மகனுகச் சொக்கன் பிறந்தானே தவிர, ஐயா! அருணகிரியோட மகனுகத்தான் வளர்ந்து வந்தான். வருஷத்துக்கு ஒரு தடவையோ, இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவையோ, வந்து பார்த்து விட்டுப் போகிறோமே, அது தவிர மற்றபடி எங்களோட தொடர்பே அவனுக்குக் கிடையாது. சொக்கலிங்கத்தை இவ்வளவு நல்லபடியாக வளர்த்த புண்ய மூர்த்தி அருணகிரி......அவனோட உதவி கிடைத்திராவிட்டா, என் மகன் கூலிக்காரனுத்தான் ஆகியிருப்பான்.

"சடையப்பா! உன் மகன் நல்ல படிப்பாளி......அவனாலே உன் குடும்பம் கட்டாயம் நல்லநிலை அடையும். என்னோட இருந்து விடச் சம்மதமானாலும் சரி.........இல்லே, வேறே எங்கேயாவது வேலைக்குப்போக விருப்பம் இருந்தாலும் சரி, அதற்கு ஏற்பாடு செய்கிறேன். அது என் பொறுப்பு.''

அருணகிரி சில தினங்களில் கண்களை மூடிவிட்டான்.

டேவிட் சொக்கலிங்கத்தைக் கேட்டார், என்னுடன் இருந்து விடுகிறாயா என்று. அவனுக்கு அதிலே விருப்பம் என்றாலும், அந்த ஊரில் இருந்தால் ஆப்பக் கடை அன்னத்தினுல் பெருத்த தொல்லை விளையும் என்ற பயம் அவனை அந்த இடத்தை விட்டுச் சென்று விடவேண்டும் என்று தூண்டிவிட்டது.

பல ஆண்டுகளாகப் பிரிந்து இருந்தாலும், தகப்பனரிடம் பாசம் இல்லாமல் போகுமா. அதிலும் அவர் வாழ்ந்து கெட்டவர் என்பதையும், இப்போது வண்டிக்காரராக இருந்து வருகிறார் என்பதையும் எண்ணும்போது, இனி அவருடன் வாழ்ந்து வரவேண்டும், தான் ஏதாவது வேலை தேடி அவரை நிம்மதியாக வாழவைக்கவேண்டும் என்ற ஆவல் அதிகமாகி விட்டது.

"இனியாகிலும் மகன் வீட்டோடு வந்து சேரட்டுமே...உள்ளதைக் கொண்டு குடும்பத்தை நடத்த முடியாதா—அவன் ஒருவன் வந்து சேருவதாலா, நமக்குப் பளுவு ஏறப்போகுது" என்று சொல்லும்போதே தன் தாயாரின் கண்கள் குளமானதையும் கண்டான். தகப்பனுருடன் ஊர்சென்று விடுவது என்று உறுதி பலப்பட்டுவிட்டது.

டேவிட் தடுக்கவில்லை. நீ முன்னுக்கு வர வேண்டியவன், இங்கே அடைப்பட்டுக் கிடக்கத்தான் கூடாது. நான் கொடுக்கும் சிபாரிசுக் கடிதம் போதும். உனக்கு எங்கேயும் நல்ல வேலை கிடைக்கும். கணக்குத்துறையில் மேலும் படித்து பயிற்சி பெற்றால், ஏதாவது பெரிய கம்பெனிகளில் வேலை கிடைக்கும். என்று டேவிட் உற்சாக மூட்டினர்.

அவருடைய சிபாரிசுக் கடிதத்தையும் வாழ்த்துக்களையும் பெற்றுக்கொண்டு, ஊர் திரும்ப ஏற்பாடு செய்து கொண்டனர்.

❀

இரவு, சடையப்பன், தயங்கித் தயங்கி மகனிடம் பேசலானன்.

"சொக்கலிங்கம்! நீ இவ்வளவு காலமாக எவ்வளவோ நல்லபடியாக வாழ்ந்துவந்தாய், உன் மாமன் தயவால். அறிவாளிகளோடு பழகி வந்தாய். நாம் இனிப்போக வேண்டிய இடமோ, ஜெமீன். அட்டகாசமும் ஆணவமும் நிரம்பிய இடம். ஜெமீன்தார் ஜெம்புலிங்கபூபதி கொடியவர் அல்ல; ஆனல் ஜெமீன்தாரருக்கு இருக்கவேண்டிய முடுக்கு, கண்டிப்பு எல்லாம் நிரம்பியவர். எனக்கோ அங்கு என்ன வேலை தெரியுமல்லவா..."

"மாமா இரண்டொரு முறை சொல்லியிருக்கிறரப்பா"

"வண்டிக்காரன்! குதிரை கொட்டிலுக்குப் பக்கத்திலே குடிசை! அங்குதான் நீயும் வந்திருக்க வேண்டும். அந்தக் கேவலமான இடத்திலே நீ இருக்கக்கூடாது என்பதற்காகத்தானடா மகனே! பெற்ற பாசத்தை எல்லாம் அவளும் நானும் அடக்கிக் கொண்டு இவ்வளவு காலம் உன்னைப்பிரிந்து இருந்தோம். இப்போது உன்னை அந்த நரகத்துக்கு அல்லவா அழைத்துப்போக வேண்டி இருக்கிறது."

"நீங்கள் அங்கே இருக்கும்போது நான் மட்டும் இருக்கக்கூடாதா அப்பா! மேலும் எனக்கு ஒரு வேலை கிடைக்கிற வரையில்தானே இந்தக் கஷ்டமெல்லாம். பிறகு நீங்கள் எதற்காக வண்டிக்காரராக இருக்க வேண்டும், குடும்பத்தைக் காப்பாற்ற நான் எந்தப் பாடுபடவும் தயாராக இருக்கிறேனப்பா. வேலையும் கிடைத்துவிடும், டேவிட் கொடுத்துள்ள சிபாரிசு போதும் நமக்கு..."

"வேலை தயாராக இருக்கிறது மகனே! கௌரவமான வேலை. ஜெமீனிலேயே!"

"பழம் நழுவிப்பாலில் விழுந்தது போலாயிற்று"

"அப்படிச் சொல்வதற்கில்லை அப்பா! ஜெமீன்தாரர் தமது பேரப்பிள்ளைகளுக்கு, படிப்பு சொல்லிக் கொடுக்க ஒரு வாத்தியார் தேடுகிறார். படித்திருந்தால் மட்டும் போகாது, வெள்ளைக்காரரிடம் இருந்த அனுபவம் வேண்டும் என்கிறார். சம்பளம் கேட்ட அளவு. ஜெமீன் மாளிகையிலே தங்கி இருந்து, குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளவேண்டும்."



"எனக்கு மிகவும் பிடித்தமான வேலை அப்பா அது, ஏனென்றால் நான் மேலும் படித்துக்கொள்ள வசதியாக இருக்கும்..."

"அது மட்டுமா...ஜெமீன் மாளிகையில் இருந்து வந்தால், வேறு பெரிய பெரிய வேலைகள் கிடைக்கவும் வழி சுலபத்திலே கிடைக்கும்."

"மகிழ்ச்சியாகச் சொல்ல வேண்டிய இந்த விஷயத்தை ஏனப்பா சோகத்துடன் சொல்லுகிறீர்."

"சோகமா...வேதனையே அல்லவாபடுகிறேன்... இத்தனைக் காலமாகத்தான் பிரிந்திருந்தோமே இனி ஒன்றாக இருந்து வரலாம் என்று எவ்வளவோ ஆசை, எனக்கும் உன் தாயாருக்கும்."

"ஜெமீனில் வேலை கிடைத்துவிடும் என்கிறபோது அந்த ஆசை நிறைவேறுகிறது என்றுதானே அப்பா பொருள்."

"இல்லையடா மகனே! இல்லை. ஜெமீன் குழந்தைகளுக்கு வாத்தியாராக நீ அமர்ந்திட வேண்டுமானல் எங்களோடு இருக்க முடியாது...என் மகன் என்று கூடச் சொல்லிக் கொள்ளக்கூடாது..."

"இது என்ன விபரீதப் பேச்சப்பா....ஜெமீன்தாரர் இதுபோல ஒரு நிபந்தனையா போட்டிருக்கிறர்."

"இல்லை. நான்தான் நிபந்தனை போடுகிறேன். நிலைமை அப்படி. எனக்கு ஒரு மகன் இருக்கிறன் என்பது கூட ஜெமீன்தாருக்குத் தெரியாது. சொல்லவில்லை. தெரிந்தால், உன்னை வேலைக்கு வைத்துக் கொள்ளமாட்டார்—நம்ம வண்டிக்காரனுடைய மகன் ஜெமீன் குழந்தைகளுக்கு வாத்தியாரா? கேவலம் கேவலம் என்று கூறுவார். அவருடைய சுபாவம் அப்படிப்பட்டது, அதனல் நீ என் மகன் என்பது தெரியவே கூடாது. அப்போதுதான் ஜெமீன் மாளிகையிலே உனக்கு அந்த வேலை கிடைக்கும்."

சொக்கலிங்கம் அதிர்ச்சி அடைந்து விட்டான் இந்த நிபந்தனையைக்கேட்டு. இதற்கு நான் சம்மதிக்கவே முடியாது, வேண்டுமென்றல் வேறுவேலைதேடிக் கொள்ளலாம், நீங்கள் என்னேடு வந்துவிடலாம்; என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்.

சடையப்பன் துளியும் கோபித்துக் கொள்ளவில்லை; முகத்திலே துக்கம்தான் தோய்ந்திருந்தது.

மறுபடியும் மறுபடியும் அதனையே 'வலியுறுத்தலானன். அவனுடைய தழதழத்த குரலைக் கேட்டு சொக்கலிங்கம் உருகிவிட்டான்.

இத்தனை வருஷங்கள் எங்களைப்பிரிந்து இருந்து வந்தாய். இன்னும் ஒரு இரண்டு மூன்று வருஷம்

இருக்கக்கூடாதா அப்பா!—என்று கேட்டு விட்டு சடையப்பன் கண்களைக் கசக்கிக்கொண்டது கண்டு, சொக்கலிங்கம் திடுக்கிட்டுப் போனான்.

“பிரிந்து இருப்பதைக் காட்டிலும் கொடுமையை அல்லவா அப்பா அனுபவிக்கச் சொல்லுகிறீர்கள். நீங்கள் என் அருகிலேயே இருப்பீர்கள்; ஆனால் இவர் என் அப்பா என்று நான் சொல்லக்கூடாது என் கிறீரே...தட்டு நிறைய தித்திப்புப் பண்டம் அடுக்கி எதிரே வைத்துவிட்டு, சாப்பிடக்கூடாது. பார்த்துக் கொண்டு மட்டுந்தான் இருக்கலாம் என்கிறீர்களே!”

“பத்தியம் இருக்கச் சொல்கிறேன் மகனே! நாம் நோயாளிகள்; தரித்திரம் என்ற நோய்! கேவலமான வேலையைச் செய்து வருகிறேன். வண்டி ஓட்டிவிட்டு வீட்டுக்குப்போய் இருக்கும் வேலை கூட அல்லடா மகனே! குதிரைகளோடு குதிரையாக இருக்கிறேன், அவள் தானடா மகனே! குதிரை கட்டியுள்ள இடத் தைச் சுத்தம் செய்பவள்; உன் தாயார்! நீயே சொல்லு இந்த நிலைமையில் உள்ள எனக்கு நீ மகன் என்று தெரிந்தால், ஜெமீன்தாரர் உன்னை மனம் ஒப்பித் தமது பேரக்குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கச் சொல்லுவாரா! சீமான்கள் வருகிற இடம்! பெரிய பெரிய அதிகாரிகளுடைய பழக்கம். துரைமார் களின் கம்பெனியில் தொடர்பு. உள்ளபடி பெரிய இடம். நாகரிகம் மிகுந்த மாளிகை. அங்கு ஒரு வண்டிக்காரன் மகன், உள்கூடம் கூடப்போக முடி யாது. அவர் விரும்புவதோ, மாளிகையில் இருந்து கொண்டு, ஜெமீன் குடும்பத்தாருடன் ஒன்றாகச் சாப்பிட்டுக்கொண்டு, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்! டேவிட் துரையிடம் பயிற்சி பெற்றவன் என்ற பட்டத்தை மதிப்பார், நிரம்ப! இவன் படித்திருக்கிறான், ஆனால் இவன் என் மகன்! என்று நான் சொன்னால் என்ன எண்ணிக் கொள்வார்.'ஆயிரம் படிப்பு இருக்கட்டும்; ஊர் என்ன சொல்லும். ஜெமீன்தாரர் வீட்டுக் குழந்தைகளுக்குப் பாடம் சோல்லிக்கொடுக்க வண்டிக்காரன் மகன்தானா கிடைத்தான் என்றல்லவா. நம்மாலே அந்தக் கேவலத் தைத்தாங்கிக்கொள்ளமுடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுவார்.”

“அப்பா! நான் நாலு எழுத்து கற்றுக்கொண் டதே உன்னை மகிழ்விக்க. உனக்கு மதிப்புத் தேடிக் கொடுக்க என் மகனைச் சாதாரணமாக எண்ணிக் கொள்ளாதீர்கள், அவன் படித்தவன், மற்றவர்களுக்குப் படிப்பு சொல்லிக்கொடுப்பவன், நம்முடைய தமிழ் மட்டுமல்ல, ஆங்கில பாஷை அறிந்தவன், ஆங்கிலேயர் களே அவன் திறமையைப் பாராட்டுகிறார்கள் என்றெல்லாம் நீ பேசிப் பெருமைப்பட வேண்டும் என்பதற்காகத்தானே. அடிக்கடி மாமா என்னிடம் சொல்லுவார், “சொக்கலிங்கம்! நமது குடும்பம் ஓரளவு நிலபுலத்தோடு கிராமத்திலே மதிப்போடு வாழ்ந்த குடும்பந்தான். வகையில்லாத வாழ்க்கை நடத்தியதாலே சொத்து போய்விட்டது. கிராமத்திலே பெரியதனக்காரக்குடும்பமாக இருந்த நாம் நொடித்துப் போய்விட்டோம். ஏதோ நான் ஓடிஆடிப் பாடுபட்டு, நம்ம துரையிடம் வேலைக்கு அமர்ந்தேன். உன் அப்பா, படாத பாடுபட்டுக் கடைசியில்.........சொல்லக்கூட எனக்குக் கூச்சமாக இருக்கிறது. நம்ம நாலூரில் திரு விழாவின்போது அவருக்குத்தான் முதல் மாலை போடு வார்கள். அப்படிப்பட்டவர் இன்று...சொக்கலிங்கம்! நீதான் நமது குடும்பத்தை மறுபடியும் நல்ல நிலை மைக்குக் கொண்டுவரவேண்டும்; நாலுபேர் மதிக்கத் தக்க நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும் என்றெல் லாம் சொல்லுவார். கேட்டுக்கொண்டிருக்கும்போதே என் கண்களில் நீர் துளிர்க்கும். ஓரளவு படித் தாயிற்று, கணக்கு வழக்குப் பார்க்கத் தெரிந்து கொண்டேன். நல்ல வேலைமட்டும் கிடைத்துவிட்டால், நிம்மதியாக வாழலாம். தலைநிமிர்ந்து நீ நடக்கலாம். என்மகன் உத்தியோகம் பார்க்கிறான் என்று சொல்லிச் சொல்லி மகிழலாம்......”

“உத்தியோகம் நீ பார்க்கவேண்டும் என்பது தானடா சொக்கு! என் ஆசையும். நான் சொல்லுகிற யோசனையும் அதற்காகத்தான். ஜெமீன்தார் வீட்டுக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் வேலையிலே நீ சேர்ந்துகொண்டால் போதும்,—எந்தப் பெரிய உத்தியோகமும் உனக்குக் கிடைத்துவிடும். அது சாமான்யமான இடமல்ல; வெறும் ஜெமீன் வீடு அல்ல. ஜம்புலிங்க பூபதி துரைமார்களுக்கு ரொம்ப வும் வேண்டியவர். எந்தப் பெரியதுரை அந்தப் பக்கத் துக்கு வந்தாலும் பூபதி! பூபதி! என்று இவரைத் தான் சுற்றிச்சுற்றி வட்டமிடுவார்கள். அவர் ஒரு வார்த்தை சொன்னால்போதும் வெள்ளைக்கார சர்க்கார் எந்தப் பெரிய உத்தியோகத்தையும் உனக்குக் கொடுப் பார்கள்...”

“ஜெமீன்தாருடைய தயவு இருந்தால் போதும் என்றுதானே அப்பா சொல்லுகிறாய்; அவரிடம் மனுச் செய்துகொள்ளலாம். அதற்கு நான் முழுச் சம்மதம் தெரிவிக்கிறேன். பெரிய வேலை கிடைக்கிறவரையில், அவர் வீட்டுக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் போடுகிற மற்றொரு நிபந்தனைதானப்பா என் நெஞ்சிலே நெருப்பை அள்ளிப்போடுவதுபோல இருக் கிறது. எப்படியப்பா மனம் இடம் கொடுக்கும். ஏனப்பா அப்படி மறைந்து வாழவேண்டும். இவர் என் அப்பா என்று சொல்லிக்கொள்வதற்கு நான் ஏனப்பா கூச்சப்படவேண்டும்...”

“தம்பி நீயும் கூச்சப்படமாட்டாய், எனக்கும் நீ அப்பா! அப்பா! என்று கூப்பிடக் கேட்பதைவிட இன்பம் வேறு இருக்கமுடியுமா! என் மகனைப் பார்த்தீர்களா! எவ்வளவு அழகாக இருக்கிறான்; அவன் எவ்வளவு பெரிய அறிவாளி தெரியுமா. ஊர் ஜனங்க ளெல்லாம் வெள்ளைக்காரத் துரைகளைக் கண்டால் பயந்துகொள்கிறார்களே, என்மகன் அந்தத் துரைக ளிடம் எவ்வளவு தாராளமாகப் பழகுகிறான் தெரியுமா என்றெல்லாம் சொல்லிப் பெருமைப்படத்தான் நினைக் கிறாள் உன் அம்மாவும். ஆனால்—”

“ஆனால் என்னப்பா ஆனால்! அம்மா பெருமைப் படுவதிலே என்ன தவறு. எல்லாப் பிள்ளைகளுமா இன்று என் அளவுக்கு சர்க்கார் பாஷையைப் படித் திருக்கிறார்கள், உத்யோகம் பார்க்கும் யோக்யதையைப் பெற்றிருக்கிறார்கள், அம்மாவுக்கு ஆனந்தமாகத்தான் இருக்கும்...”

“அம்மாவும் நானும் ஆனந்தம் அடைய ஒரேவழி நான் சொன்ன வழிதான்...”

“என்னவழி அது! எந்த மகனும் எவ்வளவு மோசமான குணம்கொண்ட மகனும் செய்யத் துணி யாததை நான் செய்யவேண்டும்”

“மகனே! உன் உள்ளம் எனக்குத் தெரியாதா. உன் உத்தமமான குணம் எனக்குத் தெரியாதா! உன்னை என்ன செய்யச் சொல்லுகிறேன்—எதற்காக

அதைச் செய்யச்சொல்லுகிறேன். நமது குடும்பம் மீண்டும் நல்ல நிலைமையை அடையத்தான்.''

''நான் யார்மகன் என்பதை வெளியே காட்டிக் கொள்ளாமல் உலவச் சொல்கிறீர்களே—உங்கள் கண் முன்னாலேயே — அதைவிடக் கொடுமை வேறு என்னப்பா இருக்கமுடியும்......என்னை வாட்டாதீர்களப்பா...''

''சொக்கலிங்கம்! நான் முறைப்படி தமிழ்ப் படித்தவன் என்பது தெரியுமா உனக்கு; பாடம்கூட சொல்லிக்கொடுத்திருக்கிறேன்; பணத்துக்காகக்கூட அல்லடா மகனே, பொழுதுபோக்குக்காக! ஜெமீன்தாரிடம் நான் அதைக் காட்டிக்கொள்கிறேனா! சடையா! ஆத்திச்சூடி தெரியுமா உனக்கு என்றுகூடக் கேலியாகக் கேட்பார் ஜெமீன்தாரர்; எனக்குங்களா! நான் என்னத்தைக் கண்டேன்!! என்று சொல்லுவேன்.''

''ஏனப்பா! ஏன் மறைக்கவேண்டும். சொன்னால் என்ன, எனக்குத் தமிழிலே நல்ல பயிற்சி உண்டு என்று...''

''சொல்லலாமடா மகனே! சொல்லலாம். நமது குடும்பம் நொடித்துப்போகாமலிருந்தால் சொல்லலாம். ஆனால் நான் சொல்லலாமா! நான் யார்? வாழ்ந்து கெட்டவன். நல்லது கெட்டது தெரியாமல் நடந்துகொண்டதால் வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டவன். நான்போய் ஜெமீன்தாரரிடம் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் தெரியும், அகவல் அருணாசலப் புலவரிடம் ஆறு வருடம் பாடம் கேட்டிருக்கிறேன் என்று சொல்லுவதா?''

''சொன்னால் என்னப்பா என்றுதான் கேட்கிறேன்.''

''சொல்லிவிட்டு, பைத்தியக்காரா! போதும் நீ தமிழ்ப் படித்தப் பெருமையைப்பற்றிக் கதை அளப்பது, போ! போ! குதிரைகளுக்குத் தண்ணீர் காட்ட வேண்டிய நேரம் இது. அந்த வேலையை ஒழுங்காகச் செய்யாமல், நீ படித்த அகவலின் பெருமைபற்றி அளந்துகொண்டிருக்காதே. இப்போது உனக்குச் சோறுபோடுவது உன்னுடைய அகவல் அல்ல; நம்ம குதிரைகள்! என்று சொல்லிவிட்டு இடிஇடியெனச் சிரிப்பார். மகனே! நான் இப்போது வண்டி ஓட்டி!! வண்டிக்காரனடா, வண்டிக்காரன்!''

''என் அப்பா! என்னைப் பெற்ற பெருமான்! எனக்கு உயிரும் உடலும் உதிரமும் கொடுத்த உத்தமர்.''

''அப்படி நீ சொல்லி, நான் கேட்டு மகிழ காலம் வரவில்லை அப்பா! இது அல்ல அந்தக்காலம். நான் வண்டிக்காரன்! நீ புதுவாழ்வு பெறவேண்டியவன்; என் மகன் என்று தெரிந்தால—வண்டிக்காரன் மகன் என்று தெரிந்தால், உனக்குப் புதுவாழ்வு கிடைக்காது ... —''

''பயங்கரம் மூட்டும் பேச்செல்லாம் பேசுகிறீர்களே அப்பா!''

''விவரத்தை வளர்த்திக் கொண்டிருக்க நேரம் இல்லை. உன் மனதிலே என்னென்ன தோன்றும் என்பதைப்பற்றியெல்லாம் நன்றாக யோசித்துப் பார்த்து, என் மனதிலே ஏற்பட்ட கொந்தளிப்பையும் அடக்கிக்கொண்டு, அதற்குப் பிறகு நான இந்த முடிவுகுக் வந்தேன். நீ ஜெமீன் ஜம்புலிங்க பூபதியின் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் வேலையிலே சேர்ந்துவிடவேண்டும். அவர்கள் எதிர்பார்க்கும் யோக்யதாம்சம் அவ்வளவும் உன்னிடம் இருக்கிறது. உன்னிடம் உள்ள ஒன்றே ஒன்றுதான், உனக்கும் வேலைக்கும் நடுவே நிற்கிறது, தடைக்கல்லாக! நீ என் மகன் — வண்டிக்காரன் மகன் என்பதுதான் குறுக்கே நிற்கிறது. வண்டிக்காரனுடைய மகனை, ஜெமீன் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் வேலைக்கு வைத்துக்கொள்ளமாட்டார் பூபதி! பிள்ளைகளோடு மாளிகையில் தங்கி இருக்கவேண்டும்: அங்கேயே சாப்பாடு, ஜாகை எல்லாம். எப்போதும் பிள்ளைகளுடன் இருந்துவரவேண்டும். ஜெமீன் குடும்பத்துடன் பழகும் நிலை! அந்த நிலையை மகனே! ஒரு வண்டிக்காரன் மகன் பெறமுடியாது — தரமாட்டார்கள்; ஆனால் நீ அந்த நிலையைப் பெற்றே ஆக வேண்டும். அங்கு இடம் பெற்றுக்கொண்டால், நீ முன்னேறுவதற்கான படிக்கட்டுகள் வேகமாக அமையும். நல்ல நிலை — மகிப்பான உத்தியோகம் கிடைக்கும் — கண்குளிரக் காணுவேன், தம்பி! நோயைப் போக்கிக்கொள்ள கசப்பான மருந்துகூடச் சாப்பிடவேண்டி வந்துவிடுகிறதல்லவா. அது இது. கண்ணிலே வலி ஏற்பட்டால் அதைப்போக்க ஒரு மருந்து தெளிப்பார்கள் கண்ணில்! எரிச்சல் சொல்லி முடியாது. கண்ணீர் தாரை தாரையாகப் பெருகும். நெருப்புப்பொறி பட்டுவிட்டால் எப்படியோ அப்படி இருக்கும், கண்களே இரத்தச் சிகப்பாகவிடும். ஆனால் தம்பி! மெள்ளமெள்ள எரிச்சல் அடங்கும், சிகப்பு மாறும், மருந்து வேலை செய்யும், கண்வலி போய்விடும், பார்வை முன்பு இருந்ததைவிட நன்றாக ஆகிவிடும். அப்படிப்பட்ட மருந்துத் துளிகளைத் தெளித்துக்கொண்டாக வேண்டும், நீயும் நானும், உன் அம்மாவும்;''

''மருந்துத் துளிகள் அல்ல அப்பா! நெருப்புப் பொறிகள்!''

❀

கடைசியில் சொக்கலிங்கம் சம்மதம் தெரிவித்தான், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு.

''கொஞ்ச காலம்! கொஞ்ச காலம்! வேறு ஒரு பெரிய வேலை கிடைக்கிற வரையில்!! என்று சமாதானம் கூறிவிட்டு, சடையப்பனும் சொர்ணமும் ஊர் புறப்பட்டார்கள், சொக்கலிங்கத்தை இரண்டு நாள் கழித்து ஜெமீன் கிராமம் வரும்படிச் சொல்லிவிட்டு.

டேவிட், சொக்கலிங்கம் வேறு ஊர் போவதை முதலில் விரும்பவில்லை என்றாலும், சீக்கிரமாகவே சீமைக்கு வரும்படி அவருக்கு ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்திருந்த கடிதம் கிடைத்ததும், சொக்கலிங்கம் தன் தகப்பனாருடன் போய் வாழ்ந்து வருவதுதான் முறை என்ற முடிவுக்கு வந்தார்.

பொதுவான சிபாரிசுக் கடிதத்துடன், குறிப்பாக ஜெமீன்தாரர் ஜம்புலிங்க பூபதிக்கே ஒரு தனியான சிபாரிசுக் கடிதமும் வாங்கிக்கொண்டு, சொக்கலிங்கம், ஜெமீன் மாளிகை நோக்கிச் சென்றான்.

❀

அவன் படாடோபமற்ற ஆனால் நாகரிகமான உடை உடுத்திக்கொண்டு ஜெமீன் மாளிகைக்குள்ளே நுழையும்போது, சடையப்பன் விலையுயர்ந்த ஒரு குதிரையை வெளியே உலாவ அழைத்துச் செல்வதைக் கண்டான். நெஞ்சு பகீரென்று ஆகிவிட்டது. ஓடிச்

சென்று அவர் காலில் விழவேண்டியது போலத் தோன்றிற்று. அப்பா! அப்பா! என்ற சொல் வேக வேகமாகக் கிளம்பிற்று; சடையப்பன் பார்த்த பார்வையால், வார்த்தைகள் வெளியே வரவில்லை. சொக்கலிங்கத்தைப் பார்க்காதவனைப் போலச் சடையப்பன் வெளியே சென்ருன்.

ஜெமீன்தாரர் ஜம்புலிங்க பூபதி, மிகுந்த செல்வாக்குப் படைத்தவர். ஆங்கில அரசுடன் உறவு கொண்டாலன்றி தமது ஜெமீன் வாழ்வு நிலைக்காது என்பதை உணர்ந்து நடந்து கொண்டவர்; ஆனல் அதே நேரத்தில், ஜெமீன்தார் என்பதற்கு உரிய மதிப்பு கெடக்கூடாது என்பதிலேயும் கண்ணுங் கருத்துமாக இருந்தவர்.

மற்ற ஜெமீன்தாரர்களைப்போல, குடிமக்களைக் கசக்கிப் பிழிந்தும் கொள்ளை அடித்தும் பொருள் சேர்த்தால் மட்டுமே போக போக்கியத்தில் மூழ்கி இருக்கலாம் என்ற நிலையில் அவர் இல்லை. ஜெமீன் வருமானத்தைவிட அதிக அளவு அவர் வியாபார மூலம் பெற்றுக்கொண்டு வந்தார். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பண்டங்கள், குறிப்பாக புகையிலை, நிலக்கடலை, ஆகியவை அவருடைய ஜெமீனில் போதுமான அளவு இருந்தது. சீமைக்குச் சென்று வியாபாரக் கம்பெனிகளுடன் தொடர்பும் ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருந்தார்.

விசேஷ தினங்களில் தவிர மற்ற நேரத்தில் ஆங்கில முறை உடுப்புடன்தான் உலவுவார். நவராத்திரி போன்ற சில விசேஷ நாட்களில் மட்டும் ஜெமீன் உடையுடன் உலா வருவார்.

ஜெமீன் மாளிகை, பழைய கெம்பீரமான தோற்றத்துடன் இருந்தது. கொடி மரம்! காவலாட்கள் தங்கும் இடம்! வண்டிப் பாட்டை தனியாக! சிறிய கோபுர அமைப்பில் நுழைவு வாயில், அதிலே கலசம்! சித்திரங்கள்! சித்திர வேலைப்பாடுகள்!

உள்ளே முழுக்க முழுக்க ஆங்கில பாணியில், விரிப்புகள், விளக்குகள், இருக்கைகள்.

வேலையாட்கள், ஜெமீன் மரபினைக் காட்டும் தனி உடையுடன் இருந்தனர்.

சடையப்பன்கூட, சாதாரண காலத்தில் எப்படி உடை அணிந்திருந்தாலும் ஜெமீன்தார் கிளம்பும் போது, தனி உடை அணிந்துகொண்டுதான்—வண்டியை ஓட்டிச் செல்ல வேண்டும் என்பது ஏற்பாடு.

வண்டி, இவருக்காகவே தனியாகத் தயாரிக்கப்பட்டது—இரட்டைக் குதிரைகள் பூட்டிய சாரட்டு.

தரமான குதிரைகளை வாங்கி வளர்ப்பதில், அலாதியான விருப்பம் ஜெமீன்தாரருக்கு.

கொடுமைக்காரர் என்ற பெயர் இல்லை; ஆனல் எல்லோரையும் சமமாகப் பாவித்து நடத்துபவர் என்றும் சொல்லிவிட முடியாது.

கட்டிவைத்து அடிப்பது, கொளுத்தி அழிப்பது போன்ற கொடுமைகள் கிடையாது, ஆனல் அவர் எதிரே வருபவர்கள், மேல்துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொள்ள வேண்டும், மரியாதைக்காக. ஜெமீன் சாரட்டு வருகிறது என்ருல், எழுந்து நிற்கவேண்டும். —இப்படிப்பட்ட கட்டு திட்டங்களைக் கண்டிப்புடன் வைத்துக் கொண்டிருந்தார்.

மகன் இல்லாததால், தன் இரண்டு குமாரிகளையும், ஜெமீனை நடத்திச் செல்லக்கூடிய அறிவாற்றல் கிடைக்கும்படி பார்த்துக்கொண்டார்.

பெரிய ராஜகுமாரி — இளைய ராஜகுமாரி என்றுதான் ஊரார் அழைப்பார்கள், பெண்களை.

எல்லா விதத்திலும் மிக்க மகிழ்ச்சியாக இருந்து வந்த ஜெமீன்தாரருக்கு ஒரு மனக்குறை ஏற்படுத்தவே பிறந்ததுபோல அவருடைய மருமகன் காளிங்கராயர் விளங்கினர். அவர் பெயரைக்கேட்டாலே ஊராருக்கு நடுக்கம். ஆனல் அவர் ஊரில் இருக்கும் நாட்கள் மிகக்குறைவு. ஊட்டி கொடைக்கானல், பம்பாய், புனு, பெங்களூர் என்று ஒவ்வொரு சிங்காரபுரியாகச் சுற்றிக்கொண்டிருப்பார்.

✻

ஜெமீன் மாளிகைக்குள்ளே அனுமதி பெற்று நுழைந்தபோது சொக்கலிங்கத்துக்கு எந்தவிதமான அச்சமும் எழவில்லை. காரணம், ஜெமீன்கள் உண்டான வரலாறுபற்றிப் படித்தறிந்தவன்; ஜெமீன் முறைக்கு எதிர்காலம் கிடையாது என்பதுபற்றி டேவிட் தந்த விளக்கத்தைப் பலமுறை கேட்டவன்.

டேவிட்துரை கொடுத்த கடிதத்தை ஜெமீன்தாரிடம் கொடுத்துவிட்டு, சொக்கலிங்கம் அடக்கத்துடன் நின்றுகொண்டிருந்தான்;

அவனுடைய தோற்றமும், கண்களிலே தோன்றிய ஒளியும், முகத்தில் தவழ்ந்த புன்னகையும், ஜெமீன்தாரரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. முக மலர்ச்சியுடன் இருந்தார்.

டேவிட்துரையின் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்துவிட்டு, ஜெமீன்தாரர், "வரப்போவதைத் தெரிவித்திருந்தால் ரயிலடிக்கு வண்டி அனுப்பி இருப்பேனே...உன் பெயர் சொக்கலிங்கமா...உட்கார் —பரவாயில்லை உட்கார்...கற்ருேர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்களே—நம்ம ஜெமீனில் எப்போதும் அறிவாளர்களுக்கு மதிப்பு உண்டு..." என்ருர்.

கொடுமை புரியும் ஜெமீன்தாரர்களைப்பற்றிய கதைகளைப் படித்திருந்த சொக்கலிங்கம், ஜம்புலிங்க பூபதியின் போக்கைக் கண்டு வியப்படைந்தான். டேவிட்துரையின் சிபாரிசுக் கடிதத்துக்கு கிடைத்துள்ள மரியாதை இது என்பதையும் உணர்ந்தான்.

"டேவிட் துரை சொல்லுகிற வார்த்தையை நான் தட்டி நடப்பதே இல்லை. அவர்தான் என்னை நம்ம கவர்னருக்கு அறிமுகம் செய்துவைத்தவர். சிபாரிசுக் கடிதம் இருக்கும்போது வேறு எதுவும் தேவையில்லை. நாளைக்கே வேலைக்கு வந்து சேர்ந்துவிடலாம்."

"மிக்க நன்றி...இன்று முதலேகூட நான் தயார் தான்...பெட்டி படுக்கையுடன் வந்துவிட்டேன்."

"அதுவும் நல்லதாயிற்று. இன்று நல்ல நாள் கூட. குழந்தைகள் பக்கத்து ஊர் போயிருக்கிருர்கள் ...உமது ஜாகை இங்கேயேதான்.........வேலைக்காரன் இடத்தைக் காட்டுவான்.......பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது மட்டுமல்ல, உமது வேலை. பிள்ளைகளுக்கு ஒரு பெரிய அண்ணன்போல இருக்க வேண்டும்.......எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ள வேண்டும்....."

"ஜெமீன் குடும்பத்து மதிப்புக்கு ஏற்ற விதமாக குழந்தைகள் வளர என்னுலானதைச் செய்கிறேன்."

"ஜெமீன் குடும்பத்துச் சுபாவம் குழந்தைகளுக்குத் தன்னாலே வந்துவிடும்...நீங்கள் கற்றுத் தர வேண்டியது மேனாட்டு முறைகளை; நடை உடை பாவனைகளை. இன்னும் சில வருஷங்களிலேயே நான் அவர்களைச் சீமைக்கு அனுப்பப்போகிறேன், அங்கேயே படிக்க......ஜெமீன் குடும்பத்திலே பிறந்தவர்கள் குறைந்தது ஜில்லா கலெக்டர் வேலைக்காவது போனால்தானே மதிப்பு. சீமைப் படிப்பு தேவையாம்...துரைகள் சொல்கிறார்கள்...நீங்கள்கூட ஆங்கிலமுறை உடையிலேயே இருப்பது நல்லது....... குழந்தைகள் பழகும்போதே ஒருபாடம், கிடைக்கும். ...ஆங்கிலப்பாட்டு தெரியுமல்லவா, கற்றுக்கொடுக்க வேண்டும். என் சின்னமகள் போனவருஷம் தன் பெரியப்பா வீடு போயிருந்தாள் ஒரு மூன்று மாதம் – பெங்களூர். அங்கு ஆங்கிலேயர் அதிகம் அல்லவா. அங்கு உமா பியானோ வாத்தியம் வாசிக்கக்கூடக் கற்றுக்கொண்டாள்......"

"குழந்தைகள் பெரிய மகளுடைய......"

"ஆமாம், ஆமாம்...உமாமகேஸ்வரி, லலிதாம்பிகேஸ்வரி என்று எனக்கு இரண்டு பெண்கள்......தாயை இழந்துவிட்டார்கள். லலிதான் மூத்தவள்; மூன்று குழந்தைகள், அவளைப்போலவே தங்கச்சிலைகள் அந்தக் குழந்தைகள். உமா; இரண்டாவது பெண்; கன்னி."

"இருவரும் ஆங்கிலப்படிப்பு படித்தவர்களாகத்தான் இருப்பார்கள்"

"ஒரு ஆங்கிலோ — இந்தியமாது — பள்ளிக்கூட ஆசிரியை—இங்கே தங்கி இருந்து, கற்றுக்கொடுத்தார்கள். எப்போது நாம் ஆங்கிலேயருடைய ஆளுகையின் கீழ் வந்துவிட்டோமோ, அப்போதே நாம் அவர்களுடைய முறைகளை மேற்கொள்ள வேண்டியதுதானே. அப்போதுதானே ஒரு மதிப்பு ஏற்படும். மேலும், நான் வேட்டையாடிக்கொண்டும், விருந்து சாப்பிட்டுக்கொண்டும், பொழுதை ஓட்டுகிற ஜெமீன்தாரன் அல்ல. வியாபாரத் தொடர்புகள் உண்டு. சீமையில் ஒரு பெரிய கம்பெனிக்கு நிலக்கடலை ஏற்றுமதி செய்கிறேன். முத்துச் சிப்பிகளையும் அனுப்பிவைக்கிறேன். அதனால் ஆங்கிலேயர்கள் தொடர்பு நிறைய உண்டு—நிறையப் பழக்கம். சரி! சரி! நான் பேசிப்பேசி உமக்குச் சலிப்பை உண்டாக்கிவிடக்கூடாது. ஓய்வு எடுத்துக்கொள்ள நினைப்பீர். பிரயாண அலுப்பு இருக்கும் ...உம்முடைய பெயர் என்ன சொன்னீர்...?"

"**சொக்கலிங்கம்,** நண்பர்கள் சொக்கு என்று செல்லமாக அழைப்பார்கள்......"

"இங்கு உமக்குப் பெயர் **லிங்கம்**......நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள். சொக்கலிங்கம் என்ற பெயர் மீது எனக்கொன்றும் வெறுப்புகிடையாது. ஆனால் இங்கு சமையல் வேலை பார்ப்பவன் பெயர் சொக்கலிங்கம். குழந்தைகள், அவனைச் சொக்கா! சொக்கா! என்று அழைப்பார்கள். உம்முடைய பெயரும் அதுபோலவே இருந்தால் என்னமோபோல இருக்குமல்லவா, அதனாலே...குழந்தைகளின் சௌகரியத்துக்காக உமது பெயரைக் கொஞ்சம் வெட்டிவிட்டேன், சரி! மிஸ்டர் லிங்கம் இனி உமது அறைக்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். தேவைப்படும்பணத்தை அவ்வப்போது மானேஜரிடம் பெற்றுக்கொள்ளலாம். எனக்கு உங்களை ரொம்பவும் பிடித்துவிட்டது. சில வேளைகளில் என்னோடு உலாவக்கூட வரலாம், வேட்டையாடக்கூடச் செல்லலாம்......"

மறுநாள் குழந்தைகளுடன், ஜெமீன்தாரருடைய இரண்டு குமாரிகளும் வந்து சேர்ந்தனர். சொக்கலிங்கத்தை ஜெமீன்தார் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

லலிதாம்பிகேஸ்வரி, உமாமகேஸ்வரி ஆகிய இருவருமே, தங்களை ஊரார் அழைப்பதுபோல ராஜகுமாரி என்று ஆசிரியரும் அழைப்பதை விரும்பவில்லை என்று கூறக்கேட்டு, சொக்கலிங்கம், வியப்படைந்தான்.

குருபக்தி உணர்ச்சியாக இருக்குமோ என்று முதலில் யோசித்தான். ஆனால் ஜெமீன் மாளிகையில் பூஜை செய்ய வருபவரிடம் அவர்கள் எவ்வளவு அலட்சியமாக நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பார்த்த பிறகு, தன்னிடம் மரியாதையும் அன்பும் காட்டுவதற்குக் காரணம், டேவிட்துரையிடம் பல வருஷங்கள் பழகியவன் என்பதுதான் என்று தெரியவந்தது.

ஆங்கிலேயர்கள் ஐயாயிரம் மைலுக்கு அப்பால் இருந்து இங்கு வந்து ஆட்சி நடத்துகிறாகள் என்பதாலேயே, இப்படிப்பட்ட ஜெமீன்கள் ஆங்கிலரிடம் மிகுந்த பயபக்தி விசுவாசம் காட்டுகிறார்கள் என்பதும், ஆங்கில அரசினரிடம் மட்டுமல்லாமல், ஆங்கிலப் பிரமுகர்களிடம் நெருங்கிப் பழகியவர்களிடமும் அதிக அளவு மரியாதை காட்டுகிறார்கள் என்பதையும் உணர்ந்தான்;

அன்னியருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம் என்று வருத்தமும் வெட்கமும் துளியும் அவர்களுக்கு இல்லாததையும், ஆங்கிலர்களைப்போலத் தாமும் கோலத்தை ஆக்கிககொளவதிலேயே நாட்டம் கொண்டிருப்பதையும் அறிந்து வருந்தினான்

ஆங்கில நாட்டு வரலாறு படித்திருந்தால், இவர்கள் இப்படியா இருப்பார்கள்; அடிமைத்தனத்தை ஆங்கில மக்கள் எவ்வளவு வெறுத்திருக்கிறார்கள்; அடிமைத்தனத்தைப் போக்க எவ்வளவ இரத்தம் சிந்தி இருக்கிறார்கள் என்பது தெரிந்தால் இப்படியா இருப்பார்கள் என்றெல்லாம் எண்ணிக் கவலைப்பட்டான்.

சொக்கலிங்கத்திடம் குழந்தைகள் மிகுந்த அன்பு காட்டத் தொடங்கிவிட்டன.

அவன் படிப்பு சொல்லிக்கொடுத்த விதமும், குழந்தைகளுக்கு மிகவும் பிடித்திருந்தன.

காலையில் எழுந்திருப்பது — உடலைச் சுத்தம் செய்துகொள்வது — புதிய உடை உடுத்திக்கொள்வது — உலாவச்செல்வது என்பதிலிருந்து படிப்பு தொடங்கும்.

பலநாட்டுப் படங்கள்—வரலாற்றுச் சித்திரங்கள், ஆகியவைகளைக் காட்டி, குழந்தைகளுக்கு இயற்கையாகவே படிப்பதிலே விருப்பம் ஏற்படும்படியாகச் செய்த நேர்த்தியான முறையைக்கண்டு ஜெமீன்தாரர் வெகுவாகப் பாராட்டினார்.

எவ்வளவோ தடுத்தும், ஜெமீன்தாரர், சொக்கலிங்கத்துக்கு விதவிதமான உடுப்புகளைத் தயாரித்துக் கொடுத்தார்.

உமக்குப் பிடித்தமில்லாமல் இருக்கலாம் மிஸ்டர், லிங்கம்! ஆனால் எங்கள் ஜெமீன் கௌரவம் என்று ஒன்று இருககிறது பாருங்கள், அதைக் கெடவிடக்கூடாதே — என்று வேடிக்கையாக ஜெமீன்தாரர் பேசுவார்.

சொக்கலிங்கம், பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக்கொடுக்க வேலைக்கு அமர்ந்தவராக அங்கு நடத்தப்படவில்லை; ஜெமீன் குடும்பத்தில் ஒருவராகவே மதித்து நடத்தப்பட்டுவந்தார்.

எதிர்பாராத அளவுக்கு வசதியான சூழ்நிலையும், மதிப்பும் கிடைத்தது. அவனைக் கண்டவர்கள் அனைவரும், இப்படி அல்லவா அமையவேண்டும் வாழ்க்கை என்று பேசிக்கொண்டனர். பூந்தோட்டத்தில் உலவுகிறான், புதுமணம் நுகர்கிறான் என்றுதான் எல்லோரும் கருதினர். ஆனால் அவன்பட்ட வேதனை அவனுக்கல்லவா தெரியும்.

கூப்பிடு தூரத்தில் இருக்கிறார்கள் தாயும் தந்தையும், ஆனால் வெளியே சொல்லிக்கொள்ள உரிமை இல்லை. தனக்குக் கிடைத்த வசதியான வாழ்க்கையிலே அவர்களுக்குப் பங்கு அளிக்க உரிமை இல்லை. பேசவே உரிமை இல்லை.

என்ன விலையுயர்ந்த முத்துமாலை மார்பிலே புரளுகிறது என்று ஊரே புகழ்கிறது; ஆனால் அந்த முத்துகள் ஒவ்வொன்றும் மார்பைத் துளைத்துக்கொண்டே இருக்குமானால், அந்தமாதரசியின் வேதனை எப்படி இருக்கும், பூமணம் நுகருகிறான் என்று ஊரார் பாராட்டுகிறார்கள் ஆனால் ஒவ்வொரு தடவையும் பூநாகம் கடித்தபடி இருந்தால் எப்படி இருக்கும். ஜெமீன் மாளிகைக்கு வருகிறவர்களிடமெல்லாம் ஜெமீன்தாரர் அறிமுகப்படுத்துகிறார், மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறார்; ஆனால் பெற்ற தாயும் தந்தையும்? அவர்கள் குடிசையில் அல்லவா குமுறுகிறார்கள்! மகன் மாளிகையில்! அவர்கள் குதிரைக் கொட்டிலுக்கு அருகே! இதற்கா என்னை மகனைப் பெற்றார்கள்.

எத்தனை இன்பம் கிடைத்தாலும், குதிரையை அவர் தேய்த்துக்கொண்டிருப்பதை ஒருகணம் பார்த்த உடன், இதயத்தில் ஆயிரம் தேள் அல்லவா கொட்டுகிறது.

அப்பா! வேண்டுமளவு பணம் எடுத்துக்கொள் செலவுக்கு என்கிறார் ஜெமீன்தாரர்! விதவிதமான உடைகள்! வெல்வெட்டு மெத்தை! வகைவகையான உணவு! எல்லாம் எனக்கு! ஆனால் உங்களை நான் எந்தக் கோலத்தில் காண்கிறேன்? எப்படித் தாங்கிக்கொள்ள முடியும். தணலில் நிற்கிறேன்.

எல்லோரும் பாராட்டுகிறார்கள் என்னை. என் காதில் விழும்படி உன்னை ஏசுகிறார்களே! இதனைக் கேட்கவா எனக்குச் செவிகள்!! ஏனப்பா என்னை ஒரு சித்திரவதைக்கு ஆளாக்குகிறீர்கள்.

நீங்கள் வண்டி ஓட்டிக்கொண்டு செல்கிறீர்கள்; நான் அவர்களுடன் உள்ளே உட்கார்ந்து கொண்டு வருகிறேன்! என்ன கொடுமை! என்ன கொடுமை!

அப்பா! நான் இருக்கும் பக்கம்கூட வருவதற்கு உமக்கு அனுமதி இல்லையே...என் எதிரிலேயே கூனிக் குறுகி நிற்கிறீரே, மாளிகைக்கு வருபவர் முன்பு!

எத்தனை முறை துடித்திருக்கிறேன்; இனியும் சகித்துக்கொள்ள முடியாது அப்பா! அப்பா! என்று கூவிக்கொண்டே உன் காலடி விழவேண்டும் அம்மா! அம்மா என்று அழுதுகொண்டே உத்தமியின் பாதத்தை வணங்கவேண்டும் என்று தோன்றுகிறது. முடியவில்லையே! கூடாது என்று கட்டுப்படுத்தி விட்டீர்களே...கிராதகனாக இரு! என்று கட்டளையிடுகிறீர்களே! இதயத்தை வெளியே எடுத்து வீசி விடு, மிருகமாகி விடு! என்று உத்திரவிட்டு விட்டீர்களே.

அப்பா! நான் இங்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறேன் குழந்தைகளுக்கு, நீங்கள் வணங்க வேண்டிய முதல் தெய்வம் தாய்!—என்று. என் தாய் அங்கு தலைவிரி கோலமாக நிற்கக் காண்கிறேன்; என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்கள்; தலைவலியா என்று கேட்டு உபசாரம் செய்கிறார்கள், எனக்கு!

என்னை ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன் என்கிறீர்களே! நாலுபேர் எதிரிலே என்னைக்கண்டால், வணங்குகிறார்களே, ஐயோ! அதைவிட வேதனை இருக்கமுடியுமா அப்பா!

ஏன் இந்த வேதனை? எத்தனை நாளைக்கு? இவ்வளவு நேசம் காட்டுகிறாரே ஜெமீன்தாரர், இப்போது உண்மையைச் சொன்னால் என்னப்பா!

வெளியே உலவப் போகிறேன் என்றால், ஜெமீன்தாரர், ஏன் அந்தச் சோம்பேறியை வண்டி கொண்டு வரச்சொல்வதுதானே, ஏன் நடந்துபோகவேண்டும் என்று கேட்கிறார்.

அடப்பாவிகளே! அவர் என் அப்பா! என்னை இவ்வளவு மதிப்பாக நடத்திக்கொண்டு என் அப்பாவை இவ்வளவு கேவலமாக நடத்துகிறீர்களே இது அடுக்குமா? என்று கூவிடத் தோன்றுகிறது, மாளிகை முழுவதும் அந்த ஒலி பரவவேண்டும்; இந்த ஊர் முழுவதும் கேட்கவேண்டும்; குன்றுகளிலெல்லாம் பரவவேண்டும்...ஒரு வார்த்தை, ஒரு கைஅசைவு, ஒரு கண் சிமிட்டுதல் போதும் அப்பா! ஓடோடி வந்து உம் பாதத்தில் விழுவேன், இந்த ஊர்அறியச் சொல்வேன், இவர் என் அப்பா! இதோ என் தாய்! என்று.

சொக்கலிங்கம் இதுபோலெல்லாம் எண்ணி எண்ணி மிகுந்த வேதனையுற்றான்.

சடையப்பனும் அவன் மனைவியும் தங்கள் மன வேதனை துளியும் வெளியே தெரியாதபடி நடந்து கொண்டார்கள்.

யாரும் காணாதபோது சொக்கலிங்கத்தைத் தொலைவிலிருந்து பார்த்துப் பூரிப்படைவார்கள்.

வேலையாட்கள், அவன் புகழ் பாடக்கேட்டு இன்புறுவார்கள். திரும்பத் திரும்பச்சொல்லிக் கேட்பார்கள்.

எப்படியாவது யாருமறியாமல் தோட்டத்தில் உலவுவதுபோலச் சென்று பெற்றோரைக் கண்டு பேசி இதயத்துக்கு விருந்து பெற்றிடலாம் என்று புறப்பட்டாலோ, யாராவது ஒருவர் வந்துவிடுகிறார்கள் துணைக்கு என்று!!

ஜெமீன் மாளிகையிலே அவன் வந்துசேர்ந்து கிட்டததட்ட ஓராண்டு ஆயிற்று. ஐந்தாறு தடவைகள்மட்டுமே பெற்றோரை சில விநாடிகள் தனியே கண்டு பேசமுடிந்தது.

ஒவ்வொரு நாளும் தன் அறை ஜன்னல் வழியாக ஏக்கத்துடன் பார்க்கிறான், அந்தக் குடிசையை அங்கு கோயில் கொண்டிருக்கும் தெய்வத்தை. கண்ணீரால் அபிஷேகிக்கிறான் இருக்குமிடத்தில் இருந்தபடியே!

அப்பா மெள்ள, தள்ளாடித் தள்ளாடி நடந்து வருகிறார்.

(62-ம் பக்கம் பார்க்க)

70 ம் பக்கத் தொடர்ச்சி

"வேடிக்கைக்குச் சொல்லவில்லை அம்மா! எவ்வளவு தறமையாக மூடிமறைக்கப்பட்ட இரகசியத்தையும், ஒரு சிறிய கம்பளித் துண்டினாலே கண்டுபிடித்து விடலாம்; மந்தரம் போட்ட கம்பளித் துண்டு" என்று கோகிலா கூறிவிட்டு, சொக்கலிங்கத்தைக் கவனித்தாள்.

அவன் ஒரு இலேசான புன்னகையுடன் அவளை ஒருக்ஷணம் பார்த்துவிட்டு அந்த இடத்தைவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

இரு மங்கைகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்; வெவ்வேறுவிதமான எண்ணங்கள் அந்த இருவர் உள்ளங்களிலும் உலவின.

✻

சில நாட்களுக்குப் பிறகு பேரிடி விழுந்தது கோகிலா கட்டிய மனக்கோட்டையில்.

ஜெமீன்தாரர், பல ஆண்டுகளாக இருந்துவந்த மானேஜரை, நீக்கிவிட்டார்.

பல ஆண்டுகள் பணியாற்றியதற்காகச் சிறிதளவு பணம் கொடுத்தார்; வேலையிலிருந்து நீக்குவதனால் வந்த வேதனை மானேஜரை வாட்டிவிட்டது.

என் தெய்வம் இருக்கும் இடத்தைவிட்டு என்னைத் துரத்துகிறார்களே என்று தனக்குள் கூறிக்கொண்டு கோகிலா குமுறினாள்.

உமாவின் தாயைத் தேடி இந்த ஆபத்தைப் போக்கிக்கொள்ளலாம் என்று அங்கு சென்றாள்.

"எல்லாம் உன் நன்மைக்காகத்தான் இந்த ஏற்பாடு. உன் அப்பா கெட்டிக்காரர். எந்த ஜெமீனிலும் வேலை கிடைத்துவிடும் பயப்படாதே. நீ இங்கே இருப்பது ஜெமீன்தாரர், போட்டிருக்கும் திட்டத்தை கெடுத்துவிடும் என்று பயந்துதான் உங்களை வெளி ஏற்றுகிறார்" என்றாள் உமா.

விவரம் கேட்டதற்கு, உமா கூறியேவிட்டாள், சொக்கலிங்கமும் நீயும் பார்த்துக்கொள்கிற பார்வை அப்பாவுக்குச் சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது என்று.

தான் அறிந்த உண்மையை அப்போது சொல்லி விடவேண்டும் என்று கோகிலா துடியாய்த் துடித்தாள். யாரோ இருமும் சத்தம் கேட்டது. சொக்கலிங்கம் சற்றுத் தொலைவிலே இருந்துகொண்டு, அமைதியாக இரு! என்று ஜாடை காட்டுவதைக் கண்டாள்.

✻

மானேஜர், தன் குடும்பத்துடன் ஜெமீன் கிராமத்தைவிட்டுப் புறப்பட்டுப் போக ஏற்பாடாகிவிட்டது. ஜெமீன்தாருடைய பெட்டி வண்டியே மானேஜர் ரயிலடி செல்லத் தரப்பட்டது. சிபாரிசுக் கடிதம்கூடக் கொடுத்திருக்கிறார் சிறானூர் ஜெமீனுக்கு என்று வேலையாட்கள் பேசிக் கொண்டனர்.

விடிந்ததும் சென்றாகவேண்டுமே என்ற கவலை குடைபும் மனதுடன், கடைசியாக ஜெமீன் தோட்டத்தைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் கோகிலம்.

எப்படியாவது சொக்கலிங்கத்தைப் பார்த்துவிடலாம் என்ற ஆவல்தான் உண்மையான காரணம்.

சொக்கலிங்கமும் அதே மன நிலையில்! அவன் தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தான். அவன் நெஞ்சத்திலே அவளைப்பற்றிய நினைவுதான்!

அவள் வரக்கண்டான்! தாவிச்சென்று அவள் கரங்களைப் பற்றிக்கொண்டு, தோட்டத்தின் கடைசிப் பகுதிக்கு அழைத்துச்சென்றான்.

✻

காற்றடித்தது; பூக்கள் உதிர்ந்தன!

எங்கோ குயில் கூவிடும் இனிய நாதம் கேட்டது,

சொக்கலிங்கம், கோகிலாவின் கண்களைத் துடைத்தபடி, திருமண வேளையில் கண்ணீர் பொழியலாமா? என்று கேட்டான்.

"நமக்குத் திருமணமா? உண்மையாகவா? ஏதாவது கனவா?" என்று தழதழத்த குரலில் கோகிலா கேட்டாள்.

தன் சட்டைப்பையில் வைத்திருந்த கம்பளித் துண்டை எடுத்துக்காட்டி, இந்தக் காதற் பரிசுமீது ஆணை! கோகிலம் நமக்குத் திருமணம் ஆகிவிட்டது" என்றான்.

அவன் பாதங்களைத் தொட்டுத் தன் கண்களிலே ஒற்றிக்கொண்டாள் கோகிலம்.

"திட்டம், பாதி அளவுதான் நிறைவேறியிருக்கிறது, கோகிலம்! என்றான் சொக்கலிங்கம்.

"காலமெல்லாம் நான் உங்களுக்காகக் காத்திருப்பேன் என்றாள கோகிலா.

அவன் அவளை அணைத்துக்கொண்டான். ஒரு புதிய இன்ப லோகத்திற்கு இருவரும் சென்றனர்.

குதிரைவண்டி உருண்டோடி வந்திடும் சத்தம் கேட்டது. இருவரும், நில உலகு திரும்பினர்.

✻

வெள்ளைக்காரர்கள்கூட வியந்துப் பாராட்டும்படியான அறிவுத் தெளிவுடன் சொக்கலிங்கம் இருப்பது காணக் காண, ஜெமீன்தாரர் இப்படிப்பட்டவரைத் தமது மாளிகையிலே இருந்திடச் செய்வது தமது ஜெமீனுக்கே தனிக் கௌரவம் என்று எண்ணி மகிழ்ந்தார்.

மகிழ்ச்சி அதிகமாக ஏற்படும்போதெல்லாம் ஜெமீன்தாரர், விசேஷ விருந்துக்கு ஏற்பாடு செய்வது

வாடிக்கை. அந்த விருந்திலே விசேஷம் என்னவென்றால் குடும்பத்தார் தவிர வெளியார் யாரும் அதிலே கலந்துகொள்ள மாட்ட ர்கள்.

அத்தகைய விருந்தொன்று நடந்துகொண்டிருந்தது.

ஜெமீன்தாரர் மிக்க மகிழ்ச்சியாக இருந்தார்.

பல விஷயங்களைப்பற்றி சொக்கலிங்கத்திடம் பேசி மகிழ்ந்தார்.

மாடிக் கூடத்திலே நடைபெற்றுக்கொண்டிருந்தது விருந்து.

லலிதா, பலகணி வழியாக வெளிப்புறத்துக் காட்சிகளைப் பாாத்துக்கொண்டிருக்கையில், 'ஓ' வென்று அலறினார்கள். பதறினர் அனைவரும்.

சொக்கலிங்கம், லலிதா பார்த்த பக்கம் பார்த்தான் பயங்கரமான காட்சி தென்பட்டது.

லலிதாவின் மூன்றாவது குழந்தை-நாலு வயது நிரம்பாதவன் தத்தித்தத்தி நடநது செல்கிறான், துணை யாரும் இல்லை.

எதிர்ப்புறமிருந்து புதிதாக வாங்கி வரப்பட்டிருந்த முரட்டுக் குதிரை தூசி கிளப்பிக்கொண்டு பாய்ந்தோடி வருகிறது-

எல்லோரும் அலறினர்; என்ன செய்வது என்று தெரியாமல்.

சொக்கலிங்கம் பலகணி வழியாக வெளியே தாவி, தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு 'பரபர' வெனக்கீழே, சரக்கு மரத்தில் இறஙகுவது போல இறங்கி, கண்மூடிக் கண் திறப்பதற்குள் பாய்ந்தோடிச் சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு மற்றோர் புறம் பாய்ந்து விட்டான். குதிரை நாலுகால் பாய்ச்சலில் செனறது.

குழந்தையை, அவ்வளவு துணிவுடனும் சாமர்த்தியத்துடனும் சொக்கலிங்கம் தூக்கிக் கொண்டிராது போயிருப்பின்...!

நினைக்கவே நடுக்கம் எல்லோருக்கும்.

ஆண்டவனே! அட என் கண்ணே ரமா! -என்று தாய்ப்பாசம் வழிய வழியக் கூவிக்கொண்டே லலிதாம்பிகா சென்று குழந்தையை சொக்கலிங்கத்திடமிருந்து வாங்கிக்கொண்டு உச்சிமோந்து முத்தமிட்டார்கள்.

ஜெமீன்தாரர் கட்டித் தழுவிக்கொண்டார் சொக்கலிங்கத்தை.

காளிங்கராயர், முதுகைத் தட்டிக் கொடுத்து, பலே! என்றார்.

ஏதாவது நேரிட்டு விட்டிருந்தால், என்ன செய்திருப்பேன் தெரியுமா, இந்த வேலைக்காரப் பயல்கள் அவ்வளவு பேரையும் சவுக்கால், அடித்திருப்பேன் என்றார் ஜெமீன்தார்,

சவுக்குக்குத்தான் கேடு! சுட்டுத்தள்ளிவிட வேண்டும் என்றார் காளிங்கராயர்.

குழந்தையைக் காப்பாற்றிய மிஸ்டர் லிங்கத்தைப் பாராட்டாமல், வீரம் பேசுகிறார்களா, வீரம் என்று கூறிவிட்டுத் தன் கணவரை சுட்டுவிடுவது போலப் பார்த்தாள் லலிதா.

உமாமகேஸ்வரி, கேலிப் புன்னகை செய்தாள்.

சரி! சரி! நல்லதே நடக்கும் நல்லவர்களுக்கு. விருந்து நடக்கட்டும்; மறுபடியும் எலலோருக்கும் அல்வா! எனறு உத்திரவிட்டார் ஜெமீன்தாரர்.

வீரம், தீரம், ஆகியவை மேட்டுக்குடியினரிடம் மட்டுமே இருக்கும் என்ற அழுத்தமான நம்பிக்கைக் கொண்டவர் ஜெமீன்தாரர்.

நல்லகுடியில் பிறந்தவர்கள் மட்டுமே, ஆபத்தைத் துச்சமென்று எண்ணுவார்கள் என்பதிலே அசைகக முடியாத நம்பிக்கை கொண்டவர்.

ஏழைகள், பணமில்லாதவர்கள் மட்டுமல்ல, இப்படிப்பட்ட பண்புகளும் அவர்களிடம் இடையாது எனபது அவர் கருத்து.

உயிர் காத்த உத்தமனாக சொக்கலிங்கம் இருப்பதற்குக் காரணம், அவன் உயர்குடியில் பிறந்தவன் என்பதுதான் என்ற தம்முடைய தத்துவத்தை விளக்க ஆரம்பித்தார் ஜெமீன்தாரர்.

"ஆயிரம் சொல்லுங்கள் — எல்லோரும் சமம் — அனைவரும் மனிதரே—மனிதர் யாவரும் கடவுளின் பிள்ளைகளே என்றெல்லாம் — பேதம் இருக்கத்தான்செய்கிறது."

"பணக்காரன் ஏழை என்ற பேதம்தானே..."

“அதை நான் பெரிதாகக் கருதவில்லை. பணம் தேடிக்கொள்ளலாம், இழந்தும் விடலாம்.........நான் சொல்வது பண்பு......நல்ல குடியிலே பிறந்தவரின் பண்பு.........மற்றவர்களுக்கு அந்தப் பண்பு இருப்ப தில்லை.’!

“ஆமாமாம்! நற்குடிப் பிறந்தவர்கள் என்பது பார்த்தாலே தெரிந்துவிடுமே...”

“பேச்சு—நடவடிக்கை—எல்லாவற்றிலும் அந்த முத்திரை விழுந்திருக்கும்...”

“இதோ மிஸ்டர் லிங்கத்தை எடுத்துக்கொள்ளுங் கள்......”

“இத்தனைப் பெரிய குழந்தையையெடுத்துவைத்துக் கொள்ள யாரால் முடியும்...”

“முடியும்...என் தாயாரால் முடியும்...”

“இதுதான் பண்பு! நற்குடி பிறந்தோர் மட்டுமே பெறக்கூடிய பண்பு. இதனை விலைகொடுத்து வாங்க முடியாது. கடலில் முத்து விளைவதுபோல இது தன் னுலே விளைவது; நற்குடி என்ற வயலில்.”

“அப்பா இன்று கவிதாநடையில் அல்லவா பேசு கிருர்...”

“களிப்பு மிகுந்திடும்போது கவிதை தன்னுலே சுரக்குமாமே...”

“என் பேரப்பிள்ளை குதிரையின் காலின் கீழ் சிக்கிக்கொள்ளாமல் மிஸ்டர் லிங்கம் காப்பாற்றினுரே அது அவருடைய ஆற்றலை, தைரியத்தைக் காட்டிற்று என்றுதான எல்லோரும் பாராட்டுவர். நான் சொல் கிறேன், குழந்தைக்கு ஆபத்து என்பது தெரிந்த உடன், காப்பாற்றியாக வேண்டும் என்ற உணர்வு வந்ததே, அது பண்பு — அதைத்தான் நான் போற்று கிறேன். அந்தப் பண்புதான் நற்குடி பிறந்ததால் வருவது. முரட்டுக் குதிரைகளை அடக்க வலிவுள்ள எந்த வேலைக்காரனுலும் முடியும். சடையன் அடக் காத குதிரையா! ஆனுல் அது வலிவைக் காட்டுகிறது, உணர்வை அல்ல. உடனே ஓடிச் சென்று காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு எல்லோருக்கும் வருவ தில்லை; இருப்பதில்லை. மிஸ்டர் லிங்கம் பண்பாளர்; நற்குடி பிறந்தவர். எப்போது கேட்டாலும் சொல்ல மறுக்கிருர் தமது பெற்ருேர் யார் என்பதை. அவர் சொல்லத் தேவையே இல்லை. இன்றைய செயல் அவர் எப்படிப்பட்ட உயர்ந்த குடும்பத்தில் உதித்தவர் என் பதைக் காட்டிவிட்டது. இத்தகையவரை மகனைகப் பெற்ற தாய் வாழ்க! நீடூழி வாழ்க! அவளுக்கு என் னுடைய வணக்கம்!”

அப்போது வெளியே சென்று, வந்த காளிங்க ராயர் “இடியட்! சுத்த முட்டாள்களை வேலைக்கு வைத் துக் கொண்டால் இப்படித்தான்...” என்று கூறுகிருர்.

“என்ன இது, ரசமான கட்டத்தில் வந்து கெடுக் கிறீர்...அப்பா எவ்வளவு உருக்கமாகப் பேசிக் கொண் டிருந்தார்...”

“பேசிக் கொண்டிருக்கட்டும் உருக்கமாக, சுவை யாக...அவருடைய முட்டாள் வேலையாட்கள் குழந்தை களைக் குதிரைக் காலின் கீழ்போடட்டும்...”

“சின்ன ஜெமீன்தாரரை ஏன் குதிரை மிதிக்க வந்தது...விசாரித்தீர்களா...”

“யாரை விசாரிப்பது...குழந்தையைக் கவனித் துக் கொள்ளும் ஆயாவைக் கேட்டோம்...விளையாட்டுச் சாமான் கொண்டுவர உள்ளேபோய் வருவதற் குள் இந்த விபரீதம் நடந்துவிட்டதாம்...”

“அவ்வளவுதான்சொன் னுளா அந்தக் கள்ளி. இதுகள் இந்த—வேலைக் காரக்கழுதைகள் ஒரே கூட்டு—ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுப்பதில்லை- ஒப்பந்தம், நடந்தது அது அல்ல. இந்தஆயாஉள்ளே போனுள்....விளையாட்டுச் சாமான் கொண்டுவர அல்ல...புகையிலைஎடுத்து வர—”

“புகையிலையா...... யாருக்கு...”

“அப்படிக் கேளுங்கள்......அந்தக் கிழவி இருக்கி ருளே, வண்டிக் காரன் சம்சாரம் அவளுக்கு—”

“புகையிலை கேட்டால் என்ன கொடுத் தால் என்ன, அதிலே என்ன குற்றம் காண் கிறீர்.”



“அதிலே குற்றம்காண நான் என்ன முட்டாளா? இவள் போனுளே புகையிலை கொண்டுவர, அப்போது குழந்தையைப் பார்த்துக்கொள்ளும்படி வண்டிக்காரக் கிழவியிடம் சொல்லிவிட்டுப்போனுள்...”

“ஜாக்ரதையாகத்தான் ஆயா நடந்துகொண்டிருக் கிருள்...”

“இவள்? குழந்தையைக்கவனித்துக்கொண்டிருக்க வேண்டும் அல்லவா? செய்தாளா? செய்திருந்தால், குழந்தை தத்தித்தத்தி நடந்துசெல்லுமா — குதிரை வருவது தெரியாமல். இவள் என்ன செய்தாள்? குழந்தையை விட்டுவிட்டு இவளும் போய்விட்டாள். எங்கே? கேட்டேன். சுண்ணும்பு எடுத்துவரச் சென்ரு ளாம்......”

“குழந்தையைக் கவனித்துக்கொள்ள வேண்டுமே என்ற பொறுப்புணர்ச்சி இருந்ததா? எப்படி இருக் கும்! நற்குடியில் மட்டுந்தானே அத்தகைய பண்பு

இருக்க முடியும். "கிழவியைப் பிறகு கவனித்துக் கொள்ளலாம். இப்போது மகிழ்ச்சியான நேரம். எங்கள் குலக்கொடியை இந்தக் குணவான் காப்பாற்றிய நேரம். அவருடைய நற்பண்புகளுக்காக நாம் எல்லோரும் அவருக்கு நம்முடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளும் நேரம்."

"கம்பெனி பெரியதுரை வந்திருக்கிறார் தங்களைக் காண—"

"எல்லாச் சந்தோஷமும் ஒரே நேரத்தில் வருகிறது....நல்ல நாள் இன்று....அழைத்துவா! வருக! வருக! நல்வரவு!

"விருந்தும் விழாவும் நடக்கும்போது வந்து சேர்ந்தேன்.........அதிர்ஷ்டக்காரன்.........யாருக்குப் பிறந்தநாள்..."

"பிறந்தநாள் விழா அல்ல...இதோ மிஸ்டர்... லிங்கம்..இவருக்குத்தான் பாராட்டு..இவர் உங்களிடம் எப்போதும் வாதாடுவார், மறுத்துப் பேசுவார் அதனாலேயே இவர் நல்லவர் அல்ல என்று எண்ணிக் கொள்ளக்கூடாது."

"நான் அவரைப்பற்றி என்ன எண்ணிக் கொண்டிருக்கிறேன் என்பது கிடக்கட்டும். இவர் பாராட்டப்படவேண்டி ஏற்பட்ட காரணம்?"

"இன்று என் பேரக் குழந்தை குதிரையின் காலின் கீழ்ச் சிக்கிக் கொள்ள இருந்தது. தக்க சமயத்தில் பாய்ந்து சென்று காப்பாற்றினர்..."

"அப்படியா! என் பாராட்டுதல்! மிஸ்டர் லிங்கம் எப்போதுமே பிறருக்கு உதவிசெய்வதைத் தமது இயல்பாகக் கொண்டவர். அவருக்காக நடத்தப்படும் விழாவிலே கலந்துகொள்வதிலே எனக்கும் மகிழ்ச்சி. ஒருவிதத்தில் எனக்கும் அவர் டீச்சர்! ஆமாம், இந்த அளவு தமிழ் நான் பேசுவது அவரால் தான்...அவர் என்னிடம் வாதாடுவார், நான் சொல்லுவதை மறுப்பார், கோபிப்பார், எல்லாம் சரி. அதனாலே எனக்கு மகிழ்ச்சி; கோபம் அல்ல. தலையாட்டிகள் வெறும் அடிமைகள். அவர்களை எந்த நாட்டிலும் மதிக்கமாட்டார்கள். இவர் உண்மைக்காக—தமக்குச் சரி என்றுபட்ட உண்மைக்காகத் தைரியமாக வாதாடுவார். அதனாலேயே எனக்கு இவரிடம் தனியான மதிப்பு..."

"அப்பா! இப்போதுதான் என்மனம் சாந்தி அடைந்தது. பல தடவை சச்சரவு செய்வதுபோல வாதாடுவாரே, உங்கள் நாட்டு நடவடிக்கை, பழக்கவழக்கம் ஆகியவைகளைக்கூடக் கண்டிப்பாரே, எங்கே அவரிடம் உங்களுக்குக் கோபம் இருக்கிறதோ என்று பயந்து கொண்டிருந்தேன்."

"கோபமா! எனக்கா! இப்படிப்பட்டவர்களைத்தான் நான் மதிப்பது. நான் இவரிடம் வைத்துள்ள மதிப்பைத் தெரிவித்து விட்டுப் போகவே வந்தேன். வந்த இடத்திலே விழாவும் நடக்கிறது. என் விழாப் பரிசாகவே ஒரு சந்தோஷச் செய்தியைத் தருகிறேன். நமது இலண்டன் கம்பெனியில் மிஸ்டர் லிங்கத்தை உதவிமானேஜராக நியமித்து உத்திரவு வந்திருக்கிறது..."

"இலண்டன் கம்பெனியிலா! மிஸ்டர் லிங்கம், என் வாழ்த்துக்கள்."

"எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம்..."

"நன்றி மிஸ்டர் நார்மன், மிக்க நன்றி.....அங்கு செல்வது என் ஆராய்ச்சித் துறைக்குப் பயன்படும்."

"மற்றோர் மகிழ்ச்சியான செய்தி! மிஸ்டர் நார்மன்! என் இளையமகள் உமாவை மிஸ்டர் லிங்கத்துக்குத் தர விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

"இது உண்மையான விழாப் பரிசு! என்ன மிஸ்டர் லிங்கம்! மிஸ். உமா! சம்மதந்தானே! கேட்பானேன், கண்களே கீதம் பாடுகின்றனவே."

அப்போது, தோட்டத்துப் பக்கமிருந்து துப்பாக்கி வேட்டுச் சத்தமும் கதறிடும் ஒலியும் கேட்கிறது.

எல்லோரும் பதறிப்போய், கீழே ஓடினார்கள்; சத்தம் வந்த திக்குநோக்கி.

குடிசைக்குப் பக்கத்தில் சடையப்பன் வீழ்ந்து கிடந்தான், இரத்த வெள்ளத்தில்.

எதிரே, துப்பாக்கியுடன் காளிங்கராயர் ஆவேசம் வந்தவர்போல் நின்றுகொண்டிருந்தார்.

ஜெமீன்காரர், நார்மன் துரையிடம் பேசிக்கொண்டிருந்தபோது; காளிங்கராயர் கீழே வந்திருக்கிறார், யாரும் அதனைக் கவனிக்கவில்லை.

கீழே சடையப்பன் இரத்தவெள்ளத்தில் வீழ்ந்துகிடப்பதைக் கண்டதும், சொக்கலிங்கம் அலறினான்; துடித்தான்; அவர்மேல் விழுந்து புரண்டு புரண்டு அழுதான்.

காரணம் தெரியாமல் மற்றவர்கள் திகைத்து நின்றனர்.

"அய்யய்யோ! அநியாயம் நடந்துவிட்டதே...யார் செய்த அக்ரமம் இது."

"யார் செய்தது என்று கேள்...அக்ரமம் என்று சொல்லாதே..."

"கொலை செய்துவிட்டிருக்கிறாய்."

"இன்னும் உயிர் போகவில்லை—சாகடிக்கத்தான் சுட்டேன்...ஏன் தெரியுமா...இந்தக்கிழவன், உன்னைப் பற்றி இழிவாகப் பேசினான்...நீ...சொல்ல எனக்குக் கூச்சமாகஇருக்கிறது...குழந்தையைக் கவனிக்காமல் இருந்ததற்காக அந்தக் கிழவியை இரண்டு தட்டு தட்டினேன்; பாய்ந்துவந்தான் கிழவன்என்மீது; அடித்து விரட்டினேன்; இந்தத்துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டுவந்தான் என்னைக் கொல்ல; இங்கு காவல்காத்துக்கிடக்கும் நாய்; மாமா சொல்வது சரி. இதுகளுக்கு இப்படிப்பட்ட இழிவான போக்குதான் இருக்கும். துப்பாக்கியைப் பறித்துக் கொண்டேன், சுட்டேன்; சுருண்டு விழுந்தான்; செத்தான் என்று நினைத்தேன்; கிழட்டுப் பயல் கூவினான், கூப்பிடு! கூப்பிடு' என்று. யாரை? என்று கேட்கிறேன்... என் மகனை! என் மகனை! என்கிறான். என்னடா உளறல் என்கிறேன். நானா உளறுகிறேன்...... உயிர்போகுமுன் உண்மையைக் கூறுகிறேன்...மாளிகையிலே இருக்கிறான் என் மகன்! எல்லோரும் பாராட்டும் அறிவாளன்! சொக்கலிங்கம்!என்கிறான்...சமையற்காரனையா சொல்லுகிறாய் என்று கேட்கிறேன், மிஸ்டர் லிங்கம், உங்களைத்தான் சொல்லுகிறான்...நீங்கள் அவனுடைய மகனும்! வண்டிக்காரன் மகனும் ......!!"

"ஆமடா ஆம்! நான் அவர் மகன்தான்! வண்டிக்காரன் மகனேதான் நான்! அவர் குடிசையிலே குமுறிக் கிடந்தார் நான் மாளிகையில் வாழ்வதற்காக. இன்னலையும் இழிவையும் ஏற்றுக்கொண்டார், நான் செல்வமும் சுகமும் பெறவேண்டுமென்று. மிஸ்டர். நார்மன்! இவா என் தகப்பனார்...வண்டிக்காரன் இந்த ஜெமீனில்! வாழ்ந்து கெட்டவர். நான் சிறுவயதிலேயே மாமனால் வளர்க்கப்பட்டு வந்தேன்...இங்கு வந்ததே இல்லை...மகனே! நாலு பேர் பார்த்து மதிக்கத்தக்க நிலை உனக்கு வரவேண்டும். அதற்கு இந்த ஜெமீனில் வாத்தியார் வேலையை ஏற்றுக்கொள். உனக்கு நிறைய சிபாரிசுகள் கிடைக்கும். பெரிய உத்தியோகம் கிடைக்கும். அதுவரையில் என் மகன் என்பது மட்டும் வெளியே தெரியக்கூடாது. வண்டிக்காரன் மகன் என்று தெரிந்தால், ஜெமீன் மாளிகையில் இடம் கிடைக்காது என்றார்; எவ்வளவோ மன்றாடினேன்... கேட்கவில்லை...சத்தியம் செய்திடச் சொன்னார்...தத்தளித்தேன்...மாளிகையிலே எனக்கு விருந்து, மகிழ்ச்சி; என் தகப்பனார் இங்கு, குடிசையில், குதிரைக் கொட்டிலில். என் எதிரிலேயே ஏசுவார்கள் கேவலமாக, என் இரத்தம் கொதிக்கும், கண்ணீர் கொப்பளிக்கும், அப்போதும் என்னை அந்த உத்தமர் பார்த்துத் தலை அசைப்பார். என்னைக் கட்டிப்போட்டு விட்டார்! சீமான்களுடன் சீமாட்டி

களுடன் நான் சாரட்டில் சவாரி செய்வேன்; அவர்தான் வண்டியை ஓட்டிக்கொண்டு வருவார்! வண்டியின் வெல்வெட்டு மெத்தை என்னை முள்ளாய்க் குத்தும்...சிறிதளவு குளிர் காற்று வீசினாலும், எங்கள் உடலுக்குக் கம்பளிச் சட்டை—போர்வை! பனி பெய்யும், அவர் எங்களை ஏற்றிக் கொண்டு வண்டியை ஓட்டிச் செல்வார். எல்லாம் எனக்கு இந்தச் சமூகத்தில் ஒரு புதிய அந்தஸ்த்து தேடித் தர...அம்மா! அம்மா!...''

கிழவியைப் போலீஸ் கொட்டடிக்கு அனுப்பிவிட்டேன் ... திருடினாள்...பத்துப் படி கொள்...சாட்சி இருக்கிறது...''

''மிஸ்டர். நார்மன், எனக்கு வேண்டும்; இந்தத் தண்டனையும் வேண்டும் இதற்கு மேலும் வேண்டும். மாளிகையிலே ஒரு போலி வாழ்க்கை எனக்கு. அப்பா சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார். அம்மா மீது திருட்டுக் குற்றம்...''

''உன் மீது மோசடிக் குற்றம்.—ஆமாம்! இவ்வளவு நாள் உன் குடும்ப உண்மையை மறைத்து ஜெமீன் குடும்பத்துடன் உறவாடிய மோசடி.''

''மிஸ்டர் லிங்கம்! மிஸ்டர் ஜெமீன்தார்! முதலில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படவேண்டும்...மற்றவை பிறகு—கிளம்புங்கள்...''

❋

சடையப்பனைக் காப்பாற்ற முடியவில்லை, எத்தனை உயர்தரமான மருத்துவர்களாலும்.

மகனைப் பெரிய உத்யோகத்திலே பார்க்கவேண்டும் என்ற ஆசை ததும்பிக் கொண்டிருந்த இதயம், பேசுவதை நிறுத்திக் கொண்டது.

செய்யவேண்டியது யாவும் செய்துவிட்டேன், சென்று வருகிறேன் என்று கூறுவது போலிருந்தது சடையப்பனின் முகத்தோற்றம்.

போலீசிலிருந்து விடுவிக்கப்பட்ட தன் தாயின் காலின் கீழ் விழுந்து கதறினான் சொக்கலிங்கம்.

வண்டிக்காரன் மகன்!

சடையன் மகன்!

பெரிய குடும்பம்! அந்தஸ்த்தான இடம் என்று எண்ணிக் கிடந்தோமே, நம்ம வண்டிக்காரன் மகன்!

அப்பனும் மகனுமாகச் சேர்ந்து நம்மை மடையர்களாக்கிவிட்டார்களே...

ஜெமீன் குடும்பத்துக்கே இழிவு உண்டாக்கி விட்டானே...

உமாவையே கொடுக்க இருந்தேனே... முட்டாள்!

இவ்விதமான பேச்சுதான் முதலிலே ஜெமீன் மாளிகையிலே கிளம்பிற்று.

ஊர் கொதித்தது. மகனுக்கு அந்தஸ்து தேடிக் கொடுக்க வேதனைத் தீயிலே வீழ்ந்த உத்தமன் சடையப்பன் என்று ஏழையர் உலகம் போற்றிற்று.

போலீஸ், காளிங்கராயரைத் தேடிக் கொண்டிருந்தது.

சொக்கலிங்கம் அதிர்ச்சி தாங்காமல் படுத்த படுக்கையாகக் கிடந்தான்.

நீதியை நிலை நாட்டியாகவேண்டும் என்று நார்மன் வேலை செய்து வந்தார்.

காளிங்கராயர் பிடிபட்டார்; வழக்குத் தொடரப்பட்டது.

அச்சம் பிடித்துத் தின்னத் தொடங்கிற்று ஜெமீன்தாரரை.

நார்மனை நாடினார், காளிங்கராயரை மீட்பதற்காக.

''பிடிவாதம் வேண்டாம் மிஸ்டர். நார்மன்! பிடிவாதம் கூடாது. கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.''

''நான் எந்த உதவியும் செய்ய முடியாது. நடந்ததை அப்படியே கோர்ட்டிலே சொல்லத்தான் போகிறேன்...நம்முடைய வியாபாரத் தொடர்பு இருந்தாலும் சரி... அறுந்தாலும் சரி...

❋

''மிஸ்டர் நார்மன்! ஆத்திரத்தில் நடந்துவிட்டது......எப்படியாவது ....''

''நடந்திருப்பது கொலை, மிஸ்டர் ஜெமீன்தார்...நான் எப்படி உடந்தையாக இருக்கமுடியும்...வண்டிக்காரனும் மனிதன் மிஸ்டர் ஜெமீன்தார், மனிதன்!''

''நீங்கள் மனதுவைத்தால், என் மருமகன் தப்பலாம்...சாட்சிகளைத் தடுத்துவிட முடியும்.''

''முடியும் ஜெமீன்தார்! முடியும். நான் அந்த நேரத்தில் அங்கு வராமலிருந்தால் பிணத்தையே மறைத்துவிட்டிருக்கவும் முடியும். ஆனால் என்னால் உண்மையை மறைக்க முடியாது.''

''பூர்வீகமானது எங்கள் ஜெமீன், இப்போதே கேவலமாகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். மருமகனுக்கும் ஏதாவது கோர்ட்டிலே கிடைத்துவிட்டால் இழிவு



எந்தக் காலத்திலும் போகாது மிஸ்டர் நார்மன். இருபது வருட சிநேகிதம் நமக்குள்...''

''இருபது வருட வியாபாரத் தொடர்பு! மிஸ்டர் ஜெமீன்தார்! சமுதாயத்திலே உள்ள போலி அந்தஸ்து உணர்ச்சியை வளர்க்கக்கூடாது—அது எந்த நாட்டில் இருந்தாலும்......லிங்கம் சொல்வது முற்றிலும் சரி, எங்கள் நாட்டிலேயும் இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்ச்சி எங்கே இருந்தாலும், பாம்பு பாம்புதானே.''

✻

காளிங்கராயரை விடுவிக்க ஜெமீன்தாரர் இலட்ச ரூபாய் வரையில் செலவிட்டுப் பார்த்தார்; பிரபல மான வழக்கறிஞர்கள் வாதிட்டுப் பார்த்தார்கள். பலிக்கவில்லை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

சோகமே உருவான நிலைபெற்றார் ஜெமீன்தாரர்.

என்ன செல்வம் இருந்து என்ன பயன்? மருமகனைக் காப்பாற்ற முடியவில்லையே! ஜெமீன் குடும்பத்துக்கு இழிவு ஏற்பட்டுவிட்டதே, இந்த இழிவு எப்படி நீங்கும் என்று எண்ணி, சீமைக்குச் சென்று பார்ப்பது என்று முடிவு செய்து, ஜெமீன் நிலத்தை விற்றுப் பணம் திரட்டிக்கொண்டிருந்தார்.

அதிர்ச்சியால் தாக்கப்பட்டு படுத்த படுக்கையாகக்கிடந்த சொக்கலிங்கம், மெள்ளமெள்ள நலமடைந்தார்.

நார்மன் ஏற்பாடு செய்து கொடுத்திருந்த விடுதியில், தன் தாயாருடன் தங்கி இருந்தான்.

பல ஆண்டுகளாக அம்மா! அம்மா! என்ற அந்த அன்பு மொழியைச் சொல்ல வாய்ப்புப் பெறுதிருந்த குறையைப் போக்கிக்கொள்பவன்போல, விநாடிக்கு விநாடி, அம்மா! அம்மா! என்று அழைத்து, நான் பாவி அம்மா! நான் பாதகன் அம்மா! காளிங்கராயர் அல்ல அம்மா அப்பாவைச் சாகடித்தது, என் சுயநலம் —என் மடமை—என் கபடநாடகம், அம்மா! எனக்கு உய்வு உண்டா! நான் மனிதன்தானு! என்று கூறிக் குமுறிக்கிடந்தான்.

நார்மன் அவனுக்கு ஆறுதல் கூறிட வந்தார்.

வெவ்வேறு இனம்—ஒரு இனம் ஆளும் இனமாகவும் மற்றோர் இனம் அடிமைப்படுத்தப்பட்ட இனமாகவும் இருந்திடினும், இருவரும் நல்ல இதயம் படைத்தவர்கள் என்பதாலே அவர்களின் நட்பு, நேர்த்தி மிக்கதாக இருந்தது. நார்மன், எப்படியும் சொக்கலிங்கத்தின் மனம் உடையக்கூடாது என்பதற்காக அன்பு மொழி வழங்கலானார்.

''மிஸ்டர் லிங்கம்! ஏதேதோ நடைபெற்று விட்டிருந்தாலும், எங்கள் கம்பெனி முடிவு மாறவில்லை. அந்த வேலை உமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது.''

''நன்றி மிஸ்டர். நார்மன்! ஆனுல் நான் என் முடிவை மாற்றிக்கொண்டேன். என்னதான் அப்பா வற்புறுத்தினாலும் நான் அந்த கபடநாடகம் ஆட ஒத்துகக்கொண்டிருக்கக் கூடாது. என்னுடைய உள்ளத்திலும் அடிவாரத்தில் சுயநலம், சுகபோகம், ஆகிய வற்றிலே ஆசை இருந்ததால்தான், நான் அந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கொண்டேன். நானும் ஒருவிதத்தில் குற்றவாளிதான்! அப்பாவைச் சாகடித்தது, துப்பாக்கிக் குண்டு அல்ல. என் மடமை—சமூகத்திலே கப்பிக் கொண்டுள்ள குருட்டு அறிவு!—இந்த மடமையும் குருட்டுத்தனமும் ஒழியவேண்டும் ... ஒழிக்கப்பட வேண்டும்... அதற்கு நான் இருக்கவேண்டிய இடம் இலண்டன் அல்ல; இங்கு; என் நாட்டில்; தாய் நாட்டில்! என் நாட்டு மக்களிடம் ஜாதி குலம் சமயம் செல்வம் என்பவைகளின் பேரால் இரும்புப் பிடியாக இருந்துவரும் மடமையைத் தொலைத்திட நான் பணியாற்றத் தீர்மானித்துவிட்டேன் ...... மன்னிக்க வேண்டும்...''

''மன்னிப்பதா! மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப்படுகிறேன்! பணம் பதவி இவற்றினைத் துறந்திடத் துணியும் உன் பண்பினைப் பாராட்டுகிறேன்...''

''பணம் பதவி ஆகியவற்றிலே எனக்கு இருந்து வந்த ஆசைதானே, அப்பா சொன்ன திட்டத்துக்கு என்னை உடன்பட வைத்தது. உணருகிறேன்... திருந்துகிறேன்.''

''ஜெமீன்தாரர் வழக்கு சீமைக்குப் போகிறது...'',

''எங்கே போனுல் என்ன! வழக்கின் முடிவு எதுவானுல் என்ன! நான் செய்த குற்றத்துக்கான தண்டனையை நான் அனுபவித்து விட்டேன். வண்டிக்காரன் மகன் என்றாலும் வாழ முடியும்—பளபளப்பும் போலி மரியாதையும் கிடைக்காமலிருக்கலாம்—நாணயமாக வாழ முடியும் இந்தப் பரந்த உலகத்தில் என்ற சாதாரண உண்மையை உணர முடியாதிருந்தேன். பாடம் படித்துக் கொண்டேன்; யாரும் கொடுத்திராத கட்டணம் செலுத்தி—என் தகப்பனாரின் உயிரைக் கொடுத்து.

பக்கத்திலே கோகிலா வந்து நின்றாள்.

நார்மன் சொக்கலிங்கத்தைப் பார்த்தார்.

''என் துணைவியார்!'' என்று பெருமிதத்துடன் சொக்கலிங்கம் கூறினான்.

✻

வண்ணக் களஞ்சியத்தின் அரிய வெளியீடு!

முதன் முதலில்...!

இந்தியாவில் மட்டும் முதன் முதலில் நடந்த முதன்மைபெற்ற நிகழ்ச்சிகளை சுவைபடக்கூறும் ஒரு நல்ல நூல். ஒவ்வொரு இந்தியரும் தெரிந்து கொள்ள வேண்டிய அருமையான தகவல்கள்!

தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவருகின்றன.

தமிழில்: பி. வி. கிரி.

ஆங்கிலத்தில்: மீனுமணாளன்

விவரங்கட்கு:

எம். முத்து, (ஓவியர்)

'வண்ணக் களஞ்சியம்'

3, இராமசாமித் தெரு, சென்னை-1.

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு தங்கம், வெள்ளி, தாம்பரம் மற்றும் உலோகங்கள், அநேக அபூர்வ மூலிகைகள் மருந்துப் பொருள்கள் சேர்த்து உருவாக்கிய



டாக்டர் சாது. ப. நாராயணசாமி பிள்ளையின்

சித்தர் நவலோக கல்பம்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை,

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. தொலைபேசி: 84786

கிளை வைத்தியசாலை:

மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம் (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கு

பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்,
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் மாமண்டூரிலும்

டாக்டர் சாது ப. நாராயணசாமி பிள்ளை அவர்களைக் கலந்து குணம் பெறலாம்.

[நீதிபதி வாட்ஸ்வர்த் எழுதியது இது. இப்பொழுது தமிழில் தருகிறேன் அதன் சாரத்தை. ஏனெனில், சுவையும், பயனும் உள்ள ஒரு வழக்கினை யொட்டியது என்பதால். இனி, மேலே படியுங்கள்.]

நீதிமன்ற காவலாளி:- அமைதி! அமைதி! அமைதி!

[நிலவிய சிறு சிறு சப்தங்கள் எல்லாம் அடங்கி அமைதி நிலவுகிறது.]

நீதிபதி:- வாதி வழக்கறிஞரே, சென்ற வியாழன் அன்று விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாரத்தை, மீண்டும் எடுத்துரைப்பது, ஜூரர்களுக்கு, மிக்க உதவியாயிருக்குமல்லவா? இடையில் ஓய்வு நாட்கள் குறுக்கிட்டுவிட்டதால், அவர்கள் முக்கிய குறிப்புகள் சிலவற்றையாவது மறந்திருக்கக்கூடும். உங்கள் உதவி மூலம், மீண்டும் அவைகளை நினைவு படுத்திக்கொள்வார்களல்லவா?

வாதி வழக்கறிஞர்:- மேன்மை தங்கிய நீதிபதியின் அறிவுரையை ஏற்றுக்கொள்கிறேன். ஜூரர் பெருமக்களே! குற்றவாளியாக உங்கள்முன் நிறுத்தப்பட்டிருக்கும் பொன்னுசாமி, சென்னைத் துறை முகத்தின் கிழக்குக் கோடிக்கு, கன்னையாவை அழைத்துப்போய், கடலில் தள்ளிக் கொன்றுவிட்டான் என்று குற்றஞ்சாட்டப் பட்டிருப்பது தெரிந்ததே! இறந்தவனின் சவத்தையும் யாரும் பார்க்கவில்லை. அதைப்போல, சொல்லப்படும் குற்றம் நடந்ததையும் யாரும் பார்க்கவில்லை. சந்தர்ப்ப சாட்சியங்களின் தொடர்பை வைத்துப் பார்த்தால், பொருமையின் காரணமாக, பொன்னுசாமி கன்னையாவை, கடலில் தள்ளிக்கொன்று விட்டான் என்பதே வாதி தரப்பு வழக்கு. நீங்கள் கன்னையாவின் வயதான பெற்றோர் கொடுத்த வாக்குமூலத்தை மறந்திருக்க மாட்டீர்கள் என்று எண்ணுகின்றேன். குற்றம் நடந்த அன்று மாலை 5-30 மணிக்கு, அதாவது சிவராத்திரிக்கு முதல் நாள், குற்றவாளியும், கொலையுண்டவனும், சைக்கிளில் வீட்டைவிட்டுச் சென்றார்கள். அதன் பிறகு அவனை யாரும் பார்க்கவும் இல்லை — கேள்விப் படவும் இல்லை. பிறகு போலீசில் புகார் செய்தார்கள். போலீசாரின் புலன் விசாரணையில் இரண்டு சாட்சிகள், அவர்கள் இருவரும், சைக்கிளில் மாலை 5-45 மணிக்கு, துறைமுக முனைக்குச் சென்றார்கள் என்று கூறியுள்ளார்கள். கன்னையா, அணிந்திருந்த தலைப்பாகையில் 'எஸ். எப்' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சாட்சி **ராமுடு**, அங்குள்ள 'சாமான் தூக்கி'யின் மீது இரண்டு சைக்கில்களைப் பார்த்திருக்கிறான். மறுநாள் காலை காவலாளி **செங்கான்** ஒரு சைக்கிளைப் பார்த்திருக்கிறான். அது கன்னையாவுடையது என்று தெரிகிறது. சாட்சி **இபுராகிம் சாகிப்**, மீன் பிடித்து முடித்து திரும்புகையில் ஒரு பெரிய சப்தமும், நீரில் பெரிய அலைகளும் பிளவும் கேட்டும் கண்டும் திரும்பியிருக்கிறான். இருட்டிய பிறகு, அரைமணி நேரங்கழித்து, குற்றவாளி, துறைமுகத்திலிருந்து, தென் பகுதி வாசல்வழியே சைக்கிளில் வந்ததை, போலீஸ்காரன் பார்த்திருக்கிறான். **சப் இன்ஸ்பெக்டர்** சாட்சியத்தின் மூலம், போலீசு துப்புதுலக்க ஆரம்பித்தவுடன், குற்றவாளி மறைந்து கொண்டுவிட்டான் என்பது தெரிகிறது. செங்கற் பட்டில், சாட்சி **சுந்தரத்திடம்** குற்றவாளி முதலில் கன்னையாவுடன் அன்று இரவு தான் சேர்ந்திருந்ததை மறுத்திருக்கிறான். பிறகோ, மரீனாவில் இருவரும் பிரிந்துவிட்டதாகக் கூறியிருக்கிறான். இதனை நாம் நம்புவதற்கு இல்லை. கடைசியாக **இரண்டு இளைஞர்களின்** சாட்சியத்தை மறந்திருக்கமாட்டீர்கள். அவர்கள் சிவராத்திரி விடியற் காலை, கட்டுமரத்திலிருந்து வலை வீசி மீன் பிடிக்கையில், கன்னையாவுடையது என்று காட்டப்பட்ட 'எஸ். எம்.' என்று பொறிக்கப்பட்ட தலைப்பாகையைக் கண்டெடுத்திருக்கிறார்கள். மேன்மை தங்கிய நீதிபதி அவர்களே, இப்பொழுது, நான் சொல்லக்கூடியதும், சொல்ல வேண்டியதும் அவ்வளவுதான் என்று நினைக்கிறேன்.

நீ:- நன்றி — மிகவும் சுருங்கிய முறையில், நடந்தவற்றைவிளக்கியுள்ளீர். ஜூரர்கள் இதற்கு உறுதியாக நன்றி தெரிவிப்பார்கள். அடுத்த சாட்சியார்?

வா. வ:- நான் இன்னும் இரண்டு சாட்சிகளை விசாரிக்கஇருக்கிறேன். அவர்கள் இந்தக் கொலைக்கு மூலகாரணம் என்ன என்பதை விளக்கிடுவார்கள்.

சபாபதி நாயுடு—கூப்பிடு!

நீ. கா:- சபாபதி நாயுடு! சபாபதி நாயுடு! சபாபதி நாயுடு!

[சிறு சலசலப்பு-அமைதி— சபாபதிநாயுடு வருகிறார். அவர் பிரமாணம் செய்கிறார்.]

வா. வ:- நீர், சுதேசி கம்பெனியில் வேலை பார்த்து வருகிறீர்?

சபாபதி நாயுடு:- ஆமாம்.

வா. வ:- நீர் குற்றவாளியையும், காணமற்போன கன்னையாவையும் அறிவீர்.

ச. நா:- அறிவேன்.

வா. வ:- இவர்கள் இருவரும் நண்பர்களா, பகைவர்களா?

ச. நா:- **இலட்சுமி** என்ற பெண் குறுக்கிடுகிறவரை அவர்கள் நண்பர்களாக இருந்தார்கள்,

வா. வ:- யார் அந்த இலட்சுமி, அவளைப் பற்றி, உமக்கு என்ன தெரியும்?

ச. நா:- தேவதாசி தெருவில் இருக்கிறாள் அவள். பொன்னுசாமி அவளிடம் நெருங்கிப் பழகி வந்தான்.

வா. வ:- அதாவது ஏற்கனவே நெருங்கிப் பழகிவந்தார்கள். இப்பொழுது...

ச. நா:- அவர்களுக்குள் சண்டை.

வா. வ:- அவர்களுக்குள் சண்டை என்று உமக்கு எப்படித் தெரியும்?

ச. நா:- கன்னையாவினால், இருவருக்குள்ளும் சண்டையேற்பட்டதுஎன்று பொன்னுசாமிசொன்னான்.

வா.வ:- எப்படி அந்த தகராறு ஏற்பட்டது?

ச. நா:- ஒரு நாள் பொன்னுசாமி, இலட்சுமி வீட்டிற்குப் போகும் பொழுது, வெளியில் கன்னையாவின் சைக்கிள் இருக்கக்கண்டு ஆத்திரமுற்று, உள்ளே செல்ல, கன்னையா கொல்லைவழியே ஓடிவிட்டான். இலட்சுமியை இது பற்றிக் கேட்க, அவள் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் பொன்றுசாமியைத் திட்டினாள்.

வா. வ:- அவள் என்ன வார்த்தைகளால் திட்டினாள் என்று அவன் உம்மிடம் சொன்னான்?

ச. நா:- கனம் கோர்ட்டார் அவர்களே! அவைகள் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகள். அவைகளை இங்கு சொல்ல மிகவும் வெட்கப்படுகிறேன்.

நீ:- இது பெண்கள் பள்ளியல்ல. நீர் சொல்ல பயப்படத் தேவையில்லை, சொல்லும்.

ச. நா:- பொன்னுசாமி சொன்னான். அவள் அவனை.......நான் அந்த கீழ்த்தரமான வார்த்தைகளைத் திருப்பிச்சொல்ல வருந்துகிறேன்.

வா. வ:- நீர் உம்முடைய ஒழுக்க நெறியை ஒதுக்கி வைத்துவிட்டு, உடன் சொல்லும்.

ச. நா;- கோர்ட்டார் அவர்களே! அவள் அவனை... ......**அயோக்கியப் பயலே**........ என்றாள்.

[சிரிப்பு, நீதி மன்றம் முழுவதும் எதிரொலித்தது. பிறகு அமைதி குடி கொண்டது]

வா. வ:- அவனை அவள் அயோக்கியப் பயலே என்று திட்டினாள், பிறகு...

ச. நா:- பொன்னுசாமி அதனால் வேதனைப்பட்டான்.: **அந்தப்பயல் கன்னையாவைப் பார்த்துக்கொள்கிறேன்** என்றான்.

வா. வ;- (மெதுவாக ஆனால் உறுதியான குரலில்) பொன்னுசாமி, கன்னையாவை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னான் இல்லையா? இவைகளெல்லாம் எப்போது நடந்தன?

ச. நா:- சிவராத்திரிக்கு ஒரு வாரத்திற்கு முன்னால்...

[எதிர் வழக்கறிஞர் எழுந்தார். குறுக்கு விசாரணையைத் தொடர்ந்தார்]

எதிரி வழக்கறிஞர்:- நான் இரண்டொரு கேள்விகளே உங்களைக் கேட்கவேண்டியிருக்கிறது. பொன்னுசாமிக்கும்,இலட்சுமிக்கும் நடந்த சண்டைபொழுது நீர் இருந்தீரா?

ச. நா;- நானா, இல்லையே! கோர்ட்டார் அவர்களே! நான் தாசிவீட்டுக்குப் போகிறவன் இல்லே!

எ. வ:- நீர் போகமாட்டீர். சண்டையைப் பற்றி சொன்னதெல்லாம், பொன்னுசாமி உமக்கு சொன்னதில் நினைவிருந்தவை — அவ்வளவுதானே?

ச. நா;- ஆமாம்.

எ. வ:- பொன்னுசாமி சொன்னது, சிவராத்திரிக்கு ஒரு வாரத்திற்கு

முன்பா — ஒரு மாதத்திற்கு முன்பா?

ச. நா:- ஒரு வாரத்திற்கு முன்பு தான்.

வா. வ:- அடுத்த சாட்சி இலட்சுமியம்மாள் — கூப்பிடு!

[இலட்சுமி அம்மாள் வருகிறாள். உறுதிமொழி எடுத்துக்கொள்கிறாள்]

வா. வ:- இலட்சுமி அம்மாள் — உங்களுக்கு என்ன வேலை?

இலட்சுமி அம்மாள்:- நிலக்காரி.

வா. வ;- வாடகைதாரர்களை வைத்து, வருமானம் பெறும் வீடுகள் உள்ள நிலக்காரியா?

இல:- அப்படியல்ல; நிலத்தின் வருயானத்தில் வாழ்பவள்என்று கூறினேன்.

வா. வ:- அதாவது, நீ நிலச்சுவான் தாரி—இதுதவிர வேறு தொழில் இல்லை. வருமானம் இல்லை.

இல:- நான் பாடகி—வீணை வாசிப்பவள் — என் கச்சேரிகளை மகாராசாக்கள், மந்திரிகள், **உயர் நீதிமன்ற நீதிபதிகள்** போன்றோர் முன்னிலையில் நடத்தி, பணம் சம்பாதிக்கிறேன்!

[சிரிப்பு — பிறகு அமைதி]

வா. வ;- பொன்னுசாமி போன்ற சாதாரண ஆட்களுக்கு இப்படிப் பாடி மகிழ்விப்பதுண்டா?

இல:- (வெட்கத்துடன்) அவர் என்னிடம் வந்த சில சமயங்களில் பாடி, வீணை மீட்டி மகிழ்வித்திருக்கிறேன்,

வா. வ:- அவன், பார்க்க அடிக்கடி வருவதுண்டா?

இல:- அடிக்கடி இல்லை. வாரத்திற்கு ஒருமுறை இருக்கும். அதுவும் ரொம்ப நாட்களுக்கு முன்பு - இப்பொழுது இல்லை.

வா. வ:- ஏன் இப்பொழுது வரவில்லை — காரணம் சொல்ல முடியுமா?

இல:- நானே அவரை வர வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

வா. வ:- நீ சொன்னதை அவன் அமைதியாக ஏற்றுக்கொண்டானா?

இல:- அவர் வெகு கோபமாக இருந்ததால் என்னை மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டினார்.

வா. வ;- என்ன வார்த்தைகளால் திட்டினான்?

இல:- அந்த வார்த்தைகளை என்னால் இங்கு சொல்ல முடியாது— அவ்வளவு மோசமான வார்த்தைகள்.

நீ:- இங்கு எதையும் சொல்லலாம் என்பதை எடுத்து விளக்கிடும்.

வா. வ;- இலட்சுமி! பொன்னுசாமி உபயோகப்படுத்திய வார்த்தைகளை அப்படியே சொல்லும்படிக் கேட்கிறேன். கோர்ட்டாரும் ஜனங்களும் அப்படியே விரும்புகிறார்கள்.

இல:- அவர் என்னை ... **அயோக்கிய செருக்கி** என்று திட்டினார்.

வா. வ:- ...என்ன ... உரக்கப் பேசு ...எனக்கு காதில் விழவில்லை.

இல:- அவர் என்னை ... **அயோக்கிய செருக்கி** என்றார்.

[ஒரே சிரிப்பு — பிறகு அமைதி]

வா. வ:- திட்டுதலில் என்ன ஒற்றுமை! — நீ அவனிடம் என்ன சொன்னாய்?

இல:- நான், ஒரு பெண்ணிடம், கண்ணியமான முறையில் நடக்கத் தெரியாத மனிதனானால், உடன் வெளியில் போம் என்றேன்.

வா. வ:- சரி, இப்படி உங்களுக்குள்ளே தகராறு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன—சொல்.

இல:- எனக்கு எப்படித் தெரியும் — மனிதர்கள் விசித்திரமானவர்களாக இருக்கிறார்கள் — மிகவும் அற்ப விஷயங்களுக்காக, கோபப்படுகிறார்கள்.

வா. வ:- உதாரணமாக, ஒன்று சொல்லேன்.

இல:- சில சமயங்களில், ஒருபெண் வேறொரு ஆடவனிடம் அக்கறை செலுத்துகிறாள் என்றால் பொறுமைப்படுகிறார்கள்.

வா. வ:- பொன்னுசாமி கோபத்திற்கு இதுதான் காரணமா?

இல:- அப்படித்தான் நினைக்கின்றேன்.

வா. வ:- யாரைப் பார்த்து அவனுக்குப் பொறுமை—உனக்குத் தெரியுமா? அவன் பொறுமைப் படக் காரணம் இருப்பதாகச் சொல்லவில்லை — அவன் நீ யார் மீது அக்கறை செலுத்துகிறாய் என்று கருதினான்?

இல:- அவர் அடிக்கடி கன்னையா என்பவரைப் பற்றிக் கூறுவார். அவரை நான் வீட்டுக்கு அழைப்பதாகக் குறைபடுவார்.

வா. வ:- ஆனால், அது உண்மையல்ல!

இல:- உண்மையல்ல என்று அடியோடு சொல்வதற்கில்லை, ஆனால் கிட்டத்தட்ட அதுதான்...

வா. வ:- அப்படியென்றால்...

இல:- கன்னையா, என்னை செவ்வாய்க்கிழமைகளில் பார்த்துவந்தார் — பொன்னுசாமி என்னை வெள்ளிக்கிழமைகளில் பார்த்து வந்தார்—அதனால் அவர் என்னை கன்னையாவுடன் இருந்ததை பார்த்திருக்க முடியாது.

வா. வ:- அப்படியா? இப்படிப்பட்ட உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளைக் கேட்டால், வெறுப்பாகத் தானிருக்கும் — அவ்வளவுதான்.

எ. வ:- இலட்சுமி! நீ, பொன்னுசாமியை அயோக்கியப் பயலே என்று அழைக்கவில்லை.

இல:- இல்லை'—எனக்கு அப்படிக் கீழ்த்தரமாகப் பேச வராது — நான் ஒன்பதாவது வரை படித்திருக்கிறேன்.

எ. வ:- அதாவது, உறுதியாக, ஆனால் பண்புடன், நல்லமுறையில் நடந்துகொள்ளும், இல்லாவிட்டால் வெளியில் செல்லும் என்றுதான் சொன்னாய்.

இல:- ஆமாம், அப்படித்தான் சொன்னேன். என்னுடைய மரியாதையை நான் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமல்லவா?

எ. வ;- உனது, மற்ற நண்பர்கள், இப்படிப்பட்ட விகாரமான நிகழ்ச்சிகள் உன் வீட்டில் நடப்பதை விரும்பமாட்டார்கள் — இல்லையா?

இல;- விகாரமான நிகழ்ச்சி என்றால் எனக்கு விளங்கவில்லை.

எ. வ;- நான் தப்பாக எதுவும் கூறவில்லை. பொன்னுசாமி உன்வீட்டில் ரகளை செய்வதை, உனது மற்ற நண்பர்கள் விரும்பமாட்டார்கள் அல்லவா என்றுதான் கேட்கிறேன்.

இல:- ஆமாம்.

எ. வ:- உனக்கு, அப்படிப்பட்ட நண்பர்கள் ஏராளம் உண்டு.

இல:- இல்லை. இரண்டு, மூன்று பேர்கள்!

எ. வ: இப்படிப்பட்ட நண்பர்கள் உனக்கு உண்டு என்பதை பொன்னுசாமி அறிவான் என்று நினைக்கிறேன்.

இல:- இல்லை என்றே நினைக்கிறேன். ஏனெனில்அவர்களுக்குள் சண்டை வராமலிருக்க, நான் ஒருவருக்கொருவர் இந்த உறவை அறியாமலே வைத்து வருகிறேன்.

எ. வ:- ஆனால், உன்னால் அப்படி முழுவதும் மறைக்கமுடிவதில்லை என்கிறேன். அதனால், பொன்னுசாமிக்கு, கன்னையாவைப்போல், மற்ற நண்பர்கள் மீதும் பொறுமை உண்டு என்கிறேன்.

இல:- அப்படியில்லை. கன்னையா மீது உள்ள பொறுமை அளவு, மற்றவர்கள்மீது இல்லை.

எ. வ;- அப்படியானால், உனக்கு இவை எல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.

வைக்கோல்!



வைக்கோல் மாட்டுத் தீவனத்துக்கு ஒரு பொருளாகவும் ஏழை எளியவர்களின் குடிசைகளை மூடும் ஒரு சாதனமாகவும் இங்கே பயன்படுகிறது.

வட அயர்லாந்தில் ஒரு வீட்டின் வாசலில் வைக்ரோல் (கோதுமைத்தாள் தான்!) சிறிது வைக்கப்பட்டிருந்தால், "சாக்கிரதை! நாய் இருக்கிறது" என்று எச்சரிப்பதற்கு அடையாளமாகும்.

இங்கிலாந்தின் கிராமப்புறங்களில் ஒரு குடியானவன் தன்னுடைய தொப்பியில் ஒரு வைக்கோல் 'துண்டைச் செருகிக் கொண்டு சென்றால், அவன் வேலையில்லாமலிருக்கிறான், வேலை செய்யக் கூப்பிட்டால் தயாராகயிருக்கிறான் என்று பொருவாகும். ஒரு பொருளின் மீது ஒரு சுமை வைக்கோலைப் போட்டு, நாலு பேர் பார்க்கிற இடத்தில் வைத்திருந்தால், அந்தப் பொருள் விற்பனைக்குத் தயாராக யிருக்கிறது என்று பொருள் கொள்ளப் படுவதும் இங்கிலாந்தில் உண்டு.

ஸ்காட்லாந்தில் வீட்டுக் கதவுப்படியில் வைக்கோல் செருகப்பட்டிருந்தால் அந்த வீட்டுக்குள் வசிக்கும் மனிதன் மனைவியை அடிக்கும் மூர்க்கன் என்று குறிக்குமாம்!!

இல:- ......இல்லை.

வா. வ:- நான் வழக்கை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

[சலசலப்பு — பிறகு அமைதி]

நீ:- பொன்னுசாமி — வாதிதரப்பு சாட்சியங்களைக் கேட்டாய் அல்லவா? நீ ஏதேனும் சொல்லிக் கொள்ள வேண்டுமென்ருல் சொல்லிக்கொள்ளலாம்.

குற்றவாளி:- கனம் கோர்ட்டார் அவர்களே! ஜூரர்களே! நான் நடந்த உண்மைகளை அப்படியே சொல்ல விரும்புகின்றேன். நான் கன்னையாவை கொலை செய்யவில்லை. வழக்கின் அம்சங்கள் எப்படித் தோன்றினுலும், நான் கன்னையாவுக்கு ஒரு இன்னலும் செய்யவில்லை. நான் பயத்திஞல் ஓடிஒளிந்துகொண்டதும், அகப்படாமல்தப்பிக்க பொய்கள் சொன்னதும் உண்மை, அது தான் முட்டாள்தனமான காரியம் — அதற்காகப் பெரிதும் வருந்துகிறேன். என்னுடைய குற்றமற்ற தன்மையை நிரூபிக்க வேண்டுமென்ருல், எதையும் மறைக்காமல், வழக்கில் எனக்கு **விரோதமாக இருந்தாலும், முழு** உண்மையைக்கூறி ஒப்புக் கொள்ள வேண்டியதுதான் என்று முடிவிற்கு வந்துவிட்டேன். என் முழுக்கதையை, அனுதாபத்துடன் கேளுங்கள்.

நான் இலட்சுமியுடன் சண்டையிட்டதும், பொருமைகொண்டதும் உண்மை; ஆனுல் இலட்சுமியின் நண்பர்கள் ஐந்தாறுபேர்மீது கொண்ட பொருமையைவிட கன்னையாவின்மீது கொண்டது அதிகமில்லை. நான் கன்னையாவிடம் சண்டையிடவுமில்லை. துன்புறுத்தவும் இல்லை. நாங்கள் இருவரும் பழம்பெரும் நண்பர்கள். சிவராத்திரி இரவு, இருவரும் சைக்கிளில், காற்றுவாங்க, துறைமுகப் பக்கம், வழக்கம் போல், சென்றிருந்தோம். நாங்கள் நடந்து, கலங்கரைவிளக்கத்திற்கருகில் அமர்ந்திருந்தோம். அலைகள் அடிப்பதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கையில், இரவு 7-மணிக்கு, ஒரு நண்பரைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்தது கவனத்திற்குவந்தது.

நீ:- அந்த நண்பர் யார் என்று கூறமுடியுமா?

கு:- தாராளமாக. அவர்தான் சகந்நாத முதலியார். ஆனுல், என் கெட்டகாலம், அவர் எனக்காக பேசமுடியாது. ஏனெனில் மறுநாளே அவர் சிங்கப்பூர் சென்றுவிட்டார். அவர் முகவரிகூட எனக்குத்தெரியாது. நான் புறப்படும்பொழுது, கன்னையா இன்னும் கொஞ்சநேரம் அங்கு இருப்பதாகக் கூறி அங்கேயே தங்கியிருந்தான். இரண்டு நாட்கள் கழித்து, கன்னையா, கடலில் தள்ளிக் கொல்லப்பட்டர்ன் என்று கேள்விப்பட்டு, நம்மை இதில் எங்கே சிக்கவைத்து விடுவார்களோ என்று பயந்தேன். ஆகவே, செங்கற்பட்டுக்கு ஓடினேன். தலைமறைவாகித் திரிந்தேன். நான் கண்டுபிடிக்கப்பட்டபொழுது, பயத்திஞல், நாங்கள் இருவரும் ஒன்ருகத் திரும்பினேும், மெரினுவில் பிரிந்தோம் என்ற பொய்க் கதையைக் கூறினேன். அந்தப்பொய் கூறியதற்காக நான் வருந்துகிறேன். **பொய்க்காகத் தூக்குத் தண்டனை தருவது நீதியாகாது.** நான் கன்னையாவைக் கொல்லவில்லை. எனக்கு இப்பொழுதும் அவன் இறந்து

விட்டானா, உயிருடன் இருக்கிறானா, என்ன ஆனான் என்பது தெரியாது. இதுதான் உண்மை …………

[அவன் ‘ஓ’ வென்று கதறி யழுதான். கூடியிருந்தோரில் பரிதாபப்பட்டனர் சிலர். பதட்டப்பட்டனர் சிலர் ஆச்சரியத்துடன் இருந்தனர் பலர். பிறகு அமைதி நிலவியது]

நீ:- ஜூரர்கள் நிச்சயம், உனது நிலையைக் கூர்ந்து கவனித்து முடிவு தெரிவிப்பார்கள். எதிரி வழக்கறிஞர் தம் வழக்கைத் தொடரலாம்.

எ. வ:- கனம் கோர்ட்டார் அவர்களே, என் கட்சிக்காரர், ஒளிவு மறைவின்றி, உண்மையை, மிகவும் உருக்கமான வகையில் கூறியுள்ளார். இனி என் பணி மிகவும் சுருங்கிவிட்டது. அவர் சொன்னது, உண்மையில் அன்று நடந்தது. கலப்பு அற்றது. அது உண்மை என்பது மட்டுமல்ல, இன்னும் சில நிமிடங்களில், நான் நேரடியான சாட்சியம் மூலம் நிரூபிக்கிறேன். என் கட்சிக்காரர், கன்னையாவைக் கொல்லவில்லை! அன்று இரவு பொன்னுசாமியும், கன்னையாவும் ஒன்றாயிருந்தார்கள், கன்னையா குல்லாயை இழந்தான் என்பவைகள் உண்மையே. ஆனால், அது ஒன்றே, கன்னையா, தண்ணீரில் மூழ்கினான், பொன்னுசாமி அவனைத் தள்ளினான் என்பவைகளுக்கு ஆதாரம் ஆகுமா? சென்னைக் கடலில் ஆண்டுதோறும் எத்தனைக் குல்லாய்கள் மிதக்கின்றன — ஒருடசன் இருக்காதா? நாம் அந்தத் தலைப்பாகைகளுக்குரியவர்களின் நண்பர்களையெல்லாம், கொலைக்குற்றம் சாட்டுவதில்லை. முட்டாளான வலைஞனைத் தவிர, துள்ளிவரும் மீனை, கடலில் விழுந்த மனிதன் என்று நினைக்கமாட்டான். அதனால்தான் ஜான்சன், மீன் பிடிக்கும் தூண்டிலுக்கு ‘புழு மாட்டிய கொழு ஒருபக்கத்திலும், மறுபக்கத்தில் முட்டாளும் என்று விளக்கம் சொன்னார். வேண்டுமென்றோ அசட்டையினாலோ, ஞாபகமறதியினாலோ, தங்கள் சைக்கிள்களை சிலர் விட்டுச் செல்வதில்லையா? கனம் ஜூரர்களே, இத்தகைய நம்பமுடியாத சாட்சியங்களைகொண்டு என் கட்சிக்காரரை தூக்குமரத்திற்கு அனுப்பப் போகிறீர்களா?

வாதி தரப்பில் எப்படிப்பட்ட சந்தேகங்கள் இருந்தாலும், சந்தேகமற, கன்னையா அன்று இரவு கொல்லப்பட்டான் என்று நிரூபிக்கவேண்டாமா? **கன்னையா. குல்லாய் இழந்தான் என்பதுமட்டுமல்ல, உயிரையே இழந்தான், இதுவும் குற்றம் சாட்டப்பட்ட பொன்னுசாமியினால்தான் இழந்தான் என்று நிரூபிக்கவேண்டாமா?** இந்த சந்தேகம், மர்மம் எல்லாம் கன்னையா இப்பொழுது உயிருடனிருந்தால், மறைந்தோடிவிடும் அல்லவா? இப்படி எவ்வளவோ பேர் தலைமறைவாகி விடுவதில்லையா? அப்படிச் செல்வதற்கு பயம், காதல், கடன், சண்டை, குற்றமனம், கெட்டுப்போன மனைவி, உலகைத் துறந்து, உயிரைக் காப்போம் என்ற எண்ணம்— இவை காரணமாக இருப்பதில்லையா? இவைகளில் ஒன்று கன்னையாவையும், தலைமறைவாக இருக்கச் செய்திருக்கலாமல்லவா? இப்பொழுதுள்ள சாட்சியங்களிலிருந்து கன்னையா இறந்துவிட்டான் என்று எப்படி முடிவிற்கு வரமுடியும்? அந்தக் குற்றம் ஏற்பட நான் விடுவதாக இல்லை. நான் கன்னையா உயிருடனிருக்கிறான் என்று நிரூபிக்கப் போகிறேன்.

கன்னையா—கூப்பிடு.

[காவலாளி, ‘கன்னையா’ என்று மூன்று முறைகள் அழைக்கிறான். வந்தவனிடம் பிரமாணம் எடுக்கச் செய்யப்படுகிறது.]

எ. வ:- கன்னையா, நீரும் பொன்னுசாமியும் என்று சேர்ந்திருந்தீர்கள்?

கன்னையா:- சிவராத்திரியின் முதல் இரவு

எ. வ:- எங்கே சென்றீர்கள்;

க:- துறைமுகத்திற்கு, சைக்கிளில் சென்று கடல் முனைக்கு நடந்து போனோம்.

எ. வ:- குற்றவாளி, உன்னைக் கடலில் பிடித்துத் தள்ளினானா?

க:- இல்லை!

எ. வ:- நீர் அன்று கடலில் மூழ்கி இறக்கவில்லை என்று நான் தீர்மானிப்பது சரிதானே?

[எங்கும் சிரிப்பு]

இயக்கம் இல்லை!



வெகு நாளைக்குப் பிறகு ஒருவன், தன் நண்பன் ஒருவனை, அவனது தொழிற்சாலையில் சென்று கண்டான். தொழிற்சாலைக்கேயுரிய ஆரவார ஒலி முழக்கங்களோடு அந்த சூழல் விளங்கியது.

நிர்வாகியின் ஸ்தானத்தில் அமர்ந்திருந்த நண்பன் கவலையுடன் இருப்பதைக் கண்டு தயக்கத்தோடு கேட்டான்.

இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றனவே, பிறகு கவலை எதற்கு?

வழக்கத்திற்கு மாறான இயல்போடு கடு கடுப்புடன் நண்பன் சொன்னான்:

“மனிதர்கள் யாரும் இயங்கவில்லையே”

க:- நான் கடலில் மூழ்கவும் இல்லை; மூழ்கிச் சாகும் விபத்திலும் சிக்கிடவில்லை.

எ. வ:- பின் என்ன நடந்தது— சொல்லும்.

க:- இருட்டும் வரை, இருவரும் உட்கார்ந்துப் பேசிக்கொண்டிருந்தோம். அவர், யாரையோ பார்க்க வேண்டும் என்று அவசரமாகப் புறப்பட்டார். என்னுடைய சொந்த தொல்லைகளை எண்ணி கடலில் மூழ்கிடலாமா என்று பின்னர் யோசித்தேன். தங்கசாலை சௌகாரிடம் வாங்கிய கடன் தொகை போலும் இரண்டு மடங்குக் கொடுத்தும் ரூ. 500-க்கு, டிக்ரி வாங்கி என்னை வாரண்டில் பிடித்திட முயற்சித்து வந்தான், அதற்கு என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. கடலில் மூழ்கிவிடலாம் என்று எண்ணினாலும், அலைகளின் பயங்கரத்தையும், கடலின் ஆழத்தையும் கண்டு என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை. ஆனால், நான் தற்கொலை புரிந்து

கொண்டதாக நம்பவைத்து, தலை மறைவாகிவிட்டால் என்ன என்ற எண்ணம் வந்தது. அது எனக்கு சுலபமாகவும் பட்டது. எனது குல்லாயைக் கடலில் எறிந்து விட்டு, துண்டுக் கடிதத்தையும் அவ்விடத்தில் எழுதி வைத்தேன். ஆனால் அது காற்றில் பறந்து போயிருக்க வேண்டும். பிறகு, என் சைக்கிளை விட்ட இடத்திலேயே விட்டு விட்டு, இலங்கைக்குப் புறப்பட்டுச் சென்றேன். அங்கு சென்று தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்தேன். ஒரு வாரத்திற்கு முன்பு, சௌகார்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களைத் கொடுக்கத் தேவையில்லையென்று சட்டம் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டுத் திரும்பி வந்தேன். வந்த இடத்தில், நண்பன் பொன்னுசாமியையும் காப்பாற்ற முடிந்தது.

எ. வா:- நன்றி, கன்னையா-இந்த சாட்சியத்திலிருந்து, குற்றம் சாட்டப்பட்ட பொன்னுசாமி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டியவன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீ:- **இது மிகவும் விசித்திரமான வழக்கு. கொலையுண்டவன், தான் கொல்லப்படவில்லை என்று சாட்சியம் கொடுத்திருக்கிறான்!** ஜூரர்கள் முடிவு செய்வதற்கு முன்பு, வாதித்தரப்பில் ஏதேனும் சொல்லவேண்டுமா?

வா. வ:- கனம் கோர்ட்டார் அவர்களே! எனக்கு, இப்பொழுது தான் சில தகவல்கள் கிடைத்துள்ளன. நான் இந்த சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறேன்.

நீ:- நல்லது! நாம் அற்புதங்கள் நிகழும் காலத்தில் வாழ்கிறோம். முதலில் கொலையுண்டவன், நான் சாகவில்லை என்று சாட்சி சொன்னான். நீர் கொலையுண்டவன், இறந்துவிட்டான் என்று நிரூபிக்க குறுக்கு விசாரணை செய்யப் போகிறீரா? விந்தையே! ஆனால், உம்மைத் தடுத்து நிறுத்திட எனக்கு அதிகாரம் இல்லை. நடக்கட்டும் குறுக்கு விசாரணை, ஆனால் சுருக்கமாக!

வா. வ:- மிகவும் சுருக்கமாக இருக்கும்-கன்னையா, உம்முடைய பெயர் கன்னையாதானா-நீர் உறுதியாகச் சொல்கிறீரா?

க:- ஆமாம்.

வா. வா:- உம்முடைய பெயர் **புருடோத்தமன்**-நீர், கன்னையா போல் தோற்றமிருக்கவேண்டும் என்று மீசையை எடுத்துவிட்டு, தலைமயிரை மாற்றிக்கொண்டுள்ளீர் என்கிறேன்.

க:- தவறு, நான் புருடோத்தமன் இல்லை—கன்னையாவே தான்!

வா. வ:- நீர் நேற்று சைனா பஜாரிலுள்ள முடித்திருத்தும் நிலையம் ஒன்றுக்கு சென்று மீசையை எடுத்துக் கொள்ளவில்லையா?

க:- இருக்கட்டும் அதற்கென்ன?

வா. வ:-ஏன் அப்படிச் செய்தீர்-கன்னையா, மீசையில்லா திருந்தவன் என்பதால்தானே?

க:-நான் மயிர் களைந்திட நினைத்தேன்—அதனால் செய்தேன்-அது தவிர வேறு காரணம் இல்லை.

வ. வா:- கடலில் எறிந்த குல்லாயின், கம்பெனி எழுத்துக்கள் என்ன.

க:- எனக்கு........ஞாபகம்........ இல்லை......அது யானை மார்க்....

வா. வ:- ஆமாம் அதில் 'பி. கே' என்ற எழுத்துக்கள் இல்லை என்கிறீரா?

க:- ....ஆமாம்-அதில் யானை அடையாளமும், 'பி. கே' போன்ற எழுத்துக்களும் இருந்தன.

வா. வ:- உமது சைக்கிள், என்ன கம்பெனி சைக்கிள்?

க:- அது......**செனீத்** என்று நினைக்கிறேன். ஞாபகம் இல்லை.

வா. வ:- அது நிச்சயமாக **நேஷனல்** அல்ல.

க:- எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அது நேஷனலாகவும் இருக்கலாம்.

வா. வ:- அதற்கு எண்ணை விளக்கா-எலக்ட்ரிக் விளக்கா?

க:- சில சமயங்களில் எண்ணெய் விளக்கையும், சில சமயங்களில் பாட்டரி விளக்கையும் நான் பயன்படுத்துவேன்.

வா. வ:-நீர் வேலை செய்த தேயிலைத் தோட்டத்தின் நிர்வாகியின் பெயர் என்ன?

க:- எனக்குப் பெயர் தெரியாது. நாங்கள் துரை என்றுதான் சொல்வோம்.

வா. வ:-இப்போது, கன்னையாவின் தாயார் **அலமேலம்மாளைப்** பற்றிக் கேட்கிறேன். அந்த அம்மாளின் அண்ணன் பெயர் என்ன?

க:- எனக்கு ஞாபகம் இல்லை.

வா. வ:- அவளின் தங்கை பெயர் என்ன?

க:- எனக்குத் தெரியாது. என் அம்மாவின் சொந்தக்காரர்கள் பற்றி நான் அக்கறை காட்டுவதில்லை.

வா. வ:- நல்லது உறவினர்கள் கிடக்கட்டும்-வீடு இருக்கிறதல்லவா? அதில் எத்தனை அறைகள்?

க:- ...நாலு....அல்லது...ஐந்து...

வா. வ:- அல்லது ஆறு...

க:- ஆறும் இருக்கலாம்.

வா. வ:- குழாய் எங்கு உள்ளது?

க:- ஞாபகம் இல்லை.

வா. வ:- வீட்டு எண்

க:- உங்கள் கேள்விகள் என்னைக் குழப்புகின்றன!



வா. வா:– ஆமாம், நீர் குழம்பிப் போயிருக்கிறீர் சந்தேகமில்லை. அந்தக் குழப்பத்திற்குக் காரணம், நீர், அலமேலு மகன் கன்னையா என்று பொய் சொல்கிறீர்–அப்படித்தானே?

க:– எனக்கு ஞாபகம் இல்லை!

[எல்லோரும் சிரிக்கிறார்கள்]

வா. வ:– இனியும் இந்த சாட்சியை நான் விசாரிக்க வேண்டியதில்லை. ஆனால் நீதியின் பேரால் கேட்கிறேன், இவரது சாட்சியத்தை புனராலோசனை செய்ய வேண்டும்.

நீ:– ஆமாம், திட்டமிட்டு ஆள் மாறாட்டம் செய்துள்ளான். இவனை, பொய் சாட்சியம் கூறிய குற்றத்திற்கு நடவடிக்கை எடுக்கும் வரை காவலில் வையுங்கள்.

[இரைச்சல்—மீண்டும் அமைதி]

எ. வ:- கனம் கோர்ட்டார் அவர்களே! ஜூரர் பெருமக்களே!! இது ஒரு விசித்திரமானவழக்கே. முதலில், பிணமில்லாமல், கொலைக்குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளி. ஆனால், பிணம் அவசியம் என்று வாதிடவில்லை. ஆனால், சாதாரணமாக, கொலையுண்டவனின் பிணம் சோதனை மூலம் கொல்லப்பட்டான் என்று நிரூபிப்பதுதான் முறை என்பது வாதி தரப்பிலும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். இந்த வழக்கில், பிணத்தின் இடத்தில் நனைந்த குல்லாயும், தனித்த சைக்கிளும், காணாமற்போன அதன் உரிமையாளனும். இவை சந்தேகத்திற்குரியன — ஒருவன் இறந்துவிட்டான் என்பதற்குச் சாட்சியங்கள் ஆகா — இன்னும், ஒருவன் கொல்லப்பட்டான் என்பதற்கு சாட்சியங்களே ஆகவே ஆகமாட்டா — வாதத்திற்காகவே, வைத்துக்கொள்வோம். கன்னையா, தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டான் என்று. அது ஏன் தற்கொலையாக இருக்கக்கூடாது? இந்த வழக்கில், கொலை செய்யப்பட்டான் என்பதற்குச் சாட்சியமே கிடையாது என்று திடமாகக் கூறுவேன். கடைசி சாட்சியைப் பற்றி சில வார்த்தைகள் — உண்மையில், இவனை, சாட்சிக் கூண்டில்ஏற்றும்வரை காணாமல் போன கன்னையாதான் இவன் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். எதிர் தரப்பு குறுக்கு விசாரணைக்குப் பிறகு, எனக்கு, சந்தேகம் ஏற்பட்டதென்று நான் ஒப்புக்கொள்கிறேன். **ஆனால், அப்படி, ஆள்மாறாட்டம் செய்ய முயற்சித்தது, கன்னையா இறந்துவிட்டான் என்பதற்கு எப்படி சாட்சியமாகும்? நான் விசாரணை முடித்தவுடன், என்னைப்போலவே, கோர்ட்டாரும், ஜூரர்களாகிய நீங்களும், காணாமற்போன கன்னையா இவன்தான் என்று முடிவிற்கு வரவில்லையா? இது எதைக் காட்டுகிறது? இப்படி, கன்னையா உயிருடனிருக்கிறான் என்பதை உடனடியாக ஒப்புக்கொள்ள நாம் தயாராக இருப்பதொன்றே, வாதித் தரப்பு சம்பவத் தொடர்ச்சி இன்னும் முடிவு பெறவில்லை என்பதைக் காட்டவில்லையா? கன்னையா உயிருடனிருப்பது என்பது முடியாத காரியமல்ல.** உங்களை ஏமாற்ற முனைந்தான் ஒரு சாட்சி என்ற கோபத்தில், நடந்ததாகக் கருதி, அதனைச் செய்யாத என் கட்சிக்காரனுக்குத் தண்டனை தரும் தவற்றினைச் செய்ய வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அமைதியாக, எவ்வித கோபதாபமுமின்றி, சாட்சி

PHONE: 82976

For Buying & Selling

Cars, Motor Cycles,

And

Automobile Consultants

S. Venka,

6/17, Mount Road,

MADRAS-2.

காரம், மணம், குணம் நிறைந்தது

அணில்

பட்டணம் பொடி

*

இன்றே வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்:

N. A. S. ராஜன் பிரதர்ஸ்,

P. B. No. 1165

சென்னை-2

ஏஜண்ட்:

N. S. இராஜாமணி,

ஜெனரல் மெர்ச்சண்ட்,

மேற்கு ரத வீதி, :: திண்டுக்கல்-1

NEAT EXECUTION! **PROMPT DELIVERY!!**

Phone: 51273 **Regd. No. 1681**

C/o Phone: 51899 **SSI/PR/504/093/04**



ROLLING SHUTTERS.

GEMINI IRON WORKS,

Manufacturers of:

Trusses, Rolling shutters, Iron Main gates, Collapsible gates, Fancy Grills, Water Tanks & Iron furniture Etc.

PROPRIETOR:

M. ELUMALAI,

No. 8-A, MANIGANDA MUDALI 3rd LANE, WASHERMENPET,
MADRAS-21

BRANCH:

19, Arunachala Eswarar Koil St., New Washermenpet, Madras-21

யங்களைக் கூர்ந்து ஆராய்ந்து, குற்றமற்றவன் பொன்னுசாமி என்று முடிவிற்கு வாருங்கள் என்று வேண்டுகிறேன்.

வா. வ:- கனம் கோர்ட்டார் அவர்களுக்கும், ஜூரர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புவது இது ஒன்றுதான். அதாவது, கடைசிச் சாட்சி பற்றிய விளக்கமே! இந்த ஆள்மாறாட்ட சதியில் எதிரி வழக்கறிஞர் நண்பர் பங்கு பெறவில்லையென்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். குற்றவாளியின் நண்பர்கள் இப்படியொரு தந்திரம் மூலம் கோர்ட்டையும், ஜூரர் மன்றத்தையும், ஏன் தங்களின் வழக்கறிஞரையும் ஏமாற்றினால் ஒழிய, குற்றத்தை மறைக்க இயலாதென்றும், தண்டனைக் கொடுமையிலிருந்தும் தப்பிக்க முடியாதென்றும் முடிவிற்கு வந்ததிலிருந்தே, குற்றவாளியென்று தெரியவில்லையா? உங்களுடைய முடிவினால், இப்படிப்பட்டக் கீழ்த்தர நடவடிக்கைகளுக்கு, நீங்கள் எதிராக உள்ளீர்கள் என்பதை எடுத்துக் காட்ட வேண்டாமா? கொடுக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து, குற்ற தினத்தில், கன்னையாவும் பொன்னுசாமியும் குற்ற இடத்திற்குச் சென்றார்கள் என்பதும், அவனுக்குக் கெடுதல் புரியவேண்டும் என்ற கெட்ட எண்ணம் பொன்னுசாமிக்கு இருந்தது என்பதும், கன்னையா நீரில் மூழ்கி இறந்தான் என்பதும், அவனைக் குற்றவாளியே தள்ளி மூழ்கடித்தான் என்பதும் விளங்கும். எனது சாட்சியங்களை நீங்கள் நம்புவதானால், குற்றவாளியென்று முடிவிற்கு வாருங்கள்—இதில் சந்தேகம் இருக்குமானால், சந்தேகத்தின் பலன், குற்றவாளிக்கே அளிக்கப்படவேண்டும். அவனுக்கு அளியுங்கள்.

நீ:- ஜூரர் பெருமக்களே! நீங்கள் இரண்டு கேள்விகளை முதலில் கேளுங்கள், உங்களுக்குள்ளாகவே! — முதலாவது — கன்னையா இறந்துவிட்டானா? இரண்டாவது—அவன் குற்றவாளியினால் கொலை செய்யப்பட்டானா? முதல் கேள்விக்கு பதில்களாக உள்ளன: குற்ற நேரத்தில் இருவரும் சேர்ந்திருந்தனர், பிறகு குற்றவாளி தனியே திரும்பி வந்தான், குல்லாய் கடலில் மிதந்தது, சைக்கிள் கிடந்தது, இரவில் கடலில் சத்தமும், நீர்பிளவும் உண்டாயின, அதன் பிறகு கன்னையா காணக் கிடைக்கவில்லை-இந்த சம்பவங்கள்தான். கன்னையா இறந்தான் என்பதற்குப் போதுமான சாட்சியங்கள் ஆகுமா? நீங்கள் இதனை மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். பிணம் கண்டுபிடிக்கப்படவில்லை. தண்ணீரில் கேட்டசப்தமும், எழுச்சியும் தனி ஒரு சாட்சியின் வாக்கு மூலம். அவன் தவறு செய்திருக்கலாம். கிடைத்த குல்லாயும், சைக்கிளும் சந்தேகத்தையும், அதனடிப்படையில் விசாரணையும் வேண்டும் என்ற நிலையையும் உண்டாக்கி இருக்கலாம். ஆனால், அந்த சாட்சியங்கள் அதற்குமேல் செல்கின்றனவா?

வாதத்திற்காகவே, கன்னையா இறந்துவிட்டான் என்றே ஏற்றுக்கொள்வோம். ஆனால் அவன் குற்றவாளியினால் கொல்லப்பட்டானா? குற்றவாளியின் சந்தேகத்திற்குரிய இரண்டொரு நடவடிக்கைகள் தவிர, கொலைக்குற்றம் சாட்டத் தக்க சாட்சியங்கள் யாவை? இதற்காக சொல்லப்படும் அடிப்படைக் காரணமும் வலுவுள்ளதாக இல்லை. **அப்படியிருந்தாலும், அது யார் செய்திருக்கக் கூடும் என்பதைக் காட்டுமே தவிர, யார், உண்மையில் செய்தார் என்று காட்டாது.** குற்றவாளி மறைந்திருந்ததும், கண்டுபிடித்த பிறகு, சொன்ன கற்பனைக் காரணங்களும் நிச்சயமாக சந்தேகத்திற்குரியனவே. ஆனால் அந்த நடவடிக்கை குற்றத்தோடு மட்டும் ஒட்டியில்லை. குற்றவாளியின் பயத்துடனும் ஒட்டியுள்ளது. முடிவாக, தற்கொலையாக இது இருக்க முடியாது என்று நீங்கள் முடிவிற்கு வந்துவிட முடியுமா? உங்களால் முடியும் என்று என்னால் சொல்லமுடியாது.

ஆள்மாறாட்டம் செய்த சாட்சியைப் பற்றி என் குறிப்பு — அவனது நடவடிக்கை வேறு விசாரணையில் கவனிக்கப்படும். அவனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்றவுடன், மற்றவற்றை நீங்கள் கருதத் தேவையில்லை. குற்றவாளியோ, குற்றவாளியின் வழக்கறிஞரோ இந்தத் தவறுக்கு எந்த வகையிலும் பொறுப்பாளியில்லை. நாமே முதலில், காணாமற்போன கன்னையா இவன்தான் என்று நம்பவில்லையா? அது தவறென்று ஆகிவிடவில்லையா? அதுபோல், கன்னையா இறந்துவிட்டான், அவன் பொன்னுசாமியினால்தான் கொல்லப்பட்டு இறந்தான் என்று எப்படி உறுதியாகச் சொல்லமுடியும்? சிந்தித்து முடிவுக்கு வாருங்கள்.

[சலசலப்பு—கூடியிருந்தோரிடையே பேச்சு — நாற்காலிகள் இங்குமங்கும் நகர்த்துவதின் மூலம் ஓசை—பிறகு அமைதி]

மன்ற எழுத்தாளர்:- ஜூரர் பெருமக்களே! முடிவிற்கு வந்துவிட்டீர்களா?

ஜூரரில் முதல்வர்;- வந்துவிட்டோம்.

ம. எ:- ஒருமனதான முடிவா?

ஜூ. மு:- ஆமாம்.

ம. எ:- குற்றம் சாட்டப்பட்டுள்ள பொன்னுசாமி குற்றவாளியா? நிரபராதியா?

ஜூ. மு:- **கனம் கோர்ட்டார் அவர்களே! பொன்னுசாமி நிரபராதி — குற்றவாளியில்லை.**

[மீண்டும் கூச்சல் — சலசலப்பு — அமைதி இறுதியில்]

நீ:- (குற்றவாளியை நோக்கி) ஜூரர்கள் உன்னை நிரபராதி என்று தீர்மானித்துள்ளார்கள். நானும் நீ குற்றவற்றவன் என்று தீர்மானித்து உன்னை விடுதலை செய்கிறேன்!

காவலாளி:- எல்லோரும் கலைந்து செல்லலாம். வழக்கு முடிந்தது!

○

எத்தனைக் கஷ்டம்?

எழுத்தாளனாக இருப்பதில் மூன்று கஷ்டங்கள் இருக்கின்றன. ஒன்று, பிரசுரிக்கத் தகுதியானதை எழுதியாக வேண்டும்; இரண்டு யோக்யமான பிரசுரகர்த்தர்களைப் பிடித்தாக வேண்டும்; மூன்று, அதைப் படித்து ரசிக்கக் கூடிய புத்திசாலிகளைப் பிடித்தாக வேண்டும். அப்பப்பா!. . . .

--கோல்டன்

சிறுகதைகள் என்றால், அவை இப்படித்தான் இருக்கவேண்டும் என்று வரம்பு கட்டிக்கொண்டு, அந்த வளையத்துக்குள்ளேயே திக்கு முக்காடிக்கொண்டிருப்பவன் அல்ல வசந்தன். அவனது கதைகளிலே காதல் இருக்கும்; அன்பு இருக்கும்; அறிவுரை இருக்கும்—மொத்தத்தில் ஒரு வாழ்க்கை விளக்கம் இருக்கும். அதனால், அவனது எழுத்துக்களை ஏந்திவராத நாள், வார, மாத இதழ்கள் பெரும்பாலும் இருக்க முடியாது.

வசந்தனது எழுத்துக்களைப் படித்து எழுத்தாளரானோர் பலர். 'கலை, கலைக்காகவே' என்ற தத்துவம் வாதத்திற்கு ஒப்பக்கூடியது தான் என்றாலும், கலை வாழ்க்கையினைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்ற கொள்கை பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதனால், அது 'வாழ்க்கைக்கே!' என்பது அவன் கொள்கை. அதனால் அவனுக்கு நாடெங்கிலுமே நல்ல பலரசிகர்கள் ஏற்பட்டிருந்தனர். அவர்கள் மத்தியில் வசந்தன் 'எழுத்துலக மன்னன்' எனத் திகழ்ந்தான்.

பொதுவாகவே ஒருவன் அவன் தன்னை ஒரு எழுத்தாளன் என்று நிலைப்படுத்திக் கொள்ளுமுன் அவனது இரங்கத்தக்க நிலையை இதயம் படைத்த வளர்ந்த எழுத்தாளர்கள் எவரும் உணராமலிருக்க முடியாது.

பத்திரிகைகளினாலும், அதனைச் சார்ந்தவர்களினாலும், படிப்பவர்களினாலும், பிறராலும் நடந்தப்படுகின்ற "சத்திய சோதனை"களிளெல்லாம் வெற்றிபெற்று எதிர்நீந்தி, மறுகரையேறிவந்து நிமிர்ந்து நிற்கிறபோதிலே அவனுக்குக் கிடைக்கின்ற வரவேற்புகள், கொடுக்கப்படுகின்ற மதிப்பு, வழங்கப்படுகின்ற அந்தஸ்த்து இவை எல்லாமே தனி!

வசந்தன், வெறும்வசந்தனாகவே இருந்த காலத்தில் அவன் எழுத்தோவியங்களைத் திருப்பியனுப்பித் தன் பெருமையைக் காத்துக்கொண்ட 'ஒரு மாத இதழ், இப்போதைய வசந்தனின் புகழை விலையாக்கிக்கொள்ளக் கருதி, அவனைத்தன் அலுவலகத்திலேயே மாத ஊதியத்துக்கு அமர்த்திக்கொண்டது.

அன்று வசந்தன், தான் புதிதாக எழுதப்போகும் தொடர் கதைக்கு முன்னதாகவே விளம்பரப்படுத்திவிட்டபடி இதுவரையில் எதுவுமே எழுதாமல் இருந்துவிட்டோமே என்பதற்காக அல்ல, இதழ் வெளிவர வேண்டிய நாள் நெருங்கிவிட்டதே என்பதற்காகத் தீவிரமாகத் தன் மூளையைச் சொரிந்துகொண்டு அமர்ந்திருந்தான், அலுவலகத்தில், அவனுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில்!

"சார்! உங்களைப் பார்க்க யாரோ ஒரு பொண்ணு!......" தலையைச் சொரிந்துகொண்டே அர்த்தபுஷ்டியுடன் அருகில் வந்துநின்றான் ஆபீஸ் பையன்.

அன்றைய, அப்போதைய அவனது மனநிலையில், அவன் யாரையும் பார்க்க விரும்பவில்லை. 'கரு' உருவாக்கியாக வேண்டும். 'பிண்டமாக'வேனும் மொத்தக் 'கரு'வையும் உருவாக்கிக்கொண்டால்தானே ஆற்றொழுக்காகக் கதையைத் தொடரமுடியும்! அதற்காகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறவேளையில், இப்படியான அன்புத் தொல்லைகளா?

"இப்ப முடியாது; நாளைக்கு வரச்சொல்லு!" என்றான் வசந்தன். பையன் போய்விட்டு, மீண்டும் திரும்பிவந்து, "நாளைக்கு முடியாதாம்; இன்னைக்கே பார்க்கணுமாம்!" என்று சொல்லிவிட்டு நின்றான்.

வசந்தனுக்கு தர்மசங்கடமான நிலை. "யாரோ ஒரு பசை! சரி, சரி அனுப்பிவை" என்று சொல்லிவிட்டு சிந்தனையில் மீண்டும் மூழ்கினான்.

சில நிமிடங்களில், "வணக்கம் சார்!" என்று சொல்லிக்கொண்டு, அழகே உருவெடுத்த ஒரு பெண், அவன் எதிரே வந்து நின்றாள்.

"வணக்கம்; உட்காருங்க"—என்றான் வசந்தன். அவள் அமர்ந்தாள்.

"என்பேரு லெட்சுமி சார்! நான் தாமோதர் தெரு, நெம்பர் நாலுலே இருக்கேன். உங்கள் ரசிகை......" என்றாள் அவள். அவளது கலகலப்பான பேச்சும், இளமைப் பொலிவும் வசந்தனைக் கவர்ந்தன.

"மிக்க நன்றி" — என்றான் பதிலுக்கு.

"போன இதழில் நீங்க எழுதியிருந்த 'ஆள்மாறாட்டம்!' — கதை ரொம்பப் பிரமாதம் சார்! நான் திருப்பித் திருப்பிப் பத்து தரம் படிச்சேன்."

"..........."

"என்ன சார் பேசமாட்டேங்கறீங்க..."

வசந்தன் அவளைப் பருகிக்கொண்டிருந்தான்.

"சார்..." அவள் குழைந்தாள்.

"பேரு என்ன சொன்னீங்க..."

“லெட்சுமி!”

“லெட்சுமி! ஏரமான பேரு! எவ்வளவுநாளா என் கதைகளைப் படிக்கிறீங்க?”

“அதென்னசார் அப்படிக் கேக்குறீங்க! எத்தனை வருஷமான்னுகேட்காமே! அஞ்சு வருஷமா படிக்கிறேன் சார்! வாரப் பதிப்பு, மாதப் பதிப்பு, தினசரி அப்படி, இப்படின்னு மாதம் பத்து ரூபாய்க்கு மேலே செலவாயிடுது சார்!...”

அவள் பெருமையாகத்தான் சொல்லிக் கொண்டாள். அவளது துருதுருப்பு வசந்தனைக் கவர்ந்தது. அவன், ‘அப்படின்னு, வருஷம் நூத்தி இருபது ரூபாய்; அஞ்சி வருஷத்துக்கு அறுநூறு ரூபாய் ஆகுதே! இப்ப என்னால இவ்வளவையும் திருப்பிக் கொடுக்க முடியாதே” என்ருன் கிண்டலாக!

“போங்க சார்! கிண்டல், எழுத்திலேதான்னு நினைச்சேன். பேச்சிலே கூட நீங்கள் பெரிய ஆளு சார்!” — என்ருள் நன்கு அவனைப் புரிந்து கொண்டவளைப்போல.

“நீங்க இப்ப படிச்சிக்கிட்டிருக்கீங்களா?”

“ஸ்கூல் பைனலை முடிச்சி, டீச்சர் டிரெயினுங்கும் முடிஞ்சு, ஆறுமாசமா மயிலாப்பூர்லே டீச்சரா இருக்கேன் சார்!”

“அப்படிங்களா...” —என்ற அவன், அவள் போய்விடமாட்டாளா என்ற நிலைக்கு வந்துவிட்டான். “அப்போ...” என்ருன் இழுத்துக்கொண்டே.

“போகச் சொல்லுறிங்களா சார், மன்னிச்சிக்குங்கோ; உங்கக் கதைங்களைப் படிச்சுப் படிச்சு, நானும் கதை எழுதக் கத்துக்கிட்டேன் சார்...இதோ பாருங்களேன்...”

கத்தைக் காகிதங்களை எடுத்து நீட்டினுள் கொஞ்சமும் தயங்காமல். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவித்தான் வசந்தன்.

“எழுத்துப் புரியுதா சார்...... இல்லேன்னு நானேபடிக்கட்டுமா?”

“வேண்டாம், வேண்டாம்! நானே படிச்சுப் பார்க்கிறேன் நாளைக்கு” என்று கைப்பிரதியை, கைநீட்டிப் பெற்றுக்கொண்டான். முத்துமுத்தான எழுத்துக்கள், அவனைக் கிறங்கச் செய்தன!

“நாளைக்கா, அதெல்லாம் முடியாது சார்! எவ்வளவு ஆசையா எழுதிக்கிட்டு வந்திருக்கிறேன்; நீங்க நாளைக்குங்கிறிங்களே”

அவள் சலித்துக்கொண்டாள். அந்தக் ‘கோணல்’ நிலையிலும் அவள் அழகு ஒளிர்ந்தது. வசந்தன் அந்த அழகைப் பருகியபடியே “இப்பவே படிக்க எனக்கு நேரமில்லே...” என்று இழுத்தான்.

“முடியாது, முடியாது, முடியாது”

அவள் துருதுருப்பு, அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. “சரி, படிச்சுப் பார்க்கிறேன்” என்று சொல்லிவிட்டு, விருவிரென்று பிரதியைப் புரட்டிப் பார்த்தான். அங்குமிங்கும் கொஞ்சம் படித்தான். படித்துக்கொண்டே ‘காலிங் பெல்’லை அழுத்தி பையனை வரவழைத்தான். ‘சார்!’ என்று முன்னதாகவே குரல் கொடுத்துவிட்டு உள்ளே வந்து நின்ருன். “ஒரு கோடோபரினும், ரெண்டு காபியும் வாங்கிக்கிட்டு வா” என்ருன்.

பையன் போய்விட்டான். அவன் போனதும் லெட்சுமி, “என்னசார்! என் கதையைப் படிச்சதும் தலைவலி வந்துட்டுதா.........” என்ருள் பரிதாபத்தோடு.

“அதெல்லாம் ஒண்ணுமில்லே... ....” என்று புன்னகைத்தான். “கதை நல்லாதான் எழுதி இருக்கீங்க.........எழுதற் ஆர்வம் ஏதோ இருக்கு; நல்ல முயற்சி எடுத்துக்கிட்டிங்கன்னு நீங்களும் எழுதலாம்” என்ருன் சாதுரியமாக.

“அப்ப இந்தக் கதை நல்லா இல்லியா சார்” – அவள் கண்கள் பனித்துவிட்டன.

“இந்தாப் பாரும்மா! சித்திரம் எழுத எழுத கையோட ஓட்டமே சித்திரமா மாறுவதைப்போல எழுத எழுததான் எழுத்தும் இனிக்கும்! நீங்க இன்னொருகதை எழுதுங்க...அது நிச்சயம் நல்லாவே இருக்கும்! எங்க பத்திரிகையிலேயே போடுறேன்” என்று பிரதியை அவளிடம் நீட்டினுன். நடுங்கும் கரங்களோடு அதைப் பெற்றுக்கொண்டே, ஏதோ தகாத காரியம் ஒன்றைச் செய்துவிட்டு நாணும் உள்ள உணர்வோடு “அப்ப நான் போயிட்டு வர்ரேன் சார்......” என்று எழுந்தாள்.

அதற்குள் காபி வந்துவிட்டது. “நான்தான் போயிடறேனே; இனிமே தலைவலிக்காதே!” என்ருள்.

வசந்தன் வாய்விட்டுச் சிரித்துவிட்டான். சிரித்துக் கொண்டே “இல்லே, இல்லே, தலைவலி இப்பதான் ஆரம்பமாயிருக்கு; நீங்களும் காபியைக் குடிச்சிட்டே போங்க” என்ருன்.

இருவரும் காபியைக் குடித்தனர். லெட்சுமி விடை பெற்ருள்.

மூன்ரும் நாள்.

“சார்!” அதே கற்கண்டுக்குரல்! லெட்சுமி வந்து அவன் எதிரே அமர்ந்தாள். “ரொம்ப ‘பிசி’யா சார்! நீங்க தொடர்கதை எழுதப் போறதைப்பத்தி அன்னைக்கு நான் பேசாமெப்போயிட்டேனே! வர்ர இதழுக்கு இன்னும் ஒரு வாரம் தானே இருக்கு; எல்லாம் எழுதி முடிச்சிட்டிங்களா சார்?”–கேட்டுக்கொண்டே கைப்பையைத் திறந்தாள்.

“ஓ, நேத்தே இந்த இதழுக்கு வேண்டியதை மட்டும் முடிச்சிக் கொடுத்திட்டேன்; நீங்க இப்பப் புதுசா எழுதின கதையைக் கொண்டுவந்திருக்கீங்களா?”

விநயத்தோடு கேட்டான் வசந்தன். “இதோ” என்று எடுத்து

நீட்டினாள் லெட்சுமி. முழுமையாகப் படித்துப் பார்த்தான். புன்னகையின் கீரல்கள் முகத்திலே படர்ந்தன.

"அதைவிட இது நல்லாஇருக்கு; இன்னொன்னு எழுதினா இதைவிடவும் நல்லா இருக்கும்; ஏதாவது தப்பு இருந்தாகூட நானே திருத்தி வெளியிடுறேன்"—என்றான்.

லெட்சுமிக்கு இப்போது அவ்வளவு வருத்தமில்லை; "அப்புறம் வர்ரேன் சார்!" என்று போய் விட்டாள்.

இப்படியாகத்தான் அவனுக்கும், அவளுக்கும் அறிமுகம் ஆனது. இன்று லெட்சுமி, எழுத்தாளர் வரிசையிலே வசந்தனுக்கு அடுத்த இடத்தைப் பெற்றுவிட்டாள். அந்த இடத்தை அவள் பெறுவதற்கு—இல்லை பெற்றுத்தருவதற்கு — வசந்தன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். பல இதழ்களுக்கும் அவளது பிரதிகளை அவனே திருத்தி, அனுப்பிவைத்து பிரசுரிக்கச் செய்திருக்கிறான். இப்படித்தான் அவள் வளர்ந்தாள் — வளர்த்துவிடப்பட்டாள்.

காலச் சுழலில் பருவம் முதிர, முதிர, லெட்சுமி, வசந்தனை நேசித்தாள். வசந்தன்மீது கொண்டிருந்த 'பக்தி' அன்பாகி, அன்பு, காதலாகக் கனிந்துவிட்டது.

ஆனால் வசந்தன் அறிவு முதிர, முதிர, லெட்சுமியின் வளர்ச்சியைப் பாராட்டினான், விரும்பினான். ஏன்?

தன்னைப்போல் எழுதும்ஆற்றலை அவளுக்கு, அவன்தான் வளர்த்து விட்டான். அவளை மட்டுமல்ல; இன்னும் பலரையும் அதுபோல் வளர்த்துவிட விரும்பினான். ஏன்?

நாட்டவர்க்கு நல்லறிவு புகட்ட, அந்த அளவுக்கு இன்னும் பலர் தேவை என்பதை அவன் உளமாற நம்பியதால்! ஒரு எழுத்தாளனது பேனாவுக்கு, மனித அறிவை ஆட்டிப்படைக்கும் சர்வ வல்லமையும் உண்டு என்பதால்!!

இந்த அளவோடுதான் வசந்தன் லெட்சுமியை வளர்த்து விட்டான்; வளர்ந்த லெட்சுமி, வளர்த்தவனை விரும்பினாள்! மனித உருவங்களைப் படைத்து, அந்த உருவங்களுக்குப் பல்வேறுபட்ட குணச் சிததிரங்களை ஏற்றி, இன்பதுன்ப நிகழ்வுகளை உண்டாக்கி 'இது வாழ்க்கை; இது அறிவு' என்று படைத்துக் காட்டும் பேரறிவு படைத்த லெட்சுமிதான், சாதாரண பெண்ணாகி நின்று, வசந்தனை வேண்டினாள்!

அவளை மண முடித்துக் கொள்ள முயன்று தோற்றவர் பலர். பெண் கேட்டு வந்த பெரிய இடங்கள் பல. என்றாலும் லெட்சுமி வசந்தனையே விரும்பினாள்!

அன்று—

"லெட்சுமி, என்றென்றைக்கும் நான் எழுத்தாளனாகவே இருக்க விரும்புகிறேன்; ஒரு எழுத்தாளன் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்கிறபோதுதான், எழுத்தாளன் என்ற சொல்லுக்கே மதிப்பு ஏற்படும் லெட்சுமி! என்னை முழுத்தகுதி வாய்ந்த ஒரு எழுத்தாளனாகவே வாழவிடு லெட்சுமி! என்னை மறந்து விடு லெட்சுமி!"

முடிவாகக் கூறினான் வசந்தன், தன் அறைதேடி வந்தவளுக்கு! இந்த உயரிய பண்பை, அவளது காமக் கண்கள் தவறாகப் புரிந்து கொண்டனவோ என்னவோ, துணிந்து அவனது கரங்களைப் பற்றிக்கொண்டு, "வசந்தன், உங்களால் உயர்ந்தவள் நான்; இந்த உடலை உங்களுக்குக் கொடுக்கவே விரும்புகிறேன்; தடை சொல்லாதீர்கள்" என்று இறுக அணைக்க முயன்றாள் லெட்சுமி!

உடல் பதறிப்போன வசந்தன், "லெட்சுமி" என்று உரக்கக் கூவினான்! பய உணர்ச்சியால் பிறக்கின்ற ஒரு வீர ஆவேசத்தால், அவளை உதறி விட்டுவிட்டு, சட்டென்று அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

வெட்கம் வேலாய்க் குத்த, அவளும் அந்த அறையைவிட்டு வெளியேறினாள்.

மறுநாள் —

லெட்சுமியின் தந்தைவசந்தனைத் தேடிவந்தார். "மிஸ்டர் வசந்தன்! என் கௌரவத்தை விட்டுவிட்டு, உங்களிடம் வேண்டுகிறேன்; நீங்களின்றி என் லெட்சுமி உயிர் வாழ மாட்டாள். அதனால்..."

"சார்!..."

"அதனால் நீங்கள் மறுக்காமல் ஒப்புக்கொள்ள வேண்டும்"

"இதில் உங்களுக்கென்ன ஆட்சேபணை இருக்கிறது மிஸ்டர் வசந்தன்?"—இப்படிக் கேட்டுக் கொண்டே ஆசிரியரும் அங்கு வந்து சேர்ந்தார்,

"நீங்களும் இதில் பங்குதாரரா?' இப்படி வசந்தன் கேட்கவில்லை; "மன்னியுங்கள் சார்......நாளைக்கு நான் பதில்சொல்கிறேன்!"—என்று சொல்லிவிட்டு, விர்ட்டென்று எழுந்து வெளியே போய்விட்டான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"மிஸ்டர் தாமு! எப்படியும் நான் சரிக்கட்டி விடுகிறேன்; அவசரப்படவேண்டாம்!" என்றார் ஆசிரியர்.

தாமு, லெட்சுமியின் தந்தை—நம்பிக்கையுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

○

"இன்றைக்கு நல்ல முடிவுக்கு வந்து விடுவான் வசந்தன்"—என்ற நம்பிக்கையோடு அன்றைய தபால்களைப் புரட்டிக் கொண்டிருந்த ஆசிரியரின் விழிகள் அகல விரிந்தன.

அந்தக் கடிதத்தைப் பரபரப்புடன் பிரித்துப் படிக்கத் தொடங்கினார் ஆசிரியர்.

"மன்னிக்கவும். இதுதான் என் நல்ல முடிவு என நம்புகிறேன். என் சேவை, இந்த உலகத்தை நல்வழிப் படுத்தவில்லையென்றும், மாறாக தீய வழிகளுக்கு வாயில் திறந்துவிட்டன வென்றும் நம்புகிறேன்; அதனால் என் பேனாவை வீசியெறிந்துவிட்டு, நான் புறப்பட்டுவிட்டேன். எங்கே என்று எனக்கே தெரியாது. வருகிறேன்...

—வசந்தன்.

கடிதத்தைப் படித்துப் படித்து ஆசிரியர் சோர்ந்துவிட்டார். "வசந்தன், உங்கள் முடிவு சரியானதல்ல! வாய்விட்டு சொன்னார். சொற்கள் உதிரவே இல்லை!

ஆண்டுகள் பத்து மாண்டொழிந்தன.

எங்கெங்கோ சுற்றித்திரிந்துவிட்டு ஒரு கிழமை ஏட்டில், மீண்டும் துணையாசிரியனாக, வேலையொன்றைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான், எழிலன் என்ற புனைப் பெயரோடு.

அன்று.

அலுவலில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான் வசந்தன். பிரசுரத்திற்காகப் பலதரப்பட்ட இளம் எழுத்தாளர்கள், பல்வேறுபட்ட உணர்வுகளைக் கொட்டி, எவ்வளவு நம்பிக்கையுடன் எழுதி அனுப்பி இருந்[illegible]ளோ, அவைகளையெல்லா[illegible]னத்தோடு படித்து,

பிரசுரிக்கத் தக்கவை, அல்லவை எனப்பிரித்து வைத்துக் கொண்டிருந்தான்.

திடீரென ஒரு மின் அதிர்ச்சி! வசந்தனின் முகம் குப்பென வியர்த்துவிட்டது. யாருடைய பிரதி இது? இலெட்சுமியா? அவளுடைய கை எழுத்தேதான்! — சற்றே அதிர்ந்த அவன், நொடியில் சமாளித்துக்கொண்டு, முற்றிலும் மிகப் பொறுமையாகவே படித்து முடித்தான்.

சிறுகதைதான். மிக நல்லகதை என்று கூறமுடியாது. சுமார் ரகக் கதைதான். லெட்சுமி பெற்றிருக்கும் புகழுக்கு அக்கதை இழுக்குதான்! என்றாலும், தன்னால் படைக்கப்பட்டவளல்லவா அவள்! அவள்பெயருக்கு இழுக்கு என்றால் ....

இன்னமும் வசந்தன், லெட்சுமியைப்பற்றிய நல்ல எண்ணத்தோடுதான் இருந்தான். கதையில் சில இடங்களில், ஏதோ சில சிறு மாற்றங்களைச் செய்து பிரசுரத்திற்கு என்று தனியே எடுத்து வைத்துவிட்டான்.

அப்போது எதிர்பாராமல் அங்கு ஆசிரியர் வந்து சேர்ந்தார்.

''மிஸ்டர் எழிலன்! இதில் லெட்சுமி எழுதிய சிறுகதையொன்று இருக்கிறது; நன்றாகப் படித்துப் பாருங்கள்; கதை அனுப்பும்படி எழுதி இருந்தேன்; எதையோ அனுப்பி இருக்கிறார்கள்'' என்றார்.

அக்கதையைப்பற்றி ஆசிரியரின் முடிவு ஒருவாறு புலனாகிவிட்டது. ''லெட்சுமியை எனக்கு நன்றாகத் தெரியும் சார்!'' என்றுமட்டும்தான் சொல்ல நினைத்தான்; ஏனோ அவளது வரலாறு முழுவதையுமே கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதோடு புகழ்பெற்ற எழுத்தாளர் வசந்தன், 'எழிலனாகி' விட்ட கதையும் இணைந்து வெளிப்பட்டது.

அனைத்தையும் கேட்டுக்கொண்ட ஆசிரியர், விரிந்து அகன்ற விழிகளை, ஒருமுறை வசந்தன்மீது பாய்ச்சிவிட்டு, ''அடுத்த தபாலிலேயே அதனைத் திருப்பி அனுப்பி விடுங்கள் மிஸ்டர் வசந்தன், சாரி, மிஸ்டர் எழிலன்!'' என்றார்.

ஆசிரியர் போய்விட்டார்; லெட்சுமியின் கதையும் திரும்ப அனுப்பப்பட்டது.

மறுவாரம் —

''ஒரு கதையைப் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ளாமல், அக்கதையில், அடித்தல் திருத்தல் போன்றவைகளைச் செய்வதற்கு எந்த ஒரு பத்திரிகை ஆசிரியருக்கும் உரிமை கிடையாது; இந்த ஒரு சிறிய விதிமுறையைக்கூடத் தெரிந்துகொள்ளாதவரா உங்கள் துணையாசிரியர்? இது துணையாசிரியர் ஒருவரது வேலையாய்த்தான் இருக்கும். ஏனெனில் ஆசிரியர் இதனைச் செய்வார் என நான் நம்பவில்லை. எனது பல ஆண்டுக் கால எழுத்துலக அனுபவத்தில் இப்படி ஒரு நிலைமை எனக்கு ஏற்பட்டதில்லை. வருந்துகிறேன்.''

—லெட்சுமி.

அலுவலகத்திற்குவந்த மொத்தக் கடிதங்களையும் புரட்டிக்கொண்டிருந்த ஆசிரியர், சிரித்துக்கொண்டே அந்தக் கடிதத்தை வசந்தனிடம் நீட்டினார்.

கடிதத்தின் கையெழுத்துக்களைப் பார்த்தவுடனேயே அது லெட்சுமியினுடையது என்பதைப் புரிந்துகொண்ட அவன், கடிதத்தைப் படித்துவிட்டுச் சிரித்துக் கொண்டான்! அப்போது வேறு என்னதான் அவனால் செய்ய முடியும்?

இரண்டு தினங்களுக்குப் பின்.

அதே ஊரில் ஒரு பாராட்டு விழா. அதுவும் லெட்சுமிக்கு— எழிலன் தலைமையில்! லெட்சுமியின் ரசிகர்கள் பலர் சேர்ந்து பட்டமளிப்பும், பாராட்டும் ஏற்பாடு செய்திருந்தார்கள்!

கூட்டம் ஏராளமாகக் கூடியிருந்தது. உயர்ந்த மேடை. ரசிகர் ஒருவர் லெட்சுமியை மேடைக்கு அழைத்து வந்து அமர்த்தினார். அவளைத் தொடர்ந்து இன்னொருவரும் அவள் அருகில் வந்து அமர்ந்தார். கைதட்டல் ஒலி எழுந்து அடங்கியது.

சில நிமிடங்களில் எழிலனும் மேடையேறி, தலைவர் இடத்தில் போய் அமர்ந்தான். கூட்டத்தினர் மீண்டும் பலத்தக் கைதட்டி ஆரவாரம் செய்து ஓய்ந்தனர்.

கால ஓட்டத்தில் முற்றிலும் உருமாறிப் போயிருந்த வசந்தனை பாவம் லெட்சுமியால் அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லை. ஏன், அவள் கூட எவ்வளவோ, அவனுக்கு எதிரிடையாக மாறிப்போய்த்தான் இருந்தாள்.

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தவர் வசந்தனைப் பல படப் பாராட்டினர். தற்போதைய எழிலன் என்ற புனைப் பெயரில், பழைய வசந்தனை உலகின் முன் வெளிப்படுத்திவிட்டார், வசந்தனின் வேண்டுகோளையும் மீறி! ஆனால், 'தலைவர், வசந்தன்'-என்ற இரு சொற்களுமே லெட்சுமியின் மென்னியை மெள்ள மெள்ள நெருக்கிக் கொண்டிருந்ததை யாருமே கவனிக்கவில்லை!

வசந்தன் லெட்சுமியின் திறமை பற்றியும், படைப்புக்கள் பற்றியும் அளவுக்கு மீறிப் பாராட்டிவிட்டு, லெட்சுமிக்கு மாலையணிவிக்கப் போனான். சிறு தடுமாற்றம்; மாலையை, லெட்சுமியே கரம் நீட்டிப் பெற்றுக்கொண்டாள். அப்போது வசந்தன் மெள்ளிய குரலில் லெட்சுமி எழுதிய அந்தக் கடிதத்தை அவள் முன்நீட்டி, தாழ்ந்த குரலில் ''நான்தான் இந்தத் துணையாசிரியன், மன்னித்து விடுங்கள்'' என்றான்.

லெட்சுமிக்கு இரண்டாவது பேரிடி! 'வசந்தன்!' என்று வாய்விட்டு அலறினாள். 'நீங்களா, நீங்களா வசந்தன் அது? என்னை மன்னித்து விடுங்கள் வசந்தன்! அந்தக்கதையை நான் எழுதவில்லை; நான் இப்போது கதையெழுதுவதே இல்லை; இதோ, இவர் என் கணவர்! இவர் எழுதுபவைகளைத்தான் நான் பிரதியெடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறேன்—என் பெயரில்! என்னை மன்னியுங்கள் வசந்தன்!! என்று சூழலையும் மறந்து அவனது கால்களில் விழப்போனவளைத் தூக்கி நிறுத்தினான் வசந்தன்.

''நான் கதைகள் எழுதுவதில்லை; கணவரின் கதைகளைத்தான் பிரதியெடுத்து அனுப்புகிறேன் என்பெயரில்''

இச்சொற்றொடர்கள்வசந்தனின் உள்ளத்தில் வேல் பாய்ச்சுவது போலிருந்தது.

லெட்சுமியின் கணவர் வசந்தனைப் பார்த்து ''நாம் அனைவருமே ஆள்மாறாட்டம் செய்திருக்கிறோம்! அதன் விளைவு இது'' என்றார் தொங்கிய முகத்தோடு.

கூடியிருந்த கூட்டம் விஷயம் புரியாமல் விழித்தது. அதனை ஏற்பாடு செய்திருந்தவரும் ஒன்றும் புரியாமலேயே நன்றி கூறி முடித்தார்!

❋

மலர்க்கண்கள்

புலவர் பொன்னிவளவன்

கொத்துமலர் கொய்வதைப்போல் வெட்டித் தள்ளிக்
குலைகுலையாய்ப் பனங்காயைச் சீவு தல்போல்
கத்தியினால் உயிர்கொய்து தலைகள் சீவிக்
கலிங்கர்களைக் கலங்கவைத்த அசோகன், பின்னர்
யுத்தவெறி ரத்தவெறி! பிறந்த மக்கள்
உயிர்கொல்லும் விளையாட்டு எதற்கு! என்று
புத்தமதப் புத்திமதி பெற்றுக் கொண்டான்!
புதுவாழ்வில் பொதுவாழ்வின் இன்பம் கண்டான்!

என்மகளாம் சாருமதி தன்னை இன்னும்
என்மகனும் தர்மவிவர்த் தனனைக் கட்டிப்
பொன்னாலும் பட்டாலும் மணிக ளாலும்
புதியபல பொருளாலும் அலங்க ரித்து
அன்பாலே குளிப்பாட்டித் திரும ணத்தை
ஆர்ப்பாட்ட மாய்நடத்த வேண்டும்! ஆனால்
என்போன்ற கிழவனுக்கும் இன்ப ஆசை
இதயத்தில் இருக்கிறதே! என்ன செய்வேன்?

அரைத்துவைத்த சந்தனத்தை நிறத்தால் வெல்லும்
ஆரணங்கு என்மனைவி அசந்தி மித்ரை
இறைத்துவிட்ட பாதரசம் போல்தி ரட்ட
இயலாத பொருளானாள்! செத்துப் போனாள்!
நரைத்துவிட்ட தென்மீசை! உண்மை! ஆனால்
நரைக்கவில்லை என்ஆசை! உலகை விட்டு
மறைத்துவிடும் சாவின்முன் இன்னொருத்தி
மாப்பிள்ளை ஆவேன்நான்! மணந்து கொள்வேன்!

இவ்வாறு நினைத்திட்டான் அசோக மன்னன்!
எதிரினிலே சாருமதி நின்றி ருந்தாள்
எவ்வளவோ பேர்தலையை வணங்க வைத்து
இசைபெற்றோன் மகள்முன்னாள் தலைவ ணங்கி
ஒவ்வாத செயல்செய்ய இருக்கும் செய்தி
உச்சரித்தான்! 'இதுதானா ஒழுங்கு? நீதி?
எவ்வாறு நடக்கும்இது எனநி னைத்து
எதிர்க்கேள்வி போடாமல் மகளும் சென்றாள்!

புத்தமதப் பழம்பாட்டுச் சுவடி தன்னில்
புதைத்தவிழி நிமிர்த்தாத அண்ண னைப்போய்ச்
சத்தமிட்டுக் கூப்பிட்டாள்! தலைநி மிர்ந்தான்!
"சாருமதி யா?" என்றான் அண்ணன் "ஆமாம்!
சித்திவரப் போகின்றாள் உனக்கெ னக்குச்
சீக்கிரமாய்! என்றுரைத்தாள் அன்புத் தங்கை!
"பித்துபிடித் திருக்கிறதா உனக்கு" என்றான்.
"பிதற்றலல்ல; உண்மைஇது!" என்றாள் மங்கை!

"திருமணப்பெண் யார்?" என்றான். "அந்தப் பெண்தான்
திஷ்யரட்சி தை" என்று சொன்னாள் தங்கை!
விருப்பம்போல் நடக்கட்டும்! தடுத்து நிற்கும்
வேலையெல்லாம் நமக்கெதற்கு! போ!போ!" என்றான்
கருங்குயில்போல் பாட்டிசைத்து, நீல வானக்
கடல்வெளியில் நிலாப்பந்து மிதந்த நாளில்
"வருவாயா எனைமருவ?" என்று கேட்டு
"வம்பிழுத்த அப்பெண்ணா?" எனநி னைத்தான்.

விவர்த்தனன்மேல் அவளுக்குக் காதல்! ஆனால்
விவர்த்தனனோ அவள்காதல் ஏற்க வில்லை!
அவள்இவனை விடுபவளாய் இல்லை! புத்த
ஆலயத்தில் நித்தநித்தம் கண்ணால் கொன்று
கவலைதனைத் தந்துவந்தாள்! ‘இனிமேல் அந்தக்
கவலைக்கே இடமில்லை! அப்பா வுக்கு
அவள்மனைவி! என்அன்னை! இந்த நாட்டை
அரசாளப் போகின்ற புதிய ராணி!

மோதாது அவள்காதல் என்னை! அந்த
முறைகெட்ட செயல்இனிமேல் நடந்தி டாது!
காதலெனும் சங்கிலியால் என்னைப் போட்டுக்
கட்டிவைக்க முடியாது!’ எனநினைத்தான்.
நீதிநெறி போதிக்கும் அந்த நூலை
நெஞ்சுக்குள் குடியேற்றும் மனப்பா டத்தில்
மீதியுள்ள நேரத்தை ஓட வைத்தான்!
மெதுவாகத் தன்யாழைப் பாட வைத்தான்!

நடைபெற்று முடிவுற்ற திரும ணத்தை
நாட்டினர்கள் பலவிதமாய்ப் பேசித் தம்வாய்
அடைபட்டுக் கண்உறங்கும் இரவு நேரம்
ஆனந்த நிலாப்பவனி நடக்கும் வேளை
சுடர்விட்டுக் கொண்டிருக்கும் விளக்கின் முன்னால்
சுவடிதரும் பாட்டுதனைத் தனது நெஞ்சில்
படம்பிடித்துக் கொண்டிருந்தான் அரச மைந்தன்
பணி ஆளில் அங்கொருவன் வந்து நின்றான்.

“அந்தரங்க அறைப்பக்கம் ராணி யம்மா
அழைத்தார்கள்!” எனச்சொன்னான் வந்து நின்றோன்.
“இந்தா! பார்! நள்ளிரவில் அழைப்பா? மாட்டேன்!
இப்போது முடியாது எனச்சொல்!” என்றான்.
வந்தவனும் போய்ச்சொன்னான். அதற்குப் பின்னால்
வடிவழகிப் பேரரசி வந்து நின்றாள்.
“சுந்தரனே!” என்றழைத்தாள். திரும்பிப் பார்த்தான்
சுடர்விழியில் காமத்தை மிதக்க விட்டாள்!

“தீண்டாத புதுப்பண்டம்! உனது தந்தை
தேகத்தைத் தொட்டறியாப் புதிய மங்கை!
வேண்டாத எட்டிக்காய் அல்ல! கட்டி
வெல்லம்நான்! என் அழகால் உனைம யக்கித்
தூண்டும்வரை ஏன்காத்துக் கிடக்க வேண்டும்!
துய்த்திருக்க வேண்டாமா புதிய இன்பம்?
மாண்டிடட்டும் நம்துயரம்! நமது நெஞ்சில்
மலரட்டும் புத்துணர்ச்சி! காதல் போதை!

“ஒருமுத்தம் தா!” என்றாள்: “மாட்டேன்” என்றான்
“உன்மீதே என்காதல்!” என்றாள் “கொஞ்சம்
இருங்கள், நீர் எதைக்கண்டு காதல் கொண்டீர்
என்னிடத்தில்!” எனக்கேட்டான் “உனது நீலத்
திருவிழிகள்-மலர்க்கண்கள் எனது நெஞ்சைத்
திருடிற்று!” என்றுரைத்தாள்; உடனே சொந்தக்
கருவிழியைக் கட்டாரி கொண்டு குத்திக்
கதறலுடன் இளவரசன் தரையில் சாய்ந்தான்!

வீட்டிற்கும் வியாபாரத்திற்கும்

வரும் விருந்தோம்ப.....

வாய்க்குச் சுவையான

சிற்றுண்டிகள் தயாரிக்க.....

லோட்டஸ் சேமியா

வாங்குங்கள்.

லோட்டஸ் சேமியா கம்பெனி,

81, G. A. ரோடு, சென்னை-21.

நீடித்த உழைப்பிற்கும்
நவ நாகரீக
ரெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்தது

கிராண்ட் டிரஸ்ஸஸ்

Grams: GRANDRESS

Manufacturers:- GRAND DRESSES
160, ADAM SAHIB St, MADRAS-13

சென்னை முழுவதும் எல்லா கடைகளிலும் கிடைக்கும்

Tele: GRANDRESS Phone: 51716

Baba Suits,

Jeen Suits,

Pyjama Suits,

Frocks,

Slacks,

Rompet,

Etc, Etc.

தேவைக்கு வியாபாரிகள் தொடர்புகொள்ளவும்.

20, Godown Street
2 nd Floor, MADRAS I.

அனைத்து நாடுகளின் கவனத்தையும் பெற்ற 'நியூயார்க்டைம்ஸ்' நாளிதழின் முதல் பக்கத்தில் பெயருக்கும் வலது புறத்தில் "அச்சுக்குத் தகுதியான எல்லாச் செய்திகளும்" (All the news that is fit to print) என்ற குறிக்கோள் இடம் பெற்றிருக்கும். செய்திக்கு அவர்கள் அளிக்கும் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது இச் சொற்கள்.

அச்சுக்குத் தகுதியான எல்லாச்செய்திகளையும் போட்டு விடுவதிலேயே நாளிதழ்களின் கடமை முடிவடைந்து விடுவதில்லை. தகுதியுள்ளவற்றையும் எந்த வகையில்பிரசுரிக்கின்றன என்பதில்தான் பத்திரிகைகளின் தரம்" என்ற பிரச்சினை முடிந்து "கடமை" என்ற உணர்வே தோன்ற ஆரம்பிக்கிறது.

இராமாயண காவியத்தில் கம்பன் அநுமானை "கண்டேன் சீதையை" என்று கூறவைத்திருப்பது பக்தர்களின் வாதத்துக்கு அல்ல; இலக்கிய கர்த்தாக்களின் சிந்தனைக்கும் இரசனைக்கும் கையாண்ட ஒரு முறை. அநுமான் இலங்கைப் பயணத்திலிருந்து திரும்பினான்; இராமனைக்கண்டு வணங்கி நின்றான்; அசோகவனம் சென்றதாகவும் அங்கே குறிப்பிட்ட ஒரு அந்தப்புற மரத்தடியில் சீதையைக் கண்டதாகவும்" கூறச் செய்திருக்கலாம். முடியாததல்ல; விரும்பாதது. நிலைமைக்கேற்ப இரண்டே சொற்களில் அதுவும் முன்பின் முக்கியத்துவத்தை மேலும் உணர்த்தி எழுதியிருப்பது காரணத்தோடுதான்.

இந்தப் பின்னணியுடன் மீண்டும் பத்திரிகை உலகுக்கு வருவோம். "என்ன நடந்தது?" என்று கற்பனைக்கும் எட்டாத பதட்டத்தில் கேட்பவனிடம் கற்பனையில் மட்டுமே நினைக்கக் கூடிய பொறுமை உணர்ச்சியுடன் "என்னவா? சொல்கிறேன் கேள்! அதாவது...! என்று கூற ஆரம்பிப்பது நேரத்துக்குப் பொருத்தமில்லாத முறை.

'சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் துரிதவண்டி விருத்தாசலம் அருகே விபத்துள்ளாகி 100பேர் இறக்கின்றனர்;200பேர்காயமடைகின்றனர். நாசவேலை காரணமென நம்பப்படுகிறது. இது ஒரு நிகழ்ச்சி எனக்கொள்வோம். இதையே இருவகையாகப் பிரசுரிக்கலாம்.

100 பேர் உயிரிழப்பு; 200 பேருக்குக் காயம்

நாசவேலை கரரணமாக இரயில் விபத்து

விருத்தாசலம் அருகே திருவனந்தபுரம் துரித வண்டி தடம் புரண்டது.

இது ஒரு வகை; இதோ மற்றொரு வகை

சென்னை திருவனந்தபுரம் துரித வண்டி

விருத்தாசலம் அருகே தடம் புரண்டது.

200 பேர் காயம்; 100 பேர் மரணம்!

நாசவேலை காரணமாக இருக்குமோ?

திரும்பத் திரும்பப் படித்தால் இரண்டு வகை பிரசுரங்களிலும் உள்ள "இடம்" "சொல்" மாறுபாடு நன்கு தெரியவரும். செய்திகளைத்தவறாகவெளியிடுவது எவ்வளவு புறம்பானதோ அந்த அளவு பொருத்தமில்லாததுசெய்திகளின் சாராம்சத்தைத்தலைப்புகளில் தெரிய வைக்காத தன்மையும். மேலே கொடுக்கப் பட்டிருப்பது மக்களைப் பொதுவாக எளிதில் புரிய வைக்கும் ஒரு உதாரணம்.

தலைப்புகளை அடுத்துவரும் பத்திகளில் முழுச் செய்திகள் ஒரே மாதிரியாகவருகிறதே; தலைப்புகளை மாற்றித் தருவதில் என்ன வேண்டாதன விளைந்துவிடும் என்றுகேட்கலாம். செய்திகளைப் படிக்குமுன் தலைப்புகள் தான்படிப்பவரைக்கவர்வன; அவை உள்ளடக்கியிருக்கும் மொத்தக் கருத்து வாசகர்களைப் பின்னால்வரும் செய்திகளுக்கேற்றவாறு மாற்றும் இயற்கைச்சக்தி படைத்தவை. அல்லது முழுச்செய்திகளும் படிக்க நேரம் இல்லாதவர்கள்-பழக்கம் அற்றவர்கள்-பொறுமை வாய்க்கப் பெறாதவர்கள் தலைப்புகளின் மொத்தக் கருத்தினை நம்பிச் செல்லும் போக்கினராக இருப்பார்கள். இதுபோன்ற சூழ்நிலைகளில் தான் செய்தித் தலைப்புகளின் முக்கியத்துவம் உணரப்படும். உதாரணத்துக்குச் சில காண்போம்.

அண்மையில் வியட்நாம் பிரச்சினைக்கான ஏழு அம்சத்திட்டத்தைக் கொண்டு சென்ற இந்திரா கெய்ரோ, பிரியோனி என அடுத்தடுத்த இடங்களில் ஆதரவு கிடைக்கப் பெறாமல் கடைசியாக மாஸ்கோவிலும் தோல்வியே பெற்றதை ஏறக்குறைய எல்லா நாளிதழ்களுமே "இந்திராவுக்கு மாஸ்கோவிலும் தோல்வி" "இரஷ்யா இந்தியாவின் திட்டத்தை ஏற்கவில்லை" "இந்தியப் பிரதமருக்கு சோவியத் யூனியனிலும் தோல்வி" என்று பல வகைகளில் முக்கிய இடமும் முதல் முக்கியத்துவமும் கொடுத்து பிரசுரித்தபோது ஒரே ஒரு இதழ் மட்டும் இந்தச் செய்தி உள்ளடக்கிய தலைப்பைக் கடைசியில் தள்ளி அதைப்புறக்கணிக்கும் வகையில் "இந்திரா சீனாவைக் கண்டிக்கிறார்——வியட்னாமிய :குழப்பத்துக்கு பீகிங் காரணமென்கிறார்-அமைதி வழியில் தீர்வுகாண யோசனை" என்ற மற்ற செய்திகளைப் பெரிதுபடுத்தியது.

இது இட முக்கியத்துவம் தருவதன் மூலம் மட்டுமே செய்தியின் முக்கியத்துவத்தைக் காட்டியும் குறைத்தும் வெளியிடும் போக்கு. செய்தியின் கருவையே தலைப்பின் மூலம் "பதப் படுத்தி" குறைகளைக் களைந்து வெளியிடுவதும் ஒரு வகை கடமை உணர்வற்ற செயல்தான்.

உதாரணமாக நாணய மதிப்புக் குறைப்புப் பிரச்சினையில் அரசு தகுந்த பின்விளைவு நடவடிக்கைகள் (Follow up Measures) எடுக்கவில்லை என்பது பற்றிக் காங்கிரசுப்பாராளுமன்றக் கட்சிக்கூட்டத்தில் பல உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துப் பேசி

னார்கள். இச் செய்தியை சென்னையைச் சேர்ந்த இரு ஆங்கில நாளிதழ்கள் பின்வருமாறு பிரசுரித்தன.

நாணய மதிப்புக்குறைப்பை அடுத்து மாற்று நடவடிக்கை எடுக்கத் **தவறிய அரசுக்கு ஆளும் கட்சி** உறுப்பினர்கள் **வருத்தம்.**

இது ஒரு இதழின் செய்தித் தலைப்பு; உண்மையை உள்ளடக்கியவைகள். இதோ மற்றொரு நாளிதழின் மாற்றத்தைப் பாருங்கள்:

நாணய மதிப்புக்குறைப்பை அடுத்து மாற்று
நடவடிக்கைகள்
காங்கிரஸ் எம். பிக்கள் **யோசனை.**

எத்துணை பலத்தவேறுபாடு:என்பது புரிகிறதா? புதுடில்லிச் செய்தியை இரண்டாவதாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் தலைப்புச் செய்தி எப்படி பூசி மெழுகி மறைத்திருக்கிறது எனத் தெரிகிறதா?

அரசின் தவறு; அது ஆளும் கட்சி உறுப்பினர்களையே உறுத்துகிறது; கண்டிக்கின்றனர். இந்த உண்மையை அந்த இதழ்த் தலைப்பில் எப்படி மாற்றி விட்டது என்பதைக் கண்டீர்களா?

அடுத்து மூன்றாவது வகையொன்றைக் காண் போம். "மனைவியை அடிப்பதை நிறுத்திவிட்டாயா?" என்று ஆங்கிலத்தில் ஒரு வேடிக்கைப் பழமொழி உண்டு. திடீரென்று ஒருவனிடம் போய் இப்படிக் கேட்டால் என்ன செய்வான் அவன்! அடிக்கும் பழக்கம் உள்ளவன் என்பதைக் கேள்வியிலேயே தேக்கி யிருப்பதால் உண்டு என்றாலும் ஆபத்து; இல்லை என்றாலும் இன்னும் வேதனை.

அதைப்போல காலையில் நாளிதழைப் பார்த்ததும் கொட்டை எழுத்துக்கள் தெரியும். "எதிர்க்கட்சியின ரின் தகாத குற்றச்சாட்டுக்குப் பிரதமர் கண்டனம்!" என்று தலைப்பு இருக்கும். எதிர்க்கட்சியினரின் — அது தகாதது என்றாலும் — குற்றச்சாட்டு என்ன என்பதை ஏழாம் பக்கத்தின் எட்டாம் கலத்திலாவது போடாத இதழாக இருக்கும், அந்தப் பத்திரிகை! ஆனால் பிரதமரின் மறுப்பு மட்டும் முதல் பக்கத்தில் 'பானராக' மின்னும்! எதிர்க்கட்சியினர் சொல்லி யதையும் முதல்நாள் போட்டு அதற்கு அமைச்சர் சொல்லியதையும் மறுநாள் வெளியிட்டிருந்தால் அது சரி. விதை நடும்போது எங்கோ இருந்துவிட்டு அறுவடையின்போது மட்டும் அரிவாளை எடுத்துக்கொண்டு வருவதில் என்ன நியாயம் இருக்கும்? திடுமென "எதிர்க்கட்சியினரின் தகாத போக்குக்கு அமைச்சர் கண்டனம்" என்றால் அத்தலைப்பையும் திடீரென நோக்குபவர்களுக்கு "ஓகோ! காலமெல்லாம் தகாத போக்கில் போவதே இவர்களது தொழில் போலிருக் கிறது; போகிறது; இன்றாவது அமைச்சர் கண்டித் தாரே" என்றுதான் நினைப்பர்.

அடுத்ததாக மற்று மொரு வகை: நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு வந்துவிடுகிறது. குழாயடிகளில் கியூ வரிசை; வீட்டில் குழாய் வைத்திருப் பவர்களுக்கும் நீர் சரிவர வருவது இல்லை; இதை எப் படியெப்படி பிரசுரிக்கலாம் என்பதைக் காணுங்கள்.

பருகும் நீருக்கும் பஞ்சம்
நகரில் குழாய்த் தண்ணீர்த் தட்டுப்பாடு,
கியூ வரிசைகளில் மக்கள் அவதி,

இது ஒருவகை. இதோ மற்றொரு வகை.

குழாய் நீர் போதிய அளவு இல்லை;
மக்கள் காத்து நின்று பெறுகின்றனர்.
வீடுகளும் ஓரளவுக்குப் பாதிப்பு.

'பருகும் நீருக்கும் பஞ்சம்' என்ற தலைப்பு ஏற் கனவே பல முக்கியத் தேவைகள்பற்றாக் குறையில் இருக்கின்றன என்பதைச் சொல்லாமல் சொல்கிறது. 'குடிநீர் போதிய அளவு இல்லை' என்ற தலைப்பு அவை யனைத்தையும் திரையிட்டு மறைக்கிறது.

இவ்வளவு உதாரணங்களும் அனைவராலும் படிக் கப்படும் பொறுப்புள்ள — மூத்த — செல்வாக்குள்ள நாளிதழ்களிலிருந்து திரட்டப்பட்டவை. இதுபோல் வகைக்கு ஒன்றாக எடுத்துக்காட்டுகளை நீட்டிக் கொண்டே செல்லலாம். அந்த அளவுக்கு இத்தகைய போக்குகளைப் பிறவிப் பழக்கமாக இரத்தத்தோடு உறைந்த உணர்வாகக் கொண்டிருக்கின்றன ஒருசில பெரிய இதழ்கள்.

இது எல்லாம் ஒருபுறமிருக்க, கருவைவிட்டுவிட்டு சக்கையை மட்டும் எடுத்து வண்ணம் பூசுபவை — நிகழாததை நிகழ்ந்ததாகக் காட்டுபவை — வடைகளைத் தின்னாமல் அதில் உள்ள துளைகளை எண்ணுபவை — பார்க்கவந்ததை மறந்து பக்க விளைவு (Side Lights) களில் சிந்தை செலுத்துபவை — ஆகிய பலவகைகளில் மட்டுமே தலைப்பு வெளியிடும் இதழ்களும் உண்டு. அவையெல்லாம் இங்கு உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவே இல்லை.

அத்தகைய ஏடுகளை நீக்கிப் பொதுவாக பொறுப் புள்ளவை என அனைவரும் ஒப்பும் பெரும்பாலான இதழ்கள் செய்தியின்கருத்தைத் தலைப்புகளில்உள்ளது உள்ளபடி காட்டுவதில் வளர்ச்சி பெறவில்லை என்று கூறுவதற்கில்லை; பண்பாட்டு முதிர்ச்சி பெறவில்லை.

இந்திய நாளிதழ்கள் பலவும் செய்திகளுக்குத் தலைப்புத்தயார்செய்யும்போது மேற்கண்டபோக்குகள் பற்றி இங்கிலாந்தின் புகழ்பெற்ற பத்திரிகை ஆசிரியர் ஒருவர் செய்தித்தாள்கள் பற்றிய தனது புத்தகம் ஒன்றில் ஒரு அத்தியாயத்தையே ஒதுக்கி குறைபாடு களைத் தெரிவித்துள்ளார்.

-செய்தியின் மையக்கருத்தைப் பிரதிபலிக் கச்செய்யாமல் தலைப்புகளில் ஒளிவு – மறைவு - திரிப்பு–தாக்குதல் போன்றவற்றைக் காட்டுவது பத்திரிகைக் கலைக்குப் புறம்பானது என்கிறார். பத்திரிகா தர்மம் அற்ற செயல் என்பதுகூட அதற்குப் பின்னர்தானாம்!

செய்தித்தாள் உலகம் பொறுப்புக்கள் பல பெற்றது என்பது மட்டுமல்ல; நீதி, மருத்துவம் போன்ற புனிதமான ஒரு துறையும்கூட. இத்துறை யில் இயந்திரம்போன்று இயங்கவேண்டும் என்று கூறப்படுவது உண்மைதான்: ஆனால் இதயம் இல்லா மல் இருக்க வேண்டும் என யாரும் கூறியதாகத் தெரியவில்லை.

❋

"திராவிட பூமி"

(தி. மு. க. கேரள கமிட்டி வெளியிடும் மலையாள வார இதழ்)

தென்னக மக்களின் அவலநிலையை எடுத்துக் காட்ட குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட கேரளத்தின் குரலை வெளிக்காட்ட பவனி வரும்

"திராவிட பூமி"

1966 செப்டம்பர் மாதம் அறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையில் வெளியிடப்படும்.

ஆசிரியர் குழு :

M. N. புருசோத்தமன், M. A.,

M. A. மசூது,

H. M. சாலி.

விபரங்களுக்கு :

"திராவிட பூமி"

(மலையாள வார இதழ்)

திருவனந்தபுரம் 8, : : கேரளா.

பைந்தமிழ்க் கல்லூரி,

நேருஜி நகர், திருச்சி ரோடு, திண்டுக்கல்

மாணவ, மாணவியர் தேவை!

தமிழ் ஆசிரியராகச் செல்ல விரும்புகின்றவர்களும், பயிற்சிப் பள்ளிகளில் இடம் கிடைக்காது வருந்துகின்றவர்களும், S. S. L. C. faild அல்லது Completed அல்லது அதற்குக் கீழான எந்தப் படிப்பு உள்ளவர்களாக இருந்தாலும் இங்கு புகுமுக வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெற்றுத் தமிழ் ஆசிரியர்களாகி B. A. B. T. மாத வருமானம் அடையலாம். வெளியூர் மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயில குருகுலங்கள் உண்டு.

இந்த ஆண்டு வீணாகாமல் தடுக்க நேரில் வந்து சேர்ந்து கொள்க:-

முதல்வர் (Principal)

வித்துவான். இரா. இளையநம்பி.

துணை முதல்வர்:-

பண்டிதை. நாகலக்குமி அம்மையார்.

பேராசிரியர்:-

வித்துவான். திருஞானசம்பந்தனார்,

மேலாளர் & காவலர்:-

திரு. R. பாக்கியம்.

தந்தி: வெண்சங்கு தொலைபேசி: 108

தமிழ்நாட்டில் தனிச் சிறப்புடையது

வெண்சங்கு சீயக்காய்த்தூள்

மணத்தில் சிறந்தது

செல்வம் ராணி & சேகர் பத்திகள்

உருசியில் சிறந்த

வெண்சங்கு மார்க்கு சேமியாவை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

S. பெத்தண்ண நாடார்,

வெண்சங்கு தொழிற்சாலை,

கீழவாசல், தஞ்சாவூர்.



தமக்கு உரிய இடத்தில் பிறர் நுழையாது தடுத்திட **முள் வேலி** போடுகிறார்கள். இடத்துக்குப் போடப்பட்ட முள்வேலியைப் பற்றிய கதை அல்ல இது; இதயத்துக்குப் போடப்பட்டுவிடும் முள்வேலி பற்றியது; கருத்துக்களின் தோற்றம், மாற்றம், வகை, வடிவம், விளைவு, அவை ஏற்படுவதற்கான சூழ்நிலை ஆகியவை பற்றிய விளக்கமளிக்கும் இலக்கியம். 'மனிதத் தன்மை'யின் புனிதத்தை விளக்கிடும் தூய்மைமிக்க கருத்தோவியம்.

கருமேகங்கள் திரண்டுள்ள காட்சியைத் தீட்டிட திறமை மிக்க எந்த ஓவியனாலும் முடியும்.

பால் நிலவு அழகொளி தந்திடும் காட்சியினைத் தீட்டிடவும், கைத்திறன் மிக்க ஒரு ஓவியனால் முடியும்.

ஆனால் கருமேகங்கள் திரண்டிருப்பதால் காரிருள் கப்பிக் கொண்டிருக்கும் காட்சியுடன் ஓர் புத்தொளி மெள்ள மெள்ளக் கிளம்புகிறது என்பதனையும் இணைத்தளித்திட கைத்திறன் மட்டும் போதாது, கருத்துத் திறனும் இருந்திட வேண்டும், ஓவியனுக்கு.

கெட்டவனைக் காட்டிடுவது எளிதான காரியம், ஓரளவு திறமை பெற்ற எழுத்தாளனுக்கு.

நல்லவனைக் காட்டிடும் எழுத்தோவியம் தந்திடுவதும் எளிதுதான் தரமான எழுத்தாளனுக்கு.

ஆனால் 'கெட்டவன்' நல்லதும் எண்ணுகிறான், செய்கிறான் என்று காட்டிடவும், நல்லவனிடம், புற்றுக்குள் அரவு போல கெடு நினைப்போ செயலோ இருந்திடுவதைக் காட்டிடவும், எழுத்தாளனாக மட்டும் இருந்தால் போதாது, எண்ணங்களை ஆள்பவனாகவும் இருந்திடவேண்டும்.

எளிதான காரியம் அல்ல என்பதுடன், ஒரு துளி தவறினால், அத்தகைய முயற்சி, ஆபத்தையேகூட மூட்டிவிடக் கூடும், படிப்போரின் உள்ளத்தில்.

இந்தச் சூழ்நிலையில், இவன் இப்படித்தான் எண்ணியிருப்பான் இவ்விதம்தான் செய்திருப்பான், என்று 'யூகித்து' எழுதுவதிலேயே தவறுகள் நேரிட்டு விடுகின்றன.

சூழ்நிலை காரணமாக ஏற்பட்டுவிடும் எண்ணத்திலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு, முற்றிலும் வேறான, ஆனால் தூய்மையான எண்ணத்தை ஒருவன் கொண்டிருந்தான் என்பதை எடுத்துக் காட்டும் எழுத்தோவியம் தீட்டித் தருவதனை எல்லா எழுத்தாளர்களும் மேற்கொள்வதில்லை; ஆபத்தான முயற்சி என்ற காரணத்தால்.

ஆனால் சிற்சிலர், தனித் திறமை பெற்றோர், இத்தகைய எழுத்தோவியம் தருகின்றனர்; இறவாப் புகழுக்கு உரியராகின்றனர்.

இரும்பு முள் வேலி

பகைவனிடம் கோபமும் கொதிப்பும், வெறுப்பும் எழுவதும், வஞ்சந்தீர்த்தாக வேண்டும் என்ற எண்ணம் வெறிஅளவு ஓங்குவதும் இயல்பு.

ஆனால் பகைவனிடமும் பரிவு எழுகிறது--எழ முடியும்—என்று எடுத்துக்காட்ட மிகச் சிலருக்கு மட்டுமே முடியும்—அது பொது இயல்புக்கு மாறானது; உலகில் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டுள்ள முறைக்கு முரணானது. எனவே தான் அதனை எடுத்துக் கூறுவதற்குத் தனியானதோர் திறமை தேவைப்படுகிறது.

நம் நாட்டினை வேறோர் நாட்டினர் தாக்கிடும்போது—போர் மூண்டிடும்போது, நாட்டுப் பற்று எனும் உணர்ச்சிதான், மற்ற எந்த உணர்ச்சியையும்விட, மேலோங்கி நிற்கிறது.

நம் நாடு தாக்கப்படுகிறது! நமது தன் மானம் தாக்கப்படுகிறது!! என்ற எண்ணம், உள்ளத்தை எரிமலையாக்குகிறது; வெடித்துக் கொண்டு கிளம்புகிறது, கோபம், கொதிப்பு, வெறுப்பு, பழி வாங்கும் எண்ணம், பகைவனை அழித்தொழித்தாக வேண்டும் என்ற துடிப்பு.

போர் மூண்டிடாதபோது எவையெவை 'வெறி' என்று கருதப்படுமோ அவை யாவும், தேவைப்படுவனவாக, வரவேற்கப்படுவனவாக, போற்றப்படுவனவாக ஆகிவிடுகின்றன.

“இப்படியா இரக்கமின்றி அடிப்பது. அவனும், பாவம், மனிதன் தானே” என்று மனம் உருகிப் பேசிடும் நல்லோர்கூட, மெல்லியலார் கூட, “சுட்டுத் தள்ளவேண்டும்! வெட்டி வீழ்த்த வேண்டும்! பூண்டோடு அழிக்க வேண்டும்!” என்று பேசுகின்றனர் — போர் மூட்டிவிடும் வெறிஉணர்ச்சி காரணமாக! அந்த உணர்ச்சியை வெறி என்றுகூடக் கூறிடத் துணிந்திடார்! கவிதைகள் இயற்றப்படுகின்றன, அந்த 'எழுச்சி' பற்றி.

நாடு வாழ்ந்திட எதனையும் செய்திடுவேன்! — என்ற பேச்சுக்குப் பெரியதோர்மதிப்புக் கிடைக்கிறது. எதனையும் செய்திடுவேன்! படுகொலைகள்கூட! பச்சிளங் குழந்தைகளைக் கொன்றிடும் பாதகம் கூட! போர்க்காலத்தில் “கொல்லு! இல்லையேல் கொல்லப்படுவாய்!” என்பதுதான் ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்கணம்—போரிடும் இரு நாடுகளிலும்!

ஒரு நாடு மற்ற நாட்டின்மீதே எல்லாப் பழிகளையும், எல்லா கெடு நினைப்பினையும் ஏற்றிவைக்கும்; காட்டுமிராண்டிகள்! கொலைபாதகர்கள்! வெறியர்கள்! மனிதமாண்பு அறியாதவர்கள்! — என்று கண்டனக் கணைகள் கிளம்பிடும், இரு புறமுமிருந்து.

போர் ஓய்ந்து, ஓர் புது உறவு ஏற்பட்ட பிறகுதான், உண்மை வெளியே தலைகாட்டும், தைரியமாக! போர்துவங்கியதும், உண்மை ஓடி ஒளிந்து கொள்கிறது.

வெறி பிடித்தலையும் சிலரால் மூண்டது இந்தப் போர் என்று, போர் ஓய்ந்த பிறகுதான் பேசப்படும்—போர் நடக்கும்போது அந்த நாட்டு மக்கள் அனைவரையுமே வெறியர்கள், காட்டுமிராண்டிகள், இரத்தம் குடிப்பவர், பிணம் தின்பவர், கற்பழிப்பவர், கயவர் என்றுதான் பேசுவர்—ஒருவர் தவறாமல்.

யாரேனும் ஒருவர் இவ்விதம் பொதுப்படையாக ஒரு நாட்டு மக்கள் எல்லோரையும் மொத்தமாகக் கண்டிப்பது முறை அல்ல என்று கூறிடின், அவனுடைய நாட்டுப் பற்று பற்றிய பலமான ஐயப்பாடு எழும்; அருவருப்பு கிளம்பும்; அவன் 'தேசத் துரோகி' ஆக்கப்பட்டு விடுவான்.

தேசத்துரோகி-நாட்டைக் காட்டிக் கொடுப்பவன்—எதிரிக்கு உளவாளி-எதிரியைவிடக் கொடியவன்—இழிமகன் — என்றெல்லாம் அவன் கண்டிக்கப்படுவான்; தனது நிலைமையை விளக்கிட அவன் முனைந்தாலோ, மக்களின் ஆத்திரம் மேலும் வளரும்; அவனை வெட்டி வீழ்த்திடக் கிளம்புவர்.

இந்தக் கரத்தால்—இந்த வாள் கொண்டு — பகைவர் இருபதின்மரைக்கொன்றேன்.

துரத்தினேன்! அவன்ஏற்கனவே அடிபட்டவன், ஆகவே வேகமாக ஓடிட முடியவில்லை. களத்திலே இருள் கப்பிக்கொண்டிருந்தது. படை கிளப்பிய தூசியால்! எதிரில் யானை விரண்டோடி வருவது அவன் கண்களில்படவில்லை — சிக்கிக்கொண்டான்; காலின் கீழ் போட்டு...ஆ! என்றான் ஒருமுறை ...ஒரே ஒரு முறை...பிறகு...கூழ்! கூழாகிப்போனான்!

இப்படிப் பல நிகழ்ச்சிகளைத் தன் வீரத்திற்குச் சான்றுகளாகக் கூறுவான், களம் சென்று திரும்பியவன்; கேட்போர் மகிழ்வர், அவனை நாட்டைக் காத்த நாயகன் என்று பாராட்டுவர்.

பகை உணர்ச்சி கிளம்பிவிட்டால் அது தடுப்பாரற்று வேகமாக வளரும்; வளர்த்திடுவதும் போரின் போது மேற்கொள்ளப்படும் ஒரு முறையாகிவிடுகின்றது. நாட்டு மக்கள் அனைவரும் அந்தப்பகை உணர்ச்சியைக் கொண்டுவிடுகின்றனர்; பொறி ஏதோ ஓர் இடத்தில்தான் விழுகிறது; தீயோ எங்கும் பரவி, எல்லாவற்றையும் பிடித்துக் கொள்கிறது அல்லவா.

இன்முகம்காட்டுதல், நன்மொழி பேசுதல், அன்பு வழங்குதல், அறநெறி கூறுதல், இரக்கம்கொள்ளுதல் ஆகிய பண்புகள் அவ்வளவும் போர்ச் சூழ்நிலையில் அடியோடு மறைந்துபோய், தாக்கு! அழி! வெட்டு! குத்து! — என்ற உணர்ச்சியை அனைவரும் பெற்றுவிடுகின்றனரே; அப்படியானால் அந்தப் பண்புகள்—மனிதத்தன்மை—அடியோடு மடிந்து போகின்றனவா? மடிந்துவிடுகின்றன என்றும் கூறுவதற்கில்லை, ஏனெனில் போர் முடிந்து வேறோர் புதியநிலை ஏற்பட்டதும், மீண்டும் மெள்ள மெள்ள அந்தப் பண்புகள் மலருகின்றன; சமுதாயத்துக்கு மணம் அளிக்கின்றன.

மடிவதில்லை, ஆனால் அந்த பண்புகள் மங்கிவிடுகின்றன, மறைந்துவிடுகின்றன.

பகைவனிடம் மூண்டுவிடும் வெறுப்புணர்ச்சி, அந்தப் பண்புகளை மூலைக்குத் துரத்திவிடுகின்றன! கண்சிமிட்டிக் களிப்பூட்டும் விண்மீன்களைக் கருமேகம் மறைத்து விடுவது போன்றநிலை!

கப்பிக்கொண்டிருக்கும் காரிருளுக்குப்பின்னே, விண்மீன் உளது என்பதனையும், அதன் ஒளி காரிருளைக்கூடக்கிழித்தெறிந்துகொண்டு வெளிக் கிளம்பக்கூடும் என்பதனையும் எடுத்துக் காட்டுகிறார் **ஹால் கெயின்** எனும் பேரறிவாளர், **'இரும்பு முள்வேலி'** எனும் தமது நூலில்.

இங்கிலாந்துடன் ஜெர்மனிபோரிடும் நாட்கள்; உலகையே தன் காலடி விழச் செய்திடத் துணிந்து **கெய்சர்,** போர் நடாத்திய நாட்கள்; முதலாவது உலகப்போர்.

ஜெர்மனியில், கெய்சர் போர் வெறி மூட்டுகிறார் என்று துவங்கிய பேச்சு, ஜெர்மானியர் போர் வெறியர்கள் என்ற கட்டத்தை அடைந்துவிட்டது. ஒரு நாட்டு மக்களுடைய நாட்டுப் பற்றையும், 'ராஜபக்தியை'யும் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு, அந்த நாட்டு அதிபன், அவர்களைப் பலிக்கிடாக்களாக்கி, இரத்த வெள்ளம் புரண்டோடச் செய்தான்.

கெய்சர்மீதுதான் முதலில் கண்டனம், வெறுப்பு, கொதிப்பு. பிறகு, ஜெர்மன் மக்கள் மீதே அந்த வெறுப்புணர்ச்சி பாய்ந்தது.

குழந்தைகளை வெட்டித் தின்கிறார்கள் ஜெர்மன் வெறியர்கள் என்று இங்கிலாந்து நாட்டு முதியவர்கள்—குறிப்பாகத் தாய்மார்கள் பேசினர்.

ஜெர்மன் மொழி, ஜெர்மன் தொழில் திறமை, ஜெர்மன் கலை, என்ற எல்லாவற்றின்மீதும் அந்த வெறுப்புணர்ச்சி பாய்ந்தது.

போர் மூளுவதற்கு முன்பு இங்கிலாந்துநாட்டில் பல்வேறு துறைகளில் வேலை பார்த்துவந்த ஜெர்மானியர்கள் விரட்டப்பட்டனர் அல்லது சிறைவைக்கப்பட்டனர்.

ஜெர்மனியுடன் எந்த விதமான தொடர்பும் கூடாது என்பது தேசியக் கட்டளையாகிவிட்டது. எல்லாத் தொடர்புகளும் அறுத்தெறியப்பட்டன.

இங்கிலாந்துநாட்டு அரச குடும்பம் ஜெர்மன் கெய்சர் குடும்பத்துக்கு நெருங்கிய உறவு. அதனை வெளியே சொல்லக்கூடக் கூசினர். பகை உணர்ச்சி அந்த அளவு கப்பிக்கொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலையில் நடைபெறும் நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சிகளைக்கொண்டது **'இரும்பு முள்வேலி.'** போர் கிளப்பிவிடும் பகை உணர்ச்சிக்கும் இதயத்தின் அடியிலே மறைந்திருக்கும் அன்பு உணர்ச்சிக்கும் இடையே நடைபெறும் போரபற்றிய விளக்கம்.

மான் தீவு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே ஒரு பகுதி. அங்கு ஒரு விவசாயக் குடும்பம். மிராசுதாரனிடம் ஒரு பண்ணையைக் குத்தகைக்கு எடுத்துப் பாடுபட்டு வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஒரு குடும்பம். முதியவர்—அவர்மகன்—அவர் மகள்—கொண்டகுடும்பம்.

ஜெர்மனியை அழித்தொழித்தாலொழிய, இங்கிலாந்து மட்டுமல்ல, மனிதகுலமே அழிந்துபோகும் என்ற உணர்ச்சி எங்கும் பரவி இருந்ததுபோலவே, அந்ச்சின்னஞ்சிறு தீவிலும் பரவி இருந்தது.

முதியவரின் மகன், பிரிட்டிஷ் படையில் சேர்ந்தான்; முதியவர் மகிழ்ந்தார்.

என் அண்ணன் போர் வீரன்! பொல்லாத ஜெர்மானியரை அழிக்கும் புனிதப் போரிலே ஈடுபட்டிருக்கிறான் என்ற எண்ணம்

கொண்ட அந்த எழில் மங்கை, தன் குடும்பத்துக்கே அண்ணன் பெருமை தேடிக் கொடுக்கிறான் என்ற பெருமித உணர்ச்சியில் திளைத்திருக்கிறாள்.

எங்கும் பரவி, எல்லோர் உள்ளத்திலும் பொங்கிவழிந்து கொண்டிருந்ததுபோலவே மோனா மனதிலும் ஜெர்மானியர் மீது வெறுப்புணர்ச்சி ததும்பிக்கிடந்தது. ஒரு துளியும் ஈவு இரக்கம் காட்டக் கூடாது; கொன்று குவிக்க வேண்டும் அந்தக் கொடியவர்களை; பூண்டோடு ஒழிக்கவேண்டும் என்று கருதினாள்.

ஜெர்மானியர்களின் காட்டு மிராண்டித்தனம் — கொலை பாதகத்தன்மை பற்றிய தகவல்கள் நிரம்பக் கிளம்பியபடி இருந்தன. ஒன்றுக்குப் பத்தாக இவை வளர்ந்தன வெறுப்புணர்ச்சி மூண்டுவிட்டிருந்தது. முதியவர்கூட அவ்வளவு கொதித்துப் பேசுவதில்லை. அவருடைய மனதிலே சிறிதளவு பழைய பண்புகள் உலவிட இடம் இருந்தது. அந்த மங்கைக்கோ உள்ளம் முழுவதும் அந்த ஒரே ஒரு உணர்ச்சிதான்; ஜெர்மானியர் மீது வெறுப்பு; அளவு கடந்த அகற்றப்பட முடியாத வெறுப்பு. அதிலும் போர்க்களம் சென்றுள்ள தன் அண்ணனைப் பற்றிய எண்ணம், அந்த வெறுப்புணர்ச்சியை வெந்தழல் ஆக்கிவிட்டிருந்தது.

ஜெர்மனி வெற்றிகளை ஈட்டிக் கொண்டு, ஆணவத்தைக் கக்கிக் கொண்டிருந்த கட்டம் முடிந்து தற்காத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது; பலஇடங்களிலே தோல்வி கண்டு திணறிக்கொண்டிருந்தது; ஜெர்மானியர் பலர் கைதாயினர்.

அந்தக் கைதிகளை, இந்தத் தீவிலே கொண்டு வந்து சிறை வைக்க ஏற்பாடாகிறது.

காட்டு மிராண்டிகள் வருகிறார்கள், இங்கு நாம் இருக்கக் கூடாது என்று எண்ணி அந்தத் தீவிலிருந்து பல குடும்பங்கள், வெளியேறிவிட்டன. சில குடும்பத்தினர் தீவிலே தங்கினர் என்றாலும் பெண்களை மட்டும் வேறு இடத்துக்கு அனுப்பிவிட்டனர்.

இங்கு ஏன் அந்த இழி மக்களைக் கொண்டு வருகின்றனர். கேவலம் இது, மிகக் கேவலம். அத்தக் கொடியவர்களின் நிழல் பட்டாலே இழிவாயிற்றே. அவர்களுக்கா நமது தீவிலே இடம்! அந்த வெறியர்கள் இங்கு இருக்கப் போகிறார்கள் என்றால், அதே இடத்தில் நாம் இருப்பதா! கேவலம்! மிகக் கேவலம் அது! அப்பா! நாம் இந்தத் தீவைவிட்டு வேறிடம்போய் விடலாம். அந்தக் கொடியவர்களைக் காண்பதுகூடப் பெரும் பாவம்! இங்கு இருக்கலாகாது என்று பெண் வற்புறுத்துகிறாள். அவள் உள்ளத்தில் வெறுப்புணர்ச்சி அவ்வளவு கப்பிக் கொண்டிருக்கிறது. முதியவர் புன்னகை செய்கிறார், அடே அப்பா! எவ்வளவு கொதிப்புடன் பேசுகிறாள் மகள் என்பதை எண்ணி.

மகளே! மற்றவர்கள் தீவை விட்டுச் சென்றுவிட்டாலும், நாம் செல்வதற்கு இல்லை. மிராசுதாரர், நாம் இங்கேயே இருந்தாகவேண்டும்; பண்ணையைப் பார்த்துக்கொள்ளவேண்டும்; கவனிப்பு இல்லாவிட்டால் பண்ணை பாழாகிவிடும என்கிறார். மேலும் இங்கு சிறைவைக்கப்பட இருப்பவர்களுக்கு, நாம் தான் பால் தரவேண்டி இருக்கிறது வேறு வழியில்லை..என்கிறார்.

பால் தருவதா! அந்தப் பாவிகளுக்கா! எந்தப் பாதகர்களை ஒழித்திடும் புனிதப் போரிலே அண்ணன் ஈடுபட்டிருக்கிறாரோ, அந்தப் பாதகர்களுக்கு நாம் பால் தருவதா! அக்ரமம்! அநியாயம்! இழிசெயல்! நான் ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன். அந்தப் பாவிகளை வெட்டி வெட்டிப்போடவேண்டும், கழுகுக்கும் நரிகளுக்கும்; அவர்களுக்கு நமது தீவிலே இடம்! நமது பண்ணையிலிருந்து பால்! இது என்ன அநியாயமப்பா!! — என்றெல்லாம் அவள் எண்ணிக் கொதிப்படைகிறாள். முதியவர் புன்னகை புரிகிறார்.

அதனால் என்னம்மா! அவர்களும் மனிதர்கள் தானே! ஜெர்மானியர்களாகப்பிறந்ததனாலேயே அவர்கள் மனித குலம் அல்ல என்று கூறிவிடமுடியுமா! போர் மூண்டுவிட்டது நம் நாட்டுக்கும் ஜெர்மனிக்கும். ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்கிறோம். அதனால், ஜெர்மானியர் மனிதர்களே அல்ல என்று கூறிவிடமுடியுமா! — என்று கனிவாகப் பேசுகிறார் முதியவர்; கன்னி கடுங்கோபம் கொள்கிறாள்.

போரின்போது, இரு தரப்பினருந்தான் அழிவு வேலையில் ஈடுபடுகின்றனர். எந்தச் சமயத்தில், எந்த இடத்தில், எவருடைய கரம் ஓங்கி

22காரட்
அலிமா தங்க கவரிங் நகைகள்
உபயோகித்தபின்னும்பாதி பணம்பெறும் நிபந்தனையுடன்
போன்: 42715

கேட்லாக்வேண்டுவோர் 25 N.P. ஸ்டாம்பு அனுப்பவும்
மாதத்தவணையில் சென்னை வாசிகளுக்கு மட்டும் கிடைக்கும்

அலிமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்
3. ரங்கநாதன் தெரு,
மாம்பலம் ரயிலடி சமீபம்
சென்னை-17. (இந்தியா)

இருக்கிறதோ அவர்கள் அதிக அளவுக்கு வெட்டி வீழ்த்துவார்கள்! இரு தரப்பினரும் ஒரேவிதமான வேலையில் — கொல்லும் வேலையில் — ஈடுபட்டுள்ளனர். இதிலே ஒரு தரப்பினர் மட்டுமே காட்டுமிராண்டிகள்—கொலைபாதகர்கள்— இரத்த வெறி பிடித்தலைவோர் — என்று கூறிவிடமுடியுமா? போர், காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டுவிடுகிறது. ஒருதரப்பினர் குண்டுகளால்தாக்குகின்றனர், மற்றோர் தரப்பினர் மலர்கொண்டு அர்ச்சிக்கின்றனர் என்பதா போர்! கொலை நடக்கிறது, பெரியஅளவில் — சட்டத்தின் அனுமதியுடன் — சமூகத்தின் ஒப்புதலுடன்! இதிலே அதிகமான அளவு அழிவைச் செய்பவன் வெற்றி வீரனாகிறான். அவனுடைய கரம் இரத்தக்கறை படிந்தது, ஆனால் அது நாட்டைக் காத்த கரம்—வெற்றி ஈட்டிய கரம்—புகழ் தேடித்தந்த கரம் — என்பதால் பாராட்டப்படுகிறது.

முதியவர் இதுபோன்ற கருத்தினைக்கொண்டவராக இருந்திருக்க வேண்டும்; அவருடைய உள்ளம் ஒரேயடியாக வெறுப்பு நிரம்பியதாக இல்லை; நியாய உணர்ச்சியும் சிறிதளவு உலவிட இடமிருந்தது.

இப்படி ஒருமனமா! ஜெர்மானியர் வந்து தங்கினால் என்ன!! அவர்களுக்குப் பருகிடப் பால் தந்தால் என்ன என்று பேசுவதா! நமது நாட்டு மக்களின் இரத்தத்தைக் குடிக்கக் கிளம்பியுள்ள கொடியவர்கள் இந்த ஜெர்மானியர், இவர்களுக்குப் பருகப் பால்! நாம் கொடுப்பதாம்!! என்ன நியாயம் இது! அப்பா ஏன் இப்படிக் கெட்டுக் கிடக்கிறார் — பால் தருவதாமே பகைவர்களுக்கு!! கொடுத்தால் என்னம்மா என்று வாதாடுகிறார்! அவர்களும் மனிதர்தான் என்று!நியாயம்பேசுகிறார்! அவர்கள் மனிதர்களா!! பதைக்கப் பதைக்கக் கொன்றார்கள் நம்மவர்களை! பச்சிளங் குழந்தைகளைக்கூடக் கொன்றனர் அக்கொடியவர்கள்! அவர்களும் மனிதர்கள்தான் என்கிறார் அப்பா!ஏன் இவருக்குஇப்படிப் புத்தி கெட்டுப் போய்விட்டது. அங்கே அண்ணன் துரத்துகிறான் ஜெர்மன் கொடியவர்களை—இங்கே அப்பா பால் தரச்சொல்கிறார், அண்ணன் என்ன எண்ணிக்கொள்வார் இதனை அறிந்திடின். செச்சே! அப்பா சுத்த மோசம்!

ஜெர்மன் கைதிகளை அடைத்து வைக்க, சிறைக்கூடம் கட்டப்படுகிறது. கைதிகள் தப்பித்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக, அங்கு **இரும்பு முள்வேலி** போடப்படுகிறது. மிருகங்களை அடைத்து வைப்பதுபோல ஜெர்மன்கைதிகளை அடைத்துவைக்கிறார்கள். வெளியே பிரிட்டிஷ் போர் வீரர்கள் காவல் புரிகின்றனர், தப்பியோட முயற்சித்தால் சுட்டுத்தள்ள.

கைதிகளான எல்லா ஜெர்மானியருமே, போர் வீரர்கள் அல்ல; பலர் தொழிலில், வாணிபத்தில்; பல்வேறு அலுவலகங்களில் ஈடுபட்டிருந்தவர்கள்; சிலர் செல்வம் படைத்தவர்கள்கூட!

எல்லாம் ஜெர்மானியர்தானே! வெறியர்கள் — கொடியவர்கள் தானே! இவர்களை இப்படித்தான் அடைத்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் மோனாவுக்கு. முதியவருக்கோ ஒரு பச்சாதாப உணர்ச்சி, ஜெர்மானியர்கள் தமக்கு அளிக்கப்படும் உணவு மோசமாக இருப்பதாகக் குறைபட்டுக்கொள்கிறார்கள் என்று கூறுகிறார். இதுகளுக்கு அப்படிப்பட்ட உணவுதான் தரவேண்டும் என்கிறாள் மோனா. அவள் இதயத்தில் வெறுப்புணர்ச்சி நிரம்பி இருப்பதால். வீட்டைவிட்டு, குடும்பத்தைவிட்டு இழுத்து வரப்பட்டிருக்கிறார்கள்; அது போதாதா; மேலும் வாட்ட வேண்டுமா அவர்களை என்று முணுமுணுக்கிறார் முதியவர். ஜெர்மன் கொடியவர்களுக்காகப் பரிவு காட்டுவது மோனாவுக்குத் துளியும் பிடிக்கவில்லை. நம்முடைய மக்கள் களத்திலே பூப்பந்தாட்டமா ஆடிக்கொண்டிருக்கிறார்கள்! விருந்தும் இசையும் நடன விழாவுமா நடக்கிறது அவர்களுக்கு. என்னென்ன இன்னலோ. ஆபத்தோ நிலைமை எவ்வளவு மோசமாகஇருக்கிறதோ! அதைப்பற்றி நினைத்துக் கொண்டால் நெஞ்சிலே நெருப்பு விழுவது போலிருக்கிறது. இவர் என்னடா என்றால், இந்தக் கைதிகளை அடைத்து வைத்திருக்கும் இடம் மோசம், போடப்படும் சாப்பாடு மட்டம் என்று உருகுகிறார். அந்தப் பாவிகளுக்காக! அந்தப்பாதகர்களுக்காக!—என்று மோனா கூறுகிறாள். முதியவர், கல்மனம் மகளே! உனக்குக் கல்மனம்! — என்று மெள்ளக் கூறுகிறார்.

மேலும் மேலும் ஜெர்மானியர் கொண்டுவரப்படுகின்றனர். இரும்பு முள்வேலிபோட்ட சிறைக்குள்ளே தள்ளப்படுகிறார்கள்.

மோனாவின் மனம் இளகவில்லை, படட்டும், படட்டும்! அனுபவிக்கட்டும், அனுபவிக்கட்டும்!! என்றே கூறுகிறாள். என்ன செய்தார்கள் அவர்கள்? என்ன செய்யவேண்டும்? அவர்கள் ஜெர்மானியர்கள்; அது போதாதா அவர்களிடம் வெறுப்புக் கொள்ள!

அத்தனை வெறுப்புக்கொண்டிருக்கும் மோனா, அந்த ஜெர்மானியர்களை நாளைக்கு இரண்டு வேளையாவது பார்த்துத் தொலைக்க வேண்டி வருகிறது. பால் வாங்கிக் கொண்டுபோக, ஜெர்மன் கைதிகளில் சிலர்வருகிறார்கள். பிரிட்டிஷ் போர் வீரர்கள் உடன் வருகின்றனர், கைதிகள் தப்பி ஓடிடாதபடி பார்த்துக்கொள்ள. ஜெர்மானியரைப் பார்க்கும்போதே எள்ளும் —கொள்ளும்! வெடிக்கிறது மோனாவின்முகத்தில். சுட்டுவிடுவது போன்ற பார்வை! காலில் ஒட்டிக் கொள்ளும் மலத்தைக் கழுவியான பிறகும் ஒருவிதமான அருவருப்பு இருந்தபடி இருக்குமல்லவா, அது போல, அவர்களைக் கண்டாலே மோனாவுக்கு ஒரு அருவருப்பு.

அந்தக் கைதிகள் அவளிடம் ஏதாவது பேச முயற்சிக்கிறார்கள், மோனா வாய் திறக்க மறுக்கிறாள். இதுகளுடன் பேசுவேனா!! என்று நினைக்கிறாள்.

மகளே! இவ்வளவு குரூரமாக இருக்கிறாயே! நமது வேதம் என்ன சொல்லுகிறது. பகைவனுக்கும் அருள்பாலிக்கும்படி அல்லவா கூறுகிறது. பரமண்டலத்துள்ள பிதாவை நோக்கி நாம் பஜிக்கும் பாடல் நினைவிற்கு வரவில்லையா என்று கேட்கிறார். அவளுக்கு அந்த நினைவெல்லாம் இல்லை; ஒரே ஒரு எண்ணம்தான் அவள் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டிருக்கிறது; வெறுப்பு! ஜெர்மானியர் என்ற உடன் ஒரு கொதிப்பு! அவர்கள் அழிந்துபடவேண்டும் என்ற ஆத்திர உணர்ச்சி. பகைவனுக்காகக் கூடப் பகவானிடம் பிரார்த்திக்கலாம், ஆனால் அந்தப்பகைவன், மனிதனாக இருக்கவேண்டுமே! ஜெர்மானியரைத்தான் மோனா, மனிதர் என்றே ஏற்றுக்கொள்ள மறுக்கிறாளே; மனித வடிவிலே உலவும் மிருகங்கள்; பிரிட்டிஷ் இரத்தத்தைக் குடிக்கக் கிளம்பிடும் கொடிய விலங்குகள் என்றல்லவா திடமாக நம்புகிறாள். அவர்களிடம் பச்சாதாபமா...! முடியுமா!!

பால் எடுத்துக் கொண்டுபோக பண்ணை வீட்டுக்கு வந்திடும் ஜெர்மானியரில் ஒருவன், உடல் மெலிந்து கிடந்தான். எப்போதும் இருமிக் கொண்டிருப்பான்; வெளுத்துப்போன முகம். சில வேளைகளில், அவனிடம் சிறிதளவு பச்சாதாப உணர்ச்சி தோன்றும், மோனுவின் உள்ளத்தில். ஆனால் அந்த உணர்ச்சியை ஒரு நொடியில் விரட்டி அடிக்கிறாள். ஐயோ பாவம் என்று எண்ணுவதா! பச்சாதாபம் காட்டுவதா! இவனுக்கா!! இளைத்திருக்கிறான், இருமிக் கொண்டிருக்கிறான்; ஆனால் இவன் யார்? இவனும் ஜெர்மானியன்தானே! மனித குலத்தை நாசமாக்கத் திட்டமிட்டுப் போரினை மூட்டிவிட்ட ஜெர்மன் இனத்தான் தானே!! இவனிடமா பச்சாதாபம் காட்டுவது கூடாது! முடியாது!

மோனுவின் உள்ளத்திலுள்ள வெறுப்புணர்ச்சி வெற்றி பெறுகிறது.

" ஜெர்மானியர் செய்திடும் அட்டூழியங்களைப்பற்றி இதழ்கள் செய்திகளைத் தந்தபடி உள்ளன. அவற்றினைப் படிக்கப் படிக்க, வெறுப்புணர்ச்சி மேலும் கொழுந்துவிட்டு எரிகிறது, எரிகிற நெருப்பிலே கொட்டப்படும் எண்ணெய் ஆகிறது அந்தச் செய்திகள்.

முதியவர் வழக்கம் போலப் பிரார்த்தனையின் போது, சமாதானத்தை வழங்கும்படி 'பிதா'வை வேண்டிக் கொள்கிறார். சமாதானம் வழங்கும்படி பிதாவை வேண்டிக் கொள்வதுகூட மோனுவுக்குப் பிடிக்கவில்லை. பிதாவே! ஜெர்மானியரைப் பூண்டோடு அழித்தொழித்திடு, மனித குலத்தை ரட்சித்திடு! — என்பது போலப் பிரார்த்தனை இருந்திடின மோனுவுக்குப் பிடித்தமாக இருக்கும். முதியவர் தமது பிரார்த்தனையில் ஜெர்மானியா அழிக்கப்பட்டாக வேண்டும் என்பதனை வலியுறுத்தாமல் சமாதானம் வேண்டும் என்று மட்டும் கூறுகிறாரே, நியாயமா... நாட்டுப்பற்று உள்ளவர்கள் இப்போது சமாதானம் காணவா விரும்புவார்கள். போர்! போர்!! பகைவர் அழிந்தொழியும் வரையில் போர்!! இதனை அல்லவா விரும்புவர்! பகைவனை அழித்தொழிக்கும் வல்லமையை ஆண்டவனே! எமக்கு அளித்திடும் என்பதல்லவா நாட்டுப்பற்று மிக்கவன் செய்திடத்தக்க பிரார்த்தனை. மோனு இது குறித்து முதியவரிடம் கேட்டே விடுகிறாள்.

"அப்பா உண்மையிலேயே சமாதானம் வேண்டும் என விரும்புகிறீரா?"

"ஆமாம் மகளே! சமாதானம் நாடக்கூடாதா..."

"நான் சமாதானம் மலர்வதை விரும்பவில்லை. போர் வேண்டும்! மேலும் மேலும் போர் வேண்டும்! அந்தக் கொடிய மிருகங்கள் உலகிலிருந்தே விரட்டி அடிக்கப்படும் வரையில் போர் வேண்டும்"

முதியவர் தன் மகளின் நிலையை உணருகிறார்; ஆனால் அவள் போக்கை மாற்ற முடியாது என்று கண்டுகொள்கிறார் போலும், திருத்த முயற்சிக்கவில்லை; வாதிடக்கூட இல்லை.

நமது மகள் மட்டுமா, நாட்டிலே அனைவருமே இப்போது இவ்வித மான போக்குடன் உள்ளனர்; இது திருத்தப்படக்கூடியதாகத் தெரியவில்லை; ஓங்கி வளர்ந்து வளர்ந்து பேருருக்கொண்டு, பெரியதோர் அழிவை மூட்டிவிட்டுப், பிறகே இந்த வெறி உணர்ச்சி மடியும், இடையிலே இந்த உணர்ச்சியின் வேகத்தைக் குறைத்திடுவது கூட முடியாத காரியம் என்று முதியவர் எண்ணிக்கொண்டார் போலும்.

ராபி—மோனுவின் அண்ணன் கடிதம் எழுதுகிறான், களத்தின் நிலைபற்றி; உற்சாகத்துடன், நம்பிக்கையுடன் பெரியதோர் தாக்குதலை நடத்தப்போகிறோம்; முன்னணிப்படையினில் நான் இருக்கப் போகிறேன்; இந்தத் தாக்குதல் பகைவர்களை அழித்திடும் என்று கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறான், கேட்கக் கேட்க இனிப்பாக இருக்கிறது மோனுவுக்கு.

"அப்பா! மோனுவிடம்சொல்லு, அவள் எனக்கு எழுதிய கடிதத்தின் சிலபகுதிகளை, அதிகாரிகள் சிலரிடம் படித்துக் காட்டினேன், அவர்கள் மிகவும் மெச்சுகிறார்கள்; உன் தங்கைபோன்ற உணர்ச்சியும் எழுச்சியும்கொண்ட வீரர் ஆயிரவர் இருந்தால்போதும்இந்தப்போர்ஒரு திங்களில் வெற்றி தந்திடும் என்று கூறிப் பாராட்டுகின்றனர்." ராபியின்கடிதத்திலிருந்து இந்தப் பகுதியைப் படித்திடக் கேட்டபோது மோனுவுக்குப்புல்லரித்தது; பூரித்துப்போனாள்.

பிரிட்டிஷ் படைகள் பலமாகத் தாக்குகின்றன.

ஜெர்மன் படைகள் விரண்டோடுகின்றன.

ஜெர்மன் படைக்குத் தோல்வி மேல் தோல்வி ஏற்படுகிறது.

இதழ்கள் தந்திடும் இந்தச் செய்தித் தலைப்புகள் மோனுவுக்குச் செந்தேனாக இனிக்கிறது.

ராபி ஏன் இந்த வெற்றிச்செய்திகளைப் பற்றித் தெரிவிக்கவில்லை; கடிதம் காணோமே என்று எண்ணி கவலைகொள்கிறாள்.

ஒரு நாள் அஞ்சல் வருகிறது; அதை எடுத்துக்கொண்டு வருபவன் முகத்தில் ஈயாடவில்லை; குனிந்த தலையுடன் வருகிறான்; கடிதத்தைக் கொடுத்துவிட்டுப்போய்விடுகிறான்; நீளமான உறை; சர்க்கார் முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. முதியவர், பிரித்துப் படிக்கிறார், சர்க்கார வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளும் சேதி என்னவென்றால், படை வீரன் ராபி களத்தில்...... முழுவதும் படிப்பானேன்; விஷயம் புரிந்துவிட்டது, ராபி இறந்துவிட்டான். வீரமரணம் நாட்டைக் காத்திடும் முயற்சியில் உயிரை இழந்தான் — என்றெல்லாம் பாராட்டு இணைக்கப்பட்டிருக்கிறது கடிதத்தில்; ஆனால் தந்தையின் தத்தளிப்பை, வீரமரணம் என்ற பாராட்டுதல் குறைத்திட முடியுமா...

மகளே! படி அம்மா! பாரம்மா!

மோனா படிக்கிறாள்! அண்ணன் இறந்துபட்டான்! ராபி மறைந்துவிட்டான்! ராபியைக் கொன்றுவிட்டார்கள் — கொடியவர்கள்— ஜெர்மானியர்! அந்தக் கொடிய ஜெர்மானிய இனத்தவரிலே ஒரு பிரிவினர், கைதிகள் என்ற பெயருடன் இங்கே உள்ளனர்! என் அண்ணனைக் கொன்றுவிட்ட கொடியவர்கள், ஜெர்மானியர்! அவர்களிலே ஒரு பகுதியினர் இங்கே! அவர்கள் பருகிடப் பால் நமது பண்ணையிலிருந்து. என் அண்ணனின் குருதியைக் குடித்துவிட்டார்கள் அந்தக் கொடியவர்கள்; அந்த இனத்தார் இங்கு பருகிட நாங்கள் பால் அளிக்கிறோம்!

இதுபோல என்னென்ன எண்ணிக் கொண்டிருந்திருப்பாள், பாவம். ஏற்கனவே மூண்டு கிடந்த கொதிப்பு மேலும் எந்த அளவு கிளம்பிவிட்டிருக்கும்!

பிதாவிடம் பிரார்த்திக்கச் சொன்னாரே, அப்பா! இப்பொழுது என்ன சொல்லுவார்!

அப்பா! பால் கொடுத்து வருகிறோமே பாதகர்களுக்கு; அந்த ஜெர்மன் கொடியவர்கள் உன் மகனுடைய இரத்தத்தை, என் அண்ணன் உயிரைக் குடித்துவிட்டார்களப்பா! அண்ணனைக் கொன்றுவிட்டார்களப்பா! அந்தக் கொடிய இனத்தவர், இங்கேயும் உள்ளனர்; நமது பண்ணையில் பால் வாங்கிப் பருகிக் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் பச்சாதாபம் காட்டச் சொன்னீர்களே! அவர்கள் ஜெர்மானியராக இருந்தால் என்ன, அவர்களும் மனிதர்கள் என்று வாதாடினீர்களே! அந்த மிருகங்கள் உன் மகனை-என் அண்ணனை நாட்டுப்பற்று மிக்கவனை, நியாயத்தை நிலை நாட்டப் போரிட்ட மாவீரனைக் கொன்றுவிட்டார்களே அப்பா! இப்போது என்ன சொல்கிறீர்? பிரார்த்தனை செய்யவேண்டுமா, பிதாவிடம் சமாதானம் வழங்கும்படி! சமாதானமா அப்பாவேண்டும்!! அண்ணன் உயிரைக் குடித்த கொடியவர்கள் கொட்டமடித்துக் கொண்டிருப்பது, நாம் பிதாவிடம் சமாதானம் வேண்டி பஜித்துக் கிடப்பதா! சொல்லுங்கள் அப்பா! சொல்லுங்கள்!! என்ன செய்யலாம் சொல்லுங்கள்—என்றெல்லாம் கேட்டிட அந்தக் கன்னி துடித்திருப்பாள்.

முதியவரின் நிலை? மகன் இறந்துபட்டான் என்ற செய்தியை அறிந்ததும், அவருடைய மனதிலே சிறிதளவு தலைதூக்கியபடி இருந்ததே மனிதத் தன்மைக்கே உரிய பண்பு, அன்பு காட்டுதல், பகைவருக்கும் இரங்குதல், அது மடிந்துவிட்டது; அடியோடு மடிந்தேபோய்விட்டது. இதயத்திலே ஒரு பயங்கரமான சம்மட்டி அடி விழுகிறது; முதியவர் கீழே சாய்கிறார், நினைவு இழந்து. மருத்துவர் வருகிறார், இதயத்திலே அடி! என்றாலும் இப்போதைக்கு ஆபத்து இல்லை. படுத்துறங்கட்டும்; முழு ஓய்வுவேண்டும் என்று கூறிச் செல்கிறார்.

முதியவர் படுத்துக்கிடக்கிறார்; மோனாவின் உள்ளக்கொதிப்பு மேலும் ஓங்கிவளருகிறது.

ஜெர்மானியர்களை ஆண்டவன் அழித்தொழிக்க வேண்டும்.

எல்லா ஜெர்மானியரையும் ஜெர்மன் அதிபர்கள் — ஜெர்மன் கெய்சர் என்போரை மட்டுமல்ல, எல்லா ஜெர்மானியரையும் அழித்திடவேண்டும் — ஆண்—பெண்— குழந்தை குட்டி அவ்வளவுபேரும் —ஒருவர் பாக்கியில்லாமல் ஒழிந்து போகவேண்டும். ஆண்டவன் ஜெர்மன் மக்கள் அனைவரையும் அழித்தாக வேண்டும்; இல்லையென்றால் அவர் உண்மையான ஆண்டவன் அல்ல!!

மோனாவின் பிரார்த்தனை இதுபோல! வேதனை நிரம்பிய உள்ளத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பும் பிரார்த்தனை.

முதியவர் நடத்தச் சொன்ன பிரார்த்தனை, பகைவனுக்கும் அருள்பாலிக்கும்படி. மோனா அதனை மறுத்தாள். கல்மனம் அம்மா உனக்கு என்று முதியவர் கூறினார். இப்போது?

ஆண்டவனே எழுந்தருளுவீர்! உமது பகைவர்கள் சிதறி ஓடிடட்டும். கடவுள் நெறி மறந்தோர் கொட்டமடித்திடவிடக் கூடாது. தேவதேவா! தழலென எரியும் கரித்துண்டுகள் அவர்கள் மீது பொழியட்டும். நெருப்பிலே தள்ளிடுவீர் அந்த நாசகாலர்களை! நரகப்படுகுழியில் தள்ளிடுவீர்! மீண்டும் அவர்கள் தலைதூக்கிடாதபடி படுகுழியில் அந்தப் பாவிகளைத் தள்ளிடுவீர்!

இது முதியவரின் பிரார்த்தனை. வேதப் புத்தகத்தில், பாவிகளை ஆண்டவன் அழித்தொழித்த படலத்தில் உள்ள பிரார்த்தனையைப் படிக்கிறார். பரிவு, பச்சாதாபம், பகைவனுக்கு இரங்கல் என்பவை இப்போது அவருடைய உள்ளத்தில் இடம்பெற மறுத்துவிடுகிறது. மகனைக்கொன்ற மாபாவிகள் என்று எண்ணும்போதே, ஜெர்மானியர் பூண்டோடு அழிந்துபடவேண்டும் என்ற கொதிப்பு எழுகிறது. மோனா சொன்னதுதான் சரி; அவர்கள் அழிக்கப்படவேண்டியவர்கள் என்கிறார் முதியவர். ஆண்டவனை அழைக்கிறார் சமாதானம் வழங்கச்சொல்லி அல்ல; ஜெர்மானியர்களை அடியோடு அழித்தொழிக்கும்படி.

ஜெர்மன் கைதிகள் அடைபட்டுக் கிடந்ததால், மிருக உணர்ச்சி மேலிட்ட நிலையினராகின்றனர்.

அடிக்கடி சச்சரவு, குழப்பம், அடிதடி, அமளி.

கலகம் செய்த கைதிகள் சிலர் காவற்காரர்களால் சுட்டுத் தள்ளப்படுகின்றனர்.

நிலைமையை அறிந்து போகவந்திருந்த மேலதிகாரி, 'இவர்களை நாய்களை அடைத்து வைப்பது போல அடைத்து வைத்தால், நாய்க்குணம் ஏற்பட்டுவிடத்தானே செய்யும். ஒரு வேலையுமின்றி அடைபட்டுக் கிடப்பதால் வெறிகொண்டு விடுகின்றனர். ஏதாவது வேலை கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார்.

இரும்பு முள்வேலி போடப்பட்ட இடங்களிலேயே, தொழில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன, கைதிகள் வேலை செய்ய.

மிருகங்களை மனிதர்களாக்க முயற்சிக்கிறார்கள் என்று கேலி பேசனாள் மோனா, இந்தப் புதிய திட்டத்தைப் பார்த்து.

வழக்கப்படி பால் வாங்கிக் கொண்டு போக வரும் இருமல் காரனுக்குப் பதிலாக வேறோர் ஜெர்மானியன் வந்தான், ஓர்நாள்.

மோனா அதனைக் கவனிக்கக்கூட இல்லை; பால் பாத்திரத்தை அவன் பக்கம் வைத்தாள். இது நான் எடுத்துப் போகவேண்டிய பாத்திரமா? என்று புதியவன் கேட்ட போதுதான் திரும்பிப் பார்த்தாள். அவன் மருத்துவ மனைக்குச் சென்றுவிட்டான்; அவனுக்குப் பதிலாக நான் வந்திருக்கிறேன் என்றான் புதியவன்; இளைஞன்; சாந்தமான முகத்தினன்.

குரலிலே கடுமை இல்லை, நடையிலே ஆணவம் காணோம், முகத்திலே வெறித்தனம் காணோம்; யார் இவன்? ஜெர்மானியனாக இருக்க முடியுமாஎன்ற ஐயம் மோனாவுக்கு.

உன் பெயர்?

ஆஸ்க்கார்—...

ஆஸ்க்கார்...—?

ஆஸ்க்கார் ஹெயின்

மூன்றும் நம்பர் சிறைக்கூடத்திலா இருக்கிறாய்?

ஆமாம்!

மோனா, எதுவும் பேசாமல் அவனை ஒருகணம் உற்றுப் பார்த்துவிட்டு அதுதான் நீ எடுத்துச் செல்ல வேண்டிய பாத்திரம், என்று கூறுகிறாள்.

நன்றி! என்று கூறுகிறான் ஜெர்மானியன். பதிலுக்கு நன்றிகூற நினைத்தாள் மோனா, முடியவில்லை. அவன் போகிறான்; அவள் பார்க்கிறாள்; அவன் போன பக்கமே பார்த்துக்கொண்டிருக்கிறாள்; வாசற்படியில் நின்றுகொண்டு பார்க்கிறாள்; பிறகு பலகணி வழியாகவும் பார்க்கிறாள்.

அன்று முழுவதும் மோனா சிடுசிடுவென்று இருக்கிறாள்; ஏதோ குமுறல், மனதில்.

வழக்கப்படி பிரார்த்தனைக்கு அழைக்கிறார் முதியவர்.

இன்றிரவு வேண்டாமப்பா, தலைவலி என்று கூறிவிடுகிறாள் மோனா. தலைவலியா!!

அன்றிருந்து ஒரு மனப்போராட்டம்; மோனா தன் உள்ளத்திலே இடம் பெறப் பார்க்கும் புதிய உணர்ச்சியை விரட்டும் முயற்சியில் மும்முரமாகிறாள்; முடியவில்லை. முதியவருடன அதிகநேரம் அளவளாவுகிறாள், அவர் புதிதாகப் பெற்றுள்ள வெறுப்புணர்ச்சியைத் தனக்கு ஊட்டுவார், உள்ளத்தில இடம் பெறப் பார்க்கும் புதிய உணர்ச்சியை விரட்டிடுவார் என்ற நம்பிக்கையுடன்.

ஜெர்மானியர்களை அழித்தொழிக்கச் சொல்லி முதியவர் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறார். மோனா? பிரார்த்தனையில் கலந்துகொள்கிறாள்; ஆனால் வேறு ஏதோ ஒரு உணர்ச்சி அவளை வேறு எங்கோ அழைக்கிறது; இழுத்துச் செல்லப் பார்க்கிறது. அந்த ஆஸ்க்கார் கூடவா, ஜெர்மானியன். அத்தனைப் பணிவாக இருக்கிறான்; கனிவாகப் பேசுகிறான்; முகத்தைப் பார்த்தால் கொடியவனாகத் தெரியவில்லை; ஜெர்மானியனா இவன்; ஆஸ்க்கார் போன்றவர்கள்கூட இருக்கிறார்களா ஜெர்மன் இனத்தில் — என்றெல்லாம் எண்ணுகிறாள் மோனா.





நரகப் படுகுழியில், பகைவர்களைத் தள்ளு—என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிருர் முதியவர்; மோனுவுக்குப்பிடித்தமான பிரார்த்தனை அது; முன்பு! இப்போது? அந்தப் பிரார்த்தனை அவளுக்கு என்னமோபோல இருக்கிறது. ஆண்டவனையா இவ்வளவு கொடுமைகளைச் செய்திடச் சொல்லிக் கேட்பது. ஆண்டவன் என்ருல் தயாபரன் அல்லவா! அவரிடம் இப்படியா ஒரு பிரார்த்தனை செய்வது என்றுகூட எண்ணி சிறிதளவு அருவருப்பு அடைகிருள். கன்னியின் இதயத்திலே புதிய கருத்து கருவளவாகிறது!

மோனு, சபலத்துக்கு இடமளிக்கக்கூடாது என்ற உறுதியுடன் போரிடுகிருள். ஜெர்மன் கைதிகளைக் கண்டால் கடுகடுப்பைக் காட்டுவது; அவர்களிடம் ஒரு பேச்சும் பேசாதிருப்பது; அவர்களிடம் தனக்கு உள்ள வெறுப்பை வெளிப்படையாகத் தெரியச் செய்வது என்ற முறையில் நடந்துகொள்கிருள். ஆனுல் அந்த ஆஸ்க்கார்!

லட்விக் இறந்துவிட்டான்?

யாரவன் லட்விக்?

முன்பெல்லாம் வருவானே, இருமிக்கொண்டு ... அவன் தான் லட்விக். வயது 22! பரிதாபம். செத்துவிட்டான். கடிதம் எழுத வேண்டும் அவன் தாயாருக்கு

மோனுவுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொள்கிறது; கண்களில் நீர் துளிர்க்கிறது; ஆனுல் சமாளித்துக்கொண்டு கூறுகிருள்,

மகனை இழந்த தாய் அவள் ஒருவள் தானு! போர் மூட்டி விடுபவர்கள் அதனுல் விளையும் பொல்லாங்குகளை அனுபவிக்கத் தானே வேண்டும்.

ஆஸ்க்கார் பதிலேதும் பேசவில்லை, திரும்பிச் செல்கிருன். சுடச் சுடப் பதில் கொடுத்துவிட்டோம் என்ற திருப்தியுடன் அல்லவா மோனு இருக்கவேண்டும்! இல்லையே! போகிறவனைப் பார்த்துக்கொண்டே நிற்கிருள்; தவருகப் பேசிவிட்டோம் என்றெண்ணி வருந்துபவள்போல! சிறிதுதூரம் சென்றவன் திரும்பிப் பார்க்கிருன்! மோனுவின் உள்ளம்? தவறு செய்துவிட்டாய், தவறு செய்துவிட்டாய் என்று கூறுவது போலிருக்கிறது.

மற்ருேர் நாள் அந்த ஆஸ்க்கார் ஒரு சிறு பெட்டியைக் கொண்டு வருகிருன். இது இறந்துபட்ட லட்விக்கின் தாயார் அனுப்பியது. அவன் கல்லறைமீது தூவும்படி கண்ணுடியாலான இந்த மலரினை அனுப்பிவைத்திருக்கிருர்கள். நான் கல்லறை இருக்கும் இடம் செல்ல முடியாது. அதனுல், இதனைத் தாங்கள்......

ஆஸ்க்கார் கெஞ்சும் குரலில் பேசுகிருன்; மோனு கண்டிப்பாகச் சொல்லிவிடுகிருள், என்னுல் முடியாது, இதனை எடுத்துக்கொண்டு போய்விடு என்று. அவன் போய்விடுகிருன்; ஆனுல் பெட்டியை அங்கேயே வைத்துவிட்டு!!

கிடக்கட்டும் இங்கேயே எனக்கென்ன என்றுதான் மோனு எண்ணிக்கொள்கிருள். அன்று பகலெல்லாம் அவள் எதிரே கிடக்கிறது அந்தப் பெட்டி! எடுத்து எறியவில்லை! முடியவில்லை! ஆஸ்க்காரின் முகம், அதிலே தெரிந்ததுபோலும்.

மாலையில் யாருமறியாமல் சென்று லட்விக்கின் கல்லறைமீது அந்தக் கண்ணுடி மலரைத் தூவி விட்டு வந்துவிடுகிருள்.

மோனு! ஜெர்மன் இனம் முழுவதும் அழிக்கப்படவேண்டும் குழந்தைகுட்டிகள் உட்பட என்று கொதித்துக் கூறிடும் கன்னி, ஒரு ஜெர்மானியன் கல்லறைமீது மலர் தூவுகிருள்! எப்படி முடிந்தது! பகைவனிடம் பச்சாதாபம் காட்டுவதா! என்று கேட்ட மோனு செய்கிற காரியமா இது! எப்படி ஏற்பட்டது அந்த மாறுதல்? யார்

புகுத்தியது அந்தப் புதிய உணர்ச்சியை? **ஆஸ்க்கார்!** அவன் பார்வை, அவளுடைய உள்ளத்தில் ஒருபுதிய உணர்வை எழுப்பிவிட்டது. எவ்வளவோ முயன்று பார்த்தும் அவளால் அந்தப் புதிய உணர்வை உதறித் தள்ளிவிட முடியவில்லை. இடம் பிடித்துக்கொண்டது!

ராபியின் விரதீரத்தை மெச்சிப் பிரிட்டிஷ் துரைத்தனம் அனுப்பி வைதத வீரப் பதககத்தை மோனு அணிந்து கொள்கிருள் எழுச்சியுடன்.

வீரப்பதக்கம்! அண்ணன் பெற்றது? கொடியவர்களாம் ஜெர்மானியரைக் கொன்று குவித்ததற்காக! அந்த ஜெர்மானியரில் ஒருவன் இந்த **ஆஸ்க்கார்.** அவன் இந்த வீரப்பதக்கம் பற்றிய விவரம் கேட்கிருன். மோனு கூறுகிருள். நமது இனத்தவர்களைச் சாகடித்ததை வீரம் என்று மெச்சித் தரப்பட்டது இந்தப் பதக்கம், என்பதனை அறிந்ததும் ஆஸ்காரின் முகம் கடுகடுப்பை அல்லவா காட்ட வேண்டும்! இல்லை! அவன், ராபியைப் புகழ்ந்து பேசுகிருன்; பாராட்டுதலுக்குரிய வீரன என்று!!

என்ன விந்தை இது! கப்பிக் கொண்டிருந்த வெறுப்புணர்ச்சி எங்கே போய்விட்டது.

தன் அண்ணனைக் கொன்ற பாவிகளாம் ஜெர்மானிய இனத்தவரில் ஒருவனும் ஆஸ்க்காரிடம், மோனு வெறுப்பைக் காட்ட முடியவில்லை; எவ்வளவோ முயன்றும்.

தன் இனத்தவரைச் சுட்டுத் தள்ளியதற்காக வீரப்பதக்கம் பெற்ற ராபியைப் பாராட்டிப் பேசுகிருன் ஜெர்மானியன் ஆஸ்க்கார்!

கப்பிக் கொண்டிருக்கும் காரிருளைக்கிழித்தெறிந்துகொண்டு விண்மீன் கண் சிமிட்டுகிறதே!!

மோனுவிடம் ஏதோ ஓர்மாறுதல் தோன்றிவிட்டிருக்கிறது என்பது முதியவருக்குத் தெரிகிறது விவரம் புரியவில்லை.

பிரிட்டிஷ் கப்பலை ஒரு ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் தாககி அழித்தது பற்றியும், அதனுல் பலர் மாண்டது பற்றியும் கூறக்கேட்ட முதியவர், கொதித்துச் சபிக்கிருர், ஜெர்மானியர் நாசமாகப் போகட்டும்! ஆழ் நரகில் வீழட்டும்! என்று. ஏனப்பா இப்படி பகை உணர்ச்சி. நமது வேதம் இதனை அனுமதிக்காது, பகைவனிடமும் பச்சாதாபம் காட்டச் சொல்லுகிறது என்று முன்பு சொல்வீரே, நினைவில்லையா என்று கேட்டுவிடுகிருள் மோனு! முதியவர் திகைக்கிருர். மகளே! என்ன இது இவ்விதம் பேசுகிருய்! உன் போக்கே மாறிவிட்டிருக்கிறதே! எப்படி? எதனுல்? என்று கேட்கிருர்.

அவளுககே புரியவில்லை அந்தக் காரணம்! முதியவர் கேட்கிருர்; பதில் என்ன தருவாள்.

மோனு. முதியவர் மனதில் குடியேறிவிட்டாளோ?

முதியவர், மோனு மனதிலே இடம் பெற்றுவிட்டாரோ!

முதியவரின் முன்னுள் மனப்பான்மை இந்நாள் மோனுவுக்கும், முன்னுளில் மோனு கொண்டிருந்த மனப்பான்மை இதுபோது முதியவருக்கும் அமைந்து விட்டதோ! விந்தை! ஆனுல் காரணம்?

ஜெர்மானியரின் அட்டூழியம் பற்றிய செய்திகளைப் படிக்கிருர் முதியவர்; அவர் உள்ளத்திலே மூண்டு கிடந்த வெறுப்புணர்ச்சி மேலும் தழைத்துக்கொண்டிருக்கிறது.

அதே இதழ்களில், போர்ச் சூழ்நிலையிலும், இதயம் படைத்தவர்கள் நற்செயல் சில புரிகின்றனர் என்பதற்கான செய்திகள் வெளிவருகின்றன. மோனு அதைப் படித்துப்பார்க்கிருள். ஏற்கனவே மெள்ளமெள்ள அவள் உள்ளத்திலிருந்து கலைந்து கொண்டிருநத வெறுப்புணர்ச்சி மேலும் கலைகிறது.

எப்போது கலையத்தொடங்கிற்று அந்த வெறுப்புணர்ச்சி? **ஆஸ்க்கார்** எனும் ஜெர்மானியனைக் கண்ட நாள்தொட்டு; அவன் பேச்சிலே குழைந்திருந்த பாசத்தை உணர்ந்த நாள்முதல்.

• ஜெர்மானியரின் பாசறைப் பகுதியில், பலத்த அடிபட்ட பிரிட்டிஷ் போர் வீரனொருவன் தப்பிச்செல்ல முயற்சிக்கிருன். துரத்திப் பிடிக்க வருகின்றனர். ஒரு வீட்டுக்குள் நுழைந்துகொள்கிருன். அது ஒரு ஜெர்மானியன் வீடு!

அந்த வீட்டிலே, ஜெர்மன் படைத்தலைவர்கள் சிலர் விருந்துண்டுக் களிநடமாடுகின்றனர்.

வீட்டுக்குஉரியவனுன ஜெர்மானியன், பிரிட்டிஷ் வீரனைக் கண்டு விடுகிருன்.

ஒரு குண்டு! ஒரு அலறல்! ஒரு பிணம்! பிறகு கைதட்டல், பாராட்டு, வீரப்பதக்கம்!! — இப்படித்தானே நிகழ்ச்சி வடிவம் கொண்டிருக்க வேண்டும். அது போல நடக்கவில்லை.

உயிருக்குப் பயந்து ஒளிந்து கொள்ள வந்த பிரிட்டிஷ் படை வீரனை, அந்த ஜெர்மானியன் பிடித்து மேலிடம் ஒப்படைக்கக் கூட இல்லை. ஜெர்மன் தளபதிகள் கண்களில் பட்டுவிடாதபடி மறைந்துகொள்ள வழிசெய்து தருகிருன். அந்தத தளபதிகள் சென்றுன பிறகு, பிரிட்டிஷ் வீரனைத தப்பி ஓடிவிடும்படிச் சொல்லுகிருன்!

பிரிட்டிஷ் வீரன் உயிரை ஜெர்மானியன் காப்பாற்றுகிருன்! தீராத பகை! ஓயாத போர்! பயங்கரமான பழிவாங்கும் உணர்ச்சி! எங்கும் வெறுப்புணர்ச்சி கப்பிக் கொண்டிருக்கிறது. என்றுலும் ஒரு ஜெர்மானியன் இதயம் படைத்தவனுகிருன், இரக்கம் காட்டுகிறன், பகைவனுக்கே துணை செய்கிருன்.

இந்தச் செய்தியை மோனு இதழிலிருந்து முதியவருக்குப் படித்துக் காட்டுகிருள்.

புரிகிறதா அப்பா, எந்த இனத்திலும் நல்லவர்களும்இருக்கத்தான் செய்வார்கள். இதோ இந்த ஜெர்மானியன் நல்லவனல்லவா? என்று கேட்கிருள். முதியவர் மனதில் மூண்டுள்ள வெறுப்புணர்ச்சியைக் குறைத்திடலாம் என்ற எண்ணத்துடன்.

முதியவர் அதற்குத் தயாராக இல்லை

இவன் நல்லவனுக இருக்கலாம் மகளே! ஆனுல், என் மகன் உயிரைக் குடித்த குண்டு வீசியவன், இவனுடைய மகனுக இருந்திருந்தால்......மகளே! ஜெர்மானியரில் நல்லவர் என்று ஒரு பிரிவும் உண்டா? வெறியர்கள்! அழிந்துபட வேண்டியவர்கள்! மனிதகுல விரோதிகள்!—என்று முதியவர் பேசுகிருர்.

அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை, மோனுவினுல், அந்த இடத்தை விட்டுச் செல்கிருள்.

முதியவர் காண்கிருர்! என்னமோ நேரிட்டு விட்டிருக்கிறது, என் மகளின் மனதிலே ஓர் மாறுதல் புகுந்து விட்டிருக்கிறது, என்ன

காரணம் இந்த மாறுதலுக்கு? என்றெண்ணித் திகைக்கிறார்.

போரினில் ஈடுபட்டு இதயம் இரும்பாகி விடும் நிலையிலே கூட, மனிதத்தன்மை பளிச்சிட்டுக் காட்டத்தவறுவதில்லை என்பதற்கான சான்றுகள் ஒன்றன்பின் ஒன்றாக மோனாவுக்குக் கிடைக்கின்றன. அதன் காரணமாக ஜெர்மானியர் அனைவருமே கொடியவர்கள் என்ற எண்ணம் தகர்ந்து போய் விடுகிறது.

அவர்களிலேயும் நல்லவர்கள் உண்டு என்ற எண்ணம் பிறக்கிறது.

ஜெர்மானியர் எல்லோருமே கொடியவர்கள் என்றால் இவ்வளவு நல்லவனான ஆஸ்க்கார் எப்படி அந்த இனத்திலே பிறந்திருக்க முடியும் என்ற கேள்வி எழுந்தது. மோனாவின் மனமாற்றம் வேகமாக வளர்ந்த வண்ணம் இருந்தது. ஆனால் அவளைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டிருந்ததோ, வெறுப்புணர்ச்சிதான் முதியவரே ஒவ்வோர் நாளும் 'பிதா'வை வேண்டிக் கொண்டிருக்கிறார், கொடிய ஜெர்மானியரைக் கொன்றொழி என்று.

ராபி களத்திலே கடும் போரில் ஈடுபட்டிருந்தபோது பிரிட்டிஷ் படை வரிசையினால் தாக்கப்பட்டு, குற்றுயிராகிய ஒரு ஜெர்மன் போர் வீரன், ராபி இருந்த 'குழிக்கு' அருகே துடித்துக் கொண்டிருந்தான். அந்தக் காட்சியைக் கண்ட ராபி உருகிப் போனான் இவனை இப்படி இம்சைப்பட விடக்கூடாது என்ற இரக்க உணர்ச்சி எழுந்தது. பாய்ந்தோடிச் சென்று துடித்துக் கிடந்த ஜெர்மானியனை தன் வரிசையினர் பதுங்கிக் கிடந்த 'குழி'க்கு இழுத்துக்கொண்டு வந்தான். ஆனால் அந்த முயற்சியில் ஜெர்மன் படை வரிசையினரின் குண்டுகள் அவனைத் துளைத்தன; துடித்துக் கிடந்தான்.

ஒரே குழியில், ஒரு ஜெர்மன் போர் வீரன், பிரிட்டிஷ் படையினரின் குண்டடிபட்டு; ஒரு பிரிட்டிஷ் போர் வீரன், ஜெர்மன் குண்டடிபட்டு! ஜெர்மானியன் துடிப்பது கண்டு மனம்தாளவில்லை பிரிட்டிஷ் ராபிக்கு! ஜெர்மன் வீரனைக் காத்திடச் சென்றபோது ஜெர்மன் குண்டு தாக்குகிறது பிரிட்டிஷ் ராபியை! குண்டடிபட்ட இருவரும் ஒரே குழியில் கிடக்கிறார்கள்.

பிரிட்டிஷ் படை வேறிடம் செல்கிறது, அடிபட்ட இருவரையும் விட்டு விட்டு.

ஜெர்மானியன் மரணத்தின் பிடியிலிருந்து தப்பி விட்டான்; பிரிட்டிஷ் ராபியோ மரணத்தின் பிடியில் சிக்கிக் கொண்டான்.

கடைசி நேரம் நெருங்குவது அறிந்த ராபி, தன் கைக்கடியாரத்தைக் கொடுக்கிறான் ஜெர்மானியனிடம், நீ உயிர் தப்பி ஊர் திரும்பினால், இதனை என் தங்கையிடம் சேர்த்துவிடு என்று கூறிவிட்டு.

ராபி இறந்துவிடுகிறான்; அந்த ஜெர்மானியன் பிழைத்துக்கொள்கிறான்.

அவன், **ஆஸ்க்காருக்குப்** பள்ளித் தோழன். விவரம் தெரிந்துகொண்டு அந்தக் கைக்கடிகாரத்தை ஆஸ்க்காருக்கு அனுப்பி வைக்கிறான், ராபியின் தங்கையிடம் கொடுத்துவிடு, அதுதான் ராபியின் கடைசி விருப்பம் என்பதைக் கூறு என்று.

ஆஸ்க்கார் இந்தத் தகவலையும் கைக்கடியாரத்தையும் மோனாவிடம் கொடுக்கிறான். அவள் மனம் பாகாய் உருகிவிடுகிறது.

கடும்போர் நடைபெறும் களத்திலேகூட இப்படி ஒருநட்புணர்ச்சி பூத்திட முடிந்ததே!

ஒரே பதுங்குமிடத்தில் அடிபட்ட இருவர்; ஒருவர் ஜெர்மானியர் மற்றவர் பிரிட்டிஷ்.

அவர்கள் வெட்டிக் கொள்ளவில்லை, சுட்டுக் கொள்ளவில்லை; மரணப் படுக்கையிலே வீழ்ந்துவிட்டிருந்த அந்த இருவரும் நட்புணர்ச்சி பெற்றனர் முடிந்தது.

இந்த மனிதத் தன்மைதான் இயற்கையானது.

போர் இந்த இயற்கையான பண்பை அழித்து விடுகிறது.

ஒருவரிடம் ஒருவர் நட்புணர்ச்சி காட்டிடப் பிறந்த மக்களை, ஒருவரை ஒருவர் சுட்டுத் தள்ளிக் கொள்ளச் செய்கிறது; வெறி ஊட்டுகிறது; மனிதத் தன்மையை மாய்க்கிறது; போர்! ஏன்தான் போர் மூட்டிக் கொள்கின்றனரோ! என்றெல்லாம் எண்ணி உருகுகிறாள் மோனா.

மோனா ஒரே சமயத்தில் இரண்டு போர் முனைகளில் ஈடுபடவேண்டி நேரிட்டுவிட்டது.

ஒரு முனையில், தன் தகப்பனாரின் உள்ளத்தில் வளர்ந்தவண்ணம் இருந்த வெறுப்புணர்ச்சியைப் போக்கிடப் போரிடவேண்டி இருந்தது. வெற்றி கிட்டவில்லை.

மற்றோர் முனையில், **ஆஸ்க்கார்** நிற்கிறான், இதயத்தில் இடம்கொடு என்று கேட்டபடி; மறுத்திடவும் முடியவில்லை, கொடுத்திடவும் துணிவில்லை; போர் மூள்கிறது; நாளாகவாக மோனாவின் போரிடும் ஆற்றல் குறைந்துகொண்டு வருகிறது.

எப்போதும் ஆஸ்க்கார் பற்றிய நினைவு; இரவிலும்பகலிலும்; பார்க்கும்போதும் பார்க்காதிருக்கும் போதும். அந்தப் பாசம் நிறைந்த கண்கள் அவளைப் படாதபாடு படுத்துகின்றன.

வாய்திறந்து அவன் தன் காதலைக் கூறிடவில்லை. ஆனால் அவன் கண்கள் வேறென்ன பேசுகின்றன! ஜெர்மானியர்களை வெறுத்த நிலை மாறி, அவர்களிலும் நல்லவர் இருக்கின்றார்கள் என்ற அளவுக்குக் கருத்து மாற்றம்கொண்டு, ஆஸ்க்காரிடம் பச்சாதாபம் காட்டத் தொடங்கி, பிறகு பரிவுகொள்ளத் தொடங்கி, இறுதியில் காதலை அல்லவா அரும்பத் தொடங்கிவிட்டது. நெஞ்சிலே நெருப்பு மூண்டு கிடந்தது; அங்குக் காதல் மலருகிறதே; எப்படி? எண்ணுகிறாள், விம்முகிறாள்; குமுறுகிறாள்; எப்படியாவது தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகப் போராடுகிறாள்; துடிக்கிறாள்.

கேட்டாயா பெண்ணே! அக்கொடியவர் செயலை. பள்ளிக்கூடத்தின்மீது குண்டு வீசி, பச்சிளங் குழந்தைகளைக் கொன்றுவிட்டனர். இந்தப் பாவம் சும்மாவிடுமா! ஆண்டவன் இதைச் சகித்துக் கொள்வாரா! நமது அரசாங்கம் பழிக்குப்பழி வாங்காமலிருக்குமா! உடனே கிளம்ப வேண்டும், ஜெர்மன் குழந்தைகளைக் கொன்று போடவேண்டும். ஒரு பிரிட்டிஷ் குழந்தை கொல்லப்பட்டால், ஒரு ஆயிரம் ஜெர்மன் குழந்தைகள் கொல்லப்படவேண்டும்! ஒன்றுக்கு ஓராயிரம்! பழிக்குப்பழி!—என்று பதறுகிறார் முதியவர்.

அவர்கள் செய்த கொடுமையை நாமும் செய்வதுதான் நியாயமா!

குழந்தைகள் தூய்மையின் சின்னம்! ஜெர்மன் குழந்தைகளாக இருந்தால் என்ன! — இவ்விதம் பேசிப் பார்க்கிறாள் மோனா; முதியவரின் கோபம் அதிகமாகிறதே தவிர பழிவாங்கும் உணர்ச்சி மாறுவதாக இல்லை.

அதே சம்பவம் பற்றிய சேதி அறிந்த ஆஸ்க்கார், பச்சாதாபம் காட்டுகிறான். என் நாட்டவர் இந்தக் கொடுமை செய்ததைக் கேள்விப்பட்டு நான் வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன் என்கிறான். மோனாவின் மனம் சாந்தி அடையவில்லை. மிகக் கடுமையான முறையில் பேசுகிறார்.

நீ வெட்கப்பட்டு என்ன பயன், வேதனைப்பட்டு என்ன பயன். எங்கள் நாட்டுக் குழந்தைகளுக்கு நேரிட்டது போன்ற கொடுமை, உங்கள் நாட்டுக் குழந்தைகளுக்கு நேரிட வேண்டும், அப்போது புரியும் என்று மோனா கூறிவிட்டுப் போகிறாள். ஆஸ்க்கார் திகைத்துப் போகிறான்.

சில நாட்கள் வரையில் மோனா ஆஸ்க்காரைப் பார்க்கமுயலவில்லை, ஜெர்மானியரிடம் வெறுப்புணர்ச்சி கொள்ள முயற்சிக்கிறாள்.

கிருஸ்துமஸ் பண்டிகை! கைதிகள் முகாமிலேயும், இசை, விருந்து விழாக் கோலம்.

அன்றிரவு ஆஸ்க்கார் வருகிறான், வீடு நோக்கி.

வீட்டுக்குள்ளேயே வந்தமருகிறான்; காரணம், தனக்கு ஏற்பட்ட வேதனையை மோனாவிடம் கூறி ஆறுதல் பெற. அவனுடைய வீட்டின் மீது பிரிட்டிஷ் குண்டு வீசப்பட்டதில், அவனுடைய தங்கை பத்து வயதுச் சிறுமி இறந்துவிட்டிருக்கும் செய்தி அன்று அவனுக்குக் கிடைத்திருக்கிறது; வேதனை தாளமாட்டாமல் வந்தேன், ஆறுதல் அளித்திட வேறு யாரும் இல்லை. அதனால் இங்கு வந்தேன். தங்கச் சிலை என் தங்கை! பத்தே வயது! சின்னஞ் சிறு சிட்டு! என் உயிர்! எங்கள் குடும்பத்துக் கொடிமலர்! — என்றெல்லாம் கூறிக் குமுறிக் குமுறி அழுகிறான் ஆஸ்க்கார்.

வேதனை நிரம்பிய இந்தச் செய்தி பற்றி அவனுக்குக் கிடைத்த கடிதத்தைப் படித்துவிட்டு மோனா கலங்குகிறாள், அருகே செல்கிறாள் ஆறுதல் கூற! அணைத்துக் கொள்

கிறாள்! அவன் மெய்ம்மறந்த நிலை அடைகிறான். எவருமே பிரிக்க முடியாததோர் அணைப்பு! காலமெல்லாம் இதற்காகத்தானே காத்துக் கிடந்தோம் என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ளவில்லை, ஆனால் அந்த அணைப்பின் பொருள் அதுவாகத்தான் இருந்தது.

ஜெர்மானியரும் பிரிட்டிஷாரும் ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக் கொள்கின்றனர். இங்கு ஓர் ஜெர்மன் வாலிபனைத் தழுவிக்கொள்கிறாள் ஓர் பிரிட்டிஷ் கன்னி; காம வெறியால் அல்ல, கயமைக் குணத்தால் அல்ல, எந்தத் தடையும் தகர்த்தெறியும் காதலின் தூய்மை தந்திடும் வலிவு காரணமாக. இரண்டு உள்ளங்கள் கலந்துவிட்டன; இன பேதம், மூண்டுள்ள பகை, நடைபெறும் போர், கப்பிக் கொண்டுள்ள வெறுப்புணர்ச்சி எதுவும் அவர்களைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் ஜெர்மனி—பிரிட்டன் என்ற நாட்டுக் கட்டுகளை மீறியதோர் காதலால் கட்டுண்டு கிடந்தனர். ஒரு நிமிடமா, ஓராயிரம் ஆண்டுகளா, எவ்வளவு நேரமாக ஒருவரை ஒருவர் ஆரத் தழுவி நின்றனர் என்பது இருவருக்கும் புரியாத நிலை. நாடு இனம் எனும் உணர்ச்சிகளைக் கடந்த நிலை மட்டுமல்ல, காலத்தையும் கடந்ததோர் நிலை! காதல் உணர்ச்சி அவர்களைப் பிணைத்துவிட்டது.

கீழே ஏதோ பேச்சுக் குரல் கேட்ட முதியவர், தள்ளாடித் தள்ளாடி வந்து பார்க்கிறார், ஜெர்மானியனுடன் தன் மகள் குலவுவதை! திகைத்தார்! துடித்தார்! பதறினார்! கதறினார்! அடி கள்ளி! உன் அண்ணனை கொன்றவர் ஜெர்மானியர்; நீ அணைத்துக் கொண்டிருப்பது ஒரு ஜெர்மானியனை! விபசாரி! குடும்பத்துக்கும், நமது இனத்துக்கும் இழிவு தேடிவிட்டாயே! இந்தக் கள்ளக் காதல் காரணமாகத்தான் உன் போக்கு மாறிவிட்டிருந்ததா! பாவி! இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடுமா! உன் அண்ணனின் ஆவி உன்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு சித்திரவதை செய்யாதா! அண்ணன் உயிர் குடித்த அக்ரம ஜெர்மானிய இனத்தானுடன், அடிப் பாதகி! விபசாரி!... முதியவரால் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மகனைக் களத்திலே சாகடித்தான் ஒரு ஜெர்மானியன்! மகளின் கற்பையே அழிக்கத் துணிந்தான் மற்றோர் ஜொமானியன்! இதனைக் கண்ட பிறகுமா உயிர் தங்கும் உடலில்! கீழே சாய்ந்தார். கூக்குரல் கேட்டு அங்குவந்த பண்ணையாட்கள், முதியவரைப் படுக்கையில் கிடத்தினர். மோனாவின் இழிச்செயலைப்பற்றி முதியவர் பதறிக் கூறியது அவ்வளவையும் அவர்கள் கேட்டுவிட்டிருந்தனர். மோனா இனி அவர்களிடமிருந்து தப்பமுடியாது. அவள் பாதகி! காதகி! விபசாரி! என்று கூறிடும் அந்த ஊர் முழுதும். திரும்பிப் பார்த்தாள், ஆஸ்க்காரைக் காணோம். நடந்ததை நினைத்துக்கொண்டாள், அவளுக்கே நடுக்கம் எடுத்தது. படுக்கையில் பார்க்கிறாள், முதியவர் மரணத்தின் பிடியில் தன்னை ஒப்படைத்துவிட்டதை. சுற்றிலும் பார்க்கிறாள், சுட்டுவிடுவது போன்ற பார்வையைச்செலுத்தும்பண்ணையாட்களை. முதியவர் இறந்து விட்டார்.

ஊரே அவளைத் தூற்றுகிறது! பண்ணையாட்கள் அவளிடம் வேலை செய்வது இழிவு என்று கூறி விலகிக்கொள்கிறார்கள்.

அப்பனைச் சாகடித்தவள்

ஜெர்மானியனுடன் குலவினவள்

கெட்ட நடத்தைக்காரி

காம சேட்டைக்காரி

எனவெல்லாம் தூற்றுகிறார்கள்; இதயத்தைத் துளைக்கிறார்கள். நான் என்ன தவறு செய்தேன் என்று கேட்கமுடியுமா? இனத்தவர் முழுவதும் ஜெர்மானியரிடம் வெறுப்புணர்ச்சியைக் கக்கிடும் போது இவள் ஒரு ஜெர்மானியனுடன் காதல் கொண்டால் சகித்துக்கொள்வார்களா! இனத்துரோகி நாட்டுத் துரோகி! பெண்குலத்தின் பெருமையையே அழித்தவள்என்று பேசத்தான் செய்வார்கள். ஜெர்மானியன் பிரிட்டனைத் தோற்கடித்து, பொன்னையும், பொருளையும்தான் கொண்டுபோயிருப்பான், இந்தப் பொல்லாதவள் ஜெர்மானியனிடம் கற்பையே அல்லவா பறிகொடுத்தாள்; மனமொப்பி!

பண்ணை முழுவதும், முதியவர் மோனாவுக்கே சொந்தமாக்கி வைத்திருந்தார். தூற்றுவோர் தூற்றட்டும் என்று எண்ணிக்கொண்டு மோனா பண்ணை வேலைகளைப் பார்த்துக்கொண்டுவந்தாள்.

மோனாவும் ஆஸ்க்காரும் பல நாட்கள் சந்திக்கக்கூட இல்லை.

அவர்கள் இருவரும் கள்ளக் காதல் நடத்திக்கொண்டிருந்தனர், அதனை ஒருநாள் முதியவர் கண்டுபிடித்துவிட்டார் என்று ஊர் பேசிற்று; நடைபெற்றதோ ஒரு கணம் தோன்றி அவர்கள் இருவரையும் பிணைத்துவிட்ட காதல் உணர்ச்சி. அதனை அவள் விளக்கிடத்தான் முடியுமா. ஊரே தூற்றுகிறது அவளை விபசாரி என்று.

வெறுப்புணர்ச்சிக்கும் மனிதத் தன்மைக்கும் நடைபெறும் கடும் போர், உள்ளத்தை உலுக்கி விடத்தக்கது, பலருடைய வாழ்க்கையிலே விபத்துக்களை மூட்டிவிடக் கூடியது என்பது ‘இரும்பு முள் வேலி’ போன்ற ஏடுகள் மூலம் விளக்கப்படுகின்றன.

ஆனால் இதிலே எடுத்துக் காட்டப்படும் ‘மக்கள் மனப்போக்கு’ எளிதிலே மாற்றப்படுவதில்லை, மூட்டி விடப்பட்ட வெறுப்புணர்ச்சியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள மக்களில் பெரும்பாலோரால் முடிவதில்லை.

வெறுப்புணர்ச்சி சூழ்நிலை கப்பிக்கொண்டிருக்கும் போதும் மோனா போல் ஒருவரிருவர் அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்கின்றனர்-என்றாலும் வெறுப்புணர்ச்சியின் பிடியில் தம்மை ஒப்படைத்துவிட்ட மக்கள், ‘மோனா’ போன்றவர்கள் மீது சீறிப்பாய்வர்.

மோனா, பிரிட்டிஷ் இனம்; ஆஸ்க்கார், ஜெர்மன் இனம்; இருந்தால் என்ன? காதல் அவர்களைப் ‘பிணைக்கிறது! அதிலே என்ன தவறு என்று எண்ணிட முடியவில்லை, வெறுப்புணர்ச்சி கொண்ட மக்களால்.

எந்த நாட்டிலும் இவ்விதமான உணர்ச்சியின் பிடியில் சிக்கிக் கொண்ட மக்களின் தொகையே மிக அதிகம்.

பெர்ல் பக் எனும் உலகப் புகழ் பெற்ற ஆசிரியர், தமது படைப்புகளில், இதுபோன்ற உணர்ச்சிக் குழப்பங்களை விளக்கிக் காட்டியுள்ளார்.

மோனாவுக்கு ஏற்பட்ட பிரச்சினை தன் மனதிலே இடம் பெற்ற ஜெர்மானியனை மணம் செய்து கொள்வது தவறல்ல என்பதை நாட்டவர் ஒப்புக்கொள்ளச் செய்திட வேண்டும் என்பதாகும்

மற்றோர் ‘முனை’யைக் காட்டுவது போல, பெர்ல் பக் ஓர் கதையைத் தீட்டி அளித்துள்ளார்.

ஜப்பானியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் போர் நடந்திடும் நேரம்-இரண்டாவது உலகப்போர் இட்லர் மூட்டிவிட்டபோர்!

ஜப்பானியரைக் கண்டதும் சுட்டுத்தள்ள வேண்டும் என்ற உணர்ச்சி அமெரிக்கர்களுக்கு; அது போன்றே ஜப்பானியருக்கும்.

இது ‘தேசிய உணர்ச்சி’ என்ற மதிப்புப் பெற்றுவிட்டிருந்த நேரம்.

அவனும் மனிதன் தான்!-என்று பேசுவதே தேசத் துரோகம்!

அவன் ஜப்பானியன், ஆகவே கொல்லப்பட வேண்டியவன் என்ற எண்ணம், ஏற்புடையது என்று ஆக்கப்பட்டு விட்டிருந்த சூழ்நிலை.

அந்நிலையில், ஏதோ விபத்திலே சிக்கி, குற்றுயிராகிக் கிடந்த நிலையில் ஒரு அமெரிக்கன், கடலோரம் கிடத்தப்பட்டிருப்பதை ஒரு ஜப்பானியன் காண்கின்றான்.

அந்த ஜப்பானியன் ஒருடாக்டர். அமெரிக்கனோ, உயிருக்கு மன்றாடுகிறான்!

டாக்டரின் கடமை என்ன? விபத்திலே சிக்கி உயிர் துடித்துக் கொண்டிருப்பவனைக் காப்பாற்றுவது! இனம், ஜாதி, எனும் எதனையும் கவனிக்கக்கூடாது நோயாளி-டாக்டர் என்ற தொடர்பு மட்டுமே அதுபோது தெரிய வேண்டும்.

வீட்டுக்கு எடுத்துச் சென்று சிகிச்சை செய்கிறான், அமெரிக்கன் பிழைத்துக் கொள்கிறான்.

எந்த அமெரிக்கனைக் கொல்வது, ‘தேசியக்கடமை’ என்றுகொள்ளப்பட்டிருக்கிறதோ, அந்த அமெரிக்கனைச் சாவின் பிடியிலிருந்து மீட்டு விட்டான்!

மருத்துவன், தன் கடமையைச் செய்தான்! ஆனால் ஜப்பானியன் என்ற முறையில் செய்ய வேண்டியதை மறந்து!!

இது தேசத் துரோகம் என்று கருதப்படுமே, தன் மீது பழிவருமே என்ற பயம் பிடித்துக் கொள்கிறது ஜப்பானிய மருத்துவரை.

அதே ஊரில் இருந்த மேலதிகாரியிடம் சென்று, ஒரு அமெரிக்கன், பிடிபட்டிருக்கிறான் என்றும், தன் வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறான் என்றும் கூறுகிறான்,

அந்த அதிகாரி, அமெரிக்கனை இரவு இரண்டு ஆட்களை ஏவி கொன்றுவிடச் செய்வதாகக் கூறி அனுப்புகிறான்.

எந்த அமெரிக்கன் உயிரைக் காப்பாற்றினானோ, அதே அமெரிக்கன் உயிரைப் போக்க ஏற்பாடு செய்வதாக அதிகாரி கூறுகிறார்; அதற்கு இந்த ஜப்பானிய மருத்துவர் உடந்தை!

இது கொலைபாதகச் செயல்! ஆனால், இரக்கமற்றவனா இந்த ஜப்பானியன் என்றால், இல்லை! உயிர்காத்தவன்! மருத்துவன்! எனினும் இதற்கு இணங்குகிறான். ஏன்? தன்னை ஒரு ஜப்பானியன் என்று மெய்ப்பித்துக்கொள்ள வேண்டுமே, அதனால்.

நாமாக அவனைக் கொல்லக் கூடாது; வேறு யாராவது கொன்றால் கொன்றுகொள்ளட்டும்என்று எண்ணுகிறான்.

இதற்கிடையில் அவன் மனதில் எவ்வளவு கடுமையான போராட்டம் நடந்திருக்கவேண்டும்!

ஜப்பானியனாக இருந்தாலும் தன் உயிரைக் காத்தானே இந்த உத்தமன் என்றுஎண்ணிக்கொண்டு படுத்துக் கிடக்கிறான் அந்த அமெரிக்கன்.

அவன் கொல்லப்படுவதற்கான ஏற்பாட்டினுக்கு அதே ஜப்பானியன் உடந்தையாகிறான் என்பதை அறியவில்லை.

சாகக்கிடந்தவனை நாம்தானே காப்பாற்றினோம்; இப்போது அவனைக்கொல்வதற்கு நாம்தானே காரணமாக இருக்கிறோம்; அவனைச் சாகடிக்கவா பிழைக்கவைத்தோம் என்று எண்ணாமலிருந்திருக்க முடியுமா!!

ஓரிரவு, ஈரிரவு, ஆகிறது; அமெரிக்கன் கொல்லப்படவில்லை.

மேலதிகாரி,சொன்னபடி கொலை செய்யும் ஆட்கள் வரவில்லை.

கடைசியில், ஜப்பானியன், அமெரிக்கனை ஒருபடகில் ஏற்றி, தப்பிச் சென்றுவிட ஏற்பாடு செய்துவிடுகிறான். வேறோர் தீவில் அமெரிக்க முகாம் இருக்கிறது அங்குப் போய் விடச் சொல்கிறான்.

மனிதத்தன்மை எனும் உணர்ச்சியின் வெற்றி என்பதா இதனை!

மேலதிகாரியிடம் சென்று, நீங்கள் சொன்னபடி ஆட்களை அனுப்பவில்லை; அவன் தப்பியோடி விட்டான் என்று கூறுகிறான் ஜப்பானியன்.

மேலதிகாரி பதறவில்லை! அவரும் உள்ளூற அந்தக் ‘கொலை’ கூடாது என்று எண்ணினார்போலும்! அவர் உள்ளத்திலும் மனிதத் தன்மை மேலோங்கி நின்றிருக்கும் போல் தெரிகிறது.

உன் கடமையை நீ செய்தாய்! அமெரிக்கன் பிடிபட்டிருக்கிறான் என்பதை அறிவித்துவிட்டாய்; நான் அனுப்பிய ஆட்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள். சரி! நடந்தது நடந்து விட்டது! நடந்தது வெளியே தெரியவேண்டாம்!-என்று மேலதிகாரி கூறிவிடுகிறார்.

ஆக இரு ஜப்பானியர், தம்மிடம் சிக்கிய ஒரு அமெரிக்கனைக் கொன்றுப்போட வாய்ப்பு இருந்தும் அவனைச் சாவின் பிடியிலிருந்து மீட்டதுடன், தப்பியோடிடவும் செய்துவிடுகின்றனர்.

இதுபோன்ற உணர்ச்சிகளின் மோதுதல், பலரால் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

வெறுப்புணர்ச்சி இயற்கையானது அல்ல; மூட்டிவிடப்படுவது; மனிதத் தன்மைதான் இயற்கையானது, அதனைப் போர் மாய்த்துவிடுகிறது என்பதை விளக்கிட.

‘இரும்பு முள்வேலி’யில் மோனா, மனிதத் தன்மையின் எடுத்துக் காட்டாக விளங்குகிறாள், மெத்தப் பாடுபட்டு தன்னை வெறுப்புணர்ச்சியிலிருந்து விடுவித்துக்கொண்டவளாக!

அவள் மீது வெறுப்புணர்ச்சிகொண்டோர் பாய்கின்றனர்.

இது, காவல்புரிய வந்திருந்த ஒரு பிரிட்டிஷ் வீரனுக்குத் துணிவைக் கொடுத்தது; மேனாவைச் சுற்றி வட்டமிடத் தொடங்கினான்.

ஜெர்மானியனுக்கே இணங்கியவள், நாம் தொட்டால் பட்டா போய்விடுவாள் என்று எண்ணிக்கொண்ட அந்த இழிமகன், ஓரிரவு அவள் வீடுசென்று கற்பழிக்கவே முயலுகிறான். அவள் போரிடுகிறாள்; அலறுகிறாள். எங்கிருந்தோ வந்த ஒருவன், அந்தக் கயவனைத் தாக்கித் துரத்துகிறான். தக்க சமயத்தில் வந்திருந்து தன் கற்பினைக்காத்த வீரன் யார் என்று பார்க்கிறாள் மோனா. ஆஸ்க்கார்! அரும்பு மலர்ந்தேவிட்டது!

நிகழ்ச்சிகள் பலப்பல உருண்டோடுகின்றன.

கற்பழிக்கவந்த கயவனை ஜெர்மன் கைதிகள் சூழ்ந்துகொண்டு தாக்குகின்றனர், ஒருநாள்; மோனா தான் அவனைக் காப்பாற்றுகிறாள்.

தன்னைத் தாக்கியவர்களைத் தூண்டிவிட்டவன் ஆஸ்க்கார் என்று பழிசுமத்துகிறான் காவலாளிகளின் தலைவன். விசாரணை நடத்த மேலதிகாரிகள் வந்தபோது, ஆஸ்க்கார் குற்றமற்றவன் என்பதை விளக்கிக் காட்டுகிறாள் மோனா. தன் கற்பைக் கெடுக்க காவலர் தலைவன் முயன்றபோது, காப்பாற்றியவன் ஆஸ்க்கார் என்பதைக் கூறுகிறாள். ஆஸ்க்கார் குற்றமற்றவன் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது.

இனிக் களைந்தெறிய முடியாத அளவு வளர்ந்துவிட்ட காதல் உணர்ச்சியைத் தாங்கிக்கொண்டு இருவரும் தத்தளித்துக்கொண்டிருந்தனர். களத்திலே போர், ஜெர்மானியருக்கும் பிரிட்டிஷாருக்கும்; இங்கு காதலா! ஒப்புமா உலகு? ஊரோ, மோனா ஜெர்மானியனுக்கு கள்ளக்காதலி ஆகிவிட்டாள் என்று ஏசுகிறது. சபிக்கிறார்கள்—வெறுப்பைக் கக்குகிறார்கள். அண்ணன் நாடு காக்க உயிரைக் கொடுத்தான்; இவள் பகைவனுக்குத் தன்னையே கொடுத்துவிட்டாள்! பிறந்தாளே இப்படிப் பட்டவள் ஒரு வீரக் குடும்பத்தில்! இவளையும் நாடு தாங்கிக்கொண்டிருக்கிறதே என்றெல்லாம் ஏசினர்.

மோனாவுக்கு இந்தத் தூற்றலைப் பற்றியெல்லாம் கவலை எழவில்லை, அவனுடைய கவலை முழுவதும், அவள் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டிருந்த காதல் பற்றியே! என்ன முடிவு ஏற்படும் இந்தக் காதலுக்கு! இந்தக் காதல், நாடு இனம் எனும் கட்டுகளை உடைத்துக்கொண்டு பிறந்துவிட்டது. போர்ப்புகையால்அரும்பைஅழித்துவிட முடியவில்லை. மலரே ஆகிவிட்டது!! ஆஸ்க்காருடன் கடிமணம் செய்துகொண்டு வாழ்ந்தாக வேண்டும். இந்தப் போர்ச் சூழ்நிலையில் இது நடைபெறக்கூடிய காரியமா! அனுமதி கிடைக்குமா! சமுதாயம் ஒப்புக்கொள்ளுமா!

தத்தளிக்கிறாள் மோனா—திகைத்துக் கிடக்கிறான் ஆஸ்க்கார்.

காரிருள் நீங்குமா, பொழுது புலருமா, புது நிலை மலருமா என்று எண்ணி எண்ணி ஏங்கிக் கிடக்கின்றனர் காதலால் கட்டுண்ட இருவரும்.

விடிவெள்ளி முளைக்கிறது, பல இடங்களில் செம்மையாக அடி வாங்கி நிலை குலைந்துபோய்விட்டது ஜெர்மன் படைகள். கெய்சரின் வெறிக்கு நாம் பலியாக்கப்பட்டோம் என்ற உணர்ச்சி ஜெர்மன் மக்களிடம் பீறிட்டுக்கொண்டு கிளம்பிற்று. நம்மை அழிப்பவர், உண்மையான பகைவர் பிரிட்டனிலே இல்லை, ஜெர்மனியிலே இருக்கிறார், போர் மூட்டிவிட்ட கெய்சரே நம்மை அழித்திடத் துணிந்தவர். நாம் அழிவைத் தடுத்துக்கொள்ளவேண்டுமானால் கெய்சரை விரட்டவேண்டும்; போர் நிறுத்தத்தைக் கோரவேண்டும் என்று ஜெர்மன் மக்கள் துணிகின்றனர். சமாதானம் ஏற்படுகிறது. பீரங்கிச் சத்தம் நிற்கிறது; இரும்பு முள் வேலிகள் அகற்றப்படுகின்றன. கவலை தோய்ந்த முகங்களிலெல்லாம் ஒரு களிப்பு பூத்திடுகிறது. போர் முடிந்தது! அழிவு இனி இல்லை! பகை இல்லை, புகை எழாது! களம் நின்று குருதி கொட்டினர் எண்ணற்றவர்; ஆயிரமாயிரம் வீரர் பிணமாயினர்; இனி வீரர் வீடு திரும்பலாம்; பெற்றோரை மகிழ்விக்கலாம் காதற் கிழத்தியுடன் கொஞ்சி மகிழலாம், குழந்தைகளின் மழலை கேட்டு இன்பம் பெறலாம் உருண்டோடி வரும் பீரங்கி வண்டிகள் கிளப்பிடும் சத்தம் வீழ்ந்து வீழ்ந்து வேதனைத்தீயால் துளைக்கப்பட்ட செவிகளில் இனி மகனே! அப்பா! அண்ணா! மாமா! தம்பி! அன்பே! கண்ணாளா—என்ற அன்பு மொழி இசையெனப்புகும்; மகிழ்ச்சி பொங்கும்.

சடலங்கள் கிடக்கும் வெட்டவெளிகள், இரத்தம்தோய்ந்த திடல் அழிக்கப்பட்ட வயல், இடிபாடாகிவிட்ட கட்டிடங்கள், ஆழ்குழிகள், அதிலே குற்றுயிராகக் கிடந்திடும் வீரர்கள் — இவைகளையே கண்டு கண்டு புண்ணாகிப்போயிருந்த கண்களில், இனி வாழ்வு தெரியும், மாடு மனை தெரியும் மக்கள் சுற்றம் தெரிவர், விருந்து மண்டபம் தெரியும், விழாக்கோலம் தெரியும், பூங்கா தெரியும், ஆங்கு உலவும் பூவையின் புதுமலர் முகம் தெரியும்; கண்கள் களி நடமிடும்.

மோனாவுக்கும் ஆஸ்க்காருக்கும் கூடப் புதுவாழ்வு பிறந்திடுமல்லவா!

பகைவனிடமா காதல், ஜெர்மன் வெறியனிடமா காதல் என்ற பேச்சுக்கு இனி இடமில்லை அல்லவா?

சமாதானம் ஏற்பட்டுவிட்டது, இனி ஜெர்மானியரும் பிரிட்டிஷ் மக்களும் பகைவர்கள் அல்லர், வெவ்வேறு நாட்டினர், நேச நாட்டினர். இனி மோனாவை ஆஸ்க்காரிடமிருந்து பிரித்துவைக்கும் பேதம் ஏது!

கைதிகளை விடுதலை செய்து ஜெர்மன் நாட்டுக்கு அனுப்பிவிடும்படி உத்திரவு வந்துவிட்டது. சிறு சிறு அளவினராக அவர்கள் ஜெர்மனிக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். ஆஸ்க்கார்? அவனையும்தான் போகச் சொல்லுவார்கள் ஜெர்மனிக்கு. அவன் போய்விடுவதா! நான்? என் கதி!—என்று எண்ணுகிறாள் மோனா.

பிரிட்டிஷ் பெண்ணை மணம் செய்து கொள்பவன் ஜெர்மனி போகத் தேவையில்லை, என்றோர் விளக்கம் கிடைக்கிறது; மோனா மனதிலே ஒரு நம்பிக்கை எழுகிறது.

ஆஸ்க்காரைத் திருமணம் செய்துகொண்டு தீவிலேயே வாழலாம்; பண்ணை வேலைகளை இருவரும் கவனித்துக் கொள்ளலாம். கள்ளி என்றும் விபசாரி என்றும் ஏசிப்பேசினவர்கள் கண்முன், நாங்கள் காதலித்தோம் கடிமணம் புரிந்துகொண்டோம் காண்பீர்! ஏதேதோ கதைத்தீர்களே முன்பு. இப்போது புரிகிறதா? நாங்கள் எந்த முறைகேடான செயலிலும் எங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை; முறைப்படி திருமணம் செய்துகொண்டோம் என்று கூறிடலாம்; வீசப்பட்ட மாசுகூட துடைக்கப்பட்டுவிடும் என்று எண்ணிக்கொண்

டாள் மோனா. பேதைப் பெண்! இந்த உலகம் உண்மைக் காதல் வெற்றிபெற அவ்வளவு எளிதாக அனுமதி கொடுத்து விடுகிறதா! துளியும் எதிர்பாராதிருந்த இன்னல்கள் தாக்கிடக் கிளம்பின.

மிராசுதாரர், குத்தகைக் காலம் முடிந்துவிட்டது, இனி பண்ணையை விட்டு வெளியேறு என்று உத்திரவு பிறப்பித்தார்.

மறுபடியும் குத்தகைக்குக் கொடுமய்யா! எப்போதும் போலத் தொகை கொடுத்துவருகிறேன், பாடுபட்டு, பண்ணையம் நடத்தி என்கிறாள் பாவை. "உனக்கா! ஊர் என் முகத்திலே காரித் துப்பும்! ஜெர்மனிக்காரனுடன் திருட்டுத்தனமாகத் தொடர்பு கொண்டவளல்லவா நீ! உன் அப்பனே அதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து செத்தானே! நீதானே அவனைக் கொன்றுபோட்டாய்! உனக்கு என் பண்ணையைக் குத்தகைக்குத் தர முடியாது. விரைவில் வெளியேறு என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான் மிராசுதாரன்.

ஊர் மக்கள் கொண்டிருந்த வெறுப்பு மாறவில்லை. இங்கு எவரும் ஆதரிக்கமாட்டார்கள்; தங்கும் இடமும் தரமாட்டார்கள்; தொழிலும் நடத்தவிட மாட்டார்கள் என்பது புரிந்துவிட்டது. மோனாவின் மனம் உடைந்துவிடுவது போலாகிவிட்டது. ஆஸ்க்கார் கூறினான், "கலக்கம் வேண்டாம்! நாம் வாழ வழி இருக்கிறது. நான் ஜெர்மானியன் என்றாலும், பிரிட்டனில்தான் ஒரு தொழில் நிலையத்தில் வேலை பார்த்துவந்தேன். போர் மூண்டதும் ஜெர்மானியன் என்பதால் என்னைச் சிறைப்பிடித்தார்கள். நான் தவறேதும் செய்தவன் அல்ல என்பதும் ஜெர்மனியில் கெய்சர் மேற்கொள்ளும் போக்கினைக் கண்டிப்பவன் என்பதையும் நான் வேலை பார்த்த தொழில் நிலையத்தார் அறிவர்; அப்போதே எனக்கு உறுதி அளித்தார்கள், போர் முடிந்து புது உறவு மலர்ந்ததும் நீ இங்கேயே வேலைக்கு வந்து அமரலாம்; உனக்காக அந்த வேலை காத்துக் கொண்டே இருக்கும் என்பதாக. இப்போது அதை நினைவுபடுத்திக் கடிதம் எழுதுகிறேன். வேலை கிடைத்துவிடும்; பிரிட்டன் சென்று வாழ்ந்திடலாம்; போர்க் காலத்து நிகழ்ச்சிகள் கெட்ட கனவுபோல கலைந்தோடிப் போய் விடும். இல்லறம் எனும் நல்லறத்தில் இன்பம் பெறுவோம்; இனத்தைக் காட்டி ஒன்றுபட்டுவிட்ட இதயங்களைப் பிரித்திட முடியாது என்பதை உலகு உணரட்டும் என்றான். இசையென இனித்தது அவன் பேச்சு. ஆனால் சின்னாட்களில் இடியெனத் தாக்கிற்று பிரிட்டிஷ் தொழில் நிலையம் அனுப்பிவைத்த பதில் கடிதம். வேலை இப்போதைக்கு இல்லை! போர் முடிந்துவிட்டது என்றாலும், இங்கு ஜெர்மானியர்கள்மீது பரவிவிட்டுள்ள வெறுப்புணர்ச்சிகுறையவில்லை. இங்நிலையில் தொழில் நிலையத்தில் ஒரு ஜெர்மானியனை வேலைக்கு அமர்த்துவது ஆபத்தாக முடியும். கடிதம் இந்தக் கருத்துடன். ஆஸ்க்கார் அழவில்லை; சிரித்தான்! வெறுப்புணர்ச்சியின் பிடியிலே உலகே சிக்கிவிட்டிருப்பதை எண்ணிச் சிரித்தான்! மோனா! போர் நின்றுவிட்டது என்கிறார்களே, எங்கே நின்றுவிட்டது! சமாதானம் மலர்ந்துவிட்டது என்கிறார்களே, எங்கே அதன் மணம்! நகை உணர்ச்சி ஒழியாமுன்பு போர் நின்றுவிட்டது என்று கூறுவது பொருளற்ற பேச்சு. மோனா! போர் நடந்தபடி இருக்கிறது! வெறுப்புணர்ச்சி தாண்டவமாடியபடியேதான் இருக்கிறது. இதோ பார் கடிதத்தை! ஒரு ஜெர்மானியனை வேலைக்கு வைத்துக்கொள்ள முடியாதாம்! ஆபத்தாம்! ஆஸ்க்காரின் பேய்ச்சிரிப்புக் கேட்டு மோனா பயந்துவிட்டாள்! நிலைமையை அறிந்து கண்கலங்கினாள்.

அமெரிக்கா, இனவெறி அற்ற இடம்; யாரும் சென்றிடலாம், தாயகமாகக்கொண்டிடலாம் என்ற செய்தி அறிந்தனர் காதலர். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரேவெள்ளக்காடாக இருக்கையில்

தொலைவிலே ஒரு பசுமையான இடம் தெரிந்தால் மகிழ்ந்திடும் புள்ளினம்போலாயினர். புறப்படுவோம் அமெரிக்காவுக்கு; புதிய உலகுக்கு; இனபேதமற்ற சமுதாய நெறி தவழ்ந்திடும் நாட்டுக்கு என்று எண்ணினர். ஆனால் அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது. எந்த இனத்தவரும் அமெரிக்கா வந்து குடியேறலாம். ஆனால் குறிப்பிட்ட அளவு பணத்தோடு வந்தால் மட்டுமே இடம் கிடைக்கும், ஒரு வசதியுமின்றி புகுந்து கொண்டு நாட்டுக்குப் பாரமாக இருக்கக் கூடாது என்ற நிபந்தனை குறுக்கிட்டது.

பண்ணை நடத்தியதில் ஏற்பட்ட நஷ்டங்களுக்காக மோனா தனக்குச் சொந்தமான பசுக்களை விற்று விட்டாள். அவளிடம் இருந்த செல்வம் பசுக்கள் மட்டுமே! ஆகவே இப்போது அவள் பரம ஏழை! ஆஸ்க்காரோ 'கைதி'யாக இருந்தவன்! இருவரும்பணத்துக்கு என்ன செய்யமுடியும்! அமெரிக்காவை மறந்துவிட வேண்டியது தான். அது பொருள் உள்ளவர்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளும் பொன்விளையும் பூமி. ஏழைக்கு அங்கு இடமில்லை! வேறு என்ன செய்வது? வாழ இடம்? வாழ வழி?

தயங்கித் தயங்கிக் கூறினான் ஆஸ்க்கார், "மோனா நீ மட்டும் சம்மதித்தால், நாம் நிம்மதியாக வாழ, மதிப்புடன் குடும்பம்நடத்த வழி இருக்கிறது. போரை மறந்து, போர் கிளறிவிட்ட பகை உணர்வை மறந்து ஜெர்மனிக்கு வந்திருக்கச் சம்மதித்தால், நாம் இருவரும் அங்கு சென்று வாழ்ந்திடலாம், அம்மா அன்புள்ளம் கொண்டவர்கள். என் வாழ்வே தன் வாழ்வு என்பவர்கள். உன்னைக் கண்டால் பூரித்துப் போவார்கள்! போகலாமா?" என்றுகேட்டான். மோனா சம்மதித்தாள். இடம் எதுவாக இருந்தால் என்ன, அவருடன் இருந்திடும் இடமே எனக்குத் திரு இடம் என்று கருதினாள். ஆர்வத்துடன் கடிதம் எழுதினான் ஆஸ்க்கார் தன் அன்னைக்கு. பதில் வந்தது. இருவர் நெஞ்சிலும் நெருப்பை வாரிக் கொட்டுவது போல.

எப்படியடா மனம் துணிந்தது நம்மை நாசமாக்கிய பிரிட்டிஷ் இனத்தின் பெண் ஒருவளைக் காதலிக்க. அவர்கள் நமக்குச் செய்த கொடுமையை எப்படி மறந்துவிட முடிந்தது. உன் தங்கை, பத்துவயதுச் சிறுமியைக் கொன்றதுபிரிட்டிஷ்குண்டு என்பதையும் மறந்தனையா? காதல் கண்ணை மறைக்கிறதா! என் மகனா நீ! ஜெர்மானியன் தானா நீ? நாட்டைவிடப் பெரியவளோ உன்னை மயக்கிவிட்ட கள்ளி!- என்றெல்லாம் கண்டனச் சொற்களைக் கொட்டியிருந்தாள் மூதாட்டி அந்தக் கடிதத்தில்.



போர் முடிந்துவிட்டது என்றால் புது நேசம் பிறந்துவிட்டது, பகை அழிந்துவிட்டது, பாசம் பிறந்துவிட்டது என்பதல்ல பொருள், பீரங்கி ஓசை இல்லை, படைகொண்டு தாக்குதல் இல்லை, ஆனால் ஜெர்மானியர் ஜெர்மானியர்தான், பிரிட்டிஷார் பிரிட்டிஷார் தான்—வெவ்வேறு இனம்!-என்றகருத்து பிடித்துக்கொண்டிருக்கிறது என்பதனை இருவரும் உணர்ந்தனர். வெறுப்புணர்ச்சியற்ற ஒருநாடே கிடையாதா! இனத்தை மறந்து இதயங்கள் ஒன்றுபட்டால் கடிமணம் புரிந்துகொண்டு வாழ்ந்திட இடமளிக்கும் நாடே கிடையாதா என்று எண்ணி ஏங்கினர்.

ஒரு இடம் இருக்கிறது, போரும் பகையும் அற்ற இடம்; பேதமும் குரோதமும் அற்ற இடம்; மனிதர்களாக வாழக்கூடிய இடம்; வெறுப்புணர்ச்சி நுழைய முடியாத இடம் ஒன்று இருக்கிறது மோனா! நான் அங்குப் போய்விடுவது என்று தீர்மானித்து விட்டேன் என்று கூறுகிறான் ஆஸ்க்கார். அது எந்த இடம் என்று கேட்கிறாள் மோனா! அவன் கூறுகிறான்; அவள் திடுக்கிட்டுப்போகிறாள்; மறுகணம் உறுதி பெறுகிறாள்; உண்மைகாண் ஆஸ்க்கார்! அந்த இடமே பகைப் புயல் வீசாத இடம், நிம்மதியாக வாழ்ந்திட ஏற்ற இடம்; ஆனால் அங்கு நீ மட்டுமா செல்வது; எனக்கும் அதே இடந்தான்; இருவருமே செல்வோம் நமக்கு ஏற்ற அந்த இடத்துக்கு என்கிறாள் மோனா. அவர்கள் தேர்ந்தெடுத்த இடம், கொந்தளிக்கும் கடல், மரணபுரியில் மட்டுமே நாம் வாழ்ந்திடமுடியும்; மக்களை மாக்களாக்கிடும் வெறுப்புணர்ச்சி தீண்டாத இடம் அதுவே. வேறு எந்த இடமும் நம்மை ஏற்றுக்கொள்ளாது! உன் இனம் என்ன? என்று கேட்கும்; உன் மரபு என்ன? என்று கேட்கும். மரணபுரியில் மட்டுமே

அந்தக் கேள்விகள் எழுவதில்லை. மான்தீவிலே இடம் இல்லை! பிரிட்டன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அமெரிக்காவிலே தங்கிட அனுமதி

இல்லை. ஜெர்மனி துரத்துகிறது உள்ளே நுழையாதே, இடம் கிடையாது என்று. அதோ ஆழ்கடல்! கொந்தளித்தபடி இருக்கிறது. அலைக்கரம் நீட்டி வா! வா! என்று அழைக்கிறது. காதலால் கட்டுண்ட என் மக்களே! நாடு பலவும் உங்களை வாட்டுகின்றனவா, இனபேதம் கிளறிவிடும் வெறுப்புணர்ச்சியால். கவலைப் படாதீர்கள்! இதோ நான் இருக்கிறேன், உங்களை ஆரத்தழுவி வரவேற்றிட! இங்கு இனபேதம் பகை உணர்ச்சி கிடையாது! வந்திடுவீர்! வந்திடுவீர்? என்று கூவி அழைக்கிறது. பல நாடுகள் இடமளிக்க மறுத்துவிட்டன இந்தக் காதலருக்கு; காதலின் மேன்மையினை அறிந்திடும் திறனற்று. இதோ இந்த இடமே நமக்கு ஏற்ற இடம் என்று வருகின்றனர்! என் பெருமை உணர்ந்து வருகின்றனர்! -என்ற மகிழ்ச்சிப் பெருக்கில்தான், கொந்தளிக்கிறதோ.

உறுதி பிறந்துவிட்டது, புது உற்சாகமே வந்துவிட்டது. இருவரும் புறப்படுகின்றனர், தமக்கு ஏற்ற நாடு நோக்கி;

குன்றேறுகிறார்கள்! மேலே மேலே செல்கின்றனர்! பகை உணர்வும் வெறுப்புணர்ச்சியும் நெளியும் இடம், அதோ கீழே,

காலடியில்! அவர்கள் உயரச் சென்று விட்டனர்! குன்றேறிப் பார்க்கின்றனர், கீழே ஆழ்கடல்! அலைக்கரங்கள் அழைக்கின்றன.

ஆரத் தழுவிக் கொள்கின்றனர். மேலே வானம்! கீழே கடல்! மணமேடையோ சிறு குன்று!! இயற்கையோ எழிலளிக்கிறது மண வீட்டுக்கு! எதிர்ப்பார் இல்லை! ஏளனம்பேசுவார் இல்லை! இனம் வேறு வேறு அல்லவோ என்று குளறுவார் இல்லை. காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்! அந்த இன்பத்தில் திளைத்திருந்தனர், புது வாழ்வு பெற்ற இருவரும்.

ஆஸ்க்கார், தனது இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டை எடுத்து, மோனாவையும் சேர்த்துத் தன்னுடன் பிணைத்துக் கொண்டான். ஈருடல் ஓர் உயிர்! அந்த ஈருடலும் கூட ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கட்டும் என்று எண்ணினான் போலும்.

கண்களைக் கண்கள் கவ்விக் கொண்டன.

அந்தக் கண்கள் என்னென்ன பேசிக் கொண்டனவோ! ஒரு புன்னகை பூத்திருக்கும்! இதழமுது சுவைத்திருப்பர்! நம் காலடியில் கிடக்கிறது குள்ளமனம் படைத்தோர் இருக்கும் இடம்! அவர்கள் தொடமுடியாத உயரத்தில் நாம் நிற்கிறோம்; காதலின் சிகரத்தில்! இனி...சென்றுசேர்ந்தனர் கடலடி. மரணபுரி அவர்களை வரவேற்றுக் கொண்டது. மாதா கோயிலின் மணி ஓசை கிளம்புகிறது. போர் முடிந்தது, பகை ஒழிந்தது சமாதானம் மலர்ந்தது என்று அந்த ஓசை கூறுகிறது என்பர்!

இல்லை! போய்ச் சேர்ந்தனர்; போரற்ற, பகையற்ற, பேதமற்ற, வெறுப்பற்ற இடம் போய்ச் சேர்ந்தனர் என்றல்லவா ஒலி அறிவிக்கிறது!

காதற்பயணம் முடிந்தது, போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப்போய்ச் சேர்ந்தனர்! வாழ்க காதலர்! வாழ்க காதல்! என்று ஒலிக்கிறதோ!!

○

16-ம் பக்கத் தொடர்ச்சி

அம்மா, ஏதோ எடுத்துச் செல்கிறார்கள்;

யாரோ அதட்டிக் கூப்பிடுவது கேட்டு, அவசரமாக நடக்கிறார் அப்பா!

மலர்களைப் பொறுக்குகிறார்கள் அம்மா...

பூஜைக்கா! இந்தப்பாவி வாழட்டும் என்று பூஜை செய்கிறார்கள்.

இரவு முழுவதும் கண்ணீர்! பகலில் ஒரு போலி நாடகம்!

❀

ஜமீன் மாளிகையில் இடம் பெற்ற சின்னாட்களிலேயே சொக்கலிங்கம் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றுவிட்டான். டேவிட் தந்த பயிற்சி காரணமாக எவரிடமும் இனிய முகத்துடன் பழகவும் பேசவும், மற்றவர்களுக்கு உதவி செய்வதிலே ஆர்வம் காட்டவும் அடக்கமாக இருக்கவும் அதேபோது அடிமை மனப்போக்கைக் கொள்ளாமலும், நடந்து கொள்ள முடிந்தது.

செல்வச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட ஜமீன்தாரரின் பெண்களுக்கு முதலில், ஒரு வாத்தியாருக்கு இவ்வளவு மதிப்பு அளித்திட ஜமீன்தார் முனைந்தது வியப்பாக இருந்தது.

பெரிய பெரிய சங்கீத வித்வான்கள் சன்மானம் பெறுவார்கள்; புலவர்கள் பொன்னாடை பெறுவார்கள், கூத்தியலார் புகழுரையும் பொற்பதக்கமும் பெறுவார்கள்; ஆனால் இவர்களிலே யாருக்கும் கிடைக்காத ஒரு தனித்தன்மையான மதிப்பு பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவந்த, ஊர் பேர் தெரியாத ஒரு இளைஞருக்குத் தரப்படுவதன் காரணம் தெரியாமல், வியப்புற்றனர். ஜமீன்தாரரே அவ்விதம் நடந்து கொள்ளும்போது நாம் வேறுவிதமாக நடந்து கொள்ளக்கூடாது என்று ஜமீன்தாரரின் குமாரிகள் கருதினர்.

மற்றோர் வியப்பும் அவர்களுக்கு ஏற்பட்டது. வேறு யாருக்கும் தரப்படாத மதிப்புத்தரப்பட்ட போதிலும், எல்லாவிதமான வசதிகள் அளிக்கப்பட்ட போதிலும், சொக்கலிங்கம் முழு மகிழ்ச்சியுடன் இருப்பதுபோலத் தோன்றவில்லை.

எதையோ பறிகொடுத்துவிட்டவரைப் போன்ற ஒரு பார்வை! ஏதோ ஒரு வேதனையை அடக்கிக் கொள்ள முயற்சிப்பது போன்ற ஒரு போக்கு. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறுவது போன்ற ஒரு நிலை.

சிறிது நேரமாகிலும் தனியே உலவச் செல்வது; அதிக நேரம் தனது அறையில் தங்கி இருப்பது. பணியாட்களைப் பார்க்கும்போது கண்களில் கவலை கப்பிக் கொள்வது. இந்த நிலை தெரிந்தது சொக்கலிங்கத்தின் நடவடிக்கையில்.

மூத்த மகள், தன் கணவனையும் குழந்தைகளையும் கவனித்துக் கொள்வதிலும், ஜமீனுக்கென்று ஏற்பட்டுவிட்ட சம்பிரதாயங்களை நிறைவேற்றி வைப்பதிலேயும் அதிகமாக ஈடுபாடு கொண்டிருந்ததால், சொக்கலிங்கத்தால் ஏற்பட்ட இந்த நிலைமைகளைப் பற்றி அதிக அளவு சிந்தித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

சரியான ஒரு காரணம் இல்லாமல் அப்பா இவ்விதம் நடந்துகொள்ள மாட்டார் என்று திடமாக நம்பினாள். ஆகவே அந்தப் பிரச்சினை பற்றி மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளவில்லை.

உமாவின் நிலை அப்படி இல்லை. ஜமீன் காரியத்தை மூத்தவள் கவனித்துக் கொண்டதால், உமாவுக்கு, சொக்கலிங்கத்தை ஒட்டிக் கிளம்பிய பிரச்சினையில் மனதைச் செலுத்தவும், இது காரணமாக இருக்குமா, அது காரணமாக இருக்குமா என்று பல்வேறு வகையிலே சிந்தனையில் மூழ்கிடவும் நிரம்ப நேரம் இருந்தது.

ஆனால் எவ்வளவு சிந்தித்தாலும், புதிர் மேலும் மேலும் சிக்கலுள்ளதாயிற்றே தவிர, தெளிவு கிடைக்கவில்லை.

"இப்படி இருக்குமாடி கோகிலம்! இவர் உண்மையில் ஒரு பெரிய ஜமீன்தாரருடைய மகனாக இருக்கக் கூடும். தகப்பனாரிடம் ஏதோ ஒரு காரணத்தால் விரோதித்துக்கொண்டு, வீட்டை விட்டுவந்து விட்டிருக்கிறார். இந்த இரகசியம் அப்பாவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டிருக்கிறது. வந்தவரும் தன்னை 'வாத்தியார்' என்று மறைத்துச் சொல்லி இருக்கிறார், அப்பாவும் அதைக் கண்டுகொண்டதாகக் காட்டிக்கொள்ளாமல் நடந்துகொள்கிறார். அப்பாவா ஏமாறுவார்! வாத்தியார் என்று சொல்லிவிட்டால் நம்பிவிடுவாரா! கோகிலம்! என்ன காரணம் இருக்கும் இவர் தன்னுடைய சொத்து சுகத்தை விட்டு விட்டு, இப்படி வாத்தியார் வேடம் போட்டுக்கொண்டு கிளம்ப! என்ன மனவேதனையோ, பாவம்..." என்று உமா பேசுவாள்; அதைக் கேட்கும்போதே கோகிலாவுக்கு மனதிலே திகில் மூளும். உமா சொல்கிறபடி இருந்துவிடக் கூடாது; சொக்கலிங்கம் வாத்தியார் வேலை பார்க்க வேண்டிய சாதாரண நிலையினராக இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டும் அந்த நம்பிக்கையை அணைத்துக்கொண்டும், காலம் கனியும் என்று காத்துக்கொண்டும் இருந்தாள் கோகிலா—ஜமீன் மானேஜரின் மகள்.

சொக்கலிங்கத்தின் இனிய இயல்புகளும், வசீகரமான தோற்றமும், ஜமீன் மாளிகையிலே கிடைத்திருந்த ஏற்றமும், கோகிலாவின் மனதை வேகமாக அவன் பக்கம் இழுத்துச் சென்றுவிட்டது.

சொக்கலிங்கத்தின் தோற்றமும், இளமங்கையர் விரும்பிடும் விதமானது.

அவன் ஜெமீன்தாரன், ஏதோ காரணத்தாலே தன் நிலையை மறைத்துக்கொண்டு இருக்கிறான் என்பது உண்மையாகிப்போனால், தனக்கு அவன் எட்டாக் கனி ஆகிப் போவானே என்ற ஏக்கம் கோகிலாவுக்கு.

சொக்கலிங்கத்திடம் அவள் தன் மனதைப் பறிகொடுத்து விட்டிருந்தாள்.

எவ்வளவோ வேலைகளுக்கிடையிலும், அவன் சிற்சில வேளைகளில் தன் மீது செலுத்தும் பார்வையிலே ஒரு கனிவு இருப்பதை அவள் உணர்ந்து உளம் பூரித்தாள்.

உமாவும் சொக்கலிங்கத்தின் தோற்றத்தால் ஈர்க்கப்பட்டாள் என்ற போதிலும் தங்கள் குடும்ப அந்தஸ்த்துக்கு ஏற்றவிதமான நிலை இருந்தாலொழிய சொக்கலிங்கத்தை தான் அடைய நினைப்பது நடைபெறக்கூடியது அல்ல என்பதை உணர்ந்திருந்ததால், தன் மனதிலே காதலைத் தீயென மூண்டெழ விடவில்லை.

அவளுடைய உள்ளத்தில் முளைவிட்டுக்கொண்டிருந்த காதற்பயிருக்கு, ஜெமீன்முறை ஒரு வேலி போட்டுவிடும் என்பது உமாவுக்கு நன்றாகத் தெரியும்.

வாழ்க்கையை நடத்துவதற்காக 'வாத்தியார்' வேலையோ அல்லது அதுபோன்ற வேறு ஏதேனும் அலுவலோ பார்த்தாகவேண்டிய நிலைதான் சொக்கலிங்கத்துக்கு என்றால், காதலிப்பது பலன்தராது— அது கருகிய மொட்டு ஆகிவிடவேண்டியதுதான் என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தாள்.

ஜெமீன்தாரர் சொக்கலிங்கத்துக்குக் காட்டும் மதிப்பைக் கவனிக்கும்போது, உமாவின் மனதிலே ஒரு ஆவல் எழும். உண்மையில் வாத்தியார் வேலை பார்க்க வந்தவராக இவர் இருக்க முடியாது. இவர் ஏதோ ஒரு ஜெமீன் வீட்டுப் பிள்ளைதான். என்ன காரணத்தாலோ மாறுவேடம் போட்டுக்கொண்டிருக்கிறார் என்ற ஒரு எண்ணம் தோன்றியது.

அந்த எண்ணம் தந்த தித்திப்பிலேயே உமா மெத்தச் சுவைகண்டு வந்தாள்.

சொக்கலிங்கத்தின் உண்மை நிலை ஒருநாள் வெளியே தெரிந்துவிடும்; அப்போது அவரை அடையத் தனக்கு ஒரு தடையும் இராது என்ற நம்பிக்கையை நாளும் வளர்த்துக்கொண்டு வரலானாள்.

இரு எழில் மங்கையர் உள்ளத்திலும் இதுபோன்ற எண்ணங்களைக் கிளறிவிட்ட சொக்கலிங்கம் காதலைப்பற்றி எண்ணிப் பார்க்கக்கூடத் தனக்கு நேரம் இல்லை, நிலை இடம்தராது என்று இருந்து வந்தான்.

"கோகிலா! இப்படித்தான் இருக்கவேண்டும். இவருடைய தகப்பனார், பெரிய ஜெமீன்தாரர். இவர் ஒரே மகன்! தாயார் இறந்துவிட்டார்கள். அந்தப் பெரிய ஜெமீன்தாரர், இரண்டாந்தாரமாக எவளையோ திருமணம் செய்து கொண்டிருக்கிறார். அதைக்கண்டு கோபித்துக்கொண்டு, எனக்கு இந்த ஜெமீனே வேண்டாம்; இந்தப் பெரிய உலகத்தில் ஜெமீன்தாரர்கள் மட்டுமா இருக்கிறார்கள். உழைக்கத் தெரிந்தவர்கள் யாரும் வாழ முடியும். நான் செல்கிறேன். என்னை மறந்துவிடுங்கள் — என்றெல்லாம் ஆத்திரமாகப் பேசிவிட்டு இவர் கிளம்பிவிட்டிருக்கிறார்; இவருடைய இந்த இரகசியத்தை அப்பா எப்படியோ தெரிந்து வைத்திருக்கிறார். அதனால்தான் இவரை, ஜெமீனிலே வாத்தியார் வேலை பார்க்க வரும்படிக் கூறி அழைத்து வந்து வைத்திருக்கிறார். தக்கசமயமாகப் பார்த்து கூற வேண்டியதை அப்பா கூறப்போகிறார், பாரேன்!" என்று ஆவல் ததும்பத் ததும்ப உமா கூறினாள்.

ஐயோ! அப்படி இருந்துவிட்டால் என் கதி என்ன ஆவது. நான் எண்ணிடும் எண்ணங்கள் எப்படி ஈடேற முடியும் என்ற ஏக்கத்துடன் கோகிலா உமா கூறுவதைக் கேட்டுக்கொண்டாள்.

மாறுவேடத்திலே உலவும் ஜெமீன்தாரர் இந்த சொக்கலிங்கம் என்ற எண்ணத்தை உமா தருவித்துக் கொண்டதும், அவள் கண்முன் இன்பமயமான எதிர்காலமே தெரியலாயிற்று.

ஜெமீன்தாரரின் அன்புக் கட்டளை காரணமாக சொக்கலிங்கம் விதவிதமான உடை உடுத்துக்கொள்வதையும், ஜெமீன்தாரரிடம் பழக வருபவர்களிடம் மிகத் திறமையுடன் பல பொருள்பற்றி அழகாகப் பேசுவதையும் உமா பார்த்தும் கேட்டும், மிகுந்த பூரிப்படைந்து வந்தாள்.

இதே காரணமாகக் கோகிலா கிலிகொண்டிருந்தாள்.

ஆனால், உமாவின் கண்களுக்குத் தெரியாத ஒரு காட்சி, கோகிலாவுக்குக் கிடைத்தது, அவள் துளியும் எதிர்பாராத நிலையில்.

தனியாக உலவச் செல்வதாகத் தோட்டம் சென்றிடும் சொக்கலிங்கத்தை ஒருமுறை தற்செயலாகப் பின் தொடர்ந்த கோகிலா, யாரும் காணாத முறையில் சொக்கலிங்கம் வண்டிக்காரன குடிசைக்குள்ளே நுழையக் கண்டாள்.

பணியாளர்களிடம் பரிவு காட்டும் பண்பு காரணமாகவே சொக்கலிங்கம் அங்கே சென்றிருப்பதாகக் கோகிலா முதலில் எண்ணிக்கொண்டாள்.

ஆனால் உள்ளே சென்ற சொக்கலிங்கம் வெளியே வருவதற்கு நீண்ட நேரம் பிடித்தது.

அவன் வெளியே வந்தபோது, அவன் தன் கண்களிலே துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கக் கண்டாள். திகைப்பு மேலிட்டது.

கண் கலக்கத்தைத் தரத்தக்க என்ன கண்டான் அந்த குடிசைக்குள்ளே என்று எண்ணித் திகைத்தாள்.

சில வினாடிகளில் சொக்கலிங்கம் தோட்டத்தைக் கடந்து மாளிகையின் உட்புறம் சென்றுவிட்டான்.

அவன் உள்ளே வருவதைக் கண்டதும், உமா 'பியானோ' வாசித்துக்கொண்டு, பாட ஆரம்பித்தாள்; வசந்தத்தின் இனிமையைப் பற்றிய ஒரு பாடலை.

❋

"நோக்கம் எதுவாக இருந்தால் எனக்கென்னடா போக்கிரிப்பயலே! என்னை நம்பவைத்து மோசடி செய்தாயே, அதற்கு உன்னைச் சும்மா விட்டுவைக்கலாமா! என்னை எவ்வளவு ஏமாளி என்று எண்ணியிருந்தால், துணிந்து நீ இந்தக் காரியத்தைச் செய்திருப்பாய். அடே! அறிவற்றவனே! இந்த ஜெமீனுக்கு விரோதமாக நடந்தவன் கதி எல்லாம் தெரியுமா உனக்கு. அவர்களின் மண்டை ஓடுகள் எருவாக்கப்பட்டு வளர்ந்திருப்பதுதான் மாளிகையை ஒட்டி இருக்கிற தென்னந்தோப்பு! நீ படப்போகிறது இனி அல்லவா தெரியப்போகிறது உனக்கு. வண்டிக்

காரன் பிள்ளை நீ, இங்கு வேடம் போட்டுக்கொண்டு ஜெமீன் குடும்பத்துடன் சரிசமமாகப் பழகினையே, துணிந்து. எத்தனை துணிச்சல் உனக்கு. அடடா! உன் போக்கிரித்தனம்கூட இருக்கட்டும், எவ்வளவு கல் மனம் உனக்கு. பெற்ற தாயையும் தகப்பனையும் இங்கே கேவலமான பிழைப்பு நடத்த விட்டுவிட்டு, துளிக்கூட ஈவு இரக்கம், பற்று பாசம் இல்லாமல், நீ சீவிச் சிங்காரித்துக்கொண்டு கோலாகல வாழ்வு நடத்திக்கொண்டிருந்தாய். உன் போக்கைக் கண்ட அந்தக் கிழவன், மனம் என்ன பாடுபட்டிருக்கும். உன் தாய், அங்கே குதிரைச் சாணியை எடுத்துப்போட்டு கொட்டிலைச் சுத்தப்படுத்திக்கொண்டிருப்பது, நீ ஜெமீன் கட்டிலில் சாய்ந்துகொண்டு சுகம் அனுபவிப்பது. ஒரு கணமாவது எண்ணினதுண்டா, இந்த ஈனத்தனத்தைப்பற்றி. தாயையும் தகப்பனையும் கேவலப்படுத்தத் துணிந்த உன்னை மனித இனத்திலேகூடச் சேர்க்கக்கூடாதே. சமுதாயமே பாழாகிவிடும் உன்போன்றவர்களால். உன்னை உயிரோடு விட்டுவைப்பதாக இல்லை. ஆமாம், என்னை வஞ்சித்தவனை நான் வாழவிடுவதில்லை......'' என்று ஜெமீன்தாரர் ஆத்திரம் மேலிட்டுக் கூச்சலிடுவதும், அவர் எந்த வினாடியில் உத்திரவிடப்போகிறார் என்று காத்துக்கொண்டு அடியாட்கள், கம்பு கட்டாரியுடன் சூழ நிற்பதையும் கண்டு, சொக்கலிங்கம் அலறித் துடித்தெழுந்து 'செ! என்ன பயங்கரமான கனவு'' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

தான் நடத்திக்கொண்டிருக்கும் போலி நாடகத்தின் குட்டு உடைபட்டுப்போய்விட்டால் என்னென்ன ஆபத்துகள் வெடித்துக் கிளம்பக்கூடும் என்பதை சொக்கலிங்கம் எண்ணிப்பார்ப்பதுண்டு, சில சமயங்களில். ஆனால் இதுபோன்ற பயங்கரமான கனவுகள் கண்டதில்லை.

அன்றிரவு அந்தப் பயங்கரமான கனவு கண்டதற்குக் காரணம் அன்று மாலை, துளியும் எதிர்பாராத வகையிலே ஆப்பக்காரி அன்னத்தைக் கண்டு திடுக்கிட்டுப்போனதுதான்.

ஜெமீன் மாளிகைக் கொத்தனாருடன்; குலவிக்கொண்டு அன்னம், ஜெமீன் குலதெய்வத்துக்கு நடத்தப்படும் திருவிழாவில் கலந்துகொண்டிருக்கக் கண்டு திடுக்கிட்டுப்போனான்.

அன்னம், விதவை. தவறான நடத்தை அற்றவள்; ஆப்பக்கடை நடத்திக் குடும்பத்தை நடத்திக்கொண்டு வருபவள் என்ற நல்ல பெயர் பெற்றவள். அவள் இப்படி! அவளுக்கு இப்படி கள்ளக்காதல்! இதிலே கிடைக்கும் பணம்தானா, காவேரியின் கழுத்திலே தங்கச் சங்கிலியாயிற்று!! இப்படி எண்ணிப் பதறி, தன் குட்டை உடைத்துவிடுவானோ என்று அன்னம் பதறினாள்.

தன் குட்டை அவள் எங்கே உடைத்துவிடுகிறாளோ என்று அவன் அஞ்சினான்.

கொத்தனார் மெள்ள அந்த இடத்தைவிட்டு நழுவிவிட்டார்.

தயங்கித் தயங்கி அன்னம் சொக்கலிங்கத்தைக் கண்டு, கண்களைக் கசக்கியபடி, "தம்பி! என்னமோ என் தலைவிதி இப்படி ஆகிவிட்டது. என்னைக் கண்டுவிட்டதை நம்ம ஊரிலே யாரிடமாவது நீ சொல்லிவிட்டால், என் மானம் மரியாதை யாவும் போய்விடும். நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். உன் காலில் கூட விழுந்து கேட்டுக்கொள்கிறேன்'' என்றாள்.

தனக்குப் பேராபத்து வந்துவிடப் போகிறது என்று அஞ்சிக்கிடந்த சொக்கலிங்கம், அன்னம் தன்னைக்கண்டு பயப்படுவது கண்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் திகைத்தான்.

"யாரம்மா நீ?'' என்று வியப்புடன் கேட்பது போல வினவினான்.

"தம்பி! என் நடத்தையைக் கண்டதாலேதானே, யார் நீ என்றே என்னைக் கேட்டுவிட்டாய். எனக்கு இதுவும் வேண்டும், இதற்குமேலும் வேண்டும்'' என்றாள் அன்னம்.

"நீயாரோ எனக்குத் தெரியாது. நான் கண்ணால் கண்டதை யாரிடமும் கூறப்போவதில்லை. ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. நான் இருக்கும் இடத்தில்-அந்த ஊரிலேயே-அந்த வட்டாரத்திலேயே நீ இருக்கக்கூடாது'' என்றான் சொக்கலிங்கம்.

"அந்தப்பாவியைக் கண்ணாலே பார்ப்பது கூடப் பாவம் என்று நினைத்துத்தானே அப்படிப் பேசுகிறாய். என் நடத்தை உனக்கு எப்படியோ தெரிந்து விட்டதாலேதான், காவேரியையும் கல்யாணம் கட்டிக்கொள்ள மறுத்தாய் என்பது இப்போது புரிகிறது. நாம் செய்கிற காரியம் யார் கண்ணிலும் படாது என்று எண்ணிக் கொண்ட நான் ஒரு முட்டாள். பாரேன்! ஆண்டவன் உன்னை இன்றையதினமாகப் பார்த்து இங்கே அனுப்பி வைத்தார்...நீ சொல்கிறபடி நான் செய்கிறேன்...இப்போதே இந்த ஊரைவிட்டுப் போய் விடுகிறேன். அவலூரிலும் இருக்கப் போவதில்லை...... கோலாருக்கே போய் விடுகிறேன்...இந்த விஷயத்தை மட்டும் யாரிடமும் சொல்லிவிடாதே......காவேரியை ஒருவரும் கட்டிக்கொள்ள வரமாட்டார்கள்...இந்தப் பாவிக்காக மனம் இரங்காவிட்டாலும், அந்தப் பெண்ணுக்காகவாவது இரக்கம் காட்டு தம்பி!'' என்று கெஞ்சினாள்.

ஆகட்டும்! நீ முதலில் உடனே இந்த ஊரை விட்டுக்கிளம்பு'' என்றுக் கண்டிப்பான குரலைத் தருவித்துக் கூறிவிட்டு, "உன்னை இங்கு பார்த்ததை நான் மறந்துவிடுகிறேன்; அதுபோலவே என்னை இங்குப் பார்த்ததை நீ மறந்துவிடு! யாராவது, என்னைப்பார்த்து இந்த அம்மாளைத் தெரியுமா என்று கேட்டால், தெரியாது!-என்று நான் கூறிவிடுகிறேன். அதுபோலவே நீயும் என்னைப்பற்றிக் கேட்டால் சொல்லிவிட வேண்டும்'' என்று உத்திரவு பிறப்பிப்பதுபோலப் பேசி அன்னத்தை ஊரைவிட்டே அனுப்பி விட்டு, "அப்பா! வர இருந்த ஆபத்திலே இருந்து தப்பினேன் என்று எண்ணிக்கொண்டான். ஆனால் அதே எண்ணம்; அதன் விளைவாக அந்தப் பயங்கரமான கனவு!!

கனவிலே காணும்போதே இவ்வளவு பயங்கரமாக இருக்கிறதே. உண்மையிலேயே கபட நாடகம் வெளியாகிவிட்டால் ஜெமீன்தார் எப்படியெல்லாம் சீறுவார் என்னென்ன தண்டனைகளைத் தருவார் என்பதை எண்ணும்போது சொக்கலிங்கத்துக்கு உடலே வெடவெடவென ஆயிற்று. கனவே பரவாயில்லை என்று தோன்றிற்று.

சொக்கலிங்கம் மேன்மையான நிலையில் இருந்து வருகிறன் என்பதைக் காண்பதுடன், அதுபற்றி மற்றவர்கள் கூறுவதைக் காது குளிரக் கேட்கிறுர்கள் அந்த முதியவர்கள்.

ஒருநாள் மாலை உமாமகேஸ்வரியே குடிசைப் பக்கம் சென்ருள்—புதுரகக் கோழிகள் கொண்டுவரப் பட்டிருப்பதைக் கேள்விப்பட்டு, அவைகளைப் பார்க்க.

சொர்ணம்,மரியாதையாக வரவேற்று அழைத்துப் போய் கோழிகளைக் காட்டுகிறுர்கள். சொக்க லிங்கத்தைப்பற்றிய உரையாடல் நடக்கிறது.

"ஜெமீன் மாளிகைக்குப் புது 'வாத்தியார்' வந்திருக்கிறுர் தெரியுமா; ஆள் வெள்ளைக்காரன் போலவே உடுத்திக்கொண்டிருக்கிறுர். வயது இருபத்தி இரண்டு இருக்கும். நல்ல சிகப்பு. அரும்பு மீசை. அழகான கண்கள். எப்போதும் சிரிப்பு—"

"சிரிக்கும்போது கன்னத்திலே குழிவிழுமே அது எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா..."

"ஓ! நீ இதற்குமுன்பே புது வாத்தியாரைப் பார்த்துவிட்டாயா..."

"இல்லையே.........நான் இன்னும் பார்க்கவில்லை. மாளிகைக்குள்ளே போகவே வாய்ப்பு இல்லை..."

"பின்னே, எப்படிக் கன்னத்தில் குழி அழகாக விழும் என்று சொன்ஞய்..."

"என்னமோ நினைப்பிலே சொன்னேன்...நீங்கள் வர்ணித்துக்கொண்டுவந்ததைக் கேட்டதிலிருந்து அப்படிச் சொல்லவேண்டும் போலத் தோன்றிற்று, சொன்னேன்."

"படிப்பு சொல்லிக்கொடுப்பது மட்டுமல்ல, பாட்டு, நடனம், சித்திரம் தீட்டுவது எல்லாம் தெரிந் திருக்கிறது. எனக்கென்னமோ 'டீச்சர்' அதிக நாளைக்கு இங்கே இருப்பார் என்று தோன்றவில்லை ......"

"ஏனம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள்..."

"படிப்பு நிறைய இருக்கும்; அது தெரிகிறது. திறமைசாலி. அப்படிப்பட்டவர், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதிலேயா காலமுழுவதும் இருப்பார். விரைவிலே பெரிய உத்தியோகத்துக்குப் போய்விடுவார்."

"அதென்னம்மா அப்படி. நம்ம ஜெமீனிலே அவர் கேட்கிற பணம் கொடுக்க முடியாதா என்ன..."

"பணம் ஒன்றுதாஞ முக்கியம்.........அதிகாரம் அந்தஸ்து இதெல்லாம் வேண்டாமா...அவர் பெரிய உத்யோகம் பார்க்கக்கூடியவர்......எனக்கு அபபடித் தான் தோன்றுகிறது..."

"ஜெமீன்தாரய்யா மனசுவைத்தால் நடக்காத காரியமா. அவருக்குத் தெரிந்த துரை யாரிடமாவது ஒருவார்த்தை சொன்னுல் போதாதா! வேலை தன்ஞலே வருமே. ஆனுல் அந்தப் பிள்ளை கூச்சமில்லாமல் கேட்கவேண்டுமே—"

"டீச்சருக்கு இந்த இடம் ரொம்பப் பிடித்து விட்டிருக்குமபோலத் தெரிகிறது. ஓவியம் தீட்டுவார் என்று சொன்னேன்—...அவருடைய அறை ஜன்னல் வழியாக, தோட்டத்தின் அழகைப் பார்த்துக் கொண்டே நின்றுகொண்டிருப்பார் நெடுநேரம்."

"அவருடைய ஜன்னல் வழியாகப் பார்த்தால் தோட்டம் முழுவதும் தெரியுமாம்மா! அப்படியானுல் எங்கக் குடிசைகூடத் தெரியும்...அப்படித்தானே..."

"ஆமாம்! அடிக்கடி தோட்டத்துப்பக்கம் உலாவ வருகிறுரே, பார்த்ததில்லையா—"

"பார்த்துப் பார்த்துப் பூரித்துக் கொண்டுதான் இருக்கிறேன்..."

"புது வாத்தியாரை நான் பார்த்ததே இல்லை யென்று முன்னே சொன்ஞயே..."

"கிட்டே நெருங்கிப் பார்த்ததில்லை என்றுதான் சொன்னேன்......தொலைவிலே இருந்துப் பார்த்திருக் கிறேன்.........சின்ன ஜெமீன்தார்களோட வருவாரே அப்போது."

"அதென்ன சின்ன ஜெமீன்தார்கள் — ராமு, சோமுன்னு சொல்லேன். வயசிலே நீ பாட்டிபோல அந்தக் குழந்தைகளுக்கு."

"இருக்கலாம். பார்க்கப்போஞ புது வாத்தியா ருக்கு வயசிலே நான் அம்மாபோல! ஆனுல் கூப்பிட முடியுமா மகனே வாடான்னு!"

"உனக்கு மகன் இல்லையே, என்கிற வருத்தம்... ......இல்லையா......ஒருமகன் இருந்திருந்தா, ஏதாவது வேலைக்குப் போவான். பணம் கிடைக்கும், இன்னும் கொஞ்சம் வசதியா இருக்கலாம்...இல்லையா—"

"இங்கே ஒரு குறையும் இல்லையே எங்களுக்கு. நாங்கள் இருவர்தானே......உள்ளது போதும்......ஒரு குறையும் இல்லை..."

"ஆமாம், கிழவன், உன்னுடை புருஷன், வேண ஆட்டம் ஆடினவஞமே......சொத்துகூடக் கொஞ்சம் இருந்ததாம்...தொலைத்து விட்டாஞமே......மானேஜர் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தார்..."

"ஆண் பிள்ளைகளோட சுபாவம்.........சிலவேலை களிலே அப்படி ஆகிவிடுது..."

"சரி! சரி! அதோ டீச்சர் குழந்தைகளோடு; கூப்பிடட்டுமா, பேசேன் அவரோட...நல்லவரு...... எல்லோரிடமும் அன்பாகத்தான் பழகுவாரு..."

"இரும்மா... அவர் ஏன் இங்கேவரணும்...ஏம்மா, பச்சரிசி மாங்கா தர்ரேன், கொடுக்கறயா......வண்டிக் காரன் சம்சாரம் கொடுத்ததுன்னு சொல்லேன்......... பச்சரிசி மாங்கா ரொம்பப் புடிக்கும்..."

"டீச்சருக்கா... அது எப்படி உனக்குத் தெரியும் ......"

"டீச்சருக்குன்னு சொல்லல்லேம்மா...யாருக்குந் தான்...பச்சரிசி மாங்கான்னா ரொம்பப் பிடிக்கும்...... பொதுவாச் சொன்னேன்..."

"நான் எடுத்துக் கொண்டுபோய் கொடுக்கமாட் டேன்...ஏதாவது தப்பான எண்ணம் வந்துவிடும்...... கதைகளிலே படித்திருக்கறேன்......ஒரு வாலிபனுக்கு ஒரு இளமங்கை இப்படி ஏதாவது கொடுத்தா, தப்பான எண்ணம் ஏற்பட்டுவிடும்......மேலும் அவர் எங்களிடம் சம்பளம்வாங்கிக்கொண்டு வேலைபார்க்கிற டீச்சர் இல்லையா......அவரை ஒரு வரம்போடுதானே வைத்திருக்கவேண்டும். இந்தப்பக்கம் வருகிறமாதிரி தெரிகிறது. நான் போய்விடுகிறேன்......நீ கூப்பிடு தாராளமா...நம்ம ஜெமீனில் வேலைபார்க்கிறவர்தானே ...கூப்பிட்டுப் பேசு; கொடு..."

❋

"கோகிலா! எனக்கு ஒரு உதவி செய்வாயா? கேட்க கூச்சமாகக்கூட இருக்கிறது; ஆனால் என்ன செய்வது, வேறு யாரும் இல்லை..." என்று ஒருநாள் பேச்சைத துவக்கினாள் உமா, படித்துக்கொண்டிருந்த **'சிப்பிக்குள் முத்து'** என்ற கதைப் புத்தகத்தைத் தூர எறிந்துவிட்டு.

உமா, தன் மனதிலே சொக்கலிங்கத்தைப்பற்றிய எண்ணத்தை வளர்த்துக்கொண்ட பிறகு, எப்போதும் காட்டாத ஆர்வத்தைப் படிப்பதில்—(காதற் கதைகளை — மர்மக் கதைகளை) காட்ட ஆரம்பித்தாள்.

"நான் என்னம்மா உதவி செய்ய வேண்டும். உங்களுக்கு என்னகுறை இருக்கமுடியும்" என்று கோகிலா கேட்டாள், கவலை தோய்ந்தவளாய்.

"எனக்கு அவரிடம் பேசக் கூச்சமாக இருக்கிற தடி கோகிலா......" என்று சொல்லத் தொடங்கினாள உமா; கோகிலா சிறிது உரத்த குரலிலேயே சிரித்தாள்.

"வேடிக்கைதானம்மா நீங்கள் சொல்வது. நீங்கள் இருவரும் பழகுவதையும் அடிக்கடி பேசிக்கொள்வதை யும் பார்க்கிற யாரும் ஒரு பதது வருடமாகவாவது பழகி இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். அப்படி இருக்க, அவரிடம் பேச எனக்குக் கூச்சமாக இருக் கிறது என்கிறீர்களே?" என்று கேட்டாள் கோகலா.

"பேசுகிறேன் கோகிலம், இல்லையென்று சொல்ல வில்லை. அவா பேசப்பேசக கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலத் தோன்றுகிறது. அவ்வளவு இனிமையாகப் பேசுகிறார். ஆனால் அவருடைய இரகசியத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டு மடி. அந்தப் பேச்சைமட்டும் என்னால் பேசமுடிய வில்லை. கூச்சமாக இருக்கிறது" என்று உமா விளக்கம் அளித்தாள்.

கோபத்தை அடக்கிக் கொண்டு கோகிலா "என்னம்மா கேட்க வேண்டும் அவரிடம். என்னைக் காதலிககிறீர்களா! திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறீாகளா! எனறு" என்று கேட்டாள்.

ஜெமீன் முடுக்குக் குறையாமல் பேசினாள் உமா.

"வலியச் சென்று என் காதலைக் கூறிட நான் என்ன சாமான்யக் குடும்பத்தவளா! கோகிலா எங்கள் ஜெமீன் குடும்பத்துப் பெருமையை அறியமாட்டாயா! துடுக்குத்தனமாகப் பேசி விட்டாய. ஒரு பெண் தன் காதலைப்பற்றி ஆடவனிடம் பேசுவதுபற்றி இந்தப் புத்தகங்களில் எழுதியிருக்கிறார்கள். படிக்கும் போது எனக்குச் சிரிப்பாய்வருகிறது. நாதா! உங்கள் மீது நான் அடக்க முடியாத காதல் கொண்டு விட் டேன் என்று நான் போய் பேசுவேன், அல்லது யார் மூலமாகவாவது சொல்லி அனுப்புவேன் என்று எண்ணிக்கொண்டாய். அது இந்த இடம் அல்ல" என்றாள்.

உமாவுக்குக் கோபம் வருவது கண்டு கோகிலா மகிழ்ச்சி அடைந்தாள்.

இந்தக்கோபம் வளராதாஎன்றுகூடவிரும்பினாள். மேலும் சற்றுக் கிளறிவிட எண்ணினாள்.

"இதென்னம்மா வேடிக்கையாக இருக்கிறது உங்கள் போக்கு. அவரை நீஙகள் பார்க்கும் பார்வை காதலைத்தவிர வேறு எதனைக் காட்டுகிறது. என் னிடமே மறைக்கப் பார்க்கிறீர்களே" என்று சிறிதளவு குறும்புத்தனத்தைக் கலந்து பேசினாள்.

"கோகிலா எனக்கு அவர் ஏற்றவர்தானா—இது பொருத்தமான சம்பந்தமா என்பதுதான் முக்கியம். நான் பெண்ணாகப் பிறந்தது எதற்கு? ஜெமீனுடைய பெருமையைப் பழாக்கிக் கொள்ளவா! காதல், அன்பு, பாசம், பரிவு, பற்று, ஆவல், ஆசை என்று என்ன பெயரிட்டு வேண்டுமானாலும் அழைத்துக் கொள். எனக்குத்தேவை, கண் மூடித்தனமான காதல் அல்ல! என் தகப்பனார் கண் கலங்காமல், அவருக்குத் துளியும் தலை இறக்கம் ஏற்படாத விதமான சம்பந்தம். அதற்கு ஏற்ற பொருத்தம் இவருக்கு இருந்தால், நான் பாக்கியசாலி! ஆனால் அவர் சாமான்யர் என்பது உண்மையாகி விட்டால், நான் அவரை மறந்துவிட வேண்டியதுதான்."

"அவர் ஜெமீன் குடும்பம் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்...அப்போது..."

"அவருக்கு ஏற்றவளை அவர் அடைவார்; எனக் குத் தகுதியான மாப்பிள்ளையை அப்பா தேடித் தருவார்."

அவர் உங்களைப் பரிபூரணமாக நம்பிக் கொண் டிருக்கிறார்...என்று வைத்துக்கொள்ளுங்கள்."

"அது அவர் செய்திடும் தவறு...நானா அதற்குப் பொறுப்பு......ஜெமீன் மாளிகையிலே இருந்து வரு கிறார, இங்கு உள்ள நிலைமை, ஏற்படும் எண்ணம், மனப்பான்மை இவைகளை அவர் தெரிந்து கொள்ளா மலா இருந்திருப்பார். படித்தவர்."

"அப்படியா அம்மா மெத்தச் சந்தோஷம்..."

"இதில் உனக்கு என்னடி சந்தோஷம்..."

"ஐயோ, நீங்கள் தப்பாக அர்த்தம் செய்து கொண்டீர்களே. நான் சொல்ல வந்தது, வேறு சில பெண்களைப்போல. காதலாகி, கசிந்து கண்ணீர் மல்கி, இளைத்து களைத்து எலும்புருவாகிப் போய்விடச் செய்யும் காதல் உங்களைப் பிடித்துக கொண்டதோ என்னமோ என்று பார்த்தேன். அப்படி இல்லை என்பது புரிந்துவிட்டது. அதனால் மகிழ்ச்சி என்றேன்."

"அதுவா! சரி! கோகிலா! சொல்ல எண்ணியதைச் சொல்லி விடுகிறேன். அவருடைய பிறப்பு வளர்ப்பு, குடும்ப நிலைபற்றி அவரிடம் கேட்க எனக்குக் கூச்சமாக இருக்கிறது. நீ அவரிடம் இதுபற்றித் தாராளமாகப் பேசலாமே. எப்படியாவது அவரிடமிருந்து அந்த விவரத்தை மட்டும் கேட்டுத் தெரிந்து கொள்ளேன். நான் என் எதிர்காலத்தைத் தீர்மானித்துக்கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்."

ஆகட்டும் என்று கோகிலா வாக்களித்தாள்.

சொக்கலிங்கத்தின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதில் அவளுக்கும் நிரம்ப அக்கறை இருக்கத்தானே செய்யும்.

அவளுடைய எதிர்காலமும் அதைப் பொருத்துத் தானே இருந்தது.

முயற்சிக்கிறேன் என்று கூறிவிட்டாள். ஆனால் எப்படி என்று எண்ணும்போதே அவள் தலை சுற்றிற்று.

தனியாகச் சந்தித்து அவரிடம் பேச வேண்டும்.

தனியாகச் சந்திக்க முடியுமா? சந்தித்தால் அவரிடம் என்னென்ன பேசத் தோன்றி விடுமோ!

என்ன நேரிட்டு விடுமோ என்பதை எண்ணிக் கொண்டபோது கோகிலா அச்சம் கொண்டாள்.

உமா, கணக்குப் பார்க்கிருள். ஆகையால் பதருமல் இருக்க முடிகிறது.

ஆனல் என் நிலை! நான் முழுக்க முழுக்க என் உள்ளத்தை அவரிடமல்லவா பறிகொடுத்து விட்டிருக்கிறேன்.

அவரை, நான், தனியாகச் சந்தித்தால்...என்பது பற்றி எண்ணிடும்போதே கோகிலாவின் உடலெல்லாம் பதறிற்று; ஆனல் இதழோரத்தில் ஒரு பொலிவு மலர்ந்தது.

❀

வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போன்ற நிகழ்ச்சிகளும் நடந்து விடுகின்றன. யாரும் திட்டமிட்டுச் செய்வதல்ல. ஆனல் ஆயிரம் தேள் கொட்டுகிறது அந்த நிகழ்ச்சிகளின்போது.

சொக்கலிங்கத்துக்கு மகிழ்ச்சியூட்ட வேண்டும் என்பதிலே அதிக அக்கறை காட்டும் ஜெமீன்தார் ஒரு நாள் குதிரைக் கொட்டிலுக்கே அழைத்துச் செல்கிருர் தன் குதிரைகளின் அருமையைக் காட்ட.

வண்டிக்காரன் வரவேற்கிருன் ஜெமீன்தாரனே! முறை! ஆனல் சொக்கலிங்கத்தையும் அல்லவா, வணங்குகிருன் சடையப்பன்.

"ஏலே சடையா! பம்பாயிலே இருந்து வாங்கினமே சவாரிக் குதிரை அதைக் கொண்டுவா, மிஸ்டர் லிங்கம் பார்க்கட்டும்..."

"நானே போய்ப்பார்த்துவிட்டு வந்துவிடுகிறனே"

"வேண்டாம் மிஸ்டர் லிங்கம். குதிரை இலாயத்தைப் பயல்கள் சுத்தம் செய்தான்களோ இல்லையோ ...அங்கே ஏன் நீங்க போகணும்........குமட்டும் சில வேளைகளில். அந்த இடத்திலேயே இருந்து இருந்து பழகிப் போனவங்களுக்கு ஒன்றும் இல்லை... —...நம்ப சடையனைப்போல...சாரட் ஓட்டுவதிலே சடையனுக்குச் சமமா ஒருவரையும் சொல்ல முடியாது. தரமான ஆள். பொதுவா, வண்டிக் குதிரைகளைக்கூட சடையன்தான் கவனித்துக்கொள்வது...நல்ல உழைப்பாளி ...அவனுக்கு ஏற்ற மனைவி..."

"காலமெல்லாம் உழைப்பு...ஓயாத வேலை...எல்லாம் எதற்காக..."

"யாரைப்பற்றிச் சொல்கிருய் மிஸ்டர்லிங்கம்..."

"ஒரு ஆங்கிலக் கவி சொல்கிருர்...

ஓயாமல் உழைக்கின்ருய்
உன்மகனை ஆளாக்க
ஊர்மெச்சும் வாழ்வுதர
உருக்குலைய உழைக்கின்ருய்
பேர்சொல்லி மகன் வாழ்வான்
பெருமைமிகும் என்றெண்ணி
பேய்மகனும் உனைமறந்தால்
நாய்மகனே ஆவான்காண்!

"அழகான கவிதை. இப்படிப்பட்ட கவிதைகளைக் குழந்தைகள் படிக்கவேண்டும்..."

"தந்தையிடம் மகன் காட்டவேண்டிய பாசம் பற்றி நிறையச் சொல்லித்தந்துகொண்டிருக்கிறேன்."

"வந்துவிட்டது குதிரை...ஏய்! சடையா! என்ன காலிலே இரத்தம் கசிகிறது..."

"குதிரையை நான் பிடித்துக்கொள்கிறேன்...... போய்க் கழுவி ஏதாவது மருந்து போட்டு..."

"பைத்யம் டீச்சர்! இப்படி ஒரு நாளைக்கு ஒன்பது தடவை காயம்படும், இரத்தம் ஒழுகும்......அது இவனையெல்லாம் ஒன்றும் செய்யாது...களிமண்ணை என்னமோ வைத்துக்கட்டுவான்...சரியாகிப் போகும்"

"என்னிடம் மருந்து இருக்கிறது கொண்டு வந்து கொடுக்கிறேன்..."

"வேண்டாம் தொரை! இது ஒண்ணுமில்லை...ஈ எறும்பு கடிக்கறமாதிரி.....ஒண்ணும் பண்ணுது...... ஓட்டிப் பார்க்கறீங்களா குதிரையை..."

"இல்லை...எனக்கு நிம்மதியாக இல்லை....மருந்து வேண்டாமென்று சொல்லுகிறீர்..."

"சடையா! பிடிடா! மிஸ்டர் லிங்கம், நம்ம குதிரை நல்ல 'ட்ராட்' போகும்...சும்மா இங்கேயே ஓட்டிக்காட்டுகிறேன் பார்க்கிறீரா..."



ஜெமீன்தார் குதிரை சவாரி செய்யும்போது சொக்கலிங்கம் தழதழத்த குரலில் பேசுகிருன் மெதுவாக.

"அப்பா! அப்பா! என்ன கொடுமை அப்பா இது!

தங்கள் உடலில் ஒழுகும் இரத்தத்தைக்கூடத் துடைக்கும் பாக்கியம் எனக்கு இல்லையே.........பார்த்துக் கொண்டு, பதறுமல் இருக்கவேண்டி நேரிட்டுவிட்டதே அப்பா! நான் எப்படித் தாங்கிக்கொள்வேன்! மாளிகையில் கோலாகல வாழ்வு எனக்கு......குதிரைக் கொட்டிலில் நீங்கள்......நான் மகன்......மகனு அப்பா நான்! மாபாவி...''

"மகனே! மோசம் செய்துவிடாதே...தெரிவித்து விடாதே...என் திட்டத்தைக் கெடுக்காதே...ஜெமீன்தாருக்குத் துளிச் சந்தேகம் வந்தாலும் போதும், தொலைத்துவிடுவார் தொலைத்து. நீ லிங்கம்...லிங்கம்... நான் சடையன்—வண்டிக்காரன்...மறந்துவிடாதே... ஆபத்தை மூட்டிக்கொள்ளாதே...''

"என்னல் இனியும் இவ்வளவு நெருப்பை நெஞ்சிலே தாங்கிக்கொண்டு இருக்க முடியாதப்பா...''

"மிஸ்டர் லிங்கம்...எப்படி ட்ராட்...ஏ.ஒன்...... இல்லையா...''

"ஏ. ஒன்...ஏ. ஒன்......அப்பா! அப்பா! இங்கே இருப்பதாலை இப்படித்தான் இருக்க வேண்டும் என்ருல், வேண்டாமப்பா இந்த இடம், இந்த வேலை. வேறு இடம்...தொலைதூரம் போய்விடலாம்...

"ஏ! சடையா! மடயா! ஓடிவாடா! குதிரை கட்டுக்கு அடங்க மறுக்கிறதே தெரியவில்லையா...ஓடி...''

"மெள்ள...மெள்ள அப்பா!'' ஐயோ!...''

"விழுந்து தொலைத்தானு......மடயன்! துணைக்கு யாராவது வாலிபப்பயலை வைத்துக்கொள் என்ருல் கேட்டால்தானே. மிஸ்டர் லிங்கம், ரொம்ப நாளாகச் சொல்லுகிறேன், யாராவது உன்னுடைய சொந்தக்காரப் பையன் இருந்தால், கூடமாட உதவிக்கு வேலைக்கு வைத்துக்கொள் என்று கேட்பதில்லை. சரி! சரி! குதிரையைக் கொண்டுபோ!

"பலமான அடிபட்டுவிட்டதுபோல இருக்கிறதே...''

"இல்லை! இல்லை! இலேசாக மரத்திலே உராய்ந்து கொண்டேன்.''

"கல் அடிபட்டிருக்குமோ, இரத்தம் கசிகிறதோ ......''

"கல்லாவது மண்ணுவது...கீழே விழுந்தால்கூட நமக்கு ஒன்றும் ஆகாது.........இது என்ன ஓட்டை உடம்பா...வா மிஸ்டர் லிங்கம்.......ஏதாவது பழரசம் சர்ப்பிடவேண்டும்போல இருக்கிறது.

அன்றிரவெல்லாம் இரத்தக் கண்ணீர் வடிக்கிருன் சொக்கலிங்கம்.

என் எதிரில் என் அப்பாவை இழிவாக நடத்துகிருர் ஜெமீன்தாரர்!

என் எதிரில் என் அப்பா இடறிக் கீழே விழுகிருர், அவரைத் தூக்கி நிறுத்தும் பாக்கியம் எனக்கு இல்லையே!

என் காதைத் துளைப்பது போலல்லவா ஜெமீன்தாரர் பேசுகிருர், காயம் பட்டால் என்ன! களிமண் வைத்துக் கட்டினுல் போதும் என்று.

அவர்மீது என்ன குற்றம்! அவர் வண்டிக்காரனைப் பற்றிப் பேசுவதாக எண்ணிக்கொண்டுதானே பேசுகிருர். அந்த வண்டிக்காரர் என் தகப்பனுர் என்பதைத் தெரிந்தா! இல்லையே! நான்தான் அதை மூடி மறைத்துவிட்டேனே; நான் உல்லாசபுருஷனுக உலவ! என்னை உலகம் மன்னிக்குமா! என் உள்ளமே என்னைச் சுடுகிறதே—என்றெல்லாம் ஏங்கினுன். வேதனை நாளுக்கு நாள் வளர்ந்தது; வெளியே சொல்லமுடியாததால், வேதனை இதயத்தையே பிய்த்துத் தின்னத் தொடங்கிற்று.

எத்தனை நாள்? இன்னும் எவ்வளவு காலம் இந்த நெருப்பாற்றிலே வீழ்ந்து தவிப்பது?

ஜெமீன்தாரரோ, வேறு எந்த வேலைக்கும் சொக்கலிங்கம் செல்ல அனுமதிக்கமாட்டார் போலத் தெரிகிறது. இலேசாக ஒரு எண்ணம் அவருக்கு அரும்புவதுகூடத் தெரிகிறது சொக்கலிங்கத்துக்கு.

உமாமகேஸ்வரியைத் தனக்குத் திருமணம் செய்து வைக்கும் எண்ணம்.

எல்லாத் தகுதிகளும் இருக்கிறது, மிஸ்டர் லிங்கம்! பெற்றோர் பற்றி ஒரு தகவலும் சொல்லமாட்டேன் என்கிறீரே! ஏன்? என்று அடிக்கடி கேட்கிருர்.

பெற்ருேரா! அதோ தோட்டத்தில்! உங்கள் வண்டிக்காரர்! என்று சொன்னுல் போதும், உள்ளபடி ஜெமீன்தாரரின் மண்டையே வெடித்துவிடும்—என்ற நிலைமை. இதுவும் புரிந்தது சொக்கலிங்கத்துக்கு.

❀

சொக்கலிங்கம் அறியாமல், அவன் நடவடிக்கைகளைக் கவனிக்கத் தொடங்கிய கோகிலாவுக்கு மெள்ள மெள்ள ஒரு சந்தேகம் வளர்ந்தது; வண்டிக்காரன் குடிசைக்கு அவன் செல்வது ஏழை எளியோரிடம் உள்ள பரிவு காட்டும் காரணத்தால் அல்ல; வேறு ஏதோ ஒரு பந்தம்—பாசம்.—அவனை அங்கே இழுத்துச் செல்கிறது என்ற சந்தேகம்.

அவன் செல்லாத நேரமாகப் பார்த்து; அதே குடிசைக்கு அவள் சென்று பேசிக் கொண்டிருக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொண்டாள்.

முதலிலே அவளிடம் தாராளமாகப் பேசத் தயங்கிய சொர்ணம், மெள்ள மெள்ள விவரம் பேச ஆரம்பித்தாள்.

விவரம் கூறுவதற்குப் பதிலாக, கோகிலத்திடம் சொக்கலிங்கத்தைப் பற்றிய பல விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆரம்பித்தாள்.

சொக்கலிங்கத்தைப் பற்றிய விவரம் எதைச் சொல்லும்போதும், சொர்ணம்மாளின் கண்களிலே கனிவு வழிந்தது, பேச்சிலே பாசம் ததும்பிற்று.

நேரடியாகவே கேட்டு விடலாமா என்றுகூடக் கோகிலா நினைத்தாள்; பிறகு அது தவருக முடியும் என்று அஞ்சி விட்டுவிட்டாள். வேறு முறையைக் கையாண்டாள்.

குளிர் காற்று வீசும் நாட்கள். பலர் அந்தக் காற்றிலே அடிபட்டு, காய்ச்சலால் கூடத் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயமாகப் பார்த்து, கோகிலா, தலையில் சுற்றிக்கொள்வதற்கான ஒரு கம்பளித் துண்டினை சொர்ணத்தம்மாளிடம் கொடுத்துவிட்டு வந்தாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, அந்த கம்பளித் துண்டு சொக்கலிங்கத்திடம் இருக்கக் கண்டாள்; புன்னகை கொண்டாள்; அவர் எனக்குத்தான்!

எனக்கேதான்! என்று அவளுடைய இதயம் பாடலாயிற்று.

துப்பு ஓரளவு துலங்கத் தொடங்கிவிட்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் கோகிலா மேலும் வேலை செய்தாள்; சொக்கலிங்கம் வண்டிக்காரன் மகன் என்பது அவளுக்குத் தெளிவாகிவிட்டது.

தான் அறிந்த இந்த இரகசியத்தை உடனே உமாவிடம் கூறிவிட வேண்டும்; உமாவின் மனதிலிருந்து சொக்கலிங்கம் அடியோடு தூக்கி எறியப்பட்டுப் போய்விடுவான்; பிறகு அவன் முழுக்க முழுக்க தனக்கே உரியவனாகிவிடுவான் என்று தோன்றிற்று. களிப்புக் கடலில் மூழ்கினாள்.

மறுகணம் யோசித்தாள். அவர், ஏதோ ஒரு மிக முக்கியமான காரணம் இல்லாமல், இப்படித் தன்னை யார் என்று காட்டிக்கொள்ளாமல் இருக்கமாட்டார். நாம் நமது சுயநலம் காரணமாக, அவசரப்பட்டு, இரகசியத்தை வெளியிட்டு, அவருடைய திட்டத்தைக் கெடுத்துவிடக் கூடாது என்ற எண்ணம் பிறந்தது

ஆகவே பொறுத்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

காலையிலே சென்று பறித்தெடுக்க வேண்டிய கனியின் சுவையைப் பற்றி இரவெல்லாம் சிந்தித்து மகிழ்ச்சியுடன் இருந்திடும் நிலையிலே, கோகிலா நாட்களை ஓட்டிக்கொண்டிருந்தாள்.

✻

எல்லோரிடமும் முரட்டுத் தனமாக நடந்து கொள்ளும் காளிங்கராயர்கூட, சொக்கலிங்கத்திடம் அன்புடன் பழகலானார்.

லலிதா மூலமாக அவருக்குத் தகவல் சிறிதளவு கிடைத்திருக்கவேண்டும் உமாவை லிங்கத்துக்கு மணமுடித்து வைக்கும் எண்ணம் ஜெமீன்தாரருக்கு ஏற்பட்டு இருப்பதுபற்றி.

வேடிக்கையாகப் பேசவும் பொழுதுபோக்குகளிலே பங்கு பெற்றுக் கொள்ளச் செய்யவும் கூடக் காளிங்கராயர் முயற்சித்தார். தன்னோடு சேர்ந்து உயர்ந்தப் பானம் பருகும்படியே அழைத்திடலானார்.

"மிஸ்டர் லிங்கம்! உண்மையாகவே பழக்கமில்லையா—சின்ன வயது முதலே வெள்ளைக்காரர் வீட்டில் வளர்ந்ததாகச் சொல்லுகிறார்கள்..."

"ஆமாம் ஜெமீன்தார் சார்! நான் அவர்கள் எதற்குப் பானம் பருகுகிறார்கள், எப்படிப் பருகுகிறார்கள் என்பதைப் பார்த்திருக்கிறேன். நமது நாட்டிலே குடிக்கிறார்களே அப்படியா அவர்கள்! தாங்களே எவ்வளவு சாப்பிடுகிறீர்கள்; நிலை குலைந்து போகும் அளவு!"

"மிஸ்டர் டீச்சர்! இது எனக்குப் பிடிக்காது. குடிக்காதே, அது கெடுதல்—பாவம்—என்று சொல். அதுபொருளுள்ளபேச்சு! ஆனால்குடி. அளவோடுகுடி, நிலை குலையாதபடி பார்த்துக் கொள் என்று சொல்லாதே. அது முடியாது; கூடாது. எதற்குக் குடிக்கிறோம்? எல்லாவற்றையும் மறந்து ஒரு புதிய இன்ப லோகத்திலே உலவ. எப்போது அந்த இன்பலோகம் தெரியும்? இந்த லோகத்தைப் பற்றிய நினைப்பே அடியோடு போனால்! இந்த லோகத்து நினைப்பு எப்படிப் போகும்! நிறையப் பருகினால்! எப்படி என் வாதம்...!

"பிரமாதமான பேச்சு—ஆனால் அந்த இன்ப லோகம் உங்க, மனைவி லலிதாம்பிகாவின் கண்ணொளியில், புன்னகையில் இல்லையா?

"கெட்டிக்கார ஆசாமி! உன்னிடம் சொல்வதிலே என்ன தவறு! லலியின் கண்களில் நான் இன்ப லோகத்தைக் கண்டதுண்டு; முன்பு! கொஞ்ச நாளில் அது மறைந்துவிட்டது..."

"உமது குழந்தைகள் ராமு, சோமு, ரமா இவர்களின் சிரிப்பிலே காணலாமே..."

"அதை எல்லாம் காணும் நிலையில் என் கண்கள் இல்லை..."

"அதைத்தான் சொல்கிறேன். குடி உங்களுக்கு புதிய இன்ப லோகத்தைத் தரவில்லை; இருந்த இன்ப லோகத்தைக் காணும் சக்தியைப் பறித்துவிட்டது"

"தீர யோசித்துப் பார்க்க வேண்டும்; மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும்; அதற்கு மருந்து உள்ளே இருக்கிறது' நீ வெளியே போ! அனுபவிக்கத் தெரியாத உனக்கு இங்கு என்ன வேலை! போ! போ இளநீர் குடி! பார்த்திருக்கிறேன்...அந்த வண்டிக்காரக் கிழவன் கொடுத்து நீ ஆனந்தமாகப் பருகுவதை'

✻

ஜெமீன்தாரின் மனதிலே புது எண்ணம் வளர்ந்ததும் சொக்கலிங்கத்துக்கு மேலும் மேலும் மதிப்பளிக்கலானார்.

தம்முடன் வியாபாரத் தொடர்பு கொண்ட பெரிய வெள்ளைக்காரர்களுடன் பழகும் வாய்ப்பை வலிந்து ஏற்படுத்திக் கொடுத்திடலானார்.

அப்படிப் பழகுபவர்களும், சொக்கலிங்கத்தின் நுண்ணறிவு, நேர்மை ஆகியவற்றைக் கண்டு அவனிடம் பேசுவதைச் சுவையுள்ள பொழுது போக்காக்கிக் கொண்டனர்.

அவ்விதம் அடிக்கடி சொக்கலிங்கத்திடம் வந்து பேசுபவர்களில் **நார்மன்** என்பவர் முக்கியமானவர்.

அவர் சம்பந்தப்பட்ட கம்பெனியில்தான் ஜெமீன்தாரருக்கு அதிகத் தொடர்பு

டேவிட் துரையிடம் பாடம் கேட்டவர் என்பதறிந்து, சொக்கலிங்கத்திடம் நார்மன் பல பிரச்சனைகளைப்பற்றி விவாதிப்பார். சொக்கலிங்கம் தெளிவாகவும் கனிவாகவும் தன் கருத்துகளை எடுத்துச்சொல்லுவான். நார்மன் அந்தப் பண்பைப்பெரிதும் பாராட்டி வந்தார். பலமுறை விவாதம் நடைபெற்று வந்தது.

"மிஸ்டர் நார்மன்! உண்மை பேசுவதை நீங்கள்! வரவேற்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் எங்கள் நாட்டிலே வந்திருப்பது நாகரிகத்தைப் பரப்ப என்ற

"காஞ்சி"

மலர் 3] 11—9—66 [இதழ் 7

இக்கிழமை இதழ், ஆண்டு மலராக வெளிவருவதால், தனி இதழ் கிடையாது என்பதை எல்லா விற்பனையாளர்களுக்கும் நூலகங்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் அறிவித்துக் கொள்கிறோம்.

உரிமையாளர்.

பேச்செல்லாம் பசப்பு என்பது உங்களுக்கே தெரியும். வியாபாரக் கொடி முதலில்! அதைத் தொடர்ந்து அ்சியல் கொடி! அவ்வளவுதான். நாகரிகம் பரப்ப வந்தோம் என்பதெல்லாம் உண்மை அல்ல..."

"நாங்கள் வந்ததால் எத்தனையோ புதுப்புது முறைகள் உங்களுக்குக் கிடைக்கவில்லையா?"

"கிடைத்துள்ளன. அதுபோல உங்களுக்குப் பல நாகரிகச் சாதனங்கள் வேறு நாடுகளிலே இருந்து கிடைக்கவில்லையா? மேற்பூச்சான நாகரிகமாக இருந்தாலும் சரி. புதுக்கருத்துப் புரட்சியைக் காட்டுவதாக இருந்தாலும், அவை காலம் தருவது; எந்த ஒரு நாடும் தருவது அல்ல."

"மிஸ்டர் லிங்கம் அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனல் நீங்கள் இதை ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். நீங்களாக நாடி. தேடி நாகரிகத்துக்கான முறைகளை உண்டாக்கிக் கொள்ளவில்லை."

"நாகரிகம் என்பதற்கு நம்ம ஜெமீன்தாரரின் ஆடம்பர உடையும். அவருடைய மருகர் பருகும் பானங்களும், ஜெமீன் சீமாட்டிகள் வாசிக்கும் பியானோவுந்தான் அடையாளம் என்று கூறத் துணிகிறீர்களா மிஸ்டர் நார்மன். இவைகளெல்லாம் புறத்தோற்றங்கள். உங்களுடைய நாட்டிலேயே நடை உடைபாவனைகளில் எத்தனையோ விதமான, மாறுதல்கள் ஏற்பட்டன. உங்கள் எலிசபெத் மகாராணியார் காலத்து உடை! ஏ அப்பா! இப்போதுள்ள இங்கிலீஷ் பெண்களுக்கு எவ்வளவு அருவருப்பாக இருக்கும்! உங்கள் எட்டாவது என்ரி செய்து கொண்ட கோலாகலத் திருமணங்களும். ஒவ்வொரு மனைவியையும் தேம்ப விட்டதும் திண்டாட விட்டதும், இப்போதுள்ள அங்கில நாட்டு இளைஞர்களை வெட்கித்தலை குனியச் செய்யுமே."

"ஒப்புக்கொள்கிறேன். ஆனல் நாங்கள் சேற்றிலே அமிழ்ந்துவிடுவதுபோல இருந்துவிடவில்லை..."

"அது ஒரு வகையில் ஒப்புக் கொள்ளத்தக்கதே. எங்கள் நாட்டின் கருத்து வளர்ச்சியில் சில நூற்றுண்டுகளாக ஒரு தேக்கம் ஏற்பட்டு விட்டது. ஆனல் நார்மன்! உங்கள் நாட்டவர் ஊர் அமைக்கத் தெரியாமல் இருந்த நாட்களிலேயே இங்கு, பூம்புகாரும் மதுரையும் உறையூரும் பிறவும் எழிலோடு இருந்தன என்பதை மறந்து விடாதீர்."

"வெளி உலகத் தொடர்பு கொள்ளுவதில் ஆர்வம் காட்டவில்லை..."

"தவருன கருத்து, தூரக் கிழக்கு நாடுகளிலெல்லாம் காணலாம், நாங்கள் கொண்டிருந்த வெளியுலகத் தொடர்பின் சின்னங்களை."

"லிங்கம்! ஒரே அடியாக உங்கள் நாட்டைப் புகழ்ந்து விடுகிறீர்."

"தாங்கள் எங்கள் நாட்டிலே எதுவுமே இருந்ததில்லை, எல்லாம் நீங்கள் கொண்டு வந்து கொடுத்த பிச்சை என்று கூறும் விதமாகப் பேசியதால் நான் எங்கள் நாட்டுப் பழம் பெருமைகளைச் சொன்னேன்.. அதேபோது இங்கே உள்ள குறைபாடுகளை நான் மறந்துவிட வில்லை."

"அதைக் கேட்க நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அந்தக் குறைபாடுகளைப் போக்க நீங்கள் எங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாமே..."

"அதற்கு எங்கே நீங்கள் பயன் படுகிறீர்கள். ஆடம்பரமாக வாழவும் ஆடிப்பாடிக் களித்திடவும் அலங்காரங்கள் செய்து கொள்ளவும் கற்றுக் கொடுப்பதிலே உங்களுக்கு உள்ள அக்கறை, மேனட்டின் உண்மையான அறிவுத் தெளிவை நாங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதிலே இல்லையே."

"ஆபத்தான வேலையில் 'அல்லவா ஈடுபடச் சொல்கிறீர். நாங்கள் எதையாவது செய்ய ஆரம்பித்து, உங்கள் மக்கள் மதத்துக்கு ஆபத்து என்று கூவத் தொடங்கி ஒரு கொந்தளிப்பு ஏற்படவேண்டுமா..."

"உள்ளதைச் சொன்னல் எங்கே கொந்தளிப்பு ஏற்பட்டு விடுமோ, நம்முடைய ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று எண்ணிச் சும்மா இருக்கிறீர்கள் மிஸ்டர் நார்மன்! சுரண்டிக்கொண்டு போகிறவரையில் இலாபம் என்ற நோக்கத்துடன்; உண்மைதானே?"

*

இரகசியத்தைத்தான் தெரிந்துகொண்டிருப்பதைச் சொக்கலிங்கத்துக்குப் படும்படியாகச் செய்துவிட வேண்டும் என்ற ஆவல் கோகிலாவை வாட்டியபடி இருந்தது. ஒருநாள் அதையும் ஜாடையாகக் கூறுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. உமா அந்த வாய்ப்பை உண்டாக்கி வைத்தாள்—தனக்காக என்று எண்ணிக்கொண்டு.

சொக்கலிங்கம் ஏதோ எழுதிக்கொண்டிருக்கும்போது கூடத்தில் மற்றோர் பக்கமாக உலவிக்கொண்டே உமா கூறினுள், "கோகிலா! நான் படித்து முடித்த கதை மிகச் சுவையானது. அதிலே வருகிற கதாநாயகன், ஒரு சிற்றரசன்; ஆனல் தனக்குப் பிடித்தமில்லாத பெண்ணைத் தன் தலையில் கட்டிவிடுவார்கள் என்ற பயம் காரணமாக, தனக்கு மூளைக் கோளாறு இருப்பதாக நடித்துக்கொண்டிருக்கிறுன்......" என்றுள்.

"ஆமாமம்மா! ஆனுல் அந்தவிதமான தந்திரம் கடைசிவரையில் பலன் தருவதில்லை" என்றுள் கோகிலா.

"தெரியாமலா சொன்னர்கள், கெட்டிக்காரன் புளுகு எட்டேநாள் என்று" என்று கூறிக்கொண்டே உமா சிரித்தாள்.

"எவ்வளவுதான் தங்களை மறைத்துக்கொண்டு உலவினுலும், இரகசியம் ஒருநாள் இல்லாவிட்டால் மற்றோர் நாள் வெளிப்பட்டுப் போகமலா இருக்கும்" என்று சிறிதளவு மிரட்டும் குரலிலேயே பேசினுள் கோகிலா.

"ஏதேது! பெரிய இரகசியத்தை எல்லாம் கண்டு பிடித்துவிடக்கூடிய சாமர்த்தியக்காரிபோலப் பேசுகிருயே!" என்று கேட்டாள் உமா!

(17-ம் பக்கம் பார்க்க)

தந்தி:
ஆர்வீஸ்

ஆர்வீஸ்
காபி

தொலைபேசி எண்:
212

38. நெல்லுக்காரத் தெரு, காஞ்சீபுரம்.

உயர்ந்த ரக காப்பிக் கொட்டையும்,
மணமிக்க காப்பித்தூளும்

மொத்தமாகவும், சில்லரையாகவும், மலிவாகவும் கிடைக்கும்.

காலவேகத்தில் வளரும் கலைகளில் ரேடியோ கலையும் ஒன்று!

அவைகளை சிறப்பாக சிறந்த முறையில், குறைந்த விலையில் செய்து கொடுக்குமிடம்.



மாடர்ன்
ரேடியோ சர்வீஸ்
காஞ்சிபுரம்.

★

மார்ஸ் டிரான்ஸிஸ்டர் ரேடியோ, ஆம்ப்ளி பயர்ஸ்
சுலப மாதத் தவணையில் கிடைக்குமிடம்

சாந்தி & கோ., ராயப்பேட்டை, சென்னை-14.
சௌத் இந்தியா சைகில் மார்ட், சேலம்-1 & திருச்சி.
பாலகிருஷ்ணா ரேடியோ & எலக்ட்ரிகல்ஸ், காந்தி ரோடு, காஞ்சிபுரம்.
மார்டன் எலக்ட்ரானிக்ஸ், ஸ்ரீநகர், காஷ்மீர்.
பழனி ரேடியோ அவுஸ், ஆரணி ரோடு, வேலூர்.

Regd. No. M. 7894

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்

சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

(Recognised by Central Board of Indigenous Madicine Madras)

பொதுமக்கள் ஏமாற்றமடையா திருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையை யும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரியகடைவீதி, திருச்சி-8.
28, நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A, கண்ணம்மாள்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்,** ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.

போன்: 348, 348-A, 438.

இன்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.

அன்றும், இன்றும், என்றும்
நீங்கள் விரும்பி வாங்கும்

சங்கு மார்க்

K.E.Mo ABOOBACKER
சங்கு
Regd. TRADE MARK

இதுதான்

கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள், சோளிகள் மற்றும் புடவைகள்



முகம்மது அபுபக்கர் & கம்பெனி
95, தம்பு செட்டித் தெரு, சென்னை - 1
கிளைகள் : மதுரை — கல்கத்தா — கொல்லம்
பம்பாய்

Criterion-MAB-684

"பில்கோ" கண்ணாடிகள்

PILCO MIRRORS

FOREIGN PLATE GLASS

SUPERIOR SILVERED

COPPER PROTECTED

தற்போது மேனாட்டு நவீன முறையில்
தயாரிக்கப் படுகின்றன.

பில்கோ மிரர் இண்டஸ்ட்ரீஸ்

அலுவலகம்
165/168, தேவராஜ முதலி தெரு,
சென்னை-3. போன்: 20964

தொழிற்சாலை
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் கிண்டி.
சென்னை-32. போன்: 80660

Wrapper Printed At The Premier Art Press, Madras-7.